நன்றி - ஊடறு

# வன்மம்

பாமா

விடியல் பதிப்பகம்
கோயம்புத்தூர் – 641 015

*முதற்பதிப்பு விடியல் பதிப்பகம், அக்டோபர், 2002 , தி. ஆ. 2033*
*உரிமை : ஆசிரியருக்கு*
*விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்காளிபாளையம் ( வடக்கு )*
*கோயம்புத்தூர் - 641 015. தொலைபேசி : 0422 - 576772*
*மின்னஞ்சல் :* vitiyal2000@eth. net
*இணையத்தளம் :* www. vitiyal. com

*வன்மம் (நாவல்)*
*பாமா*

*முன் அட்டை ஓவியம்: ஆல்ஃப்ரெட் குபின்*
*அச்சாக்கம் : மணி ஆப்செட் , சென்னை - 5*
*விலை : ரூ. 60*

First Edition Vitiyal Pathippagam, October , 2002, T.Y.2033.
Copyright : To the Author
VITIYAL PATHIPPAGAM, 11, Periyar Nagar
Masakkalipalayam (North ), Coimbatore - 641 015
Phone : 0422 - 576772
E - Mail : vitiyal2000@eth. net
Website : www. vitiyal. com

**Vanmam**

**a novel by Bama**

**Front Cover Painting : Alfred Kubin**
Printed at Mani Offset, Chennai - 5
**Price : Rs. 60**

## நன்றி

கையெழுத்துப் பிரதியை வாசித்து விமர்சித்த அருட்தந்தை மாற்கு அவர்களுக்கும், திரு. சேவியர் அவர்களுக்கும் அன்பும் நன்றியும்.

—

# ஒன்று

தெக்க சின்னச்சாமிநாயக்கரு எள்ளுக்காட்டுல களவெட்டிட்டு சாயங்காலம் வீட்டுக்கு வந்த மெக்கேலம்மா கதவத் தொறந்ததும் கீழ கெடந்த கடிதத்த எடுத்தா. மணி நாலுக்குமேல இருக்கும்னு அனுமானுச்சுக்கிட்டு, மம்பிட்டியும், தூக்குச்சட்டியும் வீட்டுக்குள்ள வச்சுட்டு, கடிதத்த எடுத்துக்கிட்டுச் சாவடிப்பக்கம் போனா. கடிதத்தக் காங்கவும் களவெட்டுன களப்பக்கூட மறந்து போனா. தவுச்ச வாய்க்குத் தண்ணிகூட ஊத்தாமெ, கடிதத்துல என்ன எழுதியிருக்குனு தெருஞ்சுக்குற ஆவலுல வேகமா எட்டு வச்சுப் போனா. அவளுக்கு வேற எங்குட்டுருந்து கடிதம் வரப்போகுது? வந்தா, அது சாமிநாதன் கடிதமாத்தான் இருக்கும்னு அவளுக்குத் தெரியும்.

சாவடில நாலஞ்சு ஆம்பளைக ஒக்காந்து ஆடுபுலி ஆட்டம் ஆடிட்டு இருந்தாக. முன்னாலயெல்லாம் கெழடு கெட்டைகதான் இந்த வெளாட்டு வெளாடுவாக. இப்ப படிச்சுட்டு லீவுக்கு வார பெயலுக, படுச்சுட்டுச் சும்மா திரிற பெயலுக கூட கெழடுகளோடெ ஒக்காந்து வெளாண்டுட்டு இருப்பாக.

மெக்கேலம்மா போன நேரம் படுச்ச பெயலுக ஒருத்தனக் கூடக் காணும். ஆடுபுலி ஆட்டத்துல மும்முரமா இருந்த சீனியப்பங் கிட்டப் போயிக் கடிதத்தக் குடுத்தா.

சீனியப்பன் அந்தக் காலத்துலேயே எட்டுவர படுச்சவர். அவரு போடுற சின்னச் சின்னக் கணக்குகளக்கூட இப்ப காலேஜ் படிக்கிற பெயலுகளால தீக்க முடியாது. வயசு எழுவதுக்கு மேல இருந்தாலும், கண்ணாடி கிண்ணாடி ஒன்னும் போடாமயே வெறுங்கண்ணுட்ட பேப்பரு படிப்பாரு. மத்தவுகளுக்கும் படுச்சுக் காட்டுவாரு. வெளாட்டெ நிப்பாட்டிட்டு மெக்கேலம்மா குடுத்த கடிதத்த மனசுக்குள்ளேயே வாசுச்சாரு. கடிதத்த மடுச்சு அவாட்டெ குடுத்துட்டு கேட்டாரு, “அந்தா இந்தான்னு முக்கித்தக்கி மகனெ காலேஜ் படிப்பு படிக்க வச்சுட்டெ. மேக்கொண்டு என்ன செய்றதா இருக்க?”

“ஏங்கிட்ட கேட்டா எனக்கென்ன தெரியும் மாமா? என்ன

எழுதியிருக்குது? "

"பருச்ச முடிஞ்சு போச்சாம். அடுத்த வாரத்துல லீவுக்கு வீட்டுக்கு வாரானாம்."

மகன் வாராம்ங்ற விசயத்தக் கேட்டதும் மெக்கேலம்மா மொகத்துல அம்புட்டுச் சந்தோசம். முந்திச் சீலைல மொகத்தத் தொடச்சுக்கிட்டா. முந்தியச் சொருகிக் கடிதத்த பத்துரமாச் சீலைக் குள்ள வச்சுக்கிட்டுச் சொன்னா, "எல்லாங் கடவுள் விட்ட வழி மாமா. நம்ம கைல என்ன இருக்கு? மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போயிருவான்? ஏதோ... எங்க சத்திக்கு மீறி இம்புட்டுத் தொலவு படிக்க வச்சுட்டோம். அவனுக்கு ஒரு வேல கெடச்சுட்டா நல்லா இருக்கும். கடவுள் கண் தொறந்து பாக்கணுமே."

"கடவுள் பாக்குறது இருக்கட்டும்; ஓம்மகனெ நாலு பேப்பரப் பாத்து நாலஞ்சு எடத்துக்கு எழுதிப் போடச் சொல்லு. படுச்சுட்டு வந்து வேல வெட்டி ஒன்னுமில்லாமெ இருந்தாம்னா கெட்டுக் குட்டிச் செவராப் போவான். சொற்பச் சம்பளம்னாலும் ஏதாச்சும் ஒரு வேலைல போயி ஒக்காந்துக்கிட்டு, பெறகு பெரிய வேலைக்குப் பெரயாசப் படனும்."

"நீங்க சொல்றது வாஸ்தவந்தான் மாமா. அவெ வந்தாவிட்டிச் சொல்லனும். அவனுக்கு எல்லா வெவரமும் தெரியும்ல. பெரிய படிப்பு படுச்சுருக்கான் மாமா. மதுரையிலேயே நாலஞ்சு வருசம் தங்கிப் படுச்சாம்ல. சன்னத்துட்டாச் செவழிச்சிருக்கோம் மாமா," பெருமையாச் சொல்லிட்டு வீட்டுக்குப் போனா.

கடிதத்த எடுத்து அடுக்குப் பானைக்குள்ள பத்துரமா வச்சுட்டு ஒரு செம்புத் தண்ணியக் குடுச்சா. முந்தானய விருச்சுப் படுத்துக் கிட்டா. சாமிநாதன் சூட்டு சட்டையோட பெரிய பெட்டியத் தூக்கிக் கிட்டு வார மாதிரி நெனச்சுப் பாத்துக்கிட்டா. மகன் என்ன வேலைக்குப் போவான்... எம்புட்டுச் சம்பளம் வாங்குவான்... அவெஞ் சம்பளம் வாங்கவும் இந்தக் கூரையப் பிருச்சுட்டு மேய னும்... வள்ளுசா ஒழுகுது... பலமாதிரி யோசனைகள்ள அப்பிடியே ஒறங்கிட்டா.

மெக்கேலம்மா ஏழெட்டுப் பிள்ளைக வர பெத்தா. ஆனா எல்லாஞ் செத்துப் போச்சுக. பொழச்சு நின்னது மகன் சாமிநாதனும், மகா குட்டியம்மாளுந்தான். மெக்கேலம்மாவும், அவா புருசன் ஆரோக்கியமும் வாயக்கெட்டி வகுத்தக்கெட்டி சாமிநாதன பெரிய படிப்பு படிக்க வச்சுட்டாக. குட்டியம்மா உள்ளூர்ப் பள்ளிக்கொடத் துல ஆறாங்கெளாசுப் படிக்கா. அவளும் படிப்புல கெட்டிக்காரி. படுச்சுட்டு டீச்சராப் போவம்னு இப்பயே சொலிக்கிட்டுத் திரிறா.

சாயங்காலம் அஞ்சு மணியப் போல குட்டியம்மா பள்ளிக் கொடத்துலருந்து வீட்டுக்கு வந்தா. பைக்கட்ட வச்சுட்டு அம்மய உசுப்புனா.

தூக்கத்துலருந்து எந்துருச்ச மெக்கேலம்மா ஒடனே சொன்னா, "ஏடி, அண்ணங் கடிதம் போட்டுருக்குடி. அடுத்த வாரம் லீவுக்கு வாரானாம்."

"ஹைய்யா... எங்களுக்கும் லீவு உட்டுருவாகம்மா. கடிதத்த எங்கம்மா?"

"அந்தா அடுக்குப் பானைக்குள்ள வச்சிருக்கம்பாரு."

குட்டியம்மா கடிதத்த எடுத்துட்டு வந்து சத்தமா வாசுச்சா. "ஏம்மா, அண்ணென் எனக்கு என்னென்னமா வாங்கியாரும்?" ஆவலாகக் கேட்டா குட்டியம்மா.

"அவெ என்ன வேலையாடி பாக்கான்? இப்பத்தானெ படுச்சு முடுச்சுருக்கான். வேலைக்குப் போயிட்டாம்னா நீயி கேக்குறதெல் லாம் வாங்கிக் குடுப்பான்."

"நெசம்மாவாமா? மொதல்ல ஒரு சாமிண்டிரிப் பெட்டி வாங்கச் சொல்லுவேம்மா."

"பெட்டி கிட்டியெல்லாம் எதுக்குடி? படிக்குறதுக்குத் தோதா ஏதாச்சும் பேனா பென்சிலுன்னு கேளுத்தா."

"ஏம்மா... இதுகூட படிக்கிறதுக்குத்தான். ஒனக்குத் தெரியல. இதவச்சுத்தான் கணக்குப் போடுவாக."

"சரி...சரி... அது என்ன கழுதையோ... எனக்கென்ன தெரியுது? இத்தினிக் கூழு கெடக்குது. வா... ரெண்டு பேருங் கரச்சுக் குடிக்க லாம். நீயி வரட்டுமின்னுதான் இருந்தேன்."

மெக்கேலம்மா கரச்சு ஊத்துன கூழ, ஈரங்காயக் கடுச்சுக் கிட்டே குடுச்சுட்டுச் சாவடிப் பக்கமா வெளாடப் போனா குட்டி யம்மா. சாவடி ஓரத்துலதான் அவுக வீடு. மெக்கேலம்மா கதவச் சாத்திட்டு அன்னைக்குக் கூலிய வாங்கி அரிசியும், கொழம்புச் சாமானும் வாங்கியாரப் போனா.

போம்போது குட்டியம்மாளச் சத்தம் போட்டுக் கூப்புட்டு, "நாங் கடைக்குப் போறேன். கொழாய்ல தண்ணி வந்தா ரெண்டு கொடம் புடுச்சு வையி. நா வந்து தூக்கிக்கிறேன். நீயி தூக்காதத்தா. கீழ போட்டுருவெ. என்ன," சொல்லிட்டு மேற்காமப் போனா.

வழில, பசாருகிட்ட வேல முடிச்சுட்டு வந்த புருசனப் பாத்து சாமி நாதன் கடிதம் போட்டுருக்க விசயத்தச் சொன்னா. ஆரோக்கி

யத்துக்கும் மொகத்துல ஒரு சந்தோசம். கடிதத்த அடுக்குப் பானைக் குள்ள வச்சிருக்கேன்னு சொல்லிட்டுப் போனா மெக்கேலம்மா.

வீட்டுக்கு வந்த ஒடனே மொதல் வேலையா கடிதத்த எடுத்துப் பாத்தாரு ஆரோக்கியம். நாள் பூராம் கஸ்டப்பட்டு வேல செஞ்சுட்டு வந்த அலுப்பு மொகத்துல இருந்தாலும், கூடவே சிரிப்பும் இருந்தது.

சாவடிலருந்து, ஐயாவைப் பாத்த குட்டியம்மா வெளாடுத உட்டுட்டு வேகமா வீட்டுக்கு ஓடியாந்தா. "ஏய்யா, ஒரு அம்பது பைசா குடுய்யா. மாங்கா வாங்கப் போறேன்யா. அணிலு கடுச்ச மாங்காயா விக்காகய்யா," கண்ண உருட்டிக்கிட்டு, நாக்கச் சப்புக் கொட்டிக்கிட்டுச் சொன்னா.

"சரி பெயமகளே, மொத இந்தக் கடிதத்தப் படுச்சுக் காட்டு."

குட்டியம்மா கடிதத்த வாசுச்சுக் காட்டுனதயே ரொம்பாப் பெருமையாப் பாத்துக்கிட்டே இருந்தாரு.

வேக வேகமா வாசுச்சுட்டு, "சரி, இப்பக் குடுய்யா," ஆசையாக் கேட்டா குட்டியம்மா.

இடுப்பு வேட்டியில வச்சிருந்த துட்டுல அம்பது பைசாவெ எடுத்தாரு. எடுக்கும்போதே குட்டியம்மா அவசரமாச் சொன்னா, "ஏய்யா, அந்த ஒத்த ரூவாயத் தாயேன். ஒரு ரூவாய்க்னா சப்பட்ட மாங்கா வாங்கலாம். சப்பட்ட இனிச்சுக் கெடக்கும். அம்பது பைசாவுக்குன்னா பஞ்சவர்ணக்காய்தான். அதுவும் இத்தினிக்கானு காயிதாங் குடுப்பாக."

கெஞ்சலுங் கொஞ்சலுமாக் கேட்ட குட்டியம்மாளுக்கு ஒத்த ரூவாயவே குடுத்தாரு. மகெங் கடிதத்தப் பாத்த சந்தோசத்துல அவா ரெண்டு ரூவா கேட்டுருந்தாலும் குடுத்துப்பாரு. துட்ட வாங்கிட்டுச் சிட்டாப் பறந்துட்டா குட்டியம்மா.

ராத்திரி சாப்புடயில மெக்கேலம்மா மகாட்டெ கேட்டா, "ஒங்கண்ணெ என்ன கெழம வாராம்னு கடிதம் போட்டு ருக்காம்தா?"

"வெள்ளிக்கெழம."

"வெள்ளிக்கெழமைக்கு இன்னும் எம்புட்டு நாளு இருக்கு?"

மெக்கேலம்மா கேக்கவும் ஆரோக்கியம், "பொதனோட பொதன் எட்டு, வேழன் ஒம்பது, வெள்ளி பத்து. இன்னும் ஒம்பது நாளு இருக்குது"

"அப்ப இந்த வார வெள்ளி போயி அடுத்த வெள்ளிக்கு வருவாம் பொறுக்கோ."

"அப்ப எங்களுக்குக் கூட லீவு உட்டுருவாகம்மா," குட்டி யம்மா சந்தோசமாச் சொன்னா.

"ஒங்களுக்கு பருச்ச எப்பத்தா?"

"நாளக் கழுச்சு பருச்ச தொடங்குதா. பெறகு அஞ்சு பருச்ச எழுதுனாவிட்டி ஒரு மாசம் லீவு உட்டுருவாக.

கண்டம்பட்டி கிராமம் பெரிய ஊரு. பலதரப்பட்ட சாதி சனம் இங்க இருக்காக. ஊரச் சுத்தி மலைகதான். பார்க்க அழகா இருக்கும். விவசாய வேலைக இல்லாதப்ப இந்த மலங்காட்டுகள்ளதான் வெறகு பெறக்கிட்டு வந்து, அத வித்து, பொழுது ஓட்டுவாக. முக்கியமா வெறகு பெறக்கப் போறது பள்ளரும் பறையர்களும் தான். வெறகு பெறக்கிட்டு வந்து தேவமாரு, நாயக்கமாரு, நாடாக்க மாருககிட்ட விப்பாக. ஊர்ல கீழக்கடேசில பறையர்க இருக்காக. சாமிநாதன் அவுக வீடுதான் மொத வீடு. அதுக்குப் பெறகு கெழக்க கீழோடை வரைல பறையர்க நாலஞ்சு தெருவுல இருக்காக. அவுகள ஒட்டுனாப்புல, பள்ளர்க நாலஞ்சு தெருவுகள்ள இருக்காக. பள்ளர்களுக்கும் பறையர்களுக்கும் கொஞ்சந்தள்ளி கக்களயக்குடி இருக்குது. ஒரு நாலஞ்சு தெருவுல நெசவு நெய்ற சாலியரு, மூப்ப னாரு, பன்னாடிமாருக இருக்காக. மேற்க பசாருக்கு அங்குட்டுத் தான் தேவமாரு, செட்டிமாரு, ஆசாரிமாரு, பிள்ளமாரு, நாடாக்க மாரு, நாய்க்கமாருன்னு எல்லாமார் களும் இருக்காக. பள்ளு பறை எல்லாம் இவுகளக் கடந்துதான் வேல வெட்டிக்குப் போகனும், வரனும். கெழக்க இருந்து மேற்காமப் போகப் போக சாதி அந்தஸ்தும் ஒசந்துக்கிட்டே போகும். மேற்கதான் காடுகரை கள்ளாம் இருக்குது. எல்லாம் மேச்சாதிகாருக்குச் சொந்தமானது. இதுல பறையர்க மட்டும் கிறிஸ்தவுக. ஆனா கோயிலு அவுக தெருவுல இல்ல. மேற்கதான் இருக்குது.

சாமிநாதன் வந்த அன்னைக்கு மெக்கேலம்மா அவனக் கட்டிப் புடுச்சுக்கிட்டு ஒரு மூச்சு அழுது தீத்தா. கட்டயங்கடைல வாங்கி வச்சிருந்த செரட்டய முறுச்சுக் குடுத்தா. செரட்டயச் சுட்டு எடுத்து கருப்பட்டித் தண்ணிக்குள்ள போட்டுக் குடிச்சா, சலதோசம் புடிக்காதாம்.

சாமிநாதனும் ஒவ்வொரு தடவயும் அழுகாதமா; இந்தச் செரட்டச் சமாச்சாரமெல்லாம் வேண்டாம்மான்னு கூடுமான வரைல சொல்லிப் பாத்துட்டான்.

மெக்கேலம்மா எப்பயும் போல சிருச்சுக்கிட்டு சொல்வா, "ஒனியக் காங்கவும் தன்னால கண்ணுல கண்ணீரு வந்துருதுய்யா. என்ன செய்யட்டும். செரட்ட முறுச்சுக் குடுக்காட்டி ஊரு விட்டு

ஊரு போகையில தண்ணி சேராமப் போயி தடுமம் புடுச்சுக்கிரும் பாரு; அதான்யா."

செத்த நேரம் வீட்ல இருந்துட்டு லுங்கிய கட்டிக்கிட்டு, தோளுல ஒரு துண்டப் போட்டுக்கிட்டு சாமிநாதன் சாவடிப் பக்க மாப் போனான்.

மெக்கேலம்மா பாத்துட்டு கேட்டா, "ஏம்யா அதுக்குள்ள துணிய மாத்திட்டெ? அப்பிடியே சூட்டுஞ் சட்டையும் போட்டுக் கிட்டே போகலாம்லெ?"

"சும்மா இரும்மா; அதெல்லாம் படிக்கிற எடத்துக்குத்தான் லாயக்குப்படும். இங்க நம்ம தெருவுக்குள்ள லுங்கிதான் தோதா இருக்கும்," சொல்லிட்டுப் போயிட்டான்.

சாவடிலதான் அம்புட்டுப் பையங்களும் ஒன்னு சேருவாக. சாவடி கட்டி இப்ப நாப்பது வருசத்துக்கு மேல ஆகுது. சாவடிக்கு முன்னாலதான் ஊர்க்கூட்டம் நடக்கும். கபடிகூட அங்கதான் வெளாடுவாக. சாவடிய ஒட்டுனாப்ல நாலஞ்சு வேப்பமரம் நிக்கிது. வெயிலுக்கு அந்த மரத்து நெழலுதான் பொகலிடம். கெழடு கட்டைகளுக்கு மட்டுமில்ல; சின்னஞ்சிறுசுக, ஆடு மாடுக, ஆம்பளைக எல்லாம் அங்னதான் கூடிக் கெடப்பாக. பொம்பளைக மட்டும் போகமாட்டாக. ஊர்க்கூட்டத்துக்கும் போக மாட்டாக. அந்த ஏரியாவுக்குள்ள பொம்பளைக போகக்கூடாது. எப்பயாச்சும் ஒன்னு ரெண்டு பொம்பளைக, அவுக வீட்டு ஆம்பளைகளத் தேடிக்கிட்டு அங்க வருவாக. அப்பக்கூட எட்டாக்கைல நின்னுக் கிட்டுத்தான் சத்தம் போட்டுக் கூப்புடுவாக. இல்லன்னா சின்னப் பிள்ளைக யாருட்டயாச்சும் சொல்லி உடுவாக. பறையர்களோடெ தெருவுகளுக்கு இந்தச் சாவடிதான் பொது எடம். இது தெருவோட தொடக்கத்துல இருக்குது. இங்க இருந்துதான் நாலஞ்சு தெருவுக கெழக்காமப் பிருஞ்சு போகுது. எந்த ஒரு பொதுக் காரியத்துக்கும் எல்லாத் தெருவுகள்ள இருந்தும் வந்து இங்கதான் கூடுவாக.

பள்ளர்க தெருவுலயும் ஊர்ச்சாவடி இருக்குது. அது அவுக தெருவுகளுக்கு நடுவுல இருக்குது. பொதுக் காரியங்களுக்கு அம்புட்டுப் பள்ளர்களும் அங்க கூடிக்கிருவாக. ஊர்க் கூட்டமும் அவுகளுக்கு அங்கதான் நடக்கும். பறையர்க தெருவுல படிக்கிற மாதிரி, பள்ளர்க தெருவுல ரொம்பப்பேரு வெளியூர்கள்ள போயி படிக்கிறதில்ல. உள்ளூர்லயே படுச்சுட்டு பாதிலயே நின்னு போவாக அவுக.

சாமிநாதனோட வீடு, சாவடிக்கு முன்னாலியே, தெக்க பாத்த வீடு. கூரவீடுதான். அந்த இத்தினிக்கானு வீட்டுக்குள்ள எல்லாரும்

படுத்து ஒறங்க முடியாது. வழக்கமா சாமிநாதனும், அவுகப்பாவும் சாவடிக்குப் படுக்கப் போயிருவாக. நெறய்யா வீட்டுகள்ள இப்பிடித் தான். ஆம்பளைகள்ளாம் சாவடிக்குப் படுக்க வந்துருவாக. இப்பல் லாம் ஆம்பளைக சாவடிக்கு வந்து படுக்குறது கொறவாத்தான் இருக்குது. ஏம்னா, இப்ப நெறய்யாப் பேரு மெத்த வீடு கட்டிட் டாக. முன்னாடிக்கு பறையர்க இப்பத் தேவல. அந்தா இந்தான்னு முக்கித்தக்கிச் சன்னஞ்சன்னமா முன்னேறிக்கிட்டு இருக்காக.

சாமிநாதனோட தாத்தா பாட்டி காலத்துல, வள்ளுசா கீழ்ரேட்டுல கெடந்தாக. சம்சாரிக வீட்டுகள்ள போயி சாணிசகதி அள்ளிப் போட்டு, ஏண்ட வேல எடுத்த வேல செஞ்சுட்டு புளுச்சுப் போன பழைய கஞ்சியும் இத்தினி ஊறுகாவும் கொண்டாந்து நக்கிப் பொழச்ச காலம் அது! இப்ப அவுகய்யா அம்மெ காலத்துல எம்புட்டோ மாறிப் போச்சு. நாய்க்கமாருக பாடுபட முடியாமெ, நெலத்தப் பூராம் பறையர்களுக்கு ஒத்திக்கு உட, பறையர்க ராப்பகலா ரணபாடுபட்டு வெளையாத மண்ணயும் வெளய வச்சு, சீசனுக்கு சீசன் உளுந்து, மொச்சி, தட்டாம் பயறு, பாசிப் பயறு, கல்லுப் பயறு, கானப் பயறு, எள்ளு, கடலன்னு மாத்தி மாத்திப் போட்டு எடுத்து வித்துப் பெறக்கி, முன்னுக்கு வந்தாக. வயக் காட்டயும் ஒத்திக்கு எடுத்து, கம்மாய்ல தண்ணி இருக்கயில நெல்லு வெளய வச்சு அறுத்து எடுத்தாக. ஆனா இந்த அளவுக்கு பள்ளர்க யாரும் சம்சாரிக காடுகள ஒத்தி எடுத்து பாடுபடல.

நாய்க்கருகள்ள செலபேரு வயலு வரப்புக்கள பறையனுக்கு உடக் கூடாதுன்னு பூராத்தயும், தென்னந்தோப்பு, கொய்யாத் தோப்பு, மாந்தோப்புன்னு மாத்திப் போட்டாக. பள்ளர்க செலரும், பறையர்க செலரும் இந்தத் தோப்புக்கள ஒத்தி எடுப்பாக. இல்லன்னா காவலுக்குக் கெடப்பாக. மலையடிவாரத் தோப்புகள்ள சாமயாமம்னு பாக்காமெ கண்ணு முழுச்சு காவக்காப்பாக. மலங்காட்டுப் பக்கமா நரி வரும், காட்டுப் பன்னி வரும், விசப் பாம்புக வரும், ஓனாய்க, காட்டெருமைக கூட வருமாம். அதுக்கெல்லாம் பயப்படாமெ இருப்பாக. செலபேரு சொல்லுவாக, கருங்கொரங்கு, ஆனைக கூட கூட்டங்கூட்டமா வருமாம். இம்புட்டு ஆபத்துகளையும் பாக்காமெ போவாக. நாய்க்கமாருக சொகுசா வீடுகள்ள ஒக்காந்துகிட்டு வெளச்சல உல்லாசமா அனுபவிப்பாக. கடவுளு நம்மள இப்பிடிப் படச்சிட்டு, அவுகள அப்பிடிப் படச்சுட்டாருன்னு பொம்பளைக சொல்லிப் பொலம்புவாளுக.

இப்பயிப்ப, பறையர்க விவசாயத்த மட்டும் நம்பிக்கிட்டு இல்ல. அதுனால நாய்க்கர்கள நம்பி இல்ல. பறையர் இப்ப பல தொழிலு செய்றாக. கண்டம்பட்டி பறையர்க தெருவல

எடுத்துக்கிட்டா, டெய்லருக, வக்கீலுக, கொத்தனாருக, பிளம்பருக, டிரைவருக, கண்டக்டருக, டீச்சருக, போலீசுகன்னு கண்ட தொழி லுஞ் செய்றவுகளப் பாக்கலாம். உள்ளூர்ல வேல இல்லன்னா, வெளியூர்ல போயி பைப் லைன் வெட்டுறது, கெணறு தோண்டுற துன்னு ஆம்பளைக போவாக. பொம்பளைகளும் சளைக்க மாட் டாக. வெளியூர்ல போயி கள வெட்டுறதோ, கடல போடுறதோ, எள்ளுக்கா அறுக்கவோ அலசவோ, கதுரறுக்கவோ டவுன் வண்டில போயிட்டு மசங்கயில வந்து சேந்துருவாக.

ஒரு பத்து வருசத்துக்கு முன்னால எல்லாம் பள்ளர்களும், பறையர்களும் நாய்க்கமார்களுக்கு ஒடையாரு வப்பாக. அதாவது பொங்கலுக்குப் பொங்கலு ஒரு சேவலு, ஒன்னோ ரெண்டோ பெரிசா பூசணிக்கா, நாலஞ்சு கரும்புத்தட்ட, பச்சரிசி ஒரு மரக்கா, எடுத்துக் கிட்டு, ரொம்பாப் பெருகளமா குடும்பம் குடும்பமாப் போயி சம்சாரிகளக் கண்டுகிட்டு வருவாக. இதுதான் ஒடையாரு வைக்கிறது.

பறையர்க தெருவுல பையனுக வெளியூர்ல போயி படிச்சுட்டு வர வர, இந்தப் பழக்கத்த அடியோட வெறுத்தாக. இவ்வளவு சாமானுகளக் கொண்டு போயி சம்சாரிககிட்ட குடுத்துட்டு, அவுக போடுற இத்தினி பொங்கல எட்ட நின்னு வாங்கிட்டு வாரது கேவலம்னு நெனைச்சாக. அதுனால படுச்ச பையங்க தல எடுத்து, பெரியாளுகள ஒடையாரு வைக்கப் போகக் கூடாதுன்னு நிப்பாட்டிட்டாக. மொதல்ல நிப்பாட்ட மாட்டம்னு அடம்புடுச்ச பெரியாளுக, போகப் போக, இவுக சொல்றது சரி தான்னு ஒத்துக்கிட்டு, இந்தப் பழக்கத்த நிப்பாட்டிட்டாக.

பறையர்க நிப்பாட்டுன கொஞ்சக் காலத்துலயே, பள்ளர்களும் இந்தப் பழக்கத்த நிப்பாட்டிட்டாக. இதுனால சம்சாரிகளுக்குப் பறையர்கமேல ஆத்துரந்தான். இந்தப் பெயலுகளால பள்ளர்களும் கெட்டுப் போறாகன்னு அவுகளுக்கு எருச்சல்.

சாமிநாதனோடெ சின்னையா மர்ராசு, மர்ராசுன்னு நல்ல வாட்ட சாட்டமான ஆளு. அவுகப்பா கூடப் பெறந்த சின்னையா. மரியராசுங்ற பேரத்தான் எல்லாருஞ் சுருக்கி மர்ராசுன்னு ஆக்கிட்டாக. அவரு ரெங்க நாய்க்கரு வயலுல தண்ணி பாச்சுவாரு. நாத்துப்பாவி நட்டு, கதுரறுத்து நெல்லு களஞ் சேக்குறது வரைல இவரு தண்ணி பாச்சி, மருந்தடுச்சு, வேலைக்கு ஆளமத்தி, இப்பிடி சகல வேலையுஞ் செய்வாரு. கம்மாத் தண்ணிய வயக்காட்டுக் காரு களுக்கு மொற வச்சு உடுவாக. வயலுக்குச் சொந்தக்கார சம்சாரி கள்ளாம் அவுகவுக வீடுகள்ள பொண்டாட்டி பிள்ளைகளோட

ஒறங்க, தண்ணி பாச்சுற பள்ளர், பறையர்கதான் பனியிலயுங் குளுருலயுங் கெடந்து, விடிய விடிய தண்ணி பாச்சனும். நடுக் குடுச்சாமத்துல பேயி பெசாசு அடிச்சுப் போட்டாலும், வரப்பு கள்ள கெடக்குற பாம்புக புடுங்கிச் செத்தாலும் கேக்க நாதியில்ல. அப்பேர்ப்பட்ட ஒரு பொழப்பு!

ரெங்க நாய்க்கரு வயக்காட்ட ஒட்டுனாப்ல பழனி வேலு நாய்க்கரு வயலு இருந்துச்சு. அதுல கருப்பசாமிங்ற பள்ளரு தண்ணி பாச்சுனாரு. மர்ராசுக்கும், கருப்பசாமிக்கும் தண்ணி பாச்சுரதுல பொழுதனிக்கும் சண்டக்காடு வரும். ரெங்க நாய்க்கரும், பழனி வேலும் நிம்மதியா இருக்க, இங்க தண்ணி பாச்சுற பறையனும், பள்ளனும் சண்ட போட்டுக்கிட்டு ஒன்னுக்குள்ள ஒன்னு பகை யாகிக்கிட்டாக. ரெங்க நாய்க்க மர்ராச தூண்டி விட, பழனிவேலு கருப்ப சாமியத் தூண்டிவிட, ரெண்டு பேரும் சண்ட போடாத நாளே இல்ல. இதுல வேற பழனிவேலு கருப்பசாமிட்ட, துணுஞ்சு எறங்குடா, நாம் பாத்துக்கிறேன்னு ஏத்தி உட்டாராம்.

அப்பிடித்தான் ஒரு நாயித்துக்கெழம சாயங்காலம் வெள்ளனத்து லயே கஞ்சியக் குடுச்சுட்டு மர்ராசு தண்ணி பாச்ச மம்பிட்டியோட வயலுக்குக் கெளம்புனாராம். கெளம்பும்போதே அவரோட பொண்டாட்டி, “சாமயாமமெல்லாம் வயக்காட்டச் சுத்துரவெ கறிக் கொழம்பு ஊத்தித் தின்னுட்டுப் போறியே, பேயி பெசாசு வந்து அடுச்சுப் போடும். இந்தா இந்த மாதா எண்ணெயப் போட்டுகிட்டு போ,” அப்படீன்னு சொன்னாளாம்.

மர்ராசு மாட்டுக் கறியோடெ சாராயமும் குடுச்சுப் போட்டு ரொம்பா மப்பா, “ஏ போத்தா போ. பேயாவது பெசாசவது! ஒரு கண்டாரளியும் எங்கிட்டத்துல நெருங்காது. பயந்தாரிப் பெயமகா. எனியப் பாத்துட்டு பேயி ஓடும்தா. இன்னைக்கு என்ன புதுசாவா போறேன். எம்புட்டு வருசமா போயிகிட்டு வந்துகிட்டு இருக்கேன்.” போதையில சொல்லிட்டுப் போயிட்டானாம்.

அன்னைக்குத் தண்ணி ரெங்க நாய்க்கருக்குப் பாய வேண்டிய மொறையா இருந்தாலும் மர்ராசு போறதுக்குள்ளயே கருப்பசாமி போயி தண்ணிய பழனிவேலு வயலுக்குத் திருப்பி உட்டுருந்து ருக்கான். இதப் பாத்ததும், மர்ராசு காவாய வெட்டி, தண்ணிய நாய்க்கரு வயலுக்குத் திருப்பி உட்டுருக்கான். தண்ணி பாச்சி கிட்டுருந்த கருப்பசாமி, தண்ணி காவாயில வராமப் போகவும், வந்து பாத்தா மம்பிட்டியோட மர்ராசு நிக்கான். ரெண்டு பேத்துக்கும் வாக்குவாதம் ஆரம்புச்சு, ரெண்டு பேரும் போட்ட சத்தம் வயக்காடு பூராம் கேட்டுச்சு.

சத்தத்தக் கேட்டுட்டு, பக்கத்து வயக்காட்டுல இருந்த பிச்ச மூர்த்தி ஓடியாந்தாரு. அவரும் பள்ளர்தான். அவரு ரெண்டு பேத்த யும் சும்மா இருக்கச் சொல்லி, எம்புட்டோ சொல்லிப் பாத்தாரு. இவுக கேக்குற மாதிரி இல்ல.

மர்ராசு பிச்சமூர்த்திட்டச் சொன்னாரு, "அண்ணாச்சி, நீங்களே சொல்லுங்க. இன்னைக்குத் தண்ணி யாருக்குப் பாய வேண்டிய மொற. இன்னைக்கு எங்க ஐயா வயக்காட்டுக்குப் பாயனும். நா வரமுன்ன தண்ணிய இவன் திருப்பி உட்டதுமில்லாமெ, இப்ப வந்து அனாவசியமா மல்லுக்கு நிக்கான்."

"நீ எதுக்குடா மொற மாறி தண்ணியத் திருப்புற! அதான வீணா சண்ட வருது. நம்மளுக்குள்ள எதுக்குடா வீண் சண்ட? ரெண்டு வயலும் வெளஞ்சாலும் காஞ்சாலும் ஒங்களுக்கு என்ன பெருசா கெடச்சிரப் போகுது! எவனோ சாப்புடறதுக்கு இவனுக மல்லுக் கெட்டுறானுக. உடுங்கடா... இப்பிடி நடுச்சாமத்துல வயக்காட்டுல வந்து கத்தாதீகடா. கேக்கயில கொலையே ஆடுது"

"நீ என்ன பெரிய நாயத்துக்கு வந்துட்டெ? இவெ வந்து ஏங்கிட்ட ஒரு வாத்த கேட்டானா? வந்த ஒடனே, என்னமோ கம்மாத் தண்ணியெல்லாம் இவனுக்குத்தாஞ் சொந்தம்ங்கறது கெணக்கா அவம் பாட்டுக்கு காவாய வெட்டுனா என்ன அர்த்தம். பெரிய தொரமாருன்னு நெனப்போ" கருப்பசாமி கத்துனான்.

பதுலுக்கு மர்ராசும் கத்துனான், "இவம் பெரிய மயிரு. இவங் கிட்ட நாம் போயி தண்ணி கேக்கனும். வெங்காயம். நீ எதுக்கு இன்னைக்குத் தண்ணில கை வச்ச ? மொத அந்தக் கைய வெட்டனும்."

"என்னடா நீயி மயிரு கியிருன்னு பேசிக்கிட்டுருக்க. எங்கடா வந்து கைய வெட்டுடா பாப்போம். அறஞ்சம்னா பல்லுப் பூராங் கொட்டிரும் ஆமா. கைய வெட்டுற ஆளப்பாரு," கருப்பசாமி கத்துனான்.

பதுலுக்கு மர்ராசு கத்துனான். இப்பிடி ரெண்டு பேரும் மாறி மாறிக் கத்த, எடையில மாட்டிக்கிட்ட பிச்சமூர்த்தி பாடு திண்டாட் டமாப் போச்சு. வாய்ப்பேச்சு முத்தி கைகலப்பு ஆகவும் பிச்சமூர்த்தி கூடுமான வரைக்கும் வெலக்கி உடப் பாத்தாரு. அவரால முடியல. அக்கம் பக்கமும் யாருமில்ல. மர்ராசு ஈடுதடியான ஆளா இருந் தாலும் குடிபோதைல அவரால ஒன்னுஞ் செய்ய முடியல.

கைல வச்சிருந்த மம்பிட்டிக் கணையக் கொண்டி கருப்பசாமி மர்ராசு தலைல ஓங்கி அடிக்கவும் அலறிக்கிட்டே மர்ராசு கீழ உழுந்துட்டாரு.

பிச்சமூர்த்தி கருப்பசாமியத் தடுத்துக்கிட்டே, "உட்டுரா செத்துக் கித்துப் போனாம்னா வம்புடா. அவெ வேற பாவம் போதைல இருக்காம்டா. இல்லன்னா ஒன்னா ரெண்டா வகுந்தே போடுவான். உட்டுட்டுப் போடா," கெஞ்சிப் பாத்தாரு.

கருப்பசாமி உடல காவக் கம்ப மர்ராசோட கொதவளைல வச்சு கால வச்சு அழுத்துனான். அம்புட்டுத்தான். மர்ராசோட நாக்கு வெளிய தள்ளிருச்சு. கண்ணு முழி ரெண்டும் பிதுங்கி வெளிய வந்துருச்சு. செத்த நேரத்துல மர்ராசு பொணமாகக் கெடந்தான்.

பிச்சமூர்த்தியும் கருப்பசாமியும் ஒன்னும் பேசல. கருப்பசாமி தன் நெனவுக்கு வரவும் பிச்சமூர்த்திட்ட கேட்டான். "பெய செத்துப் போனா மாமா. இப்ப என்ன செய்றது?"

"எம்புட்டுத் தடவ சொன்னேன்; கேட்டியாடா? இப்ப என்ன செய்றதுன்னு கேக்க? நேரா போலீசுல போயி சரண்டராயிரு," பிச்ச மூர்த்தி சொன்னாரு.

"ஐயய்யோ. என்ன மாமா நீயே இப்பிடிச் சொல்ற. ஏதோ நடந்தது நடந்து போச்சு. நீ யாருட்டயும் மூச்சு உடாதெ. ஏங்கூட சேந்து ஒரு கை தூக்கு. அந்த ஓடைல கொண்டுபோயி பெதச்சுட்டுப் போயிருவோம். ஒருத்தருக்கும் தெரியாது."

"செய்றதயுஞ் செஞ்சு போட்டு, இந்தப் பாவத்துக்கு எனியயுங் கூட்டுச் சேக்குற. நாம் போறண்டா வீட்டுக்கு."

"நீயி எனிய ஒத்தயில உட்டுட்டுப்போனீன்னா, நீதான் அவன அடுச்சுக் கொன்னன்னு நானே போயி போலீசுல புகாரு குடுப்பேன். அவுக தெரு ஆளுக கிட்டயும் சொல்லுவேன்."

"இது நாயமாடா! வாய்ச்சண்டையா இருக்கயிலேயே வெலக்கி உட்டேனே. கேக்காம இப்ப வந்து எனிய மடக்குறி யேடா. சீ நீயெல்லாம் மனுசனே கெடையாதுடா."

"பறையனுக்கு இம்புட்டு சப்போட்டுக்கு வார? நானு ஒதவி கேக்கேன் செய்ய மாட்டேங்க," கருப்பசாமி திரும்பவும் மெரட்ட வும், பிச்சமூர்த்தியும் பயந்து போயி அவங்கூட சேந்து ஓடைக்குள்ள மர்ராசப் பெதச்சுட்டு ஒன்னுமே நடக்காதது மாதிரி வீடுகளுக்குப் போயிட்டாக.

விடுஞ்சும் விடியாமெ இருக்கயில, கருக்கல்லயே எந்துருச்சு கருப்பசாமி பழனிவேலு வீட்டுக்குப்போயி நடந்ததச் சொன்னான்.

அவரு மொதல்ல பதறுனாலும் பெறகு சொன்னாரு, "நீ யாருட்டயும் எதுவுஞ் சொல்லாதெ. வெளிய தெரியாது. தெருஞ்சா நாம் பாத்துக்குறேன்." அவரு குடுத்த தைரியத்துல கருப்பசாமி

ஒன்றுமே நடக்காதது மாதிரி இருந்துக்கிட்டான்.

மறுநாள் காலைல வழக்கம்போல தண்ணி பாச்சிட்டு வீட்டுக்கு வர்ர மர்ராசு வராமப் போகவே, அவெம் பொண்டாட்டி தெருவெல்லாம் பொலம்பிக்கிட்டுத் திருஞ்சா. பொம்பளைக பூராம் அவளத்தான் வஞ்சாக. “அவெமென்ன சின்னப் பிள்ளையாடி. தேடிக்கிட்டுத் திரிரெ? குளிச்சுட்டு கிளிச்சுட்டு மெதுவா வருவான். அதுக்குள்ள ஆலாப் பறக்குறியே?”

“மணி பத்தாகுது இன்னங் காணும். நீங்க ஒங்க பாட்டுக்கு பேசுறீகளே. வழக்கமா ஏம்மகெ பள்ளிக் கொடம் போக முன்னாடி வந்துருவாம்லெ. நேத்து வேற கறியுஞ் சோறும் தின்னு போட்டு, தண்ணி வேற போட்டுகிட்டு லம்பிக்கிட்டுப் போனான். அதான் மனசு வெருக்கு வெருக்குனு இருக்குது.” சொல்லிக்கிட்டு அழுதா.

அவா அழுகுறதப் பாத்துட்டு, “போயி ஒங்கொழுந்தங்கிட்டச் சொல்லி வயக்காட்டுல பாத்துட்டு வரச் சொல்லுத்தா?” ஆதரவாச் சொன்னாக.

மர்ராசு தம்பி ஜெயராசுட்ட சொல்லவும் விருவிருன்னு வயக் காட்டுக்குப் போனான். கூடவே நாலஞ்சு ஆம்பளைகளும் போனாக. போயி சுத்திமுத்திப் பாத்திட்டு வரயில ஓடைக்குள்ள ரெண்டு மூனு நாயிக கொரச்சுக்கிட்டு என்னத்தயோ தோண்டிக் கிட்டு இருக்குரதப் பாத்துட்டு கிட்டத்துல போனாக. போனா மர்ராசோட பொணத்த நாய்க இழுத்துகிட்டு கெடந்துச்சு. நாயிகள வெரட்டிட்டு ஒடனே போயி போலீசுல பொகாரு குடுத்து கேசு போட்டாக. மர்ராசுக்கும், கருப்ப சாமிக்கும் அடிக்கடி சண்டை வருமுன்னும், அவம் பேர்லதான் சந்தேகம்னும் எழுதிக் குடுத்தாக. ஆனா அது ஒரு பெரயோசனமும் இல்லாமப் போச்சு. பழனிவேலு போலீசுக்கு ரூவாயக் கெட்டி, பிச்சமூர்த்தியயும் தன்னக்கெட்டி கேச இல்லன்னு ஆக்கிட்டாரு. பணமிருந்தாத்தான் என்னத்தயும் செஞ் சுட்டு மூடி மறைச்சுரலாம்லெ! ஊர்ல, இன்னைக்கும் இந்தக் கொலைல எல்லாரும் வகுத்தெருச்சலோட சொல்லுவாக. என்ன இருந்தாலும் பள்ளனுக நம்மளுக்கு எதுராத்தானெ இருக்காகன்னு!

சாமிநாதனுக்கும் மர்ராசு சின்னையாவோடெ கொலய நெனச்சா ரொம்பா வேதனையா இருக்கும். அத நெனைக்கும் போதெல்லாம் வெறித்தனமான கோவமும் வரும். “நம்மகிட்ட பணமில்ல, படிப்பில்லன்னு தானெ இப்பிடி நாய அடிச்சுக் கொன்னு பெதச்ச மாதிரி, சர்வ சாதாரணமா சின்னையாவெ அடுச்சுக் கொன்னு பெதச்சிட்டாக! இத்தனைக்கும் சின்னையா எம்புட்டு ஈடுதடியான ஆளு! அன்னைக்கு மட்டும் சின்னையா

தண்ணி போடாமெ போயிருந்தா ஒரு அடிக்குத் தாங்க மாட்டான் அந்தப் பெய. சரியான சாட்சி இல்லியாம். அதுனால விடுதலயாம். கொல செய்றவன் சாட்சி வச்சுக்கிட்டா கொல செய்வான்! கூடயே இருந்த அவுக தெரு ஆளு கண்ணால பாத்தத இல்லன்னுட் டானே … அதே எடத்துல நம்மாளுக இருந்துருந்தா… என்ன இருந் தாலும் எனம் எனத்ததோடெதான் சேரும்… போகட்டும். நாம் படுச்சப் பெறகு வக்கீலுக்குப் படுச்சு இந்த மாதிரி அநியாயத்தப் பூராம் அம்பலப்படுத்தனும். படுச்சு வந்தாத்தான் நமக்கும் வெவரந் தெரியும்," இப்படி கண்டமானிக்க யோசுச்சுக்கிட்டே திருஞ்சான் சாமிநாதன்.

அவுகம்மயிட்டக்கூட அப்பப்ப சொல்லிப் பொலம்புவான். மெக்கேலம்மாகவும் கவலையோட சொல்லுவா. "நம்ம என்னய்யா செய்றது! ஒங்க சின்னையந் தலைல எழுதுனது அம்புட்டுத்தான். அவெ விதி அப்பிடி பள்ளப் பெய கைல போகனும்னு இருந்துருக்கு."

"போமா… போ. பெரிய விதி… ஒரு தண்ணிச் சண்டைக்குப் போயி இப்பிடிச் செய்யலாமாமா? அதுவும் சொந்த வயலுக கூட இல்ல. சம்சாரிக வயலுகளுக்காக இவுக அடுச்சுக்கிட்டுச் சாகனுமாங் கறேன்?"

"நீ கேக்குறது சரிதாம்பா. இந்தப் பெயலுகளுக்குப் புத்தி இல்லாமப் பேச்சுல்லெ? போன உசுரு போச்சு. நீ அதையே பொழு தெனிக்கும் நெனச்சுக்கிட்டு கெடக்காதெ. நீயி ஒத்த சத்தயில அந்த வயக்காட்டுப் பக்கம் போயிராதெ. என்ன?"

"போன என்ன? எனிய எவெ வெட்டுவான்?"

"இங்க பாரு. ஒனிய வெட்டுவாம்னா சொல்லுறேன். வெட்டுப் பட்ட ஒங்க சின்னையா ஒனிய தொத்திக்கிறாமெ. அதுக்குத்தான்! "

"இதாமா தெரியும். இப்பிடியே காத்து, கருப்பு, பேயி பெசா சுன்னே நம்பிக்கிட்டு கெடந்தா, நம்ம முன்னேறுனாப்லதான், " சடவாச் சொன்னான் சாமிநாதன்.

"நீ கஸ்டப்படுறது புரியுதுயா. எனக்கும் சங்கட்டமாத்தான் இருக்குது. பள்ளனுக என்ன அவனுக சுய ஒணர்வா இப்டிச் செய் றானு கன்னு நெனைக்க? எல்லாஞ் சம்சாரிகளோடெ போதனதான்."

"என்ன போதன? எதுக்கு போதன?"

"அவுகதான நம்ம ரெண்டு சாதிக்காருகளும் ஒன்னு சேந்துரக் கூடாதுன்னு சதி பண்ணுறானுக. பத்து இருவது வருசத்துக்கு

முன்னால இருந்தே இப்பிடி இருக்குது. அதுக்கு முன்னாலருந்தே, அதாவது ஒங்க பாட்டம் பூட்டங்காலத்துலருந்தே பகையத்தாங் கெடக்காக. எந்த ஜென்மத்துல இதெல்லாம் மறந்து நம்ம ரெண்டு சாதியும் ஒண்ணாச் சேந்து நிப்பமோ தெரியல. எங்க... போற போக்கப் பாத்தா நம்ம சேரவ முடியாது போல" பெருமூச்சோடெ சொன்னா மெக்கேலம்மா.

"இப்பிடியுஞ் சொல்றீக. பெறகு நம்ம ரெண்டு சாதியும் ஒன்னா மன்னா இருந்தோம்னு சொல்லிக்கிறீக. எது நெசம், எது பொய்யுன்னு ஒரு எழவும் புரியல சலிப்பாச் சொன்னான் சாமிநாதன்."

"ஒனக்கு வெளக்கமா, வெவரமாச் சொன்னாத்தானெ தெரியும். நீதான் எப்பப் பாத்தாலும் சாவடிலதானெ கெடக்க. அங்னகுள்ள இருப்பார்ல அந்த மச்சான் ஆபிரகாம். அவருட்ட கேட்டீனா அம்புட்டயும் வெவரமாச் சொல்லிப் போடுவாரு."

அன்னைக்குச் சாயங்காலமே சாவடில ஆபிரகாம் தாத்தாகிட்ட போயி ஒக்காந்தான் சாமிநாதன். அவங்கூடயே பத்துப் பன்னெண்டு எளவட்டங்களும் போயி ஒக்காந்துகிட்டாக. சாமிநாதன்தான் பேச்ச ஆரம்புச்சு கேட்டான், "தாத்தா, என்ன சௌக்கியமா? எம்மாடியோ, எம்புட்டுப் பெரிய சிலுவய கழுத்துல தொங்க உட்டுருக்காரு தாத்தா."

இதக் கேக்கவும் தாத்தா சிலுவயத் தூக்கி நல்லாத் தெரியும்படி வெளிய உட்டுக்கிட்டுச் சொன்னாரு. "யேசுக்கிறிஸ்து ஒரு புரட்சி யாளர்; அவர் வழில நானும் ஒரு புரட்சியாளன். அதுக்கு அடை யாளம்தான் இந்த சிலுவை," பெரிய வீச்சறுவாள எடுத்துக்காட்டுன மாதிரி சிலுவயத் தூக்கி காட்டுனாரு. அந்தா இந்தானு பேச்சுக் குடுத்து கடேசில மண்ணாங்கட்டி கதையச் கெளறி உட்டான் சாமிநாதன்.

"தம்பி நீங்க அந்த மாடன் மகன் மண்ணாங் கட்டியப் பத்திக் கேக்கீகளா? அவரமாதிரி நாலுபேரு இருந்தா, நம்ம பரம்பரையே வீரப் பரம்பரையா உண்டாகும். ஆமாந் தம்பி. அவ்வளவு மான ஈனம் உள்ளவரு அவரு."

"சரி, அவரப்பத்தித்தாஞ் சொல்லுங்க தாத்தா."

"அதாவது தம்பி, நம்ம பஸ்டாண்டுக்கு வடக்க இப்ப தீப்பெட்டி ஆபீசு இருக்குது பாருங்க... அந்த எடத்துலதான் முன்னால கள்ளுக்கட இருந்துச்சு. பள்ளம் பறையஞ் சக்கிலியம் பூராச் சனங்களும் அங்க கள்ளு குடிப்பாக. சாயங்காலத்துல பாத்தீகன்னா பனங்கள்ளு குடிக்க திருனாப்பட்ட பாடுதான். கள்ளுக்

குடுச்சுட்டு திங்கிறதுக்கு, மொச்சிப் பயறு, தட்டாம் பயறு அவுச்சு காரசாரமா வச்சிருப்பாக. ஒவ்வொருத் தனும் குடுச்சுப் போட்டு ரொம்பா மப்புத்தனமா பேசிக்கிட்டுத் திரிவானுக. சக்கிலியர்க அப்பிடியாச் சலம்பல் பண்ண மாட்டாக. இந்தப் பள்ளனும் பறையனும் இருக்கானுகளே... ரொம்ப லப்சர் புடுச்ச பெயலுக."

"ஏ... என்ன செய்வானுக?"

"அதான் இந்த மண்ணாங்கட்டி தெனமும் கையில கம்போடெ போயி கள்ளு குடிப்பாராம். அவரு போயிட்டார்னா, அவருக்கு மாத்துரம் கள்ளு எலவசமாக் குடுப்பாராம் கள்ளுக்கட நாடாரு."

"அது ஏ அவருக்கு மட்டும் இலவசக் கள்ளு? அவரு என்ன பெரிய சண்டீரா?"

"சரியாச் சொன்னீக தம்பி. பெரிய சண்டீருதான். நல்லா ஒசரமா, பருத்த ஒடலோடெ, வெட்டறுவா மீசையோடெ அவரு வந்தாருன்னா அப்புட்டுப் பேரும் கப்சிப்புனு ஆயிருவாங்களாம். ஆனா நல்ல மனுசனாம். வம்புச் சண்டைக்குப் போக மாட்டாராம். வந்த சண்டைய உடமாட்டாராம். "

"அம்புட்டு நாயமானவர்னா துட்டுக் குடுத்து கள்ளுக் குடிக் கலாம்லெ?"

"அவருக்கும், கள்ளுக்கட நாடாருக்கும் ஒரு பிரண்ட்ஸிப்பு. அவரு குடுக்காரு, இவரு குடிக்காரு. அதுக்கென்ன? ஆனா இதப் பாத்த ஒரு சில பள்ளனுகளுக்கு பொறுக்கல. மொதல்ல நாடாரு கூடயே சண்டைக்குப் போனானுக. அந்தப் பறப் பெயலுக்கு மட்டும் தெனமும் ஓசில கள்ளுக் குடுக்கீல. இனிமே எனக்கும் ஓசில குடுக்கனும்னு சண்ட போட்டுருக்கான். அம்புட்டுப்பேத்துக் கும் ஓசியாக் குடுத்தா, அவனுக் கென்ன லாபமிருக்கும்? தரமாட் டேன்னு சொல்லிட்டான். ஒடனே பள்ளனுக நேரடியா மண்ணாங் கட்டிட்டயே மோதிட்டானுக. இனி மேப்பட்டு நீ ஓசில கள்ளுக் குடிக்கக்கூடாது. நாலு பேத்தப் போல துட்டுக்கு வாங்கிக் குடின்னு சண்ட போடவும், மண்ணாங்கட்டியும் பதுலுக்குக் கத்தி இருக்காரு. மொத வாய்ச்சண்டையா வந்து கைகலப்பு ஆகுற நெலம வரைல வந்து அங்ன இருந்தவுக வெலக்கி உட்டுருக்காக."

"பெறகு?"

"பெறகென்ன? அந்தப் படுவாய்க ஒரு நாளு கத்தியோடெ வந்து மண்ணாங்கட்டிய வம்புக்கிழுத்து, குத்தப் போயிருக்கானுக. ஆனா மண்ணாங்கட்டி சூரனாச்சே. கைக்கம்ப சொழட்டி அடுச்சு கத்திய ஆகாசத்துல பறக்க உட்டு, அப்பிடியே எம்பிப் புடுச்சு,

அவெ வகுத்துல உட்டாம் பாரு ஒரு குத்து... அம்புட்டுத்தான். கொடலு தள்ளிப் போச்சு. கொடல உருவி கழுத்துல மாலையாப் போட்டுக்கிட்டு தெருக்குள்ள வந்த மண்ணாங்கட்டியப் பாத்து அம்புட்டுச் சனமும் மலச்சுப் போயி நின்னுருக்குதுக. அதுல தொடங்குன பகைதான். அப்ப வச்ச வன்மந் தான் இப்ப வரைல தொடந்துகிட்டு இருக்குது."

"அது நடந்து முடுஞ்சு எம்புட்டோ காலம் ஆகிப் போச்சுல்ல. இப்ப எதுக்கு ரெண்டு திக்கமும் எதிரிகளாவே இருக்காக?"

"அதுக்குப் பெறகு எம்புட்டெம்புட்டோ நடந்துருக்கு. ஆனா இம்புட்டுத் தூரம் நம்மள பகையாளியா ஆக்குனது நாய்க்கமாருக தான்!"

"எப்பிடி? அவுக எதுக்கு நம்மளப் பகையாளியாக்கனும்? அவுக சூசுவான்னு அவுக தெருவுகள்ள இருக்காக. நம்மதானே எலியும் பூனையுமா நிக்கோம்?"

"அவுகள லேசுப்பட்டவுகன்னு நெனக்காதே. மண்ணாங்கட்டி செத்தப் பெறகு சன்னஞ் சன்னமா பள்ளனும், பறையனும் ஒத்துமையா ஆகிட்டாக. நானும் வெவரந் தெருஞ்ச நாள்ள இருந்து பாக்குறேன். நம்மூரு பஞ்சாயத்து பிரசிடெண்டு நாய்க்கருதான்; பால் பண்ண தலைவரும் அவந்தான்; கூட்டுறவு சங்கத் தலைவரும் அவனுகதான். நம்ம பெயலுக பூராம் கண்ண மூடிக்கிட்டு அவுகளுக்கு ஓட்டுப் போட்டு செயிக்க வச்சுட்டு பெறகு கைகட்டி நின்னு அவுகளுக்குச் சேவகம் செய்றது இம்புட்டுத்தான் இவுக புத்தி."

"இல்லையே, இப்பக் கொஞ்சக் காலமா நம்ம பெயலுகளும் நின்னு செயிச்சிருக்காகளே?"

"அப்பிடிச் செயிச்சதுதான் நாய்க்கமாருகளுக்கு செவுட்டுல அறஞ்ச மாதிரிப் போச்சு. நாலஞ்சு வருசத்துக்கு முன்ன நம்மளும், பள்ளரும் ஒன்னு சேந்து பேசி பறையனுக பால்பண்ண தேர்தலுக்கும், பள்ளனுக கூட்டுறவு சங்கத் தேர்தலுக்கும் நின்னு, நம்ம ஓட்டுகள சிந்தாமெச் செதறாமெ நம்ம பெயல்களுக்கே போட்டு ஜெயிச்சிட்டோம். அதுனால என்ன ஆச்ச? நாய்க்கமாருகளுக்கு கிலி புடுச்சுப் போச்சு. போறப் போக்கப் பாத்தா, பள்ளனும் பறையனும் ஒன்னாச் சேந்து நின்னாம்னா பிரசிடெண்டு பதவியையும் புடுங்கிரு வானுகளே! இம்புட்டு வருசமா நமக்குக் கைகட்டி ஊழியஞ் செஞ்சவனுககிட்ட நம்ம போயி கைகட்டி நிக்கிற நெலம வந்துரக் கூடாதுன்னு முடிவு பண்ணி, திட்டமிட்டு பள்ளரையும் பறையரை யும் பிருச்சாக."

"அவனுக சொன்ன ஒடனே இவனுக பிரிஞ்சுரனுமாக்கும்?

இவனுகளுக்கா புத்தி இல்லியாக்கும்?"

"புத்தி இருக்கு. ஆனா புத்தியக் கடங் குடுத்துட்டு நிக்கானுகளே. நீயே பாரேன். ஒங்க சின்னையன் மர்ராசு கொலைய செஞ்சது யாரு. பள்ளன்தானே! அவெ யாருக்காகச் செஞ்சான்? அவனுக்காகவா செஞ்சான். அவனோடெ மொதலாளி பழனிவேலு நாய்க்கருக்காகத் தானே செஞ்சான். இதுல பறையனுக வேதக் காரனுக. இதுவேற அவனுக கண்ண உறுத்த, நம்ம இந்துக பூராம் ஒன்னாச் சேரனும்னு சொல்லிப் பெறக்கி பள்ளன உசுப்பி உட்டுட்டு இருக்கானுக. பறையனுக ஏதோ ஒரு ஏப்ப சாப்பையா இருந்தா அம்புட்டுத்தான். கண்டறுஞ்சு பொழைச்சுங்கங்க" சொல்லிட்டு மணலுல மண்டய சாச்சாரு.

சாமிநாதனும், மத்த பெயல்களும் ரொம்பாக் கவலையான மொகத்தோட அங்னயே ஒக்காந்திருந்தானுக. யாரும் யாரோடயும் பேசல. சாமிநாதன், மர்ராசு கொலைய திரும்பத் திரும்ப அச போட்டுக் கிட்டே இருந்தான். பள்ளருக நல்லா இருக்கிற மாதிரி வாராங்க. ஆனா எடயிலயே கால வாரி உட்டுறாங்களேன்னு நெனச்சான். சரி பாக்கலாம்னு சத்தமாச் சொல்லிட்டு எதுவும் பேசாமலே அம்புட்டுப் பேரும் பிருஞ்சு போனாக. நாய்க்கருகதான் செயிச்சுக்கிட்டே இருக்கனும்; பதவில இருக்கனும்; மத்தவுக தேர்தலுலகூட நிக்கக் கூடாது, பதவிக்கு வரக்கூடாதுன்னு நெனைக் கிற இவனுகள இந்தப் பள்ளருக புருஞ்சுக்க மாட்டேங்காகளேன்னு சாமிநாதன் கவலையோடெ வீட்டுக்குப் போனான்.

"காலேஜ் முடுச்சுட்டு எப்பிடியும் வக்கீலுக்குப் படிக்கனும். தங்கச்சி குட்டியம்மாவையும் நல்லப் படிக்க வைக்கணும். நம்ம தெரு பெயலுகளும் பொம்பளப் பிள்ளைகளும் நல்ல பதவிகளுக்கு வரணும். அப்பத்தான் துணுஞ்சு நிக்க முடியும்" பல மாதிரியா நெனச்சிக்கிட்டே படுத்துக் கெடந்தான். "நாங்கூட சித்தப்பா மர்ராசு கொலைதான் மொத மொதல்லா நடந்ததுன்னு நெனச்சேன். அதுக்கும் முன்னாலியே நம்மள அழிக்கணும்னு கங்கணங்கட்டி பள்ளர்கள நமக்குப் பகையாக்கி அவனுக சந்தோசப்பட்டுக்கிட்டு இருக்காணுக. அந்தக் கொலைலகூட அவனுக யாருமே தண்டிக்கப் படலியே... நம்ம சித்தப்பாவோடெ உசுரு போனது போனது தானெ. சரி. பார்ப்போம்" நெனச்சுக்கிட்டே கெடந்தவன் கஞ்சிகூட குடிக்காமெ அப்பிடியே ஒறங்கிட்டான்.

மர்ராசோடெ கொலைக்கு முன்னால என்னமோ பறையர் களும் பள்ளர்களும் நல்லாத்தான் பேசிப்பெழங்கி இருந்திருக்காக. கிறிஸ்து மஸ், வருசப்பெறப்புக்கு பறையர் தெருவுல வெளாட்டு போட்டிக வப்பாக. பள்ளர்க வந்து அதுல கலந்து வெளாடுவாக.

அதுமாதிரி பொங்கலுக்கு பள்ளர்க அவுக தெருவுல வெளாட்டுப் போட்டி வைக்கயில பறையர்க போயி அதுல கலந்து வெளாடுவாக. ஒருத் தருக்கு ஒருத்தரு மச்சான், மாப்ளேன்னு கூப்டுகிட்டு தாமாசு பண்ணிக் கிட்டு கெடப்பானுக. ரெண்டு வருசத்துக்கு முன்னால இந்த வெளாட்டுனால கலவரம் உண்டாகத் தெருஞ்சுச்சு. பெறகு அப்பிடி இப்பிடின்னு சமரசமாகிட்டாக. அப்ப என்னாச்சுன்னா பள்ளர்க பொங்கல் சாட்டிட்டு திருநாளைக்கு முந்துன நாளு அவுக தெருவுல கபடி போட்டி வச்சாக. பறையர் தெரு பையன் பாடிப் போகையில பள்ளர்தெரு டீம் பையனுக அவன கப்புனு புடிச் சாங்க. ஆனா அவெ எகிறிச் குதுச்சு ஓடியாந்து நடுக்கோட்டத் தொட்டுட்டான். தொடவும் அம்பயர் பள்ளர்தெரு டீம்ல ரெண்டு பேத்தத் தவுர பூரா அவுட்டுன்னு சொல்லிட்டாரு. அப்பத்தான் மல்லுக்கு வந்துட்டானுக. பாடிவந்த பெய எடயிலேயே மூச்சு உட்டுட்டாம்னு சொல்லி, நாங்க அவுட்டு ஆகமாட்டம்னு சண்டாக்காடு நாறிப் போச்சு. மொதல்ல வாய்ப்பேச்சா இருந்தது, பெறகு போகப் போக கை கலப்பு வர்ர மாதிரி வந்துருச்சு. ரெண்டு திக்கமும் பெரியாளுக எம்புட்டோ சொல்லி தட்டி உட்டாக... ஆனா ரெண்டு தெருக்காரும் ஒருத்ர ஒருத்தரு வெட்டவா குத்தவான்னு ஆவேசமாச் சண்ட போட்டாக. இதுக்குள்ள பறையர் தெருவுக்குள்ள விசயம் பரவ, பொம்பளைக பூராம் அடைக்கப்போயி, அவுகவுக வீட்டுப் பெயல்கள இழுத்துக்கிட்டு தெருவுக்குள்ள கொண்டாந்து உட்டாக. இல்லன்னா அன்னைக்கே ரெண்டு திக்கமும் கொல உழுந்துருக்கும்.

இதுக்குப் பெறகு ரெண்டு சாதிக்காரரும் பேசிக்கிறமாட்டாக. போகையில வரயில ரெண்டு பேரும் மொறச்சுக்கிட்டுப் போவாக. பெறகு நாளாக நாளாக சாடமாடையா அங்னயும் இங்கனயுமா பேசத் தொடங்குனாக. பெறகு நாலஞ்சு மாசத்துலயே திரும்பியும் ஒன்னாக் கூடிக்கிட்டு வெளாட ஆரம்புச்சாக.

பெரியாளுக பூராம் மொதல்லயே சொல்லிட்டாக, "நீங்க கூடி வெளாடுறதெல்லாம் சரித்தான்... ஆனா வெளாட்டு வெனயா கிறாமே. பெறகு கலவரம்னு வந்தா நாங்கதான் நாய்பட்ட பாடு படனும். அதுனால சண்ட சச்சரவு இல்லாமெ வெளாடுங்க. இல்லன்னா அவெ அவெனுக, தெருவுகளுக்குள்ளயே வெளாண்டுக் கோங்க. இத்தினிக்கூட சகிப்புத் தன்மையே இல்லியே... இவனுக வெளாடுறது நம்மளுக்குத்தா. சங்கடமா இருக்குது."

மறு வருசமே வருசப் பெறப்பன்னைக்கு போட்டி வச்சாக. இந்தத் தடவ தெருவுக்குள்ள வைக்காமெ ஊருக்கு மேற்க தொல வட்டுல ஒரு கம்மாய்க்குள்ள வாலிபால் போட்டியும், கபடிப்

போட்டியும் வச்சாக. இந்தத் தடவ கண்டம்பட்டி பறையர், பள்ளர் மட்டுமில்லாமெ பக்கத்து ஊர்ல இருந்தும் பறையர் பள்ளர்க டீம்களும் வெளாட வந்தாக. அதுனால இந்தப் போட்டிக்கு பல ஊர்கள இருந்தும் பையங்க பாக்க வந்தாங்க. அங்கங்க டொனேசன் வாங்கிப் பரிசுப் பொருள்களும் நெறய்யா வாங்கி வச்சுருந்தாக. வெளாட்டுப் போட்டியப் பத்தி போஸ்டர்க அடுச்சு அங்காங்க ஒட்டி வெளம்பரப்படுத்தி இருந்தாக. இந்தப் போட்டில எப்பிடியும் ஜெயிக்கனும்னு பறையர் தெருவுலயும், பள்ளர் தெருவுலயும் தெனமும் பயிற்சி எடுத்தாக. எல்லாருமே இத ஆவலாக எதிர்பார்த்தாக.

போட்டி அன்னைக்குக் காலைலயே அம்புட்டுப் பெயல்களும் வெளாடுற எடத்துக்குப் போயிட்டாக. போம்போதே தெருவுகள்ள எல்லாரும் சொல்லி அனுப்புனாக. "சண்டகிண்ட போடாமெ வெளாண்டு வாங்கப்பா. நீங்க சின்னப் பிள்ளைத்தனமா இழுத்து வச்சுப் போடாதீங்க. நல்லா வெளாண்டு செவுச்சுட்டு வாங்க. ஆமா..."

போட்டி ரொம்பா விறுவிறுப்பாக நடந்துச்சு. நாலு ஊரு டீம் வெளாண்டு கடைசி ஆட்டத்துல, வாலிபால்ல கண்டம்பட்டி பறையரும், கபடில கண்டம்பட்டி பள்ளர்களும் செயிச்சாக. அப்ப எல்லாம் ஊரு செயிக்கனும்னுதான் வெளாண்டாக. சாதியெல்லாம் பத்தி அம்புட்டு அக்கறை அப்ப இல்ல. சாதிக்குள்ள சாதி, ரொம்பா வெறுப்பு வந்ததே மர்ராசு கொலைக்குப் பெறகுதான். அதுவரைக்கும் ஊடதாட சின்னச் சின்ன சண்டைக வந்தாலும் கொல செய்ற அளவுக்கு யாரும் போனதுல்ல. அதுனால இன்னைக்கு அடுச்சுக்குறுவாக; நாளைக்குக் கூடிக்கிறுவாக. வெளி ஊர்ல இருந்தெல்லாம் பையனுக வெளாட வர ஆரம்புச்சலருந்து வாலிபால், கபடிக்கு கப்பு ஒன்னு பரிசா ரெடி பண்ணி வச்சாங்க. வருசா வருசம் இந்தப் போட்டிய நடத்தி, எந்த ஊரு ஜெயிக்குதோ அந்த ஊருக்குப் கப்பக்குடுக்கனும்னு முடிவாச்சு. கண்டம்பட்டி பள்ளர்களும், பறையர்களும், கப்ப உட்டுக் குடுக்கக்கூடாதுன்னு கங்கணங்கட்டிக் கிட்டாக. ஒவ்வொரு வருசமும் ஒவ்வொரு ஊர்லயா வெளாட்டுப் போட்டிய நடத்தனும்னு முடிவெடுத்தாக. அதுனால தெனமும் சாயங்காலம் வெளாட்டுப் பயிற்சி எடுத்து, நம்ம ஊரு டீமெ யாராலும் அடிக்க முடியாதபடி செய்ய னும்னு அம்புட்டுப் பேத்துக்கும் வெறித்தனமான ஆச இருந்துச்சு.

ஒரு தடவ வாலிபால்ல ஜெயிச்ச கப்போடெ பறையர் தெரு பையங்க நாய்க்கமாரு தெரு வழியாச் சத்தப் போட்டுச்சிருச்சுப் பேசிட்டு வந்துருக்காக.

நன்றி - ஊடறு



பிள்ளையார் கோயிலுக்கிட்ட வரும்போது, அங்ன ஒக்காந்துருந்த நாய்க்கருக இந்தப் பையங்க நிப்பாட்டி கேட்டாகளாம், "ஏய், நீங்கள்ளாம் எந்த ஊருக்காரனுகடா?"

"இந்த ஊர்க்காரனுகதான்," ஜஸ்டின் சுருக்கமாச் சொல்லிட்டு மும்முரமாப் பேசிக்கிட்டே போயிருக்காக.

"நம்ம கேக்குறோம். ஒருத்தனாவது மரியாதையா நின்னு பதில் சொல்லிட்டுப் போறானான்னு பாரு. நம்ம தெருவுக்குள்ள வந்து எம்புட்டுக் கும்மரச்சம் போட்டுகிட்டு போறானுக பாத்திகளா? நம் ஊர்க்காரனுகன்னு வேற சொல்றானுக."

"இந்த ஊர்க்காரம்னா, எந்தத் தெருவுடா? ஒரு மொகறையும் பாத்த மொகறையாத் தெரியலயே...," அசோகன் இழுத்தாரு.

இதக் கேக்கவும் சேவியரு மூஞ்சில அறஞ்சது கெணக்கா சொன்னான், "பறையர் தெருவு... ஆர்.சி.ஸ்டீரீட்னும் சொல்லலாம்."

"பறப் பெயலுகளா...எம்புட்டுத் திமுராப் பேசுராம்னு பாருங்க. இப்பத்தான் நெனவுக்கு வருது. அந்தா கட்டம் போட்ட சட்ட போட்டுப் போறானே. அவுகப்பெந்தான் நம்ம கோபால்சாமி வீட்ல பண்ண வேல பாத்தானே முடியப்பன். இவங்கூட எத்தனையோ தடவ அவுகப்பங்கூட வந்து கையேந்தி வாங்கித் தின்ன பெயதான். இன்னைக்கு என்னமோ நாலெழுத்துப் படுச்சுட்டாம்னு இம்புட்டுச் சவுடாலப் போறான்."

"நம்ம இங்க இருக்கம்னு இத்தினிக்கூட அச்சமில்லையே... நம்மள ஒரு பொருட்டாவெ மதிக்காமல்ல போறானுக."

"நீங்க என்ன பெரிய கொம்பா? நீங்க இருந்தா, நாங்க சிரிக்கக் கூடாதா? பேசக் கூடாதா? இது சனநாயக நாடு. நாங்க எங்ன குள்ளயும் பேசுவோம். சிரிப்போம். வெளாடுவோம். செயிப்போம். இந்தா பாத்தியா வாலிபால் வெளாண்டு செயிச்ச கப்பு. நல்லா பாத்துக்கோ" சொல்லிக்கிட்டே கப்பத் தலைக்கு மேல தூக்கிக்கிட்டு ஒரு சுத்துச் சுத்துனான் அந்தோணி. ஒடனே மத்த பெயலுக பூராம் கைதட்டி விசிலடுச்சாங்க.

நாய்க்கருங்களுக்கு கோவமா வந்தாலும் ஒண்ணுஞ் செய்ய முடியல. தெலுங்குலயே என்னமோ அவுகளுக்குள்ளயே மொணங்கிக் கிட்டானுக. "ஒரு காலத்துல கஞ்சிக்கில்லாமக் கெடந்தானுக. இப்பப் பாருங்க அவனுகளுக்கு வந்த பவுர! அவனுக துணிமணிகளப் பாக்கணுமே. நம்ம பிள்ளைகளுக்கு மேலே போடுறானுக. பஸ்டாண்டுல நிக்கும்போது அவனுகளப் பாத்தா நமக்கே அடையாளந் தெரியாது. அம்புட்டுப் பேரும் இப்ப

பொம்பள ஆம்பளன்னு வித்தியாசமில்லாம படிக்கானுக. எல்லாம் அவுக வேதத்துல குடுக்குற செல்வாக்கு. இவனுகள இப்பிடியே உடக்கூடாது. பள்ளனுக பரவாயில்ல; நம்மகிட்ட இன்னும் மரியாதையாத்தான் இருக்கானுக," ஜெகநாதன் சொல்லவும் எல்லாரும் ஆமான்னு மண்டைய ஆட்டிக் கிட்டாக.

"நம்ம நெலங்கள இந்தப் பறையனுகளுக்கு ஒத்திக்கு உட்டதே தப்பு. அவனுகளப் பாருங்க. ராப்பகலா வேல செஞ்சு, ரூவாயா அள்ளுறானுக. உள்ளூர் பேங்குல போயி பாருங்க. பாதித் தொகைக்கு மேல பறையனுக சேமிப்புத்தானாம். ஏம் மருமகெ அங்கதானெ வேல செய்றாரு."

"நம்ம என்ன பறையனுக முன்னேறட்டும்னா உட்டோம். முன்ன மாதிரி அவனுக இப்ப நம்மகிட்ட பணுஞ்சு வேல வெட்டி செய்ய மாட்டேங்கானுக. எடுத்தெருஞ்சு பேசுறானுக. ஏதாவது சொல்லப் போனா வேலைக்கே வரமாட்டேங்கானுக. இவனுகள நம்பித்தானெ நம்ம விவசாயஞ் செய்ய வேண்டியிருக்குது. நம்மளா சகதிக்குள்ள எறங்க முடியும்? பள்ளனுக யாரும், அவனுக மாதிரி முன்ன வந்து கேக்க மாட்டேங்கானுகளே. அதுனால போனாப் போகுதுன்னு இந்தப் பெயலுககிட்ட உட்டா, அவனுக நம்மளயும் மிஞ்சிருவானுக போல. பேசாம அவரு வெங்கடசாமி செஞ்ச மாதிரி பூராத்தயும் தென்னங்கன்னு, கொய்யாக்கன்னுகள வச்சு தோப்புகளா ஆக்கிப் போடனும். அதுதான் நல்லது."

"படுச்ச பெயலுக மட்டுமில்ல, வரவர பெரியாளுக கூடத்தான் நம்மள மதிக்க மாட்டேங்காக. போன வாரத்துல ஒரு நாளு சேரித் தெரு குப்பா மகன் சூசை, வயக்காட்டுல குப்ப செதறிக்கிட்டு இருந்தான். வேல முடிற நேரத்துல, அவனோட மகன் ஒருத்தன் வந்து அவங்கிட்ட ரூவா கேட்டுட்டு இருந்தான். மடிப்புக் கலையாத துணி போட்டுக் கிட்டு, காலுல செருப்பு, கைல கடிகாரமுங் கெட்டிக்கிட்டு நிக்கான். சரி மசங்கமுன்ன வேல முடியட்டும்னு, சூசைட்ட சொல்லி, அவெ மகனையும் கூட மாடச் சேந்து குப்ப செதறச் சொன்னதுக்கு அவெ என்ன சொன்னாங்றீங்க? 'அவெ இப்பத்தான் குளுச்சுட்டு நல்ல துணி மணி போட்டுட்டு வந்துருக்கான். அவென் செதற மாட்டான்.' அவனுக்கு ஏம்பேச்சு பெருசாத் தெரியல. அவெ மகன் துணிதான் பெருசாத் தெரியுது. நம்ம சொல்ல முன்ன அம்புட்டுப் பேரும் வேல செஞ்ச கால மெல்லாம் போச்சு."

# இரண்டு

சாமிநாதன் சாவடிப்பக்கம் வரும்போது, பத்துப் பதினஞ்சு பையங்க வேப்ப மரத்தடில ஒக்காந்து சத்தம் போட்டு என்னத்தயோ சொல்லிச் சிருச்சுக்கிட்டு இருந்தாக. அவுக சிருச்ச சிரிப்புல, சாவடிக்கு முன்னாலெ இருந்த குழாய்ல தண்ணி புடுச்சுக்கிட்டு இருந்த பொம்பளைக பூராம் திரும்பி அவனுகளப் பாத்தாக. விசயம் என்னன்னு தெரியாமலேயே நெறய்யப்பேரு மொகத்துல சிரிப்புப் பொங்குச்சு. தண்ணி புடிக்கிறதக்கூட உட்டுட்டு, கொஞ்சந் தள்ளிப் போயி உத்துக் கேட்டாக. அவனுக போட்ட சத்தத்துல அக்கம் பக்கத்துல இருந்த வீட்டுகள்ள இருந்தவுக கூட என்னன்னு பாக்க எந்துருச்சு வந்தாக.

சாமிநாதன் இதப் பாத்துட்டு குறுஞ்சிரிப்புச் சிருச்சுக்கிட்டே மரத்தடிக்குப் போனான். ஏற்கனவே சிருச்சுச் சிருச்சு மொகா மெல்லாம் சூடாகிப் போயி கண்ணுலருந்து வந்த கண்ணீரத் தொடச்ச அந்தோணி சிரிப்பு மாறாமலே, எப்பண்ணா வந்தன்னு சாமிநாதனக் கேட்டான்.

“இப்பத்தாண்டா. என்ன ஜோக்குடா? இந்தச் சிரிப்புச் சிரிக்கீக... ஒங்க காலேஜ் கடியா?”

“அதவிட சூப்பரான ஜோக்குண்ணா இது. கேட்டதுலருந்து சிரிச்சுச் சிரிச்சு வகுறு புண்ணாப் போச்சு.” துண்ட வச்சு மொகத்த நல்லாத் தொடச்சுட்டு மறுபடியும் ஜோக்கச் சொல்ல ரெடியானான் அந்தோணி. ஆனா அவெ என்ன தொடப்புத் தொடச்சாலும், சொல்லத் தொடங்கயிலேயே திரும்பியும் சிரிப்பு வந்துருச்சு. மத்த பையங்கள்ளாம் ஏ சிரிக்காமச் சொல்லுன்னு கத்தவும்... ஒரு வழியாச் சமாளுச்சுக்கிட்டு சொல்லத் தொடங்குனான் அந்தோணி.

“அதாவதுணா, அந்தத்தெ நானம்மா மகன் ஜெயராசு இருக் காம்லெ... அவெ எங்க காலேஜ்லதான் ஃபஸ்ட் இயர் சேந்துருக் கான். பருச்ச முடுஞ்சு ஊருக்கு வந்த பெய ஒழுங்கா ஊரு வந்து சேர வேண்டியதுதானெ. அத உட்டுட்டு, வாற வழில ரொம்ப டுபாக்குர் வேலையெல்லாஞ் செஞ்சுருக்கான். அதுவும் நம்மதெரு ஆளுட்டயே.”

"என்ன செஞ்சானாம்?"

"நம்மாளு சட்டையெல்லாம் இன்பண்ணி, கூலிங் கிளாசோட வந்து நம்மூரு பஸ்டாண்டுல எறங்கி இருக்காரு." சொல்லும் போதே கூட இருந்து பாத்தவங்கெணக்கா எந்துருச்சு நின்னு இல்லாத ஆக்சனல்லாம் போட்டான் அந்தோணி. முன் நெத்தில கெடந்த மயிரத் தள்ளி உட்டுக்கிட்டு பெடதிப் பக்கம் மெதுவாத் தடவித் தடவி உட்டான். கூலிங் கிளாச நாசூக்காத் தள்ளி உடுற மாதிரி பாவலா பண்ணிக் கிட்டான். பேண்டு பைக்குள்ள கைய உட்டுகிட்டு நிக்கிற மாதிரி நின்னுகிட்டு தொயந்து சொன்னான். இவெஞ் செஞ்சதப் பாத்துகிட்டு நின்ன பொம்பளைக மொகத்துல ஆர்வமும், சிரிப்பும் மல்லுக் கெட்டிக்கிட்டு இருக்க, எந்த நிமிசத்துலயும் சிரிக்க ரெடியா நின்னாக. அங்ன இருந்த அம்புட்டுப் பேரு கண்ணும் அந்தோணி மேலேதான் இருந்துச்சு.

அந்தோணி பெரூசா முஸ்திபு செஞ்சுக்கிட்டே இருக்கவும் பொறும எழந்துபோன ஸ்டீபன் கொஞ்சம் எருச்சலாச் சொன்னான், "ஏலைகா, இந்தப் பெய ஒன்னுன்னா ஒம்பதும்பான். போடா போ... இப்படித்தாம் மாமா இந்நியாரம் வரைக்கும் லந்து பண்ணி அந்த ஜெயராசுப் பெயல ஒரு வழியாக்கிட்டான்."

"ஏலேய், விசயத்தச் சொல்லேம்டா. ஓ நாடகமே பெரிய நாடகமாவுல இருக்குது." சாமிநாதன் சொல்லிக்கிட்டு இருக்கையில இன்னாசி மச்சான் அங்க வந்தாரு.

"இந்தா அந்த மச்சானே வந்துட்டாக. நீங்க சொல்லுங்க மச்சான். நீங்க தானெ கண்ணால பாத்தது," பாக்கியராசு ஒரக்கச் சொன்னான்.

மச்சான் இன்னாசிக்கு நாப்பத்தஞ்சு வயசுக்கு மேலயே இருக்கும். ஒல்லியா, ஒசரமா இருப்பாரு. பத்து வரைல படுச்சுட்டு, அதுக்கு மேல படிக்க வசதி இல்லாமெ படிப்பெ நிப்பாட்டிட்டாரு. இப்பக் கலியாணங் காச்சி முடுச்சு நாலஞ்சு பிள்ள தகப்பனா கிட்டாரு. இவனுகளோட மொகத்தப் பாத்ததுமே, "என்னங்கடா ஜெயராசுப் பெயலப் பாத்தீகளா? நெனைக்க நெனைக்க எனக்கு எங்குனக்குள்ள இருந்தாலும், ஒத்தயில இருந்தாலும் சிரிப்பா வருதுடா," சொன்னவரு மொகத்துல அம்புட்டுச் சிரிப்பு.

"ஜெயராசுப்பெய அப்பிடி என்னதாஞ் செஞ்சா? அம்புட்டுப் பேரும் அவனையே சொல்லுறாக," கொழாயடில நின்ன அருள் மேரி கேக்கவும் அங்ன நின்னவுக அவளச் சும்மா இருக்கச் சொல்லி அதட்டுனாக. இன்னாசி மச்சான் சொல்லப் போறதக் கேக்கனும்னு அம்புட்டுப் பேரும் தவிப்பாத் தவிச்சுப் போயி நின்னாக.

இன்னாசி சொல்ல ஆரம்பிக்கயில எங்க பாத்தாலும் ஒரே அமைதி. எங்குட்டோ ஒரு மாடு மட்டுங் கத்துச்சு. அம்புட்டுப் பேரும் இன்னாசியப் பாத்தாக. அம்புட்டுப் பேரு மொகத்துலயும் சிரிப்பு வெடுச்சுச் செதர ரெடியா இருந்துச்சு. இன்னாசி தொடங்குனாரு. கொஞ்சம் எட்டத்துல இருந்தவுகளும் நகந்து நகந்து வந்து கிட்டத்துல ஒக்காந்துகிட்டாக.

"அதாவது, நேத்து சுண்ணாம்பு கொழைக்கப் போயிருந்தேனா... கொழைக்கயில காலுல மம்பிட்டி வெட்டி ஒரே ரத்தக் காடு. அப்பிடியே வட்டக்குடி போயி தர்மாசுபத்திரில கட்டுக் கட்டிக்கிட்டு வந்தேன். டாக்டரு இன்னைக்கும் வரச் சொன்னாருட்டு இன்னைக்கும் போயிட்டு, நம்மூருக்கு வாரதுக்காக வண்டிக்குக் காத்திருந்தேன். வேறொரு டயம்னா நடந்தே வந்துருப்பேன். காலுல வேதன. அத்தோட அந்த வண்டில ஏறுனா கூட்டமான கூட்டம். அந்த வண்டிய உட்டுட்டா பெறகு என்னியாரத்துக்கு வண்டியோன்னு கூட்டத்துல ஏறிட்டேன். நம்மூரு பஸ்ஸ்டாண்டுல எறங்கி செத்தநேரம் அங்ன வேப்பமரத்து நெழலுல ஒக்காந்தேன். காலுவலி தாங்க முடியல," சொல்லிக்கிட்டே காலக் காட்டுனாரு. கட்டுக் கட்டி இருந்துச்சு. செத்த நேரம் அம்புட்டுப் பேரு மொகத்துலயும் சிரிப்பு மாறி இன்னாசி மச்சானின் காலோட வலி லேசாத் தெருஞ்சது. ஆனா டக்குனு மறுபடியும் சிரிப்பு வந்து தொத்திக்கிருச்சு.

இன்னாசி சுத்தி ஒரு தடவப் பாத்துக்கிட்டாரு. சாவடில, கொழாயடில, மரத்தடில இப்பிடி நாலாதிக்கத்துல இருந்தும், அம்புட்டுப் பேரும் அவரையே வச்சகண்ணு வாங்காமெப் பாத்துகிட்டு, சிரிக்கக் காத்துக் கெடக்குறதப் பாத்துட்டு அவருக்கு உற்சாக வெள்ளம் கரபெரண்டு ஓடுச்சு.

"நா வந்த வண்டிலதான் அந்தப் பெய ஜெயராசும் வந்து எறங்குனான். வண்டிக்குள்ள அவனப் பாக்கல. மதுரயிலயே ஒக்காந்து வந்துரப்பாம்போல. தோளுல ஒரு பையத் தொங்க உட்டுருந்தான். எறங்குன ஒடனே அங்ன நின்ன சைக்கிள் கண்ணாடில குனுஞ்சு மொகத்தப் பாத்து கைக்குட்ட வச்சு தொடச்சான். பெறகு குண்டிக்குப் பின்னால இருந்த பையிலருந்து ஒரு சின்னச் சீப்ப எடுத்து மயித்தச் சீவிக்கிட்டான். கருத்த கண்ணாடி வேற போட்டுருக்கான். அதுனால அவெ எங்குட்டுப் பாக்கான் யாரப் பாக்காம்னு கரெக்டாத் தெரியல. நானு எந்துருச்சு வீட்டுக்குப் போகலாம்னு வந்தேன். அவெ எனியப் பாத்தது கெணக்கா இருந்துச்சு. சரி, நம்ம தெரு ஆளுன்னு பாத்துருப் பாம்னு நெனச்சேன். சரி, லீவு உட்டாச்சான்னா கேக்கலாம்னு நானு அவனப்

பாத்தா, அவெங் கேக்கான், ஹலோ, ஆர்.சி. தெருவுக்கு எப்பிடிப் போகனும்? நானு அப்பிடியே மலச்சுப் போயி நின்னுட்டேன்."

நாலாதிக்கத்துலருந்தும் கொல்லுனு சிரிப்புச் சத்தம். எடைல என்னென்னமோ சொல்லிகிட்டு அம்புட்டுப் பேரும் சிரிச்சாக. இன்னாசியும் சிரிச்சாரு. சாவடில படுத்துக் கெடந்த இருளாண்டித் தாத்தா தலய மட்டும் தூக்கிப் பாத்துட்டுச் சொன்னாரு, "நாலெழுத்துப் படுச்ச ஒடனே பெறந்த மண்ணுக்கு வழி தெரியாமப் போச்சாக்கும். அந்தாணிக்க கண்டாரஸி கண்ணாடியப் புடுங்கிட்டு, குண்டில ரெண்டு வப்பு வச்சா தன்னால பாதை தெருஞ்சு போகும்."

"சரி, நீ என்ன சொன்ன மச்சான்?"

"நானு மனசுக்குள்ளயே நெனச்சுக்கிட்டேன், சரிதான் இந்தப் பெய நம்மள அடையாளம் தெரியாதது மாதிரி பனுக்கறான். இவெ என்னதாஞ் செய்றாம்னு பாப்பமின்னு கம்முனே நடந்தேன்."

"பெறகு? "

"பெறகென்ன? அந்தப் பெயலும் நடந்தான். அங்னக்குள்ள முருகேசன் நாய்க்கரு ஸ்கூட்டர்ல ஒக்காந்த மாணிக்கா யாருட்டயோ பேசிக்கிட்டுருந்தாரு. அவருட்டப் போயி ஆர்.சி. தெருவுக்கு எப்பிடி போகனும்னு கேட்டான். அவரு இவன ஏற எறங்கப் பாத்துட்டு ஒன்னுஞ் சொல்லல. அவரு கூடப் பேசிக்கிட்டு இருந்தவருதான் இவெ அந்தத் தெருப் பையன்தான் மொதலாளி. சும்மா எடக்கா கேக்கான்னு சொல்லவும் முருகேசன் மொகத்துல எள்ளுங் கொள்ளும் வெடிச்சது. சரி, இவெ என்னதாஞ் செய்றாம்னு பாப்பமின்னு நானு மெதுவா நடந்தேன். அவனுக்கு எம்புட்டு மப்புன்னா, மறுபடியும் ஏங்கிட்டயே ஆர்.சி. தெருவுக்கு வழி எதுன்னான். எனக்கு வந்த ஆத்துரத்துல 'நானும் அங்கதாண்டி போறேன், வா ஒனிய தெருவுக்குள்ள வச்சு கவனிச்சுக்கிறேன்'னு மனசுல நெனச்சுக்கிட்டு அவனுக்கு வழியக் காட்டுனேன். வழில கைக்குட்டத் துணிய வச்சு மூக்கப் பொத்திக் கிட்டான். எனக்கு ஆத்துரமா வந்தாலும், அவனுக்குப் பின்னாலியே ஒன்னுங் கேட்டுக்காமயே வந்தேன். அந்தச் சித்தப்பா மிலிடேரிகாரு வீடு வரவும், அந்த முக்குல ஒக்காந்திருந்தவுக கிட்ட திரும்பியும் வழி கேட்டான். அங்ன இருந்தவுகளும் தெகச்சுப் போயி சொன்னாக 'இதாரு மகெ... அந்த மதினி நானம்மா மகந்தானெ... தெருவுக்கு வழி கேக்குதப் பாத்தா அசலூர்க்காரனா இருப்பானா . . .' அவுக சொல்லவும் எனக்குஞ் சந்தேகமாப் போச்சு. இவெஞ் ஜெயராசு தானா அல்லது அவெஞ் சாடையில வேற பெயலான்னு கண்டு பிடிச்சிரனும்னு நெனைச்சுகிட்டு ஏ வீட்டுக்குக் கூடப் போகாமெ

அவெம் பின்னாலியே போனா, பெய கரெக்டா அவுக வீட்டுக்குப் போயி, நாராங்கியத் தொறந்து பைக்கட்ட உள்ள வச்சுட்டு நேராச் சாவடிக்கு வந்துட்டான். அவுகப்பனும் அம்மையும் பருத்தி எடுக்கப் போயிட்டாக. வீட்ல யாருமில்ல."

"இங்க நாங்கள்ளாம் இருந்தம்ல. எங்களுக்குப் பஸ்டாண்டுல நடந்த சமாச்சாரம் அப்பத் தெரியாதுல. இங்க வந்தும் கைக் குட்டத் துணிய வச்சு மூக்கப் பொத்திக்கிட்டே தெக்கயும் வடக்கயுமா திருஞ்சான். சாவடில போயி கைக்குட்டய வச்சு தூசி தட்டிட்டு அதயே போட்டு ஒக்காந்துகிட்டு ஒரே நாத்தம் நாத்தம்னு கையக் கொண்டி வீசிக்கிட்டே இருந்தான்," அந்தோணி சொன்னான்.

"பெறகு? அவங்கிட்ட யாருமே எதுவும் கேக்கலயா?" சாமி நாதன் கேட்டான்.

"நல்லாத்தான் கேட்டேன். நாக்கப் புடுங்கிட்டு சாகுற மாதிரி. நாந்தான் வீட்டுக்குப் போயிட்டு, கூழக் குடுச்ச ஒடனே இங்க சாவடிக்கு வந்துட்டம்லெ. இங்க வந்து அவா நாற்றமடிக்குதுனு சொல்லவும் எனக்கு வந்துச்சே கோவம்..."

இன்னாசி சொல்லிட்டு நிப்பாட்னாரு. "மச்சான் நல்லாத்தாங் கேட்டாக. பெய ஒட்டங் கிண்ணிட்டான்," அந்தோணி சிரிச்சுக் கிட்டே சொன்னான்.

"என்ன கேட்டீகெ அப்பிடி?"

"நாம் போயி அவங்கிட்ட நின்னுகிட்டு சத்தமாத்தாங் கேட்டேன், ஏலேய் எடுபட்ட பெய மகனே, நீயி இந்தப் புழுதிக்குள்ள உழுந்து, பெரண்டு எந்துருச்சு வெளாண்ட காலமெல்லாம் அதுக்குள்ள மறந்து போச்சாக்கும்! அட வெங்காயம்! ஏங்கிட்டயே ஆர்.சி. தெருவுக்கு வழி கேட்டீனா ஒனக்கு எம்புட்டு குண்டிக் கொழுப்பு இருக்கணும்! பேண்ட குண்டி கழுவாமத் திருஞ்ச தெல்லாம் நெனச்சுப் பாரு. வீசுதாம்லெ இவளுக்கு!"

"மச்சான் சொல்லவும் நாங்கள்ளாம் புடுச்சுக்கிட்டோம். பெறகு பஸ் ஸ்டாண்டுக் கதய கேக்கவும் அவன உண்டு இல்லன்னு ஆக்கிட் டோம். இவனுக பண்ணுன கூத்துல அந்தப் பெய பூட்சு காலோட எவ்வி எவ்வி ஓடியே போயிட்டான். இனி இங்குட்டு சாவடிப் பக்கமே அனேகமா வரமாட்டான்."

இன்னாசி சொல்லி முடிக்கவும் அம்புட்டுப் பேரும் வாய்க்கு வந்ததெல்லாஞ் சொல்லிக்கிட்டே சிருச்சாக. தொயந்து ஒரு நாலஞ்சு நாளு எங்ன பாத்தாலும் இதே பேச்சுத்தான். காடு

கரைகள்ள வேல வெட்டி செய்யும் போது கூட இதத்தான் கண்ணு, காது, மூக்கு வச்சு சொல்லிச் சொல்லிச் சிருச்சுக்கிட்டு கெடந்தாக.

ஜெயராசெக் கொஞ்ச நாளைக்கு வெளியவே பாக்க முடியல. அப்பிடியே வந்தாலும் மத்த பையங்களோட அம்புட்டுக்கா பழக்கம் வச்சுக்கிராம தனியாவே அலஞ்சான். தெருவுக்குள்ள அவெ ஒருத்தந்தா எப்பப் பாத்தாலும் பேண்ட், சட்டை, செருப்போடெ திருஞ்சான். யாரு எம்புட்டுக் கிண்டலடுச்சாலும் செவுடங் காதுல ஊதுன சங்கு மாதிரித் தான். எதுக்குமே அவெ மசியல.

சாயங்காலம் ஆச்சுன்னா மணக்க மணக்கப் பவுடரு போட்டுக் கிட்டு மேற்கெ கோயிலுக்குப் போயிருவான். கோயிலுல செபம் படிக்கிறது இவந்தான். அவனுக்கு நல்ல சத்தம். வெங்கலத் தொண்ட. டாண் டாண்ணு வாசிப்பான். சின்னப் பிள்ளைகளுக்குப் பாட்டு சொல்லிக் குடுப்பான். மத்த பையங்க மாதிரி பீடி, சிகரெட்டு எதுவுங் குடிக்க மாட்டான். தெருவுல கூட எல்லாருஞ் சொல்வாக, “எல்லாஞ் சரித்தான். நல்ல பெயலாத்தான் இருக்கான். ஆனா ரொம்பா பவுருத் தனஞ் செய்றான். அதான் பூழாப்பா வருது.”

யாரு என்ன சொன்னாலும் அவுகம்மெ மட்டும் மகனப் பாத்துப் பாத்துப் பூருச்சுப் போவா. “ஏம் மகெ என்ன மத்த பெயலுக கெணக்கவா! கோயிலு கொளம்னு எம்புட்டுப் பக்தியா இருக்கான்! ஆனா அவெம்னா இந்தத் தெருப் பெயமக்களுக்கு அம்புட்டு எளக்காரம். நேத்துப் பெறந்த நண்டுகூட அவன நக்கலு பண்ணிச் சிரிக்கிதுக,” ரொம்பாப் பெருமையாச் சொல்லிக்கிருவா.

பையங்க சாயங்காலத்துல பந்தடிக்கப் போம்போது ஜெயராசையும் கூப்புடுவாக. ஆனா இவெ போகவே மாட்டான். போன கிறிஸ்மஸ்க்கு சாவடிக்கு முன்னாலெ எளவட்டங்களா கபடி வெளாண் டாங்க. அப்பக்கூட இவெ வெளாட மாட்டேனுட்டான். ஆனா மைக்குல வெளாட்டப் பத்தி விமர்சனம் செஞ்சான். மைக்குல பேசனும்னா அவனுக்குக் கொள்ள ஆச. இந்த மாதிரி வேலைகள அவனா விரும்பி வந்து செய்வான். அத்தோடெ சரி. அதுக்குப் பெறகு யாருட்டயும் ஒட்ட மாட்டான். இவெ ஒட்டாட் டாலும் பெயலுக இவனச் சும்மா உடமாட்டானுக. என்னத்தை யாவது சொல்லி இவன வம்புக்கிழுத்துக் கிட்டே இருப்பானுக. என்ன சொன்னாலும், என்ன செஞ்சாலும் ஜெயராசு அவ்வளவு சீக்கிரத்துல எதையும் சீரியசா எடுத்துக்ர மாட்டான். அவெங் கொணமே அலாதிதான்.

தைப் பொங்கலுக்கு நாலஞ்சு நாளு லீவு உட்டாகளாம். ஜெயராசு வீட்டுக்கு வந்துருந்தான். அவனா வீட்டு வீட்டுக்குப்

போயி நன்கொட பெரட்டி, சாவடிக்கு முன்னாலெ இருந்த குருசுக் கிட்டெ பொங்கல் வச்சு பெரிய ஜெபக் கூட்டம் நடத்துனான். ஊர்ச்சனங்க ஒன்னா வந்து கலந்துக்கிட்டாலும், அதுலயும் ஒரு சிலரு பெரச்சன பண்ணுனாக. இந்தப் பெய என்ன அவெ இஸ்டத்துக்கு நன்கொடை வாங்கி, அவெ இஸ்டத்துக்கு செல வழிச்சுக்கிட்டுத் திரிறான். இவெந் தெருவுக்குள்ள வாங்குன பணத்துக்குக் கணக்கு காட்டியாகணும். இங்க இருக்குறவனு கள்ளாம் என்ன இழுச்ச வாயன்களா?" இப்பிடிச் செலபேரு சொல்லவும், "ஆமாமா, தேனெடுத்தவன் கைய நக்காமலா இருப் பான். கணக்கு காட்டாமெ ஊர விட்டுப் போயிருவானா என்ன," இப்பிடியும் செல பேரு சொல்ல, ஊருக்குள்ள இது பிரஸ்தாபம் ஆயிருச்சு.

"நல்லதுக்கே காலமில்ல; ஒரு பெயலும் முன்ன நின்னு ஒத்தக் காரியஞ் செய்ய மாட்டானுக; செய்ற பெயலுகளையும் கொற சொல்லுவானுக. அட, ஒத்தயிலே அலஞ்சு பெறக்கி அம்புட்டு வேலை செஞ்ச பையந்தான் மிச்ச மீதி இருந்தா சாப்புட்டுப் போறான். இது பொறுக் கல. இதுல வந்து கணக்கு கேக்குறவுனுக வேலைலயும் பங்கு கேட்டுச் செஞ்சுருக்க வேண்டியதுதானெ. ஒரு அப்ராணி சப்ராணின்னா எல்லாப் பெயலும் நாட்டாமெத்தனஞ் செய்வான்," புஸ்பம் அவாபாட்டுக்குச் சொல்லிக்கிட்டுப் போனா.

எல்லாத்தயுங் கேள்விப்பட்ட நானம்மாளுக்குக் கோவம் வந்துருச்சு. ராத்திரி சாப்பாட்டுக்கு வந்த ஜெயராசுகிட்டெ ஆத்துரமாச் சொன்னா. "ஒனக்கெதுக்குய்யா இந்தச் சோலி? எந்தப் பெய மக்களும் சாமி கும்புடுறா இல்லன்னா கெடக்கா. இப்பப்பாரு சக்காளத்தி மக்கெ வாய்க்கு வந்ததெல்லாம் பேசுறாக. எலும்பில் லாத நாக்கு எப்பிடியும் பேசும். துப்புக் கெட்ட கழுதைக. எத்தன பெயலுக படுச்சுட்டு வந்துருக்கானுக. ஒரு பெயலுக்கும் செய்யத் தெரியல. இப்ப செஞ்ச பையன ஆளாளுக்கு மென்னு துப்புறாக. நீ பேசாமெ ஒரு தாளுல கணக்கெ எழுதி அவுக மூஞ்சில விட்டெறுஞ்சு சாமி."

ஜெயராசு அமைதியாக் கேட்டுட்டு ராத்திரி சாப்புட்டப் பெறகு ரொம்ப நேரம் லாந்தரு வெளிச்சத்துல கணக்கு எழுதுனான் மறுநாளு சாயங்காலம் சாவடிக்கு முன்னாலெ எல்லாத்தையுங் கூப்புட்டு வச்சு கணக்க வாசிச்சுக் காட்டுனான். "மொத்த நன்கொடை நூத்தி முப்பது ரூபாய். பொங்கல் செலவு, ஜெபக் கூட்டச் செலவு, மைக் செட்டுக்குச் செலவு, இப்பிடி எல்லாச் செலவுகளும் சேந்து மொத்தச் செலவு நூத்தி பதினெட்டு ரூபாய்,

அம்பது பைசா. மீதி பதினோரு ரூபாய் அம்பது பைசாவை கடவுளுக்காகப் பொறுத்துக் கொள்ளவும்."

ஜெயராசு வாசுச்சு முடுச்ச ஒடனயே கூடி இருந்தவுக அம்புட்டுப் பேரும் கொல்லுன்னு சிரிச்சாக. "கடவுளு பொறுத்துக் கிட்டாலும் நாங்க பொறுக்க மாட்டோம்," கூட்டத்துல யாரோ கத்தவும் சிரிப்புச் சத்தம் இன்னும் அதிகமாச்சு. இவெ ஒரு தினுசான பெயடான்னு சொல்லிட்டு போயிட்டாக. அதுக்குப் பெறகு யாரும் எதுவும் அவங்கிட்டெ கேக்கல.

ஜெயராசெ வம்புக்கிழுக்கனும்னே நாலஞ்சு படுச்ச பெயலுக ஒன்னு சேந்துகிட்டு, அவங்கிட்ட சொன்னாக, "ஏப்பா ஜெயராசு, நீயி இப்பிடி கோயிலு கொளம் காரியங்கள்ள ரொம்பா ஆர்வமா இருக்கியே... இந்த மாதிரி செய்றதுக்குன்னே உபதேசியார்னு ஒரு வேல இருக்குல்ல. போசாமெ அதுக்குப் படுச்சுட்டுப் போறது தானே? என்னத்துக்கு ஒனக்கு காலேஜ் படிப்பு?"

"நீங்க நெனைக்கிற மாதிரி நானு நாலு காசு சம்பாதிக்கிறதுக் காகவா ஜெபம் படிக்கிறேன். அது கடவுளுக்கு நாஞ் செய்ற ஊழியம். பெருசா சொல்ல வந்துட்டானுக. போங்கடா ஒங்க சோலியப் பாத்துக் கிட்டு," ஜெயராசு காட்டமாச் சொன்னான்.

"அட அதுக்குள்ள ஏம்பா இப்பிடி வெளமாப் பேசுற? வகுத்துப் பாட்டுக்கே கஸ்டப்படுற சனங்களுக்கு வெறுஞ் செபத்தச் சொன்னா போதுமா? அவுக வாழ்க்கைக்கும் எதுனாச்சும் செய்யனும்ல! அதுக்கு எதுனாச்சும் செய்யலாம்லெ?"

"ஒங்களுக்கு முன்னாலெ நானு அதெல்லாம் யோசுச்சுத்தான் வச்சுருக்கேன். ஆனாலும் யேசுநாதர் என்ன சொன்னார். 'முந்த முந்த கடவுளின் ராஜ்யத்தத் தேடுங்கள். மீதி எல்லாம் உங்களுக்கு அருளப் படும்,' அப்பிடின்னு சொன்னாருல்ல! அந்த விசுவாசமும் நமக்கு வேணும். அத்தோடெ நானு வெளி நாட்டுக்கு ஒருத்தருக்கு உதவி கேட்டு எழுதியிருக்கேன். அவரு உதவி செய்தா நல்லா இருக்கும்."

"வெளிநாட்டு தொடர்பெல்லாம் ஒனக்கு எப்பிடிக் கெடச்சது?"

"எங்க காலேஜ்க்கு அமெரிக்கா நாட்டுக்காரரு ஒருத்தரு வந்தார். ரொம்ப நல்லாச் ஜெபம் செஞ்சார். அவர் அட்ரசுக்கு எழுதிப் போட்டுருக்கேன்."

இதக் கேட்டுட்டு பொத்துக்கிட்டு வந்த சிரிப்பெ கஸ்டப் பட்டு அடக்கிக்கிட்டு அந்தப் பெயல்க போயிட்டானுக. அங்குட்டுப் போயிட்டு அவனுகளுக்குள்ளேயே பேசிக்கிட்டானுக, "இவெ என்னடா இப்பிடி இருக்கான். அவரு நல்லா ஜெபம்

செஞ்சாராம். இவனுக்கு என்னடா இங்கிலீசு புருஞ்சுருக்கும். அவருக்குக் கடிதம் வேற போட்டானாம். அவரு பணம் அனுப்பு வாராம். இவனுக்கு ஒததாங் கெடைக்கும்."

அவனுகள்ள ஒருத்தன் மார்டின் சொன்னான், "ஏலைகளா நம்ம ஒரு திட்டம் போடுவோம். இவன வசமா ஏமாத்துவோம். கொஞ்ச நாளுக் கழுச்சு, அமெரிக்காவுல இருந்து இவனுக்கு டாலரு வந்து ருக்குனு சொல்லி புரளியக் கௌப்பி உடுவோம்."

சொன்னது கெணக்கா நாலஞ்சு மாசங் கழுச்சு அமெரிக்காவுல இருந்து பணம் வந்துருக்குனு நம்மூரு பேங்குல பேசிக் கிட்டாகன்னு கௌப்பி உட்டானுக. இதக் கேக்கவும் ஜெயராசுக்கு தலகாலு புரியல. போயி என்ன ஏதுன்னு விசாரிக்காமலே, ஒரு ஆபீஸ் போட்டு ஊழியஞ் செய்ய வீடு தேடுனான். இங்கிலீசுல கடிதப் போக்குவரத்து வைக்கி றதுக்கு, ஊர்ல கொஞ்சம் இங்கிலீசு தெருஞ்ச ஆரோக்கியதாசைப் போய் பாத்து பேசி ரெடி பண்ணு னான். காலேஜ் படிப்பக்கூட உட்டுரனும்னு முடிவெடுத்தான். ஏதோ மலயப் பெரட்டி சாதிக்கப் போறவங்கெணக்கா சதா காலமும் படுபிசியா திருஞ்சான். பெயலுக கிண்டலு அடுச்சதக்கூட அவெ பொருட்படுத்தல. எல்லாம் பொறாமையில செய்றாகன்னு அவனே சொல்லிக்கிட்டு எதையும் சட்ட பண்ணல. ஒரு டாலருக்கு எம்புட்டு மதிப்புனு மதுர போயி யாருட் டயோ கேட்டுட்டு வந்து, கணக்குப் போட்டுப் பாத்துக்கிட்டான். எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சுட்டு ஆரோக்கியதாசையும் கூப்டுகிட்டு ரொம்ப ஆவலா பேங்குக்குப் போனான். போம் போதே ஆரோக்கிய தாசுட்ட, ஆரம்பத்துல ஒங்களுக்கு ஒரு ரெண்டாயிரம் சம்பளம் போட்டுத் தாரேன். பெறகு போகப் போகக் கூட்டித் தாரேன்னு சொல்லிக்கிட்டான்.

இவெ பேங்குக்கு போற விசயத்தக் கேள்விப்பட்டதும் மார்டின் மத்த பெயல்ககிட்ட சொன்னான், "ஏலைகா... விசயம் ரொம்பா முத்திப் போச்சு. இவெ பேங்குல போயி விசாரிக்கமுன்ன அவெங் கிட்ட உண்மயச் சொல்லிப் போடுவோம். பாவம்டா."

"சும்மா கெடடா, நம்ம இப்பச் சொன்னம்னு வையி. நம்மள கிழி கிழின்னு கிழிச்சுப் போடுவான். போயி அவனாத் தெருஞ்சுக் கிட்டு வரட்டும்."

ஜெயராசு போயி பேங்குல கேட்டான். "ஜெயராசுங்கற பேருக்கு அமெரிக்காவுல இருந்து ஏதாவது டாலர் வந்துருக்கா. எவ்வளவு வந்துருக்கு?"

பேங்குல இருந்தவுக அவன ஏற இறங்கப் பாத்தாக. பெறகு கேட்டாக, "நீ என்ன கனவு கினவு கண்டுட்டு வாரீயா! என்ன கேக்

குறம்னு தெருஞ்சுக்கிட்டுத்தான் கேக்குறியா."

ஆரோக்கியதாசு ஜெயராசு கையைப் புடுச்சி இழுத்துக்கிட்டு ஓட்டமும் நடையுமா தெருவுக்கு வந்து சேந்துட்டான்.

இது எப்பிடியோ தெருவுக்குள்ள பிரஸ்தாபம் ஆகி, ஜெயராசு அவுகம்மெ தெருத் தெருவா அம்புட்டுப் பேத்தயும் வஞ்சுகிட்டுப் போனா. அப்பங்கூட ஜெயராசு அவுகம்மயிட்ட சொல்றான், "ஏம்மா நீ எதுக்கு அனாவசியமா வஞ்சுக்கிட்டுத் திரிற! நீ வேண்ணா பாரேன். ஒரு நாளைக்கு எனக்கு வரத்தான் போகுது. நா வாங்கத்தான் போறேன். அப்ப இவனுக எங்க கொண்டு போயி மூஞ்சிகள வச்சுக்கிரானுகன்னு பாக்கேன்."

அதுக்கு அவுகம்மெ சொன்னா, "ஏ... இவெ ஒருத்தம்டா. பயித் தியக்காரப் பெய புள்ளையாவுல இருக்கான்! அவனுக தமாசுக்குச் சொன்னத நெசம்னு நம்பிக்கிட்டியேடா கிறுக்குப் பெய மகனே!"

# மூன்று

ஊருக்கு மேற்கெ கம்மா இருக்குது. கம்மாக்கர வழியா வடக்காமெப் போனம்னா, சீனிவாசன் நாய்க்கரு கெணறு இருக்குது. அவரோடெ கெணத்துக்குத்தான் தெருவுலருந்து நெறய்யாப் பேரு குளிக்கப் போவாக. அதுதான் தெருவுக்குப் பக்கத்துல இருக்குது. பள்ளிக்கொடம், காலேஜ் படுச்சுட்டு மேமாச லீவுக்கு ஊருக்கு வார பெயலுகள்ளாம் காலைலயும், சாயங்கால மும்மா ஒரு நாளைக்கு ரெண்டு தடவ குளிக்கப் போவாக. இந்தக் கெணத்துல குளிக்கிறது அவுகளுக்கு ஒரு பொழுதுபோக்கு.

கெட்டுன லுங்கியோடெ, தோளுல ஒரு துண்டப் போட்டுக் கிட்டு பெயலுக பூராம் மொத்தமாக் கௌம்பிப் போவாக. யாராவது ஒருத்தரு சோப்பு கொண்டு போவாக. அந்த ஒத்தச் சோப்பத்தான் அம்புட்டுப் பேரும் மாத்தி மாத்திப் போட்டுக்கிட்டு குளிப்பாக. அது குளிக்கிற சோப்பாவும் இருக்கும். இல்லன்னா துணி தொவைக்கிற சோப்பாக்கூட இருக்கும். குளிக்கும்போதே ஒருத்தர ஒருத்தரு கிண்டலடுச்சுக்கிட்டு, ஒவ்வொருத்தரு ஒடம்பப்பத்தி நக்கலடுச்சுக் கிட்டு, அவுகவுக சைட்டடிக்கிற பொண்ணுகளப் பத்தி... சாட மாடையாப் பேசிக்கிட்டு படுஜாலியாக் குளிப்பாக. டமால் டமால்னு அவுங்க தண்ணிக்குள்ள உழுந்து குளிக்கும்போது தண்ணி கெணத்துக்கு மேலச் செதறும். கம்மாக்கரைல நின்னு பாத்தம்னா, காலையுஞ் சரி, சாயந்தரமும் சரி, சூரிய வெளுச்சத்துல செதறுர தண்ணி பளீர் பளீர்னு கண்ணச் கூச வைக்கும். சுத்தி வேல வெட்டி செய்றவுகளுக்கும் கரவழி போறவுகளுக்கும் இவுக போடுற கும்மரச்சமும் கூப்பாடும் நல்லாக் கேக்கும். அப்பிடியொரு ஆரவாரக் குளியலது! கெணத்துத் தண்ணி படுற பாட்டப் பாத்தே அவுக மனசுலயும், ஒடம்புலயும் இருக்குற பரபரப்பும் வேகத்தயும் தெருஞ்சுக்கலாம். இந்தக் கெணத்துக்கு வாயிருந்தாலும் அழுது றும்னு அங்ன புல்லறுக்கப் போற பொம்பளைக சொல்லுவாக. அம்புட்டுச் சலம்பல் பண்ணுவானுக.

இதே கெணத்துல பொம்பளைகளோ, கெழடு கெட்டைகளோ குளிக்கும்போது இம்புட்டு ஆரவாரமா இருக்காது. ஆனாக் கொமரி

குட்டச்சிக குளுச்சாகன்னா சிரிப்பாணி அள்ளும். என்னத்தக் கண்டுதாஞ் சிரிப்பாகளோ! கணீர் கணீர்னு சிருச்சுக்கிட்டு கெடப்பாளுக. குளுச்சு முடுச்சுட்டு முடிய விருச்சுப் போட்டுக்கிட்டு ஒவ்வொருத்தியும் ஒழக்கு மஞ்சத்தூள மொகத்துல அப்பிக்கிட்டு வருவாளுக.

இம்புட்டு வருசமா இல்லாமெ, இப்ப வந்து, அந்தக் கெணத்துல சேரித்தெரு ஆளுக குளிக்கக் கூடாதுன்னு சீனிவாசன் நாய்க்கரு சொல்லிட்டாரு. அவரு நேர வந்து சொல்லாட்டாலும், அவரோடெ வயக்காட்டுக்குத் தண்ணி பாச்சுற பள்ளக்குடி பச்சமலைட்ட கண்டுசனாச் சொல்லிக் கங்காணிக்கச் சொல்லிட்டாரு. அவரும் யாரையும் குளிக்க விடாமெ வெரட்டி உட்டாரு. அதுனால இப்ப சாஸ்தி பொம்பளைக அங்க போறதில்லை. ஆம்பளைக கூட இன்னஞ் கொஞ்சந் தள்ளிப் போயி நரி மண்டச் செட்டியார் கெணத்துல குளிச்சாக. ஆனா லீவுக்கு வந்த எளவட்டப் பெயலுக வழக்கம் போல இந்தக் கெணத்துல போயிக் குளுச்சானுக. பச்சமல எம்புட்டோ எடுத்துச் சொல்லியும் கேக்கல.

“இம்புட்டு வருசமாக் குளுச்சம்லெ? இப்ப ஏங் குளிக்கக் கூடாது? நாங்க இங்கதாங் குளிப்போம்,” அம்புட்டுப் பேரும் பிடிவாத மாச் சொல்லிட்டு தெனமும் அங்கயேதான் போய் குளிச்சாக.

பச்சமல, நாய்க்கருட்ட சொல்லவும் ஒரு நாளு அவரே இவுங்க குளிக்கிற டயத்துல கரெக்டா வந்துட்டாரு. வந்தவரு கோவமாக் கத்துனாரு, “ஏய், எல்லாரும் மேல எந்துருச்சு வாங்கடா. இதென்ன ஒங்கப்பெ வீட்டுக் கெணறுன்னா நெனச்சீக? இனிமேல் பட்டு இங்க வந்து குளுச்சா நடக்குறதே வேற... ஆமா.”

அவரு மெரட்டவும் உள்ள குளுச்சுக்கிட்டு இருந்த ஜோசப்பு சொன்னான், “ஆமா, இது எங்கப்பெ வெட்டுன கெணறுதான். அதுனால இதுலதான் குளிப்போம். ஒங்க காடு கரைகள்ள இருக்குற அம்புட்டுக் கெணறுகளும் எங்காளுக தோண்டுனதுதான். அதுனால நாங்க எங்கயும் போயிக் குளிப்போம்... ஆமா.” அவெஞ் சொல்லி முடிக்கவும், அம்புட்டுப் பேரும் கோரசா, “ஆமா... இது எங்க கெணறு. நாங்க இங்கதாங் குளிப்போம்”னு கத்துனாக.

சீனிவாச நாய்க்கருக்குக் கோவம் தலைக்கு ஏறுச்சு. தாறு மாறாக் கோவம் வந்தாலும், தனியா இம்புட்டுப் பெயலுககிட்ட எதுவும் ஏடா கூடமாப் பேசக் கூடாதுன்னு நெனச்சுக்கிட்டு பச்சமல யிட்ட கத்துனாரு. “எல்லாம் ஒன்னாலதாண்டா பிச்சக்கார நாயே. நீயி கெணத்துப் படில முள்ள வெட்டிப் போட்டுருந்தீன்னா,

இம்புட்டுத் தூரம் ஆயிருக்குமா."

பச்சமல பவ்யமா நின்னுக்கிட்டு, "சாயங்காலம் வெட்டிப் போட்டுறேன் ஐயா"ன்னு பணிவாச் சொன்னான்.

கெணத்துக்குள்ள இருந்த சுரேசுப் பெய சும்மா கெடக்க மாட்டாமெ, பச்சமல சாரே இங்கதாங் குளிக்காருன்னு சொல்லிக் கிட்டுச் சிருச்சான். ஒடனே அம்புட்டுப் பெயல்களும் கொல்லுன்னு சிரிச்சாங்க.

நாய்க்கரு ஆத்துரமாக் கத்துனாரு, "அந்தத் தெரு ஆளுகள யாவது குளிக்க விடுவேனே தவிர, ஒங்க தெருப் பெயலுகள உடவே மாட்டேன்... ஆமா."

"நீ என்னயா உடுறது? நீயி முள்ள வெட்டிப் போட்டாலும், முள்ள எடுத்துப் போட்டுட்டுக் குளிப்போம். வேற நாங்க எங்க போறது?"

"நீயி குளிச்சுப்பாரு; அப்ப என்ன நடக்கும்னு பாத்துக்கோ," சொல்லிட்டு விர்ருன்னு போயிட்டாரு நாய்க்கரு.

சொன்னது கெணக்கா பச்சமல முள்ள வெட்டிப் படிக்கட்டுல போட்டு வச்சாரு. ஆனா இவனுக வழக்கம் போல அங்கதான் போயி முள்ள எடுத்துப் போட்டுட்டுக் குளுச்சாங்க.

பச்சமல இவுங்ககிட்ட சொன்னாரு. "ஒங்களாலெ எனக்கும் வேல இல்லாமெப் போப்போகுது. ஒங்களுக்கென்ன வேற கெணறா இல்ல? ஒங்க தெருக்காரங்க ரொம்பா வில்லங்கம் புடுச்சவுகதான்."

"நீ எதுக்கு இந்தப் பயம் பயப்புடுற? அவெங்கிட்டெ வேல இல்லாட்டி நீ ஒன்னுஞ் செத்துப் போக மாட்டெ. ஆமா அது ஏன் ஒங்க தெரு ஆளுக இங்க குளிக்கலாம் ஆனா எங்க தெரு ஆளுக குளிக்கக்கூடாது?"

"எங்க தெரு ஆளுக சம்சாரிக சொல்றதக் கேட்டு நடப்போம். ஆனா நீங்கள்ளாம் அப்பிடியா? நொரநாட்டியம் புடுச்சவுகள்ள," பச்ச மல சொல்லிட்டு தண்ணி பாச்சப் போயிட்டாரு. அவருக்கும் இவனுக மேல கோவம்னாக்கூட வெளில காட்டல. ஆனா தண்ணி பாச்சிக் கிட்டே மொணங்குனாரு. "இந்த வேதக்காரத் தெருப் பெயலுக ரொம்பா அடாவடிக்காரனுகளா இருக்கானுக. இவுகப்பெ, ஆத்தா எல்லாம் நம்மளக் கெணக்கா சம்சாரிகளுக்கு அடங்கி ஒடுங்கி இருந்தாக. இப்ப இந்த எளவட்டப் பெயலுக தலை யெடுத்து வரவும் எல்லாத்தயும் தலகீழா மாத்திட்டானுக. ஒரு பெயகூட சொன்ன வாத்த கேக்க மாட்டேங்கானுக."

குளிச்சுக்கிட்டுருக்கும்போதே, கெணத்து மோட்டார் ரூம்பு மேல ஏறி கெணத்துக்குள்ள சொறுக்குப் பாயப்போன அந்தோணி, கம்மாக் கரமேல வடக்காம போயிக்கிட்டுருந்த ஜெயராசெப் பாத்துட்டான். ஜெயராசு வெள்ளப் பேண்டும், வெள்ளச்சட்டயும் போட்டுக்கிட்டு எடையில கருப்பு எடவாருகட்டி, கண்ணுல கருப்புக் கண்ணாடியோடெ போய்க்கிட்டுருந்தான். அந்தோணி சத்தம் போட்டுக் கூப்புட்டான். "யேய்... கண்ணாடி... குளிக்க வாரீயா? ஒயிட் அன்டு ஒயிட்லெ எங்க கௌம்பிட்டெ?"

ஜெயராசு கெழக்காமெ தலயத் திருப்பி அந்தோணியப் பாத்து வரலன்னு கைட்ட சைக காட்டிட்டு தொயந்து நடந்தான். இதுக்குள்ள கெணத்துக்குள்ள குளிச்சுக்கிட்டு இருந்தவுக பூராம் மேல வந்து, வாங்க கண்ணாடி சார், ஜாலியாக் குளிக்கலாம்னு கிண்டலடிக்க ஆரம்புச் சுட்டானுக.

அம்புட்டுப் பேத்தயும் பாத்த ஜெயராசுக்கு மொத நாளு இவனுக கிட்ட பட்ட அவஸ்தெதான் நெனவுக்கு வந்துச்சு.

'சே, இவனுக இங்க குளிக்கிறானுகன்னு தெரியாமப் போச்சு; தெருஞ்சிருந்தா கம்மாய்க்குள்ள எறங்கி கம்மாப் பாதையிலேயே போயிருக்கலாம். கிறுக்குப் பெயலுக. வெளியூர்கள்ள போயிப் படுச்சுட்டு வந்தும் இன்னும் டீசென்சியே இல்லயே,' தனக்குத் தானே சொல்லிக்கிட்டு எட்டெ இழுத்துப் போட்டு நடந்தான்.

'சே,சே, நா எதுக்கு இவனுகளுக்குப் பயந்துக்கிட்டு கம்மாப் பாதைல போகனும். சில்லரப் பெயலுக,' சொல்லிக்கிட்டு, கரைல இருந்த ஆலமரத்து நெழலுல நின்னான். கெணத்துப் பக்கமாப் பாத்துச் சத்தம் போட்டுக் கத்துனான், "ஏய்... ஒங்கள மாதிரி எனிய நெனச்சுக் கிட்டீகளா? பத்து மணிக்கு மேல ஆகுது. குளிக்கிற மூஞ்சிகளப் பாரு; நா லைப்ரேரிக்குப் போறேன்."

இதக் கேட்டுக்கிட்டுருந்த பச்சமல மெதுவாச் சொல்லிக் கிட்டாரு, "இவனுக என்ன படுச்ச பெயலுக மாதிரியா இருக்கானுக! குளிக்கானுகளாம் குளிப்பு! நாலு மணி நேரமாக் குளிக்கானுக. வெறு வாக்கலங் கெட்ட பெயலுக."

அந்தோணி ஜெயராசப் பாத்துக் கத்துனான், "எப்பா... பெரிய ... அறிவுஜீவி... லைப்ரேரிக்குப் போறாருடோய்... போயிட்டு வா மாப்ளே." கெணத்துக்குள்ள டமால்னு குதுச்சுட்டு சொன்னான், "இந்தக் கண்ணாடியெ எங்க கண்டுபுடுச்சு வாங்குனாம்னு தெரியல. இருவத்து நாலுமணி நேரமும் கண்ண உட்டுக் கழட்ட மாட்டேங்கா. கோமாளிப் பெய."

"ஏ... அவெங் கழட்டி வச்சா நீ எடுத்துச் செத்த நேரத்துக்குப்

போட்டுக்கலாம்னு ஆசையா இருக்கா மச்சான்?"

"போடா வெண்ணெ. அவெங் கண்ணாடி யாருக்குடா வேணும். குருட்டுத் தாயொளி கெணக்காப் போட்டுக்கிட்டுத் திரிறான்."

"எதுக்குடா அவனெ வம்புக்கிழுத்துக்கிட்டே இருக்கீங்க? அவெம் பாட்டுக்கு எங்கயும் போறான். அவெங் கண்ணாடி போட்டா ஒனக்கு ஏங் கஸ்டமா இருக்குன்னு தெரியல." சாமிநாதன் சொன்னான்.

"பூழாப்புத்தான்," சுரேசு சொல்லவும் அம்புட்டுப் பேருஞ் சிரிச்சாக.

"போடா வெங்காயம், பூழாப்புமில்ல ஒரு மயிரும் இல்ல. நம்ம கூட சேரவே மாட்டேங்காம் பாரு... அதான் ஆத்துரமா வருது."

"கொஞ்ச நாளைக்கு இப்பிடித் திரிவான். பெறகு தன்னாலெ மாறிடுவான். நீங்க வேணும்னா பாத்துக்கிட்டே இருங்களேன்," சாமி நாதன் சொல்லிட்டு மேல வந்து துணி மாத்துனான்.

கரைல போன ஜெயராசு இவனுகளயே நெனச்சுக்கிட்டுப் போனான். 'இவனுகளோடெ குளிக்கப் போனா அம்புட்டுத்தான். எல்லா பெயலுகளும் ஒரு சோப்பையோ மாத்தி மாத்திப் போட்டுக் கிட்டு... சேய்... சட்டைகளக்கூட மாத்திக்கிரானுக. இன்னைக்கு இவம் போட்டாம்னா நாளைக்கு அதே சட்டைய இன்னொருத்தன் தூக்கி மாட்டிக்கிட்டுத் திரிரான்... சுத்தமில்லாத பெயலுக...'

தண்ணி இல்லாமெக் காஞ்சு கெடந்த கம்மாயப் பாத்தான், 'இதே கம்மாயிலதான் நானு நீச்சலடுச்சுப் பழகுனேன். அப்ப யெல்லாம் இவனுகளோடதான் கெடந்தேன். தண்ணிக்குள்ள மாட்டு மேல சவ்வாரி செஞ்சுட்டு போனத நெனச்சா சிரிப்பா வருது.'

'இப்பமட்டும் இவனுகளோடெ ஒட்ட முடியல. வெளியூர்ல போயி படுச்சுட்டு வந்த பெறகும் இன்னமும் கண்டம்பட்டி பறையன் மாதிரியே இருக்க முடியுமா? மத்த பெயலுகளாவது பரவாயில்ல... இந்த அந்தோணி இருக்கானே... சுத்தப் பட்டிக் காட்டான்தான். மத்தவுகளாவது சீரெட்டு குடிக்காக. இந்தப் பெய இன்னமும் அந்த பூமார்க் பீடிதான்...'

குளுச்சு முடுச்சுட்டு எல்லாரும் தொவச்ச ஈர லுங்கிய ரெண்டா மடுச்சுக் கட்டிக்கிட்டு கெளம்புனாங்க. அந்தோணி பச்சமலயக் கூப்டு, "முள்ள எடுத்து படிமேல போட்டுக்கங்க

அண்ணாச்சி," நக்கலாச் சொல்லிட்டுப் போனான்.

லைப்ரேரிக்குப் போன ஜெயராசு தன்னத்தானே ஒருதடவப் பாத்து கிட்டான். பூரிச்சுப் போனான். மோட்டார் ரூம்புமேல நின்ன அந்தோணியின் உருவம் நெனவுக்கு வந்துச்சு. 'சே, என்ன பெய இவெ... வேதாளங் கணக்கா... வெறுஞ் சட்டியப் போட்டுக்கிட்டு... கரேல்னு... தண்ணிச் சொட்டச் சொட்ட.... சே... பளியனுக மாதிரித் தான். இந்தப் பாதையில எத்தன பொம்பளப் பிள்ளைக டைப் அடிக்கப் போகுங்க; வருங்க... இப்பிடிப் பெறந்த மேனியா நிக்கான்... பொம்பளைக பாக்கட்டும்னே நிப்பான்... அதிகப்புடுச்ச பெய... ஆமா... பாக்குதுக்கு அங்க என்ன இருக்கு? ஓப்புரவான ஒடம்பு...என்ன இருந்தாலும் ஒரு நாகரீகம், பண்பாடு வேண்டாம்... படுச்சும் பெரயோசன மில்லையே...' பலமாதிரி யோசுச்சுக்கிட்டே நடந்தான்.

அன்னைக்குச் சாயங்காலம் எல்லாப் பெயலுகளும் சாவடிக்குப் பக்கத்துல இருந்த வேப்ப மரத்தடில ஒக்காந்து பேசிக்கிட்டு இருந்தாக. அப்ப பீட்டர் சொன்னான், "ஊருக்கு வந்து ஒரு வாரங்கூட ஆகல. சுத்த போரா இருக்கு. மீதி லீவெ எப்படித் தான் போக்குறதோ தெரியல."

"சரி, வாங்க எல்லாரும் நாளைக்கு மல்லிபட்டிக்குப் போயி சினிமா பாத்துட்டு வரலாம்," அந்தோணி ஆர்வமாக் கேட்டான்.

"மல்லிபட்டி என்னடா சல்லிபட்டிக்கே போகலாம். ஆனா துட்டுத்தானெ ஒதைக்குது," சாமிநாதன் சிருச்சுக்கிட்டே சொன்னான்.

"அதுக்கென்னணா, நடந்தே போயிட்டு நடந்தே வந்துரலாம். போக அஞ்சு, வர அஞ்சு, ஆக பத்து கிலோமீட்டர்தான்," அந்தோணி சொன்னான்.

"அப்பிடித்தான் பவுலுப் பெய அவுகண்ணன் அவுக கூட்டாளிகளோட போயி படம் பாத்துட்டு திரும்பி வரயில, பாம்பு கொத்திக் கெடந்தாரு. நீ வேணும்னா கேட்டுப் பாரேன்," இளவரசன் சொன்னான்.

"இவெ ஒருத்தண்டா... பயந்தாங் கொள்ளிப் பெய. அப்ப பாம்பு வந்து கொத்துன்னா, இப்பயும் வருமாக்கும்! இதுக்கெல்லாம் பயந்தா என்னடா ஆம்பள நீயி,"அந்தோணி கிண்டலா இழுத்தான்.

"ஏலேய், அதெல்லாங் கெடக்கட்டும்டா. டிக்கெட்டுக்குத் துட்டு வேண்டாமா?" இளங்கோ கேக்கவும் எல்லாரும் கப்சிப்னு ஆயிட்டாங்க.

செத்த நேரங் கழுச்சு அருள்ராசு சொன்னான், "இந்த வைகாசி

நன்றி - ஊடறு



மாசத் திருநாளுக்கு நம்ம தெரு ரஜினி மன்றத்துக்காரனுங்க மூனு ரஜினி படமும், கமலு மன்றத்துக்காரனுங்க மூனு கமலு படமும் டெக்குப் போட்டுக் காட்டுறாகளாம். எல்லாம் புதுப்படமாம். போட்டா போட்டி போட்டுக் காட்டப் போறானுக. அப்ப வேனும்னா துட்டு இல்லாமெ ஓசியில படம் பாக்கலாம்."

"ஆமா அதென்ன மாதா திருநாளைக்குப் போயி சினிமாப் படம் போட்டுக் காட்டுறானுக! இப்பத்தான் இது ரொம்பா அதிகமாகிட்டு வருது. போன புது வருசத்துக்குப் பாத்திகளா? அம்பேத்காரு போஸ்டருக்கு மேல ரஜினி படத்த ஒட்டுனானுக. அன்னைக்குப் பெரிய சண்டையே வரத் தெருஞ்சுது," இம்புட்டு நேரமும் அமைதியா இருந்த லாரன்சு சொன்னான்.

"இதெல்லாம் நிப்பாட்டனும்னா, நம்ம எதுனாச்சும் உருப்பிடியாச் செய்யனும். சும்மா பேசிக்கிட்டு இருக்குறதுல புண்ணியமில்ல," சாமிநாதன் சொல்லவும், கூட்டத்துல ஒரு உற்சாகம் வந்துருச்சு. ஆளாளுக்கு ஒரு யோசன சொல்ல ஆரம்புச் சுட்டாக. அன்னியாரம் அப்பிடிக்கூடிப் போன ஜெயராசையும் சாமிநாதன் கூப்பிட்டான். அந்தக் கூட்டத்துல அந்தோணியப் பாத்துட்டு ஜெயராசுக்குப் போகப் புடிக்கல. இருந்தாலும் சாமி நாதன் கூப்புட்டதுனால தட்ட முடியாமெப் போனான். ஏம்னா ஊருக்குள்ள சாமிநாதன மட்டும்தான் அவனுக்குப் புடிக்கும். போயி அவெம் பக்கத்துல நின்னான்.

சாமிநாதன் அவெங் கையப்பிடிச்சு, "உக்காருங்க மாப்ள. உங்ககிட்ட ஒரு விசயம் கேக்கனும்," ரொம்ப மரியாதயாச் சொல்லவும் ஜெயராசுக்கு ரொம்பாச் சந்தோசமா இருந்துச்சு. அவெம் பக்கத்துலயே கைக்குடைய கீழ போட்டு ஒக்காந்தான். இதப் பாத்துட்டு அந்தோணி கண்ணடுச்சுக்கிட்டு நமட்டுச் சிரிப்பாச் சிருச்சான். பக்கத்துல இருந்த மெக்கேலு தோளுல லேசா கிள்ளவும் அமைதியா இருந்தான் அந்தோணி.

"என்ன மச்சான், எதுக்கு எனியக் கூப்புட்டீக? சீக்கிரஞ் சொல்லுங்க. டைம் ஆகுது. நானு கோவில் பக்கம் போகனும்," ரொம்ப சீரியசாச் சொன்னான் ஜெயராசு.

அவெஞ் சொன்ன வெதமும், எடது கையத்தூக்கி மணி பாத்தத் தோரணயும் பாத்து அந்தோணிக்கு பூழாப்பா இருந்துச்சு. இருந்தாலும் அடக்கிக்கிட்டு இருந்தான். சாமிநாதனுக்கே அவனப் பாத்துச் சிரிப்புத்தான். ஆனா சீரியசாச் சொன்னான், "மாப்ளே... இந்த வருசம் வைகாசி மாசத் திருநாளுக்கு, நம்ம எல்லாருமாச் சேந்து எதுனாலும் செய்யலாமா?"

"எனக்கு நெறய்யா வேல இருக்கு மச்சான். நீங்க செய்யுங்க?" எப்பிடியாச்சும் அங்கருந்து சீக்கிரம் போயிரனும்னு பெரயாசப் பட்டான் ஜெயராசு.

"அட நீங்க ஒன்னு மாப்ளே... இருங்க... ஒங்ககிட்டதான் ஐடியாவே கேக்குறோம். நீங்க என்னடான்னா..." இழுத்தான் சாமி நாதன்.

தங்கிட்ட ஐடியா கேக்குறாகன்ன ஒடனே ஜெயராசுக்கு ஒரு மாதிரியான சந்தோசம் மனசுக்குள்ள. இருந்தாலும் நல்லா ஒக்காந்து கிட்டே சொன்னான், "சரி. சீக்கிரம் பேசுங்க. நானு பல சோலி ஆளு."

ஜெயராசு இப்பிடிச் சொன்னது அந்தோணிக்கு மட்டுமில்ல; அங்ன இருந்த நாலஞ்சு பேத்துக்கும் புடிக்கல. ஆனா வெளிய யாரும் எதையுங் காட்டிக்கிறல. அந்தோணி மட்டும் மண்டயப் போட்டு வரட்டு வரட்டுனு சொருஞ்சு மனசுக்குள்ள இருந்த நமச்சலத் தீத்துக் கிட்டான்.

"இந்த ரஜினி, கமலு மன்றத்துக்காரனுகளப் பாருங்க மாப்ளே. .. மாதா திருநாளு, யேசு பிறப்பு, வருசப் பிறப்பு எல்லாத் துக்கும் சினிமாக்காட்டி மக்கள மடையனுகளா ஆக்கிக்கிட்டு இருக்கானுக. நீங்கள்ளாம் எப்பிடி முன்னால ஜெபமெல்லாஞ் செஞ்சு ஊருக்கு நல்லது செஞ்சீக. இப்ப ஏதாச்சும் உருப்பிடியா நாம எல்லாரும் சேந்து செய்வோமே," சாமிநாதன் நிதானமா, நாசூக்காப் போட்டான்.

"என்னணா நீயி, செபம் செய்யனுங்க? செபஞ் செஞ்சேதான் சனங்க இப்பிடி இருக்காக. விழிப்புணர்வு உண்டாக்கும்படியா எதுனாச்சும் செய்றத உட்டுட்டு..." எருச்சலோட கத்துனான் அந்தோணி.

"பாத்தீகளா மச்சான். இவெங்கூட சேந்தா எதையுமே செய்ய முடியாது. இதுக்குத்தான் நானு ஒங்ககூட சகவாசமே வச்சுக்கிற தில்ல. சரி, நா வர்றேன்," ஜெயராசு சொன்னாக்கூட எந்திரிக்கல.

"ஏலேய் அந்தோணி, நீயி செத்த நேரத்துக்குச் சும்மா இரேண்டா. பொறுமையே இல்லாத பெய. சரி மாப்ளே... அவன உடுங்க... இந்த வாட்டி நம்ம செபம் பண்ண வேண்டாம். ஏதாச்சும் நாடகம், டான்சு கீன்சு இப்பிடிப் போடலாமா?"

சாமிநாதன் கேக்கவும், ஜெயராசு மொகத்துல பரவசம். ரொம்பா உற்சாகமாச் சொன்னான், "சரி மச்சான், ரொம்பா நாளா நானு ஒரு நாடகம் எழுதிப் போடனும்னே நெனச்சுக்கிட்டு

இருந்தேன். அத்தோட மாதாவப்பத்தி ஒரு சொற்பொழிவு, பட்டி மன்றம் இப்பிடி நெறய்யாச் செய்யலாம் மச்சான். சூப்பரா இருக்கும்."

"பாத்தீகளா... இதுக்குத்தான் ஒங்களக் கூப்புட்டது," சொல்லிக்கிட்டே சாமிநாதன் அந்தோணியப் பாத்து கண்ணடுச்சான். அந்தோணியும் புருஞ்சுக்கிட்டான்.

"மச்சான்... ஆர். சி. தெரு இளைஞர்கள் நற்பணி மன்றம்னு ஒரு மன்றம் தொடங்கிரலாமா?" ஜெயராசு தீவிரமா செயல்பட ஆரம்புச்சுக் கேட்டான்.

"இப்பத்தான் எங்க பாத்தாலும் மன்றமாத்தான் இருக்கு. நம்ம வேற பேரு வப்போம்," இளங்கோ சொல்லவும், செத்த நேரம் எல்லாரும் அமைதியா யோசுச்சாக.

"நம்ம கலைக்குழு ஒன்னு ஆரம்பிச்சா என்ன?" அந்தோணி கேட்டான்.

அம்புட்டுப் பேரும் இதுக்குச் சரின்னாக. ஜெயராசுக்கும் சரின்னு பட்டாலும் வெளிப்படையாச் சொல்லல, சொல்ல விரும்பல. சரி, நம்ம கலைக்குழுவுக்குப் பொருத்தமா ஒரு பேரு வைக்கனும்னு சாமிநாதன் சொல்லவும், ஆளுக்கொரு பேரு சொன்னாக. "அம்பேத்கார் கலைக்குழு," "பெரியார் கலைக்குழு," "ஜீசஸ் கலைக்குழு," "ரெட்டை மலை சீனிவாசன் கலைக்குழு."

இப்பிடி மாறி மாறிச் சொல்லி, கடைசில "கழனிக் கலைக் குழு"ங்கற பேரு எல்லாருக்கும் புடுச்ச பேரா இருந்துச்சு. எல்லார் மொகத்துலயும் ஒரு பரபரப்பு. உற்சாகம். ஒடனே ஏதோ ஒன்ன சாதுச்சுட்டமாதிரி, சாதிக்கப் போற மாதிரியான ஒரு வேகம்; ஒரு தெம்பு.

"சரி, வாங்க எல்லாருமாப்போயிக் கெணத்துல குளுச்சுட்டு வருவோம். ராத்திரி ஏழு மணிக்கு மேல பஸ்டாண்டுக்குப் போயிருவோம். அங்க வச்சு மேக்கொண்டு என்னென்ன செய்யனும்னு பேசி முடிவெடுக்கனும். இன்னங் கொஞ்ச நாளுதான் இருக்கு. அதுக்குள்ள நம்ம ரெடியாகனும்," சாமிநாதன் சொல்லி முடிக்கவும் எல்லாரும் ஆ... ஒன்னு சத்தம் போட்டுக்கிட்டு, விசிலடுச்சுக்கிட்டு எந்துருச்சானுக.

வழக்கத்துக்கு மாறா ஜெயராசும் அவுங்களோடயே குளிக்கப் போனான். அந்தோணிக்கு இது ஆச்சரியமா இருந்தாலும், சந்தோச மாவும் இருந்துச்சு. அன்னைக்குக் குளியலு ரொம்ப நேரமா நடந்துச்சு. வழக்கத்த விட கூச்சலும் கும்மாளமும் அந்தப் பகுதி

யவே ஆக்கிரமிப்பு செஞ்சுது. கம்மாக்கர மேல நின்ன ஆலமரங் களும், பனமரங்களும் காத்துக்கு ஆடுன ஆட்டத்துல, ரொம்ப இனிமையான சாயங்காலமா அது இருந்துச்சு. குளுச்சு முடுச்சு மேல வந்து நிக்கையில அம்புட்டுப் பேரு ஒடம்பும் சூரியனோட ஒளியி னால தகதகன்னு மினுங்கி ஏதோ புதுப் பிறவிக மாதிரி மனசும் ஒடம்பும் மந்தகாசமா இருந்துச்சு.

அன்னைக்கு ராத்திரி பஸ்டாண்டுக்கு வந்துட்டாக. வந்த ஒடனே ஜெயராசுதான் ரொம்ப ஆர்வமாப் பேசுனான். "நா என்ன நெனைக்கம்னா, நம்ம கலைக்குழுவுல நெறய்யா உறுப்பினர் களைச் சேக்கனும். உறுப்பினராச் சேரதுக்கு ஆளுக்கு ரெண்டு ரூவா கட்டிரனும்."

"இதுலெ எல்லாம் ஒங்கள யாருமே மிஞ்ச முடியாது மாப்ளே. பாருங்க எப்பேர்ப்பட்ட ஐடியான்னு," சாமிநாதன் பாராட்டுனான்.

ஜெயராசு மொகம் உற்சாகத்துல ரொம்பக் களையா தெருஞ்சுது. அவெங் கண்ணுக ரெண்டும் பிரகாசமா இருந்தத மங்குன இருட்டுலகூட பாக்க முடிஞ்சது.

"சித்தப்பாவையே தலைவராப் போட்டுரலாம்," மார்டின் சொன்னான்.

ஒடனே அம்புட்டுப் பேரும் ஜெயராசக் குண்டுக் கெட்டாத் தூக்கிட்டானுக. தூக்கி ரெண்டு தடவ அம்பேத்காரு செலயச் சுத்தி வந்து எறக்கிவிட்டானுக. சுத்தும்போதே 'கழனிக் கலைக்குழுத் தலைவர் ஜெயராசு'ன்னு அந்தோணி கத்த, மீதிப் பேரு 'வாழ்க வாழ்க'ன்னு ஒரே கும்மரச்சமா இருந்துச்சு. ஜெயராசுக்கு இன்னொரு அம்பேத்காரா ஆயிட்ட மாதிரி புல்லரிச்சுப் போச்சு.

"சரி, அடுத்த வேலைகளைக் கவனிப்போம்னு" தலைவர் தோரணைலயே ஜெயராசு சொன்னான்.

"செயலரு வந்து அந்தோணி; பொருளர் வந்து சாமிநாதன்," மரியராசு சொல்லவும் எல்லாரும் சரியான தேர்வு ராசான்னு ஒத்த கொரலுல சொன்னாக.

"நம்ம எல்லாரும் மொதல்ல அஞ்சு ரூவா கெட்டி உறுப்பி னராவோம். நாளைலருந்து நம்ம தெருவுல இருக்கிற மீதி எள வட்டங்களையும் கொமரிப் பிள்ளைகளையும் சேர வைக்கனும்," அந்தோணி சொன்னான்.

"பொம்பளப் பிள்ளைகளையுமா சேக்குறோம்! வருவாளு களா? பேருக்கு உறுப்பினரா இருக்கக்கூடாது. பொறுப்பா வேல

வெட்டி செய்யனுமே. அவளுக வீடுகள்ள உடுவாகளா?" இளங்கோ கேட்டான்.

"எல்லாம் நம்ம சொல்ற வெதத்துலதான் இருக்குது. அதெல்லாஞ் சொல்லிப் பெறக்கிச் சேத்துரலாம்," ஜெயராசு உறுதியாச் சொல்லவும் சாமிநாதனும் சரின்னு தலையாட்டுனான்.

"அடுத்து நம்ம நாளைக்குக் காலைல நம்ம வழக்கமாக் குளிக்கிறகெணத்துல கூட்டம் போடுறோம். என்ன சரியா மாப்ளே? " சாமிநாதன் கேக்கவும் ஜெயராசு சிருச்சுக்கிட்டே "போட்டுருவோம்"னு சத்தமாக் கத்துனான். பெறகு, "எல்லாரும் வாங்க, ஆளுக்கொரு டீ குடிக்கலாம்னு" கூட்டிட்டுப் போயி அவனே எல்லாருக்கும் டீ வாங்கிக் குடுத்தான். டீயக் குடுச்சுக் கிட்டே அந்தோணி "இன்னைக்குக் கண்டிப்பா மழவரும்"னு சொல்லிட்டு ஜெயராசப் பாத்துச் சிரிச்சான். மத்தவுகளும் சிருச்சாக. ஜெயராசும்கூடச் சேந்து சிருச்சான். டீக்கடையே கலகலன்னு இருந்தது.

ஜெயராசுப் பெய ரொம்பாச் சாதுவான பெய. சூதுவாது தெரியாது. வெளியூர்க்குப் படிக்கப் போறதுக்கு முன்னால, எப்பயும் கோயிலே கெதின்னு கெடப்பான். சாமியாரு தெக்க வடக்க போகையில இவனத்தாங் கூட கூட்டிக்கிட்டுப் போவாரு. கோயில்ல ஜெபம் படிப்பான். அதுனால சிஸ்டருமாருகிட்டயும் நல்ல பழக்கம். இதுனாலயே மத்த பெயல்கள விட இவெ என்னமோ ஸ்பெசலான பெய மாதிரி இவெ நெனச்சுக்குட்டான். சாமியாரு வேற ஊருக்கு மாத்திக்கிட்டுப் போம்போது இவனயுங் கூட்டிக்கிட்டுப் போயிட்டாரு. அப்ப பத்தாங் கௌாசுல பெயிலாப் போயிருந்தான். சாமியாருட்ட போயி இருந்துக்கிட்டே கோயிலு வேலயும் பாத்துக்கிட்டு பெயிலான பாடத்த எழுதி பாஸ் பண்ணிட்டான். ஆனா சாமியார் கூடயே தொயந்து இருக்க முடியாதபடி ஒரு காரியம் பண்ணிப் போட்டான்.

சாமியார் வீட்ல போன் இருந்துச்சு. போன் வந்தா, எப்பிடி எடுக்கனும், பேசனும்னு இவனுக்குச் சொல்லிக் குடுத்தாரு சாமியாரு. இவனுக்கு ஏகப்பட்ட சந்தோசம். இப்பத்தான் மொத மொறையா போனையே தொட்டுப் பேசுற வாய்ப்பு இவனுக்குக் கெடச்சது. எடயில ரெண்டு நாளு லீவுக்கு ஊருக்கு வந்திருந்தப்ப எல்லாப் பெயல்ககிட்ட யும் இவெ போன் பாயா வேல செய்றதச் சொல்லி பெருமப்பட்டுக் கிட்டான். தனக்குப் போன் பண்ணத் தெரியும்னு பீத்திக்கிட்டான். மத்த பெயல்களுக்குக்கூட கொஞ்சம் பொறாமையாத்தான் இருந்துச்சு. அது மட்டுமில்லாமெ இப்ப

வெல்லாம் அவெ ரொம்பாச் சுத்தபத்தம் பாக்கத் தொடங்கிட்டான். தெனமும் குளிப்புத்தான்; வளிப்புத்தான். இஸ்திரி போட்ட சட்டைதான். இப்பிடி வித்தியாசமா மாறிக்கிட்டு இருந்தான். முன்னமாதிரி அவெஞ் சட்டைகள வேற யாரும் எடுத்துப் போட உடமாட்டான். வெளியூர் போயிட்டு வந்ததுலருந்து ஒரு சின்ன பெட்டிக்குள்ள அவனோட சாமாஞ் செட்டுகள வச்சு பூட்டுப் போட்டு பூட்டி வைக்க ஆரம்புச்சான். எல்லாப் பெயல்களும் இதச் சொல்லிச் சொல்லிக் கிண்டலடிச்சாங்க. ஆனா அவெ யாரையும் சட்ட பண்ணல.

சாமியாரு ஊர்ல இல்லாத சமயங்கள்ள ஊருல பசாருல இருந்த கடைக்குப் போன் பண்ணி, அவுகம்மயக் கூப்டு பேச ஆரம்புச்சான். அவுகம்மெ நானம்மாளுக்கு எப்பிடிப் பேசனும்னு தெரியாமெ, கடக்காருட்டய பேசச் சொன்னா. ஆனா ஜெயராசு அவும்மயப் பேசச் சொன்னான். கடக்காரரு சொல்லிக் குடுத்து மெல்ல மெல்ல நானம்மா போன்ல பேச கத்துக்கிட்டா. மகங்கிட்ட பேசிட்டு வந்தான்னா அன்னைக்குப் பூராம் தெருவுலயுஞ்சரி, காடுகரைகள்ள வேல செய்யயிலயுஞ் சரி, அந்த போன் பேசுறதப் பத்தியே அருவசமாச் சொல்லிக்கிட்டு இருப்பா.

"ஏடிகா, அந்த போனுக்கு மேல இருக்குறத எடுத்து காதுகிட்ட வச்சுக்கிட்டா ஏம் மகெஞ் சத்தங் கணீர் கணீர்னு கேக்குது. அந்தப் பெயபுள்ள சும்மாயுமா இருக்குது. எனிய வேற பேசச் சொல்லுவான். நானு இங்னக்குள்ள பேசறது அவனுக்கு கேட்டுக்கிருது. டக்கு டக்குனு பதிலு சொல்றான், கேள்வி கேக்கான். எனக்கு ஒடம்பே புல்லருச்சுப் போச்சு. இது என்ன மாயத்துல இந்த போனக் கண்டுபுடுச்சானுகளோ!"

நானம்மா சொன்னதக் கேட்ட அந்தோணி கேட்டா, "அது எப்பிடித்தெ நீயி ஒன்னும் படிக்காமெ கொள்ளாமே போனு பேசிட்டெ? யாரு சொல்லிக் குடுத்தா?"

"அட சக்காளத்தி, அந்த அருவசத்த ஏங் கேக்குற? நானு அங்ன வேப்ப மரத்தடில ஒக்காந்துக்கிட்டு தல வகுந்துக்கிட்டு இருந்தனா? அவா செவுட்டுச் செவத்தி மகெ என்ன சோலியாவோ பசாருக்குப் போயிருக்கான். அந்த ஒரக்கட நாடாரு இல்ல... அவரு கடைல போனு இருக்குல்ல. அதத் துருத்தொளச்சுக் கண்டுபுடுச்சு அங்கருந்து ஏம்மகெ போன் பண்ணி எனியக் கூப்டுருக்கான். அந்த நாடாரு சொல்லவும், இந்தப் பெய ஓடியாந்து எனியக் கூட்டிக்கிட்டுப் போனான்."

"நீ போயி என்னன்னு பேசுன பெரீமெ?"

நன்றி - ஊடறு



"அந்தச் சிரிப்பெ ஏங் கேக்குறெ! முன்ன பின்ன செத்தாத் தானெ சுடுகாடு தெரியும்! அந்த போன்ல இருந்து கிணிங் கிணிங்னு மணி அடிக்குத்தா. அந்த நாடாரு எடுத்து காதுகிட்ட வச்சுக்கிட்டு அலோ அலோன்னாரு. பெறகு ஏங்கிட்ட அதக் குடுத்தாரு. அதத் தொடவே கூச்சமா இருக்குது."

"எதுக்குக் கூச்சப்பட்டெ? நீயும் காதுல வச்சுக்கிட்டு அலோ அலோன்னு சொல்ல வேண்டியதுதானே."

"புதுசா போயிட்டு என்னன்னுதா வப்பெ? பெறகு அந்த நாடாருதாஞ் சொல்லிக் குடுத்தாரு. வைக்கவும் ஏம்மகெஞ் சத்தம்தா… துல்லிய மாக் கேக்குது. அந்தப் பெய கொரலக் கேக்கவும் நானு எம்பாட்டுக்குச் சத்தமா, ஏலேய் எப்பிடிடா இருக்க! கஞ்சி குடுச்சிட்டியான்னு கேட்டனா! அங்னக்குள்ள இருந்தவு பூராஞ் சிருச்சுட்டாக! "

"ஏஞ் சிருச்சாக? "

"ஏம்மகெ தூரந் தொலவட்டுல இருந்து பேசுறானே. அதுனால மெதுவாப் பேசுனா அவனுக்குக் கேக்குமோ என்ன மோன்னு கத்திப் பேசிட்டேன். பெறகுதாஞ் சொல்றாக கத்தக் கூடாதாம், மெதுவாப் பேசுனால அவனுக்குக் கேக்குமாம்."

"ஆச்சிரியமாத்தான் இருக்குது."

"இப்பயும் நாலஞ்சு வாட்டி பேசிட்டம்லெ! நம்ம தெரு பெய பிள்ளைக வேற சும்மாயாக் கெடக்குதுக? பட்டாளங் கெணக்கா ஏம்பின்னாலயே ஓடியாந்துருதுக. கடக்காட்டுல இருக்குறவுக பூராம் நம்மளத்தான் பாக்கனுக. அய்யரவா இருக்குது."

"ஒனக்கென்ன தாயே… ஒம்மகெ படுச்சு சாமியாராப் போறா னாம்லெ. போயிட்டாம்னா ஒங்க வீட்லேயே போனு வச்சாலும் வப்பான். "

மத்த பொம்பளைக வாயத் தொறந்துக்கிட்டு நானம்மா சொல்றத கேப்பாளுக. அவளுக கேக்கக் கேக்க, இவளுக்கு ரொம்பாப் பெருமயா இருக்கும். "ஏம் மகனுக்கு அங்க இதே வேலதான். வெளிநாட்டுல இருந்து கூட போனு பேசுவாகளாம். எல்லாப் போனுகளயும் இவந்தான் கேப்பானாம், கேட்டுட்டு சாமியார்ட போயிச் சொல்லுவானாம்."

"இதுக்கா ஒம்மகனுக்குச் சம்பளங் குடுத்து சாமியாரு வச்சிருக்காரு? "

"சம்பளம் என்ன சம்பளம்? சும்மா, மூனு நேரத்துக்கு

நல்லாச் சாப்பாடு போடுவாரு. அம்புட்டுத்தான். எடையில அஞ்சோ பத்தோ அப்பப்ப குடுப்பாராம். அம்புட்டுத்தான்."

"போனுல பேசுரதுக்கு இது போதாதாக்கும்?"

"இந்தக் கொற வருசத்துக்கு அங்ன இருப்பான். அடுத்து வருசம் திரும்பியும் படிக்கப் போவான்," நானம்மா சொன்னா.

ஆனா அவா சொன்னது மாதிரி கொற வருசத்துக்கு ஜெயராசு அங்க இருக்க முடியல. அவுகம்மைக்கு அப்பப்ப போன் போட்டு பேசுனத போன் பில்லுல கண்டு புடுச்ச சாமியாரு அத்தோடெ அவன வெரட்டி உட்டுட்டாரு. போனு பேசத் தெருஞ்ச ஜெயராசுக்கு, அத போனு பில்லு காட்டிக் குடுத்துரும்ங்ற வெசயம் தெரியாமப் போச்சு.

இந்த விசயம் ஊருக்குள்ள தெரியவும் அதுவரைல ஜெயராசு சாமி யாராப் போனாலும் போயிருவாம்னு பேசிக்கிட்டவுகள்ளாம், இம்புட்டுக் களவாளித் தனம் இருக்கிற பெயலா சாமியாருக்குப் போவான்? போனாலும் ரெண்டு நாளுல்ல சட்டியும் பொட்டியுந் தூக்கிக்கிட்டு பொச்சுல ஒட்டியிருக்கிற மண்ணத் தட்டிட்டு ஊரப்பாத்து ஓடியார வேண்டியதுதான். பொய்யுங் களவும் என்னைக்கும் இருக்கக் கூடாதுன்னு கண்டமாணிக்காப் பேசுனாக. போனுல பேசுன நானம் மாவையும் லேசுல உட்டு வைக்கல. கிழி கிழின்னு கிழுச்சுட்டாளுக.

ஒரு தடவ நானம்மா கூட களவெட்டப் போயிருந்த பொன்னிப் பிள்ள சொன்னா, "ஏ ...அம்மா... அவாவா போனு வந்துருச்சுன்னு கடக்காட்டுக்கு ஓடுன வெரசப் பாக்கனுமே! என்னமோ கலெக்டரு போனு வந்துட்ட மாதிரிதான். .. கூடயே பத்துப் பதுனஞ்சு பிள்ளைக்காடுக குட்டியுங் குருமானுமா ஓடுங்க. தெருவே அல்லோல கல்லோலப் பட்டுப் போச்சு போங்க. இப்ப...? எங்குட்டுக் கொண்டு போயி மூஞ்சிய வச்சுக்கிறது?"

நானம்மா எல்லாத்தயுங் கேட்டுக்கிட்டேதான் இருந்தா. மொத ஒன்னும் பேசல. பெறகு அவளாச் சொல்லிக்கிறமாதிரி அம்புட்டுப் பேத்துக்கும் கேக்கும்படியாச் சொல்லிக்கிட்டே மம்பிட்டியே ஓங்கி ஓங்கிப் போட்டு வெட்டி கோவத்தத் தீத்துக் கிட்டா, "இந்தப் பெயபுள்ள போற எடத்துல ஒழுங்கா இருந்து ருந்தா, இப்பிடிக் கண்டவளும் பேசுவாளுகளா? எல்லா ஏந் தலையெழுத்து. என்னமோ எல்லாரும் ஒப்புரவான பிள்ளைகளப் பெத்துட்ட மாதிரி! ஏம் மகனுக்காவது இத்தோட போச்சு. பெத்த தாயிக்குப் போனு போட்டு பேசுனது அந்தச் சாமியானுக்குத் தப் பாப் போச்சு! இங்க எல்லா இவளுக்கும் எளக்காரமாப் போச்சு!"

ஜெயராசு ராத்திரி சாப்டுகிட்டே, அவுகம்மயிட்டெ கழனிக் கலைக் குழுபத்தி, தான் அதன் தலைவரானது பத்தி வெவரமாச் சொன்னான். நானம்மாளுக்குச் சந்தோசமா இருந்தாலும், மத்த பெயலுககிட்ட கவனமா இருக்கச் சொன்னா. சாப்டுட்டுப் படுத்த ஜெயராசுக்குத் தூக்கமே வரல. திருவிழாவுக்குப் போஸ்டரு அடிக்கிற மாதிரி, அதுல இவனோடெ பேர பெருசா போட்டுருக்க மாதிரி நெனச்ச மாத்துரத்துல சந்தோசத்துல திக்கு முக்காடிப் போனான். பேரு பக்கத்துல பி.ஏ.ன்னு போடலாமான்னு யோசுச்சான். இன்னமும் பி.ஏ. முடிக்கலயேன்னு மனசுக்குள்ளே தோணவும், அதுக்கென்ன பிராக்கட்ல போடலாம்னு நெனச்சான். போஸ்டர்ல நம்ம போட்டாவயும் பெருசா போடனும்னு நெனச்சுக் கிட்டே பெரண்டு பெரண்டு படுத்தான். கண்டம்பட்டி தெருவுகள்ள எங்ன பாத்தாலும் இவம் படத்தோட, பேரோடெ போஸ்டர்க ஒட்டி இருக்குற மாதிரியான கற்பனைல தானா சிருச்சுக்கிட்டான். பழைய போட்டாவப் போடவா, புதுசா எடுத்துப் போடுவமான்னு நெனச்சான். இப்பிடி கண்டமாணிக்க நெனச்சுக்கிட்டே பெரண்டுக் கிட்டு கெடந்தவன் என்னியாராம் ஒறங்குனாம்னு அவனுக்கே தெரியாது.

# நான்கு

வழக்கமா ஜெயராசு காலைல சீக்கிரமாவே எந்திருச்சிரு வான். இப்ப அதவிடச் சீக்கிரமா எந்துருச்சு சோப்பு, துண்டோட சாவடிப் பக்கமா வந்து, மத்தவுகளுக்காகக் காத்திருந்தான். எல்லாரும் வந்து சேந்ததும் கும்பலாக் கெணத்துக்குக் குளிக்கப் போனாங்க. போம் போதே கழனிக் கலைக்குழுவப் பத்தி ஆளாளுக்குத் தெரிஞ்சதச் சொல்லிக்கிட்டே போனாக. ஜெயராசு சொன்ன யோசனப்படி நேரா கெணத்துக்குப் போகாமெ, கம்மாக்கர மேல இருந்த ஆலமரத்து நெழலுல ஒக்காந்து பேச ஆரம்புச்சாக.

"ஒரு வாரத்துக்கு முன்னாலியே சாவடில ரெண்டு மூணு டியூப் லைட்டக் கெட்டி, ஸ்பீக்கர் வச்சு, ஒரு வாரமும் ரவைக்கு ரவை ஏதாவது ஒரு சில நிகழ்ச்சிகள் நடத்தனும்," அந்தோணி சொன்னான்.

"சரி என்னென்ன நிகழ்ச்சிகள்னு சொல்லுங்க," சாமிநாதன் சொன்னான்.

ஒடனே ஜெயராசு சட்டப்பைல இருந்து பேப்பரும் பேனாவும் எடுத்து எழுத ஆரம்புச்சான். இதப் பாத்துட்டு ஆனந்தன் சொன்னான், "மாமா ஜெயராசு சட்டப்பைல எந்த நேரமும் தாளும் பேனாவும் இருக்கும். எப்பிடிச் சட்டுன்னு எடுத்து எழுத ஆரம்பிக்கிறாரு பாத்திகளா."

"நம்ம தலைவர்னா தலைவர்தாண்டா. சாமிநாதன் அண்ண னோட தேர்வு சூப்பருடா," மார்டின் சொல்லவும் ஜெயராசுக்குச் சிரிப்புத் தாங்கல.

"ஒரு நாளைக்குப் பட்டிமன்றம் வைக்கலாம்."

"எதப்பத்தி?"

"மாதாவப் பத்தி வைக்கலாம்."

"மாதாவப் பத்தி எல்லாம் வேண்டாம் மச்சான். ஏதாவது சமுதாயத்தப் பத்திய தலைப்பா வைக்கலாம்."

"இப்பிடி வைக்கலாமே... சாதிய வளர்ப்பது சமூகமா? குடும்பமா?"

"வைக்கலாமே... ஆனா அதுக்கு முன்னால நம்ம வயசு வாரீயாப் பிரிக்கனும்... இந்த வயசுக்கு இந்த தலைப்புனு குடுக்கனும். அப்பத் தான் நல்லா இருக்கும்," சாமிநாதன் சொன்னத அம்புட்டுப் பேரும் ஆமோதிச்சாங்க.

"பட்டிமன்றம் வந்து காலேஜ் படிச்ச பையங்களுக்கும் பொண்ணுங்களுக்கும்."

"பிளஸ் 1 பிளஸ் 2 படிக்கிறவுகளயும் சேத்துக்கலாம்."

"சரி, அப்புறம்?" ஜெயராசு கேட்டான்.

"டான்சு போடலாம். "

"என்ன டான்சு?"

"சினிமா டான்செல்லாம் வேண்டாம். நாட்டுப்புறப் பாட்டு, விழிப்புணர்வுப் பாட்டுக்களுக்கு டான்சு, கும்மி, கோலாட்டம் போடலாம்."

"யாரு டான்சு சொல்லித்தருவா?"

"மீன் குஞ்சிக்கா நீச்சலடிக்கக் கத்துக் குடுக்கனும்? நம்ம பிள்ளை களுக்கு ஆட்டமும் பாட்டமும் ரத்தத்துல ஊறுனதுல. ஒரோரு டான்சுக் கும் பொறுப்பா ஒருத்தரப் போட்டாப் போதும். வெளுத்துக் கட்டிருங்க. "

"அதுவுஞ் சரிதான், பேச்சுப் போட்டி, மாறுவேடப் போட்டி கூட வைக்கலாம். "

"ஆனா ஒரு விசயம், போட்டில சேரனும்னா ரெண்டு ரூவாக் கெட்டியாகனும். அப்பத்தான் ஒரு பொறுப்பும் ஆர்வமும் இருக்கும். நம்மளுக்கும் செலவுக்கும் பரிசுப் பொருட்கள் வாங்கவும் முடியும்."

"எடைல எடைல பாட்டுப் போட்டி வைக்கலாம்."

"நாடகத்தப் பத்தி மறந்தே போயிட்டம் பாருங்க."

" நாடகம் வந்து காமிக்கா இருக்கனும். அதே சமயம் சிந்திக்க வைக்கிறதா இருக்கனும். அப்பத்தான் நம்ம ஆளுக ரசிப்பாக, சிரிப்பாக."

"எல்லாத்தயும் முடிவு செஞ்ச பெறகு, எல்லாரும் கெணத்துக்குப் போனாக. அன்னைக்கு ஜெயராசு சோப்பத்தான் எல்லாரும் போட்டுக் குளுச்சாக. ஜெயராசுக்கு என்னைக்குமில்லாத ஒரு சந்தோசம். மனசும் லேசாகிப் போன மாதிரி இருந்துச்சு. அன்னைக்கு குளுச்சு முடிச்சுட்டு வீட்டுக்கு வர பதினொரு மணிக்கு மேல ஆயிருச்சு.

அங்ன வயக்காட்டுல புல்லறுத்துகிட்டு இருந்த பொம்பளைக சொல்லிக்கிட்டாளுக, "இந்தப் பெயலுக ஒடம்புல அப்பிடி என்னதான் அழுக்கு கெடக்குதோ தெரியல. தெனமும் காலைலயும் சாயந்தரமும் குளிக்கானுக. அதுவும் எம்புட்டு நேரமாக் குளிக்கானுக."

அவனுக கிட்டத்துல வரவும் மாடத்தி கெழவி சிருச்சுக் கிட்டே கேட்டா, "ஏ சாமிகா, அப்பிடி என்ன அழுக்கு கெடக்கு ஒங்க ஒடம்புல? என்ன கெணறு வெட்ட போனீகளா? நாத்துப் புடுங்கப் போனீகளா? ஒழவுக்கு போனீகளா? பரம்படிக்கப் போனீகளா? இல்ல வம்பாரத்துக்கு மலங்காட்டுப் பக்கம் போயி வெறகு பெறக்கிக் கொண்டாந்து ஒங்கம்மமாரு எரிக்கப் போட்டுட் டீகளா? கெணத்துத் தண்ணியே காலி பண்ணிப் போடுவீக போலயே..."

"ஏ பாட்டி மாடத்தி, ஒனக்கென்ன பூழாப்பா இருக்குது! கெணத்துல ஏகப்பட்ட தண்ணி கெடக்கு வந்து குளி. முதுகு தேச்சு உடுறோம். "

"அதாரு மகென்? அவா ஆந்தக்கண்ணி மகந்தானே... பாத்தியா அவனுக்கிருக்கிற கிசும்புத்தனத்த? ஒம் பொண்டாட்டிக்கு போயி முதுகு தேச்சு உடு சாமி."

"பொண்டாட்டி இல்லியே இப்ப. அதான் ஒனியக் கூப்புட்டேன்."

அம்புட்டுப் பேரும் சிருச்சுக்கிட்டே வந்துட்டானுக.

மாடத்தியும் சிருச்சுக்கிட்டா.

"படுச்ச பெயலுகளா ஒண்ணாச் சேந்து இந்த வருசத் திருநாள ரொம்பாப் பெருகளமா கொண்டாடப் போறாகளாம். அதான் ரொம்ப முஸ்தீபா திரிறானுக," புல்லறுத்துக்கிட்டுருந்த அன்னமா சொன்னா.

"ஏதோ நல்ல காரியம் செய்யட்டும். நமக்கென்ன தெரியுது. அந்தக் காலத்துல வெள்ளக்காரச் சாமிமாருக தாயாருமாருக எலவசமாப் படிப்புச் சொல்லிக் குடுத்தாக. ஒழுங்காப் பள்ளிக்கொடம் போயிப் படுச்சிருந்தா, இன்னைக்கு நாங்கூட ஒரு டீச்சரா ஆகியிருப்பேன்," மாடத்தி சடவாச் சொன்னா.

"அப்பப் படிச்சிருந்தீன்னா இப்ப இந்த மத்தியான வெயிலுக்குள்ள கெடந்து புல்லறுக்க வேண்டாமில்ல."

"இப்ப யோசுச்சு என்ன பெரயோசனம்? இப்ப மாதிரி இல்லத்தா அப்ப... வீடு வீடா வந்து புள்ளக்காடுகளப் புடுச்சுக் கிட்டுப் போயி பள்ளிக் கொடத்துல சேத்து, செலேட்டு, நோட்டு

கீட்டு, பொஸ்தகம் எல்லாம் ஓசியாக் குடுத்து, மத்தியானத்துக்கு வகுறு ரொம்பாக் கோதுமக் கஞ்சியும் போட்டுப் படிப்புச் சொல்லிக் குடுத்தாக. எனக்குத்தான் படிப்பு வல்ல."

"நீயி ஒழுங்காப் படிச்சிருந்தீன்னா வந்துருக்கும்."

"அந்தத்த பாக்கியம் இருக்கா பாரு. கணக்கு அப்பிடிப் போடுவா. டீச்சருமாருகளே ஆச்சரியப்பட்டுப் போவாக. இன்னைக்குப் பாரு களத்துமேடு தூத்துக் கஞ்சி குடிக்கா. அவுகய்யா படிக்க உடல."

மாடத்தியே தொயந்து சொன்னா, "மேற்க நடுகபட்டில காளியம்மா காளியம்மான்னு ஒரு டீச்சரு இருக்கு பாத்தியா. அவுகள் ளாம் எங்க கூட படுச்சவுகதான். அந்தக் காலத்துல எட்டு வரைல படுச்சாப் போதும் டீச்சராகிரலாம்."

"சரி வா பாட்டி. புல்லக் கட்டித் தூக்கு. பால் பீச்ச நேரமாகுது," அன்னம்மா சொல்லவும் விறுவிறுன்னு புல்ல அள்ளிக் கெட்டுனாக.

படுச்சுட்டு லீவுல இருக்குற பையனுகளுக்கு நேரத்துக்கு நேரம் சாப்பாடுங்றது கெடையாது. சாப்பாடும் கெடைக்காது. அதுனால காலைக்கும் மத்தியானத்துக்குமாச் சேத்து ஒரே டயத்துல பன்னண்டு மணி போல கூழுக் குடிப்பாக. பெறகு ரவைக்குத்தான். குளுச்சிட்டு வந்து பசியோட கூழுப் பானையப் பாத்தா செலநேரம் காலியாக் கெடக்கும். இவனுக குளிச்சிட்டு வரமுன்னால அவனுக ளோட தம்பி தங்கச்சிக இருக்குறதக் காலி பண்ணிட்டுப் போயிரு வாக. அப்பிடிப்பட்ட டயத்துல மத்த பையனுக வீட்டுல கூழு உண்டென இருந்தா சேந்து குடிப்பானுக. எதுவுங் கெடைக்க லன்னா, வகுத்தக் காயப் போட்டுட்டு இருப்பானுக. இதுக்கெடை யில, இவனுகளுக்குச் செய்யத் தெருஞ்ச வேலை ஏதாச்சும் கெடச்சா போயி கூலிக்கு வேல செஞ்சுட்டு வருவானுக. அந்தச் சமயங்கள்ள ராத்திரி ரொம்பா நேரம் ஒக்காந்து சாவடில பேசிக்கிட்டு இருப் பானுக. ஏன்னா அப்பத்தான் ஒருத்தர ஒருத்தருப் பாக்க முடியும்.

ரெண்டு மூனு நாளைக்குள்ள கழனி கலைக்குழு பத்தி தெருவுக் குள்ள பெரஸ்தாபம் ஆயிடுச்சு. நெறய்யா பேரு ரெண்டு ரூவா கட்டி பல போட்டிகள்ள சேந்துட்டாக. பொம்பளப் பிள்ளை களும் சேந்தாக. ஜெயராசு ராப்பகலா இதே வேலையாகத்தான் திருஞ்சான். தெருவுக் குள்ள அங்கங்க கழனிக் கலைக்குழு பத்தி விளம்பரம் எழுதிப் போட்டாங்க. வெறுஞ் சுண்ணாம்புட்டயும், கரிக்கட்டையுட்டயுமா எழுதுனது ஜெயராசுக்கு அம்புட்டுச் சந்தோசமில்லை. பெருசா போஸ்டரு அடிச்சு ஒட்டனும்னு

அவனுக்கு ஆசை. அதுல அவனோட பேரு, போட்டோ எல்லாம் போடனும்னு ரொம்பா கனாக் கண்டுக்கிட்டு கெடந்தான். அதுனால அவனுக்கு ரொம்பா ஏமாத்தமா இருந்துச்சு. இருந்தாலும் மொதவாட்டிதானே... பணமும் கைவசம் அம்புட்டு இல்ல. அடுத்த வாட்டி இதவிடப் பெரமாதமா செஞ்சு போடனும்னு மனசத் தேத்திக்கிட்டான்.

தெனந்தோறும் சாயங்காலத்துல தெருவுக்குத்தெரு டான்சு, நாடகம், பாட்டு, பிராக்டிஸ் பண்ணுனாங்க. அப்பப்ப கலைக்குழு உறுப்பினர்கள் போயி பாத்து உற்சாகப்படுத்துனாக. சாயங்காலத்துல தொடங்கி ராத்திரி பத்துமணி வரைக்கும் தெருவே கள கட்டிரும். சின்னஞ்சிறுசுகள்ள இருந்து பெரியாளுக மொதக் கொண்டு திருநாள ரொம்பா ஆர்வமா எதிர்பார்த்தாக. மொதல்ல ரெண்டு ரூவா குடுக்க யோசுச்சவுக கூட இப்ப தாராளமா ரெண்டு ரூவா குடுத்து தங்களோட பிள்ளைகள எதுனாச்சும் ஒரு போட்டில சேத்து உட்டாக. பிள்ளைகளும் என்னமோ பெரிய சினிமா ஸ்டாருகளா ஆயிட்ட மாதிரி சந்தோசக் கெறக்கத்துல இருந்தாக.

இது ஒரு பக்கம் நடந்துக்கிட்டு இருக்க, திருநாளைக்கு ஒரு வாரத்துக்கு முன்னால, ஜெயராசு, கலைக்குழு உறுப்பினர்களக் கூப்புட்டு ஒரு கூட்டம் போட்டான். உறுப்பினர்கள்ள செலபேரு பக்கத்து ஊர்களுக்கு வெள்ளையடிக்கிற, பெயிண்ட் அடிக்கிற வேலைக்குப் போயிட்டதுனால, ராத்திரி எட்டு மணிக்கு எல்லாரும் அம்பேத்காரு செலைக்கிட்ட வந்துரனும்னு சொன்னான். சொன்னது கெணக்கா எல்லாரும் வந்து சேந்துட்டாக. ஜெயராசு கைல இருந்த நோட்டப் பிரிச்சு எவ்வளவு ரூவா கலெக்ஷன் ஆயிருக்குனு வாசுச்சான். அது மாதிரி என்னென்ன போட்டிக்கு எத்தனை பேரு சேந்துருக்கா கன்னும் சொன்னான்.

சாமிநாதன் கேட்டான், "மாப்ளே எல்லாஞ் சரித்தான், நீங்களே பொறுப்பாச் செய்யுங்க. ஒங்க கைல ஒப்படைச்ச பெறகு, அதப் பத்திக் கவலப்படவே தேவையில்ல. இப்ப என்னத்துக்கு இந்தக் கூட்டம் போட்டீக?"

"இப்ப எதுக்குனா, நம்ம கைல இருக்குற கொஞ்ச காசுல ஒரு சில வேலைகளச் செய்யலாமான்னு கேக்கத்தான்."

"என்ன வேலைக?"

"அதாவது, அம்பேத்காரு செலைக்கு முன்னால ஒரு டியூப் லைட் போடனும். செலயச் சுத்தி ஏதாச்சும் செடிகள் வைக்கனும். அது மாதிரி தெருவுக்குள்ளயும், தெருவுக்கு ரெண்டு வேப்பமரம் நட்டு வளக்கனும்."

“செய்யலாம் மாமா. ஆனா நம்ம லீவு முடுஞ்ச போயிட்டா செடிகள யாரு பராமரிப்பாக? அதான் யோசிக்க வேண்டிய விசயமா யிருக்கு,” அந்தோணி சொன்னான்.

“அதுக்கு என்ன செய்யனும்னா, அம்பேத்கர் சிலைய இங்க உள்ளூர்ல இருக்குற பையனுக பாத்துக்கிரனும். வாரத்துக்கு ரெண்டு தடவ இங்குட்டு வரும்போது தண்ணி ஊத்துனாப் போதும். தெருவுல வைக்கிற கன்னுகளுக்கு அந்தந்த தெருவுல இருக்குறவுக தான் பொறுப்பு. அவுகதான் தண்ணி ஊத்திப் பராமரிக்கனும்,” சாமிநாதன் சொன்னது எல்லாருக்கும் புடிச்சது.

“நம்மதான் எப்பிடியும் இன்னும் ரெண்டு மூனு வாரத்துக்கு இருப்போம்ல. நம்ம இருக்குற வரைல கவனிக்கனும். தண்ணி ஒழுங்கா ஊத்துராகளான்னு பாக்கனும். கொஞ்சம் வளந்துட்டா பெறகு பிரச்சனை இல்ல,” ஜெயராசு சொன்னான்.

“சரி, திருநாளுக்கு இன்னும் நாலஞ்சு நாளுதான் இருக்குது. நம்ம சாவடி தெருவுகளச் சுத்தஞ் செய்யனும்,” இளங்கோ சொன்னான்.

“நம்ம எல்லாருமாச் சேந்து சாவடிக்கு வெள்ளை அடுச்சு பெயிண்ட் அடிச்சுரலாம். சாயங்காலத்துல மத்த பொம்பளப் பிள்ளகளயும் கூப்டு தெருவச் சுத்தமாக்கிரலாம்.”

“சாவடிக்கு மேல ‘கழனி கலைக்குழு மன்றம்’னு பேரு எழுதி வைக்கலாமானே? ”

“ஊர்க்காரனுக வைவானுகடா. பொதுக்கட்டிடத்துல பேரு எழுத உடமாட்டாங்க. இப்பயே நமக்கு எதுரா செலபேரு இருக்கானுக. என்னத்துலயாச்சும் நம்மளப் புடுச்சு மாட்டனும்னு கண்கொத்திப் பாம்பாப் பாத்துகிட்டு இருக்கானுக.”

“அப்ப பொதுக்கட்டிடம்னு எழுதுவோமா?”

“பறையர் பொதுக்கட்டிடம்னு எழுதலாம்.”

“சும்மா பறையர்னு வேண்டாம். ‘ R.C. பறையர் பொதுக் கட்டிடம்’னு எழுதலாம்.”

“சரி அதெல்லாம் இருக்கட்டும். இந்தக் கொழாயடியக் கொஞ்சம் சரி பண்ணனுமே.”

“ஆமா ஆமா. அங்னக்குள்ளயே துணி துவைக்கிறது, அங்னக்குள்ளய குளிக்கிறது பெறகு குடிக்கத் தண்ணி பிடிக்கிறது இப்பிடி சுகாதாரமில்லாமெ இருக்குது. இதுக்கு ஒரு வழி பண்ணனும்.”

“ஏற்கனவே கெணத்துகிட்ட ஆணுக்கொன்னு பொண்ணுக்

கொன்னுன்னு ரெண்டு குளியல் ரூம்பு இருக்குது... அத நாம சுத்த மாக்கிடுவோம். கெணத்துத் தண்ணிய மோட்டார் போட்டு டேங்குல ஏத்தி அங்க இருந்து குளியல் ரூம்பு தொட்டிகள்ள தண்ணி ரொம்புறது மாதிரி ஏற்பாடு செஞ்சுட்டு, இனி எல்லாரும் ரூம்புக்குள்ளதான் குளிக்கனும், கொழாயடிக் கிட்ட குளிக்கக் கூடாதுன்னு சொல்லுவோம்."

"சூப்பரோ சூப்பர் மச்சான்," சொல்லிக்கிட்டே சத்தமா விசுலடுச் சான் அந்தோணி.

சொன்னது கெணக்கா மறுநாளைலருந்து மடமடன்னு காரியத்துல எறங்குனாங்க. இவனுககிட்ட இருக்கிற வேகத்தப் பாத்துட்டு மத்தவுகளால சும்மா இருக்க முடியல. பெரியாளுககூட இவனுகளோட சேந்து பல வேலைகள்ள ஈடுபட்டாக. வேப்பங் கன்னுகள இவனுக நட்டு சுத்தி முள்ளுள வேலி கட்டி குடுக்கவும் அந்தந்த தெருக்காரங்க சாயங்காலத்துல தண்ணி ஊத்தி வளக்க ஆரம்புச்சுட்டாங்க. கொழாயடில குளிக்குற, தொவைக்குற கூட்டமும் மறஞ்சு போச்சு. வெள்ளையடுச்சப் பெறகு சாவடிக்கே ஒரு தனி அழகு வந்துச்சு. சாவடிக்கு மேல இருந்த டாப்லைட் லருந்து கலர்க்கலரா கொடி கட்டுனாக. ஒரு வாரத்துக்கு முன்னாடியே ஊரு விழாக்கோலம் பூண்டு, சனங்களும் கலகலப்பா, ஆர்வத்தோட திருநாளு நிகழ்ச்சிகளுக் காகக் காத்துருந்தாக.

ஞாயித்துக் கெழம சாயங்காலமே சாவடிக்கு முன்னால சின்ன தென்னங்கீத்துப் பந்தல் போட்டு, டியூப் லைட் கட்டி, ஸ்பீக்கரும் வச்சுட்டாங்க. கலைக்குழு உறுப்பினர்கள் எல்லாருமே படுபிசியா அலஞ்சாக. ஆளாளுக்கு ஒரு வேலைய இழுத்துப் போட்டுக்கிட்டு சந்தோசமாச் செஞ்சாக. திருவிழா அன்னைக்குச் சாயந்தரம் சாவடிக்கு முன்னால கபடிப் போட்டி வைக்கனும்னு திட்டம் போட்டு அவுங்களே மண்ணடுச்சு வெளாடுற எடத்தச் சரி செஞ்சாக.

கொழாயடிக்குத் தண்ணிக்கு வந்த ஜெயராசோட அம்மெ சொன்னா, "வீட்ல இங்ன கெடக்குற துரும்பெ அங்ன தூக்கிப் போட மாட்டான். ஊருக்குன்னா இப்பிடி ஓடியாடி ஒழைக் காம்பாரு."

"ஓம்மகெந்தான் தலைவராம்லெ மதினி" கூட நின்ன அன்னக் கிளி கேக்கவும் ஜெயராசோட அம்மெ மொகத்துல அப்பிடியொரு பெருமெ; பூரிப்பு. இருந்தாலும் ரொம்பாச் சடவாச் சொல்லிக் கிட்டா, "ஆமா, பெரிய தலைவரு பதவி. இவனுகளோட சேந்தத்துல இருந்து ஒழுங்கா வீட்டுக்கு வர்ரதில்லை, நேரத்துக்குக் கஞ்சி குடிக்கிறதில்ல, இவெ ஒருத்தந்தான் கொஞ்சம் சூட்டு கீட்டுப்

போட்டுக்கிட்டு வெள்ளையுஞ் சொள்ளையுமா படுச்சபெய மாதிரி திருஞ்சான். இப்பப் பாரு, அவனுகள கெணக்கா இவனும் லுங்கியக் கெட்டிகிட்டு அலைறான். எப்பிடியாவது போகட்டும்."

"சும்மா இரு மதினி. இந்தப் படுச்ச பெயலுக தல எடுக்கப் போயி, ஊரு இம்புட்டாச்சும் விருத்தி ஆயிருக்கு. இல்லன்னா, இந்தக் கொழாயடி இப்பிடியா இருக்கும். தெருவுகளப் பாரு. முன்ன மாதிரியா இருக்கு. நெசத்துக்கே நம்ம பெயலுகளப் பாராட்டனும்." ஜெயக்கொடி சொல்லவும் நெறய்யாப் பேரு அதுக்குத் தலையாட்டுனாக. ஜெயராசோட அம்மைக்கும் சந்தோச மாத்தான் இருந்துச்சு.

ஜெயராசு மைக்குல பேசுனான். கழனி கலைக்குழு பத்தியும், அதோட நோக்கம், வேலைகள் பத்தியும் சுருக்கமாச் சொல்லிட்டு, திங்கள்கிழமை ராத்திரி நடனப் போட்டி நடைபெறும்னு அறிவிப்பு செஞ்சான். மகன் கணீர் கணீர்னு பேசுரதக் கேட்டதும் அவுகம்மெ கொடத்தக்கூடத் தூக்காமெ செத்தநேரம் மெய்மறந்து நின்னு கேட்டுக் கிட்டுருந்தா. கொஞ்ச நேரம் எடவெளி விட்டு திரும்பியும் பேசுனான். நடனப் போட்டியில் சேர விரும்பும் ஆண் பெண் அனைவரும் திரு. அந்தோணி பி.காம் அவர்களிடம் 2 ரூபாய் செலுத்தித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென அறிவிப்புச் செய்தான். கலைக்குழுத் தலைவர், பொருளர், செகரட்டரி, உறுப்பினர்களைப் பற்றி அறிமுகம் செய்யும் போதும், பேரோட, அவுகவுக படிக்கிற படிப்பை யும் சேத்துச் சேத்துச் சொல்லி அமர்க்களப்படுத்தினான். ஒவ்வொரு முறையும் முடிக்கும் போதும் இதுவரையில் ஒலித்த குரல் உங்கள் அன்பு அறிவிப்பாளர் க. ஜெயராசு பி.ஏன்னு ஒரு தளுக்கல் குலுக்க லோட சொல்லி அம்புட்டுப் பேரயும் சிரிக்க வச்சான்.

திங்கக்கெழம ராத்திரி ஏழு மணி போல ஆம்பள பொம்பள அம்புட்டுப் பேரும் வெள்ளனத்துலேயே கஞ்சி தண்ணியக் குடுச்சுட்டு சாவடிக்கு முன்னால வந்து எடம்புடுச்சு ஒக்காந்தாக. அன்னைக்கு நடக்கப் போற நடனங்கள் பற்றி ஜெயராசு ஒரு தடவ அறிவிப்புச் செய்தான். மொதல்ல கீழத்தெரு ஜெயசீலி இறை வணக்க நடனம் ஆடுவார்னு சொல்லவும், கூட்டத்துல அமைதி.

ஜெயசீலி வெள்ளப் பாவாடையும், வெள்ளச் சட்டயும் போட்டுக்கிட்டு சாமி பாட்டுக்கு டான்சு ஆடுனா. அடுத்து கலைக்குழு உறுப்பினர் அந்தோணியின் ஆட்டம்னு சொல்லவும், இளைஞர்கள் உற்சாகமா கைதட்டுனாங்க. அந்தோணி வந்து ஆடும்போது அம்புட் டுப் பேரும் ரசிச்சாக.

பெரியாளுக, பெரிய பொம்பளைக மட்டும் இதென்னடா டான்சு, சன்னி வந்தவெங் கணக்கா வெட்டி வெட்டி இழுக் குறாம்னு சொல்லிச் சிரிச்சுக்கிட்டுக் கெடந்தாக. இந்த வெட்டு வெட்டுறானே, இடுப்பு கிடுப்புச் சுளுக்கிக்கிறப் போகுதுன்னு மாடத்திக் கெழவிச் சத்தமாச் சொல்லவும் கொல்லுனு சிருச்சாக.

அந்தோணி ஆடிட்டு இருக்கயிலேயே அவுகக்கா பாத்திமா போயி அவெஞ் சட்டைல அஞ்சு ரூவாத் தாளக் குத்திட்டு வந்தா. ஆட்டம் முடியவும் ஜெயராசு, ஆடும்போது ரூவாத்தாளெல்லாம் வந்து குத்தக்கூடாது, அன்பளிப்பு செய்யனும்னா ஆடி முடுச்சப் பெறகு செய்யலாம்னு அறிவிப்பு செஞ்சான்.

அடுத்ததாக மரியராசுத் தாத்தா ஒரு பாடல் பாடுவார்னு சொல்லவும் அம்புட்டுப் பேரும் ஆரவாரமாக் கைதட்டுனாக. மரிய ராசுத் தாத்தா துண்ட தோளுல போட்டுக்கிட்டு கம்பூனிக்கிட்டு மேல வந்தாரு.

“நடக்கமாட்டாத கொள்ளு சும்மா கெடந்தா என்ன! பாட்டு என்ன வேண்டிக்கெடக்கு.” தாத்தாவோட சம்சாரம் ஏகலம் திட்டுனா.

தாத்தா மைக்குல பாட ஆரம்பிச்சதும், அப்பிடி ஒரு நிசப்தம். பறயர் தெரு மட்டுமில்லாமெ, சுத்தி இருந்த அம்புட்டுத் தெருவும் அமைதியா இருந்துச்சு. அந்த ராத்திரியோடெ அமைதியக் கிழிச் சுட்டு தாத்தாவோடெ சத்தம் கணீர்னு எதிரொலிச்சது. சத்தம், சந்தடி, சலனம் எதுவுமில்லாமெ, எங்குட்டும் அமைதியான சூழலா இருந்துச்சு. ஒடுங்கிப் போன தாத்தாவோடெ ஒடம்புக்குள்ள இப்பிடி ஒரு ஊத்துப் பிராவாகமெடுத்து, தெருவுகள மட்டு மில்லாமெ, கம்மா, காடு கரை அம்புட்டையும் நெறச்சுப் பொங்கிப் பாயுமின்னு ஒருத்தரும் நெனைக்கல. தோளுல கெடந்த துண்ட எடுத்து மொதல்ல மொகத்தத் தொடச்சுட்டு தொடங்குனாரு.

ரோட்டாரம் போறவளே
ரோசமுள்ள ராசாத்தியே
காட்டுப் பக்கம் வந்தா என்ன
கண்ணசைவில் சொன்னாலென்ன
தானேனே தன்னனனனே தானேனே.
தாமரப்பூக் கொண்டக்காரி
தாழம்பூச் சீலைக்காரி
ஏம்மனசக் கெடுத்தவளே

நன்றி - ஊடறு



ஏரிக்கரப் பக்கம் வாயேன்
தானேனே தன்னனனனே தானேனே.

அந்தி மால வேளையிலே
சந்திரனா வந்தாலென்ன
சிந்தையெல்லாம் நெறஞ்சவளே
சிங்காரியே சின்னமயிலே
தானேனே தன்னனனனே தானேனே.
கஞ்சிதண்ணி செல்லலடி
வஞ்சி ஒன்ன கண்டபின்னே
நெஞ்சமுந்தன் மஞ்சமடி
அஞ்சிடாமெ வந்திடுகண்ணே
தானேனே தன்னனனனே தானேனே.

தாத்தா பாடும்போதே, பாட்டுக்குத்தக்கன கைய ஆட்டிக் கிட்டு, ஒடம்பயும் நெளுச்சுக்கிட்டு ஆடுனாரு. பாடிட்டு எறங்கும் போது பரவச நெலையில இருந்த அம்புட்டுப் பேரும் கொஞ்ச நேரங்கழுச்சுத் தான் கைதட்ட ஆரம்புச்சாக. பத்து நிமுசத்துக்குமேல கைதட்டு ஓயல. எளவட்டப் பெயலுக காது கிழியற மாதிரி வாயிட்ட விசிலடுச்சானுக.

"இப்பமே இப்பிடிப் படிக்காறே; பிராயத்துல எப்பிடிப் படிச்சிருக்கமாட்டாரு."

பரலோகம் சொல்லவும், தாத்தாவோடெ சம்சாரம் ஏகலம் சொன்னா, "அப்பயெல்லாங் கமலகெட்டி ஓட்டிக்கிட்டுப் படுச் சாம்னா மேற்க அய்யருக வீடு வரைல பாட்டு கேக்கும். இவம் பாட்டுச் சத்தத்துக்கே பயிரு வெளையும்பாக."

"இப்ப பாடுன பாட்டு ஒனக்குப் பாடுனதா, இல்லன்னா வேற எவளயாச்சும் வச்சுருந்தாரா?"

பாட்டி பொக்க வாயத் தொறந்து அப்பிடி ஒரு சிரிப்புச் சிருச்சுக் கிட்டு சொன்னா, "போங்கடி போக்கத்தவளுகா, எனியத் தவுத்து வேறு ஒரு சிறுக்கிய மனசால கூட நெனைக்க மாட்டான். இப்பிடி எத்தனையோ பாட்டி அவனே இட்டுக்கட்டிப் படிப்பான். அதெல்லாம் எழுதுனா ஒரு பொஸ்தகமே பத்தாது."

"நீயி நெனச்சுக்கிட்டு இருக்க வேண்டியதுதான். ஒனக்குத் தெரியாம எத்தன பேரோ?" பாட்டியச் சீண்டி உட்டாக.

"இவம் பாட்டுக்கு ஆயிரம் பேருதான் வரட்டுமே. அசைக்க முடியாதுடி சக்காளத்திகா. இந்த 'கஞ்சி கலயங் கொண்டு கரவழியே போற பிள்ள' பாட்டுக்கூட இவெம் பாட்டுத்தான்."

"உட்டா, பூராப்பாட்டும் ஒம்புருசன்தான் படிச்சாமுன்னு சொல்லிப் போடுவ போலுக்கோ."

"ஆமா. இம்புட்டு வயசு ஆகுதுல. ஒத்தப்பாட்ட மறக்கல. என்ன..... முன்ன மாதிரி தொயந்து பாட முடியல; இருமல் வந்துரும். என்ன செய்ய! இனி அம்புட்டுத்தா."

தாத்தா படிக்கட்டுல எறங்க முன்னாடி எளவட்டப் பெயலு கள்ளாம் ஓடிப்போயி தாத்தாவத் தூக்கித் தோளுல வச்சுக்கிட்டுச் சஞ்சணக்கா சணசணக்கானு கூத்தாடிக்கிட்டே கொண்டுவந்து கீழ ஒக்கார வச்சாங்க. தாத்தா மொகத்துல இருந்த கம்பீரமும் கண்ணுல இருந்த பிரகாசமும் இம்புட்டுத்தா அம்புட்டுத்தான்னு இல்ல. "ஏலேகா உடுங்கடா... உடுங்கடா"ன்னு சொல்லிக்கிட்டே வெள்ள மீசயத் தடவிக்கிட்டு கீழ ஒக்காந்தாரு.

அடுத்த நிகழ்ச்சி கும்மினு ஜெயராசு அறிவிப்பு செஞ்சான். ஒடனே எட்டுப் பொம்பளப் பிள்ளைக வந்து பாட்டுப் படுச்சுக் கிட்டே கும்மியடிச்சாக.

ஒடனே பொம்பளைக கூட்டத்துல இருந்த ஞானப்பூ சத்தமாச் சொன்னா, "இதென்ன கும்மி. எட்டுப் பேத்த வச்சு. அந்தக் காலத்துல உயிர்த்த பண்டிலுக்கு, குண்டில கொசுவம் பெரளப் பெரள நாங்க கும்மி அடுச்சாத்தான் சப்பரமே கோயில உட்டு பொறப்படும். இப்ப எங்க எல்லாம் போச்சு."

"அம்புட்டுச் சடவாச் சொல்றவா, போயி இப்ப அடியேன் பாப்போம். அடிக்குறவுகள கொறவட்ற."

"ஏண்டிகா, அடிக்க முடியாதுன்னாடி பாக்கீகெ. ஏக்கா, அந்தக்கா சாந்தம்மாளக் கூப்புடு. அவா கும்மி பாட்டுப் படுச்சானா எங்குட் டாப்ட சனம்பூரா வந்து கூடி நிக்கும். எந்திரிக்கா, போயி அடிப்போம்," ஞானப்பூ சுத்தமாச் சொல்லவும் எல்லாரும் சிருச்சாக.

அவா மகா கொழந்த சொன்னா, "ஏமா சும்மா கெடக்க மாட்டியாமா. அப்ப வயசுல அடிச்சின்னா இப்பயுமா அடிக்க முடியும். ஐயா வையப் போறாம்மா. சும்மா கெட. இவளுக தூண்டி உட்டுட்டு வேடிக்க பாப்பாளுக."

ஞானப்பூக்கு ஐம்பது வயசுக்கு மேல இருக்கும். நெடு நெடுன்னு வளந்து இருப்பா. அந்தக் காலத்து மொறப்படி சட்ட கிட்ட ஒன்னும் போட மாட்டா. நல்ல வேலக்காரி. திடுதிடுப்புனு

என்ன நெனச்சாளோ தெரியல. சாந்தம்மாள கூப்புட்டுக்கிட்டு, அவா மட்டத்து பொம் பளைக பத்துப் பேரயுஞ் சேத்துக்கிட்டு கும்மியடிக்க ரெடியாகிட்டா.

ஆனா இவுகளோட புருசமார்களும், பெரியாம்பளைகளும், “ஏ வேலையத்த கழுதைகளா, போங்கத்தா. கும்மியடிக்க வார ஆளுகளப் பாரு. இன்னுங் கொமரி குட்டச்சிகன்னு நெனப்பா. வெக்கமில்லாம சீலய வருஞ்சுகட்டிக்கிட்டு வாராளுக பாரு,” சத்தமா வஞ்சாக.

ஆனா எளவட்டப் பெயலுக பூராம் “இல்ல, வரட்டும், வாங்க, வந்து கும்மியடிங்க’ன்னு உசுப்பி உட்டானுக.

யாரும் என்னமுஞ் சொல்லட்டும்னு ஞானப்பூ பொம்பளை களக் கூப்டுகிட்டு மேல ஏறிப் போயி வட்டமா நிக்க வச்சுட்டு சாந்தம்மாளப் பாட்டுப் படிக்கச் சொன்னா. அவா படிக்கப் படிக்க, மத்தவுக அவளுக்குப் பின்னால படுச்சுக்கிட்டே வட்டமா வந்து வந்து கும்மி அடுச்சாக. எல்லாரும் ஒத்து நின்னு ஒரு தடவ கூட தப்பு உடாமெ இத்தினிகூட மாறாமெ அடுச்சதப் பாத்துட்டு, வஞ்சவுக, சிருச்சவுகள் ளாம் கூட கப்சிப்னு ஆகி ஆச்சரியமாப் பாத் தாக. அவுக அடுச்ச கும்மிச் சத்தம் கம்மாப் பக்கம் எதுரொலிச்சது.

அடுச்சு முடுச்சுட்டு எறங்கவும் அம்புட்டுப் பேரும் கை தட்டுனாக. ஆம்பளைக அசந்து போயி, “நம்ம பொம்பளைகளச் சாமான்யமா நெனச்சிரப்படாது. அவளுக நெனச்சாளுகன்னா நிமுசத்துல தூணத் துரும்பாக்குவாக; துரும்பத் தூணாக்குவாக” பெருமையாச் சொல்லிக்கிட்டாக.

கொமரிப் பிள்ளைகள்ளாம் குலுங்கி குலுங்கிச் சிருச்சுக்கிட்டு கெடந்தாளுக. “என்னத்துக்கடிகா சிரிப்பாணி அள்ளுது”ன்னு கேட்டுக்கிட்டே ஞானப்பூவும் சேந்துக்கிட்டுச் சிருச்சா.

“இப்பயே இம்புட்டு சூப்பரா அடிக்கீகளே. கொமரிகளா இருக்கயில நல்லாக் கும்மரச்சம் போட்டுருப்பீக போல,” சிறிய புஸ்பம் சொன்னா.

“அத ஏம்தா கேக்குற? உயிர்த்த திருளா வந்துருச்சுன்னா அம்புட்டுப் பெருகளமா கொண்டாடுவோம்! பலசாதி ஆளுகளும் வந்து பாப்பாக.”

“எப்பிடி?”

“சப்பரத்த மேப்பகல்லயே நல்ல சோடுச்சுப் பெறக்கி வச்சுட்டு, கறிக் கொழம்பு வச்சு கஞ்சியக் குடுச்சுப் போட்டு, மேள தாளத்தோட கோயிலுக்குப் போயிருவோம். அங்க போயி சாமி

யார்க்குச் சந்திப்பு வச்சுட்டு, ஆசிர்வாதம் முடியவும் அம்புட்டுப் பொம்பளைகளும் கோயிலுக்கு முன்னால வட்டமாக்கூடி நின்னு கும்மி அடிப்போம். சாயங்காலத்துல தொடங்குற கும்மி ராத்திரி எட்டு மணி வரைக்கும் போகும். நாங்க அடிக்கிற கும்மி மேற்கெ குப்பாம்பட்டி, கெழக்கே அரசம்பட்டி, வடக்கெ வில்லாம்பட்டி, தெக்க பெருமாப்பட்டி வரைக்கும் கேட்டு கம்மாயில எதுரொலிக் கும். உயிர்த்த சேசுவப் பத்தி சாந்தம்மா அப்பிடிப் பாடுவா."

"ஆம்பளைக வைய மாட்டாகளா?"

"எந்தப் பெய வைவான்? அவனுக பூராம் சுத்தி நின்னு வேடிக்க பாப்பானுக. நம்மாளுக மட்டும்னா நெனைக்க? பல சாதி ஆளுகளும் வந்து பாப்பாக. பள்ளத்தெரு பொம்பளைக காடு கரைகள்ள வேல செய்யும் போதுகூட அது என்னனுக்கா அம்புட்டுக் கூட்டத்துல கூச்சமில்லாமெ கும்மி அடிக்கீகன்னு கேப்பாக. கும்மியடிக்க கூச்சம் எதுக்கு? அவுக தெருவுகள்ள இப்பிடி படுச்சு கும்மி அடிக்க மாட்டாகள்ள. அதான் அவுகளுக்கு இது அருவசமாத் தெருஞ்சுருக்கு."

"அவுக தெருவுல அப்ப என்ன செய்வாக?"

"அவுக தெருவுகள்ளயா! நம்ம பெயல்க ஆரம்புச்ச மாதிரி அவுகளும் என்னமோ ஒரு பேர்ல கலைக்குழு தொடங்கி இருக்காக ளாம். அவுகாளுக செலம்பாட்டம், பிடி வெளாட்டுனு வெளாடு வாக. ஆனா பொம்பளைக எதுக்கும் போமாட்டாக."

"இப்பத்தான் பறையனும் பள்ளனும் எசலிப்புல பாட்டும், டான்சும் போட்டுக்கிட்டு கூத்தடிக்கிறானுகள்ள."

"அவுக தெருவுல பொங்கச் சாட்டும்போது அடிக்கிற மேளத்தக் கேட்டுருக்கியா? ரவைக்கு அதக் கேட்டீனா பயம்மா கெடக்கும்."

"அதான் சாமி கொட்டு. அது எப்பிடி கேக்குந் தெரியுமா? தவ்... விவ்விவ்விவ்விவ்விவ்வி....... டகுண்ட டகுண்ட..... டகுண்ட குண்ட. இப்படியே கேக்குமா, செல அக்குருமம் புருச்ச பெயல்க டகுண்டகுண்டனு கேக்கயில பதுலுக்கு ஒக்காவுண்டென சொல்லிக் கிட்டே ஆடுவானுக."

இப்பிடி மாறி மாறி பேசிக்கிட்டு இருந்ததக் கேட்ட ரெசுனா சொன்னா, "உயிர்த்த பண்டியலுன்னு ஆரம்புச்சு எங்க கொண்டு போயி பேச்ச நிப்பாட்டுறாளுகன்னு பாரு. அவுக எப்பிடியும் கொட்டடுச்சு எப்பிடியும் கொண்டாடிட்டுப் போகட்டுமே. நம்ம உயிர்த்த பண்டியல என்னன்னு கொண்டாடினிகன்னு சொல்லு தாயே."

"அங்க தானே ஆரம்புச்சேன். அதுக்குள்ள பேச்ச இப்பிடி மாத்தி உட்டுட்டாளுக. அதான் கும்மி அடுச்சு முடுஞ்சதும் சாமியார் வந்து செவஞ்சொல்லி, சப்பரத்துகள மந்துருச்சு சப்பரம் சுற்றுப் பிரகாரத்தத் தொடங்கி வப்பாரு. மொதல்ல உயிர்த்த ஆண்டவரு சப்பரம் போக, பின்னாலியே தொணச் சப்பரமா மாதா சப்பரம் போகும். கோயில்ல ஆரம்புச்சு நாடாக்கமாரு தெருவு, தேவமாரு தெருவு, ஆசாரிமாரு தெரு, பசாரு வழியா வந்து பன்னாடிமாரு, பள்ளரு தெரு வழியாப் போயி கடேசில பறையர் தெருவுக்கு வந்து சப்பரத்தச் சாவடில எறக்கி வைக்கயில பலபலன்னு விடுஞ்சு போகும். விடிய விடியச் சப்பரச் சுற்றுப் பிரகாரம் இருக்கும். வரும் போது ஜெபமால சொல்லிக்கிட்டு, சேசு பாட்டு, மாதா பாட்டு படுச்சுக்கிட்டே வருவோம். மித்த சாதிக்காருகள்ளாம் இந்துக்களா இருந்தாக்கூட சப்பரத்துக்கு மால வாங்கிப் போட்டு, மெழுகுத்திரி கொழுத்தி வச்சு, உப்பு, பொறிகடல மௌகு வாங்கிப் போடுவாக. வயக்காடு வச்சுருக்குறவுக மரக்காகணக்குல நெல் அளந்து வந்து சாமிக்குப் போடுவாக. இப்பிடி வருசா வருசம் உயிர்த்த பண்டிய லுக்குச் சேருர நெல்லு மட்டுமே பத்து இருவது மூட்டை வந்துரும். பெறகு அத வித்து, பணத்த ஊர்த்துட்டோடெ சேப்பாக."

இவுக பேசி முடிக்கிறதுக்கும், மரியநாதன் சொற்பொழிவு பேசி முடிக்கிறதுக்கும் சரியா இருந்துச்சு. "ஏதோ ரெண்டு டான்சு கீன்சு ஆடுவானுகளா... பெரிய பெரசங்கம் வைக்கானுக," ரஞ்சிதம்மா சலிப்பாச் சொன்னா.

"ஒனக்குப் பொழுதனிக்குமா டான்சு போடுவாக. வேற வெசயங்களையும் கேக்க வேண்டாமாக்கும்! இந்தா அடுத்து மாறுவேடப் போட்டியாம். பாரு சிரிப்பா இருக்கும்!"

அம்பேத்காரு வேசம், ரெட்டமல சீனிவாசன் வேசம், பெரியார் வேசம் போட்டுட்டு வந்து அவுகள மாதிரி பேசுனாங்க. செலபேரு பைத்தியம்மாதிரி, நரிக் கொறவர்க மாதிரியும் வந்தாக. எல்லாரும் வகுறு வலிக்கச் சிருச்சிகிட்டு எந்துருச்சுப் போனாக. அதோடெ அன்னைக்கு நிகழ்ச்சி நல்லபடியா முடுஞ்சது.

பறையர் தெருவுல கலைக்குழு ஆரம்பிச்சு டான்சு கீன்சு ஆடிட்டு கெடக்கவும், பள்ளர் தெருவுலயும் கலை நிகழ்ச்சிகள் நடத்த ஆரம்புச் சுட்டாக. பொங்கலுக்கு, வருசப் பெறப்புக்கு, ஊர்த் திருநாளுக்கு மைக்செட் வச்சு விடிய விடிய பேசிக்கிட்டு, பாட்டுப் படுச்சுக்கிட்டு இருப்பாக. இதுலயே ரெண்டு தெருக்காரருகளுக்கும் போட்டியும் பொறாமையும் வளந்துச்சு, பறையர்க அம்பேத்காரப் பத்திப் பாட்டு போட்டா, இவனுக நம்ம இம்மானுவேல் பாட்டு

போடுவோம் டான்னு சொல்லிக்கிட்டு மாறி மாறிப் போடுவாக. அம்பேத்கார் என்ன பறையரா? இல்லியே. இவனுக பறையர ஒதுக்குறம்னு சொல்லிக்கிட்டு அம்பேத்காரவுலடா ஒதுக்குறா கன்னு செல பெயலுக பேசிக் கிட்டாக.

அவனுக என்னமுஞ் செஞ்சுட்டுப் போகட்டும். உடுங்கடா. நம்ம பாட்டுக்கு நம்ம நடத்துவோம். அவுக பாட்டுக்கு அவுக நடத்தட்டும்னு செல பேரு சொல்லிக்கிட்டாக.

இப்பிடியே வருசா வருசம் ரெண்டு திக்கமும் போட்டிப்புல கலை நிகழ்ச்சிகள் நடந்துச்சு. பெரியாளுக பூராம் இதுனால என்னமும் பெரச்சன வந்துருமோன்னு கலைப்பட்டுக்கிட்டு இருந்தாக. அதுனால அப்பப்ப பெயல்கள அரட்டி உட்டுக்கிட்டே இருந்தாக.

பள்ளர் தெருவுலருந்து வெளியூர்ல போய் படுச்சுட்டு இல்லன்னா வேலை பாத்துட்டு ஊருக்கு வர்ற பெயல்க, தெருவுக் குள்ள வந்து புதுப்புது விசயங்கள்ளாம் சொன்னாக "எங்க பாத்தாலும் பறையர்களோடெ ஆட்டத்தத்தான் தலித் கலைன்னு சொல்லி நடத்துறாக. நம்ம ஆட்டங்கள நடத்துரதில்ல... தலித்து கன்னா அவுகதா... நம்மெல்லாம் தலித்துக இல்ல. அவுகளவிட ஒசந்தவுக." இப்பிடி ஒருத்தன் வந்து சொல்லவும், பள்ளர்களுக்கு உற்சாகம் கொப்புளுச்சுச்சு.

ஒரு வருசம் இம்மானுவேல் சேகரனப் பத்தி ரொம்ப அருமையா வில்லுப்பாட்டு படுச்சு ரொம்பப் பெருகளமா ஊர்த் திருவிழா கொண்டாடுனாக. பறையர்களும் பதுலுக்கு இரட்டை மலை சீனிவாசனைப் பத்தி கலைநிகழ்ச்சி நடத்துனாக. இதுனால, பறையர், பள்ளர்களுக்கு அவுகளுக்காக பாடுபட்ட தலைவர்களப் பத்திய விசயங்கள்ளாம் தெரிய வந்துச்சு. தெருவுகளுக்குள்ள ஒரு புத்துணர்ச்சி, விழிப்புணர்வு உண்டாச்சு. ஆனா ரெண்டு சாதிக் குள்ளயும் போட்டியும், பொறாமையும், பகைமையும் அதிகமா கிட்டே போச்சு. ரெண்டு தெருவுக்குள்ளயும் எளந்தாரிப் பெயல் கதா, வயசு முருக்குல திமிறிக் கிட்டு திருஞ்சாக. அதுக்கேத்த மாதிரி ரெண்டு தெருப் பொம்பளைகளும் சாடமாடையாய் பேசிக்கிட்டு, வஞ்சுக்கிட்டுத் திருஞ்சாளுக. மொத்தத் துல ரெண்டு திக்கத்துலயும் புது வகையான கலகலப்போடெ கலவரத்துக்கான பயமும் இருந்துச்சு.

# ஐந்து

அந்தோணிப் பெய கூச்ச நாச்சமே இல்லாதவன். கெழடு கட்டைக, கொமரி குட்டச்சிக, சின்னஞ் சிறுசுக எல்லாத்துட்டயும் சகட்டு மேனிக்கா கிண்டலடுச்சு வெளாடுவான். சின்னப் பிள்ளை களத் தெருவுல பாத்துட்டாம்னா போதும். அது யாரு புள்ள எவரு புள்ளன்னு பாக்க மாட்டான். தூக்கி வச்சுக்கிட்டுத் திரிவான். துட்டு பைல இருந்தா, கடைக்குக் கொண்டு போயி பிஸ்கத்து எதுனாலும் வாங்கிக் குடுத்து, அவுகம்மயிட்ட கொண்டு போயி உடுவான். எல்லா ருக்கும் பொதுவா உதவி செய்வான். அதுலயும் கொமரிப் புள்ளை களுக்குனா ரொம்பா உற்சாகமாச் செய்வான். பாக்குரதுக்கு அம்புட்டு எடுப்பா இல்லன்னாலும், அவனுக்கு என்னமோ, அவனக் கணக்கா அழகேந்திரன் இந்த ஊருக்குள்ள வேற எவனுங் கெடையாதுன்னு நெனைச்சுக்கிட்டு இருந்தான். ஒரு நேரம் பாத்தா, தாடி வப்பான். மறு நேரம் பாத்தா வள்ளுசா வழுச்சு மொழுக்குனு இருப்பான். வடக்குத் தெருவுல இருக்குற எஸ்தர்ங்ற பிள்ள மேல இவனுக்கு ஒரு கண்ணுன்னு ஊர்ல பெரஸ்தாபம். இவங்கிட்ட கேட்டா கள்ளச் சிரிப்புச் சிரிப்பான். இவுகம்மெ தெரசம்மாளக் கேட்டா, சீ.... அதெல்லாங் கெடையாதுன்னு இல்லாத சாமி யெல்லாங் கூப்ட்டு சத்தியஞ் செய்வா.

அந்தோணி வீட்ல மொத்தம் ஏழு பிள்ளைக. மூத்தது அவுகக்கா பாத்திமா. ரெண்டாவதுதான் இவென். இவனுக்கடுத்து மூணு தம்பி களும், ரெண்டு தங்கச்சிகளும் இருக்காக. அவுகய்யா ரெண்டு வருசத்துக்கு முன்னாலதான் டி.பி. நோயில செத்துப் போனாரு. அவுகம்மெயும், அக்காவுந்தான் வேல செஞ்சு இத்தன பேத்துக்கும் அரவகுத்து கொற வகுத்துக் கஞ்சியாவது ஊத்துறாக. இம்புட்டுக் கஸ்டத்துலயும் அந்தோணிய காலேஜ்க்கு அனுப்பிப் படிக்க வைக்காக.

அவுகய்யா இருந்த வரைக்கும் அந்தோணியும் படுஜாலியாத் தான் இருந்தான். எப்பிடியாவது இவனப் படிக்க வச்சு பெரியாளா ஆக்கனும்னு அவுகய்யாவுக்கு அம்புட்டு ஆச. அதுனால இவனுக் குன்னா துட்டத் துட்டுனு பாக்காமெ செலவழிப்பாரு. அவரு

செத்தப் பெறகுங்கூட, மத்த பிள்ளைகளுக்கு இருக்கோ இல்லயோ, இவனுக்குச் சாப்பாடோ துணிமணியோ எதுன்னாலும் தெரசம்மா கடப்பட்டு ஒடப்பட்டுனாலும் செஞ்சுருவா. இந்தப் பெயலும் படிப்புல கெட்டிக்காரந் தான். அந்தா இந்தான்னு மூனாவது வருசத்துக்கு வந்துட்டான். எல்லாப் பாடத்துலயும் நல்ல மார்க்கு வாங்கி பாசாகிட்டான்.

தெருவுக்குள்ள ரொம்பாத் தீவிரமாச் செயல்படுவான். கண்ட மானிக்கா டான்சு ஆடுவான். ஆனா அவனப் போல சினிமாக் காரனுக கூட ஆடமுடியாதுன்னு சவால் உடுவான். அவுகக்கா தண்ணிக்கு வந்தான்னா அடிகுழாய அடிக்காதவன், வேற கொமரிக வந்தாள்கனா போதும், சாவடில இருக்குறவன் மெனக்குட்டு எந்துருச்சு வந்து கொடம் நெறய்யா அடுச்சு, தூக்கியும் உடுவான். ஊடதாடெ ஒரு செல கெழவிகளுக்கும் அடிப்பான். இல்லன்னா பெயலுக லந்து பண்ணிப் போடுவாகன்னு கெழவிகளுக்கும் அடிப்பான்.

ஆனாலும் இவனப் பத்திப் பெயல்களுக்குத் தெரியும். சாடை மாடையாச் சொல்லி உரிக்காட்டுவானுக. இவனும் வெக்கத்தோட சிருச்சுக்கிருவான். சதாகாலமும் பூமார்க் பீடிய வாய்ல வச்சுக்கிட்டுத் திரிவான். இவன நக்கலு பண்ற பொம்பளப் பிள்ளைக போம்போது வரும்போது, காலேஜ் படிக்காகளாம், இன்னமும் பூமார்க் பீடிதான் வாயில பொகைதுன்னு சொல்லிக்கிட்டு போவாளுக. இவனும் ஏதாச்சும் சொல்லிச் சிருச்சுக்கிருவான்.

பொது விசயங்கள்ள ரொம்பா ஈடுபடுவான். நாயத்துக்காக துணுஞ்சு நிப்பான். அவனோட வீட்டுக் காரியங்கள்ள தலையிடுறத விட ஊர்ப்பொதுக் காரியங்கள்ளதான் அதிகம் தலையிடுவான். வீட்டுல சரியான சாப்பாடு கெடையாது. அதுனால ஒடம்பு மெலுஞ்சு போயி, இந்த வயசுக்குத் தக்கன ஒடம்பில்லாமெ பாக்க ஒரு மாதிரியா இருப்பான். டான்சு ஆடவோ, பேசவோ கூட்டங்கள் போடவோ ரொம்பா மும்முரமா அலைவான்.

கோயிலு கொளத்துப் பக்கம் தலவச்சுக் கூடப் படுக்க மாட்டான். அதுதான் அவுகம்மைக்கு ரொம்பா வருத்தம். நாயித்துக் கெழம பூசைக்குக் கூட போமாட்டாங்கானே. இவெ என்ன படிப்பு படுச்சான்! ஆனாலும் கடவுளு இவனத் தண்டிக்காமெ பூராப் பருச்சயிலயும் பாசாக்கி உட்டுறாருன்னு பொம்பளைககிட்ட பொலம்புவா. மேலோட்டமா மகன வைறமாதிரி வஞ்சாலும், மனசுக்குள்ள மகனப் பாத்து பெருமப் பட்டுக்கிருவா. அவா மொகத்தப் பாத்தாலே இது தெரியும். அம்புட்டுக் கவலையுலயும்,

நன்றி - ஊடறு



களைப்புலயும் கூட மகனப் பத்திப் பேசும்போது, அவா மொகத்துல சந்தோசமான பிரகாசச் சிரிப்பப் பாக்கலாம். இவம் படுச்சு வேலைக்கு வந்தாத்தான் அக்கா பாத்திமாவுக்குக் கலியாணங் காச்சி முடிக்கனும்னு நம்பிக்கயில இருந்தா.

அந்தோணி காலேஜ்ல படுச்சாக்கூட அந்த பவுருத்தனம் இத்தினிக்கூட அவங்கிட்ட இருக்காது. தெருவுல சாதாரணமாத்தான் இருப்பான். சாதாரணமாத்தான் பழகுவான். இன்னஞ் சொல்லப் போனா, காலேஜ்லருந்து ஊருக்கு லீவுக்கு வரும் போதெல்லாம் எதுனாச்சும் கூலி வேலைக்குப் போவான். எந்த வேலன்னாலும் செய்வான். ஆனா இவஞ் சம்பளத்துல ஒரு நயாப் பைசாவெ வீட்டுக்குக் குடுக்கமாட்டான். அவுகம்மயிட்ட இருந்து வேண்ணா இவெ வாங்குவான். இதப்பத்தி யாராச்சும் அவங்கிட்ட கேட்டா, இப்பிடி வேல செஞ்சு கெடைக்குற துட்டுலதான் பேண்டு, சட்டை எடுக்குறேன். எங்கம்மயிட்ட நானு துணிமணி கேக்கமாட் டேன்லன்னு சொல்வான். அவெஞ் சொல்றதும் நாயந்தான்.

ஊர்ல இருக்குற அம்புட்டுப் பெயல்கட்டயும் நல்லாப் பழகு னாலும், ஜெயராச மட்டும் கிண்டல் பண்ணுவான். அவனப் பிடிக்காமெ இல்ல; ஆனா அவெ ரொம்பா மேட்டுமத்தனஞ் செய்றது தான் இவனுக்குப் பிடிக்காது. இருந்தாலும் அவங்கிட்டயும் வம்பு பண்ணிகிட்டு தமாசாப் பேசிக்கிட்டு வெளாடுவான். ஜெயராசோடெ போன் விசயம் வெளிய தெரியவும், அந்தோணி அவனப் பாக்கும் போதெல்லாம், ‘ஹலோ ஹலோ சுகம்மா’ங்ற பாட்டப் படுச்சுகிட்டுத் திரிவான். இப்ப கழனி கலைக்குழுல ஒன்னாச் சேந்து நிகழ்ச்சிகள் நடத்துரது அவனுக்கு ரொம்பாப் புடுச்சுருந்தது. அதுனால உற்சாகமா அலஞ்சான். கஞ்சி குடிக்கிற நேரந்தவுர மத்த நேரங்கள்ள வீட்டுக்கே வர்ரதில்லைன்னு அவுகம்மெ சொல்வா.

அந்தோணி காலேஜ்ல சேந்த ரெண்டாவது வருசத்துல பருச்ச முடுஞ்சு லீவுக்கு வந்துருந்தான். ஊர்ல எளவட்டங்களக் கூப்புட்டு, நம்மூருல அம்பேத்கார் செல வைக்கனும்னு தீவிரமாப் பேசுனான். இவுக பேசி முடுச்சுட்டு தெரு நாட்டாமயிட்டப் போயி வெவரத்தச் சொன்னாக.

அப்ப நாட்டாமயா இருந்தவரு கோயிந்த மகன் செவத்தி யான். எல்லாத்தயுங் கேட்டுட்டு அவரு சொன்னாரு, “ஏலைகா, செல வைக்கிறது என்ன சாமான்ய வெசயமாடா? அம்புட்டுத் துட்டுக்கு எங்கடா போறது? அங்கங்க செல வச்சுத்தான் கலகம் வந்து கெடக்குனு ரேடியாவுல சொல்றான். நீங்க ஒங்க பாட்டுக்கு

வெளாட்டுத்தனமா செல வைக்கனும்னு கேக்குறீகளே... ஒங்க படிப்பு உண்டு நீங்க உண்டுன்னு இருந்துட்டுப் போங்கடா."

அந்தோணி, செவத்தியான் பக்கத்துல போயி நல்லா ஒக்காந்துகிட்டு தெளிவாச் சொல்ல ஆரம்புச்சான். "ஏணா, துட்டுச் செலவப் பத்தி நீ யோசிக்காதெ. நாங்க நாலு லெக்குல போயி டொனேசன் வாங்கிக்கிறோம். அம்பேத்காரு செலகூட மெட்ராசுல எங்களுக்குத் தெருஞ்ச எடத்துல இருக்கு. நாங்க போயி வேனு வச்சு அத ஊருக்குக் கொண்டாந்துருவோம். நீ வந்து வெறு ஆளா மட்டும் வந்து கலந்துக்கோ . என்ன சொல்ற?"

"இதுனால பிரச்சன கிரச்சன வராதுல?"

"ஒன்னும் வராதுனா. நம்மாளுக மட்டுமா செய்யப் போறோம்? பள்ளர்களயும், சக்கிலியர்களயும் நம்மகூட சேத்துக்கிருவோம். இது நல்ல வாய்ப்புணா. நம்ம மூனு பேரும் சேந்தம்னு வையி. வெக்காளி ஊர்ல ஒரு பெய நம்மள அசைக்க முடியாது. என்ன சொல்ற?"

"சரிதாம்டா. எதுக்கும் நம்ம பங்குச் சாமியார்ட ஒரு வார்த்த கேட்டுக்கிட்டுச் செய்வோம்டா."

"போனா... போ... போயும் போயும் அவருட்டயா போயிக் கேக்கனும்ங்ற? நீ என்ன அதுக்குள்ள நடந்தத மறந்துட்டியாக்கும்?" அந்தோணி சடவாச் சொல்லிட்டு நிப்பாட்டுனான்.

கூட இருந்த ஜஸ்டின் சொன்னான், "ஆமா மாமா. போன மாசம் நாங்க ஞாயித்துக் கெழம பூச முடியவும் சாமியார் பங்களாவுக்குப் போயி பங்களா வராண்டாவுல அம்பேத்கர் படத்த வைக்கச் சொன்னோம். வைக்க முடியாதுன்னு சொல்லிட்டாரு."

"நீங்க ஏண்டா கோயிலு காரியத்துல போயி அம்பேத்கார நொழைக்கிறீக?"

"அட நீ ஒன்னு. ஏற்கனவே அவரு வராண்டாவுல காமராசரோட படம் மாட்டி வச்சிருக்காருல. அப்ப அதுமட்டும் என்னவாம்?"

"நீங்கள்ளாம் வம்புக்கின்னே அலைவீகடா. அவருக்குப் புடுச்சத அவரு மாட்டிக்கிட்டு போறாரு. நீ வேனும்னா அம்பேத்கரு படத்த ஓ வீட்ல மாட்டு. இல்லன்னா நம்ம சாவடில கூட மாட்டு."

அந்தோணி ஆத்துரமாச் சொன்னான், "அட நீ ஒருத்திக்கம் புரியாமச் சொல்லாதணா. அவரு எதுக்கு காமராசரு படத்த மாட்டி வச்சிருந்தாரு தெரியும்ல? அவரு நாடாரு. அதுக்குத்தான்."

"அப்பிடியாடா? இந்த விசயம் எனக்குத் தெரியாதே. பெறகு

என்ன செஞ்சீக?"

"நாங்க உறுதியாச் சொன்னோம். சாமி வச்சா அம்பேத்கரு படத்தயும் சேத்து வைங்க. இல்லினா காமராசரயும் எடுத்திருங்க. எப்பயும் போல நம்ம பாப்பானவர் படமும், ஆண்டவர் சாமி படமும் இருக்கட்டும். "

"அவரு என்ன செஞ்சாரு?"

"அவரு அரிதிக்கு முடியாதுன்னாரு. நாங்க காமராசர் படத்தக் கழட்டி கீழே வச்சோம். அது பெரிய பிரச்சன ஆகி, நாடாக்கமாரு தெருக்காரங்க சாமியாருக்கு சப்போட்டா வந்துட்டாக. பெறகு பிசப்பு வரைல போயி அடுத்த வருசமே அவரத் தூக்கி வேற எடத்துல போட்டாக."

"ஏலைகா ... நம்ம எதுக்கு வந்து எதப் பேசிட்டு இருக்கோம். அண்ணஞ் சரின்டாரு. சரி எந்திரிங்கடா. ஏணா மொத மொத ஒங்கை யால நன்கொட குடு. ஜஸ்டினு நீ ஒரு நோட்டுப் போட்டு எழுதிக் கோடா," அந்தோணி உற்சாகமாச் சொல்லிட்டு எந்துருச்சான்.

"அவுகய்யனங்கேன்னு இந்தப் பெய பெறந்துருக்கான். அவனும் இப்பிடித்தான். துருதுருத்த பெய. சரி இந்தாங்கடா அஞ்சு ரூவா எழுதிக் கோங்கடா," சொல்லிட்டு வெத்தலப் பைல இருந்து அஞ்சு ரூவாய எடுத்து நீட்டுனாரு.

"ஊரு நாட்டாமயே அஞ்சு ரூவா குடுத்தா எப்பிடி? உண்டனா குடுங்க மாமா."

"ஏலேய் இது என்னோட நன்கொடடா. சின்ன நாட்டாம யிட்ட, ஊர்ப் பெரியவுக கிட்ட பேசிட்டு, ஊர் சார்பா பெறகு தாரேண்டா."

"அப்பச்சரி"ன்னு சொல்லிட்டு எந்துருச்சு போயிட்டாங்க.

அந்தோணி சொன்னத செஞ்சே காட்டிட்டான். அவங்கூட பத்து பேரச் சேத்துக்கிட்டான். பள்ளர் தெருவுல போயி அவுக நாட்டாமயப் பாத்து விசயத்த விவரமாச் சொல்லிக் கேட்டான். மொதல்ல மறுத்தாலும் பெறகென்னமோ ஆயிரம் ரூவா தந்தாக. சக்கிலியர் தெருவுல போயிக் கேட்டான். நாங்களே சூசுவான்னு கெடக்கோம். இதுல வேற சேந்துட்டு நாய்க்கமாரு கோவத்துக்கு ஆளாகனுமே! எங்கள உட்ருங்கப்பான்னுட்டாக. பெறகு அவுகளுக்குத் தக்கன அவுக நூறோ எரனூரோ தந்தாக. பெறகு அவெ படுச்ச காலேஜ்ல போயி பிரண்ட்ஸ்க, காலேஜ் வாத்திமாருக, கடக்காடுகள்ளாம் சுத்திப் பெறக்கி ரெண்டே வாரத்துல நல்ல வசூல் பண்ணிட்டான். இது மட்டுமில்லாமெ, அங்கங்க தெருஞ்சவுக,

தெரியாதவுக பெரியவுக சின்னவுகன்னு முழு மூச்சா அலஞ்சு பெறக்கி பணஞ்சேத்துட்டு, நாலஞ்சு பையங்களக் கூட்டிக்கிட்டுப் போயி மெட்ராசுல இருந்து அம்பேத்கார் செலயுங் கொண்டாந்து எறக்கிட்டான்.

அந்தோணி இந்த வேலைல மும்முரமா இருக்கயில, ஜானும் மத்த பையங்களும் சேந்து பஞ்சாயத்து போர்டுல மனு எழுதிக் குடுத்து, கண்டம்பட்டி பஸ் ஸ்டாண்டுல செலய வைக்கிறதுக்கு எடமும், அனுமதியும் பிரசிடெண்டுட்ட வாங்கிட்டாக. தெக்குத் தெரு சேவியர் கூட பத்துப்பேரு சேந்து பஸ் ஸ்டாண்டுல செலய வைக்க ஒரு மேட கட்டிட்டாக. ராப்பகலா வேல செஞ்சு, செலய மேடைல வச்சு துணியக் கொண்டு மூடிட்டாக. ஏப்ரல் பதினாலாந் தேதி அம்பேத்கர் பிறந்த நாளன்னைக்குச் செலயத் தெறக்கனும்னு நெனச்சாக. ஆனா அதுக்குள்ள வேல முடியாததுனால மே மாசத்துல தான் திறப்பு விழா வச்சாக.

திறப்பு விழா அன்னைக்குப் பறையர் தெரு திருநாப்பட்ட பாடாகிப் போச்சு. சாவடிக்கு முன்னால ஆம்பள பொம்பள அம்புட்டுப் பேரும் கூடி பறையடுச்சுக்கிட்டே பசாரச் சுத்திக்கிட்டு ஊர்வலமா பஸ் ஸ்டாண்டுக்குப் போனாக. பறைச் சத்தங் கேக்கக் கேக்க அம்புட்டுப் பேத்துக்கும் உற்சாகமாயிருச்சு. சின்னஞ்சிறுசுக, எளவட்டங்க, கெழவங்ககூட ஆட்டத்துல கூடிட்டாக. அவுகளப் பாக்குற அம்புட்டுப் பேத்துக்கும் ஆடனும் போல வந்துச்சு. அந்தோணிதான் முன்னால ஆடிக்கிட்டே போனான். பஸ் ஸ்டாண்டுக்கு வரவும், எளவட்டங்க எல்லாரையும் மேடைக்கு முன்னால அமைதியா ஒக்கார வச்சாக. மேடைல பறையர், பள்ளர் தெரு நாட்டாமைக, சில தெறப்பாளரு, பேச்சாளருக எல்லாரும் இருந்தாக. சக்கிலியர் தெரு நாட்டாமெ, நாய்க்கமார்க எதுனாச்சும் சொல்லுவாகனுட்டு மேடைக்கு வரமாட்டேனுட்டாக.

மேடைக்கு முன்னால எக்கச்சக்கமான கூட்டம். பொம் பளைகதான் ரொம்பா வந்துருந்தாக, பள்ளரும், பறையரும் ரொம்பாச் சந்தோசமா ஒக்காந்து, பேசுறத உன்னிப்பாக் கேட்டாக. அம்பேத்காரு செலயத் தெறக்கவும் எல்லாருங் கைதட்ட, பொம்பளைக சத்தமா கொலவ போட்டாக. அந்தக் கொலவச் சத்தத்தக் கேக்கயில ஒடம்பே புல்லரிச்சுப் போச்சு.

ஒவ்வொருத்தராப் பேசி முடிக்க நடுச்சாமம் ஆகிப்போச்சு. எல்லாத்தயும் வீடியோ எடுக்க அந்தோணி ஏற்பாடு செஞ்சுருந்தான். செலயத் தெறக்கும்போது அந்தோணி சந்தோசத்துல அழுதுட்டான். அம்புட்டு எளவட்டப் பையங்களுக்கும் புதுத் தெம்பா இருந்துச்சு.

பறையர் தெரு நாட்டாமெ பேசும் போது, "இந்தப் படுச்ச பெயலுகள்ளாம் மொதல்ல ஏங்கிட்ட வந்து ஐயாவோடெ செலய வைக்கனும்னு சொன்னாக. எனக்குப் பயமாத்தான் இருந்துச்சு. எதுக்குன்னா இந்த வெடலப் பெயலுகள நம்பலாமா நம்பக் கூடாதுன்னுதான். ஆனா, இவனுகளுக்கு எம்புட்டு வெவரம் இருக்கு, எம்புட்டு அறிவு இருக்கு, எம்புட்டு ஒணர்வு இருக்குன்னு இப்ப நானு புருஞ்சுக்கிட்டேன்; இந்த ஊரே புருஞ்சிருச்சு. ரொம்பா வீரியமும், சாதுரியமும் உள்ள இவுகள நானு ரொம்பாப் பாராட்டுறேன்."

பள்ளர் தெரு நாட்டாமயும் பேசுனாரு, "எங்ககிட்ட டொனேசன் கேட்டு வரயில, எங்களுக்கும் தயக்கமாத்தான் இருந்துச்சு. படிக்கிற பையங்கள நம்பி குடுக்கவா வேண்டாமான்னு கொழப்பமாத்தான் இருந்துச்சு. ஆனா இன்னைக்கு நாலு சாதி சனம் கூடுற இந்த எடத்துல, டாக்டர் ஐயா அம்பேத்காரு செலய கம்பீரமா நிக்க வச்சுட்ட இவுகள நெனைக்கயில ரொம்பாப் பெருமையா இருக்குது. நெனச்சத செஞ்சு காட்டிட்டாக. இது பெரிய சாதனதான். வாழ்க அம்பேத்கர்" சொல்லிட்டு ஒக்காந்தாரு.

நிகழ்ச்சிகளத் தொகுத்து சொல்லிக்கிட்டு இருந்த ராசேந்திரன், "இறுதியாக, இச்சிலைத் திறப்புக்கு முழுவதும் காரணமாக இருந்து, இதற்காக ஆரம்பத்திலிருந்து இறுதிவரை சளைக்காமல் பணியாற்றிய திரு. அந்தோணி பேசுவார்கள்"னு சொன்னான். எல்லாரும் கைதட்ட, அந்தோணி மேடைக்கு வந்து மைக்கு முன்னால நின்னான். எல்லா ருக்கும் வணக்கஞ் சொல்லிட்டு சுருக்கமாப் பேசுனான்.

"கற்பி! ஒன்றுபடு! போராடு! - இதுதான் அண்ணல் அம்பேத்கரின் தாரக மந்திரம். நாம் அனைவரும் கல்வி அறிவு பெற வேண்டும். சமூக அறிவு பெற வேண்டும். சமுதாயத்தில் நாம் எவ்வாறு ஓரங்கட்டப்பட்டு ஒடுக்கப்படுகிறோம் என்பதை உணர வேண்டும். உணர்ந்தபின் ஒன்றுபட்டு நாம் போராட வேண்டும். போராட்டத்திற்கு நாம் அஞ்சக்கூடாது. ஏனென்றால் நாம் ஆடு களல்ல; சிங்கங்கள். ஆடுகளைத் தானே பலியிடுவார்கள். எனவே நாம் துணிந்து நிற்போம். நீதியை நிலைநாட்ட ஒன்றிணைந்து போராடுவோம். கிழக்கு நோக்கித் தனது கையை உயர்த்திக் காட்டியபடி நிற்கும் மாமேதையின் சிலை, நமக்குச் சொல்வது என்ன? விடியலை நோக்கி புறப்படு. அமைதியாய் இராதே! நீ ஆளப் பிறந்தவன்! மனிதனாக வாழப் பிறந்தவன் என்று கூறுகிறது. புரட்சியாளர் அம்பேத்கர் பாதையில் நாம் செல்வோம். புது உலகம்

செய்வோம். சாதியற்ற சமத்துவ சமுதாயத்தைப் படைப்போம். அதற்கு இன்றே இந்தக் கணமே சபதம் எடுப்போம். ஜெய்பீம்."

மொதல்ல மெதுவா ஆரம்புச்சவன் போகப் போகச் சத்தத்தக் கூட்டிகிட்டே வந்து முடிக்கும்போது ஆவேசமாக் கத்தி முடுச்சான் அந்தோணி. அம்புட்டுப் பேத்துக்கும் அதே ஆவேசம் வந்தது கெணக்கா ஊரே அதுரும்படி கைதட்டுனாக. அந்தோணிக்கு மட்டு மில்ல. எல்லாத்துக்குமே இது ஒரு புது அனுபவமா இருந்துச்சு. அந்தோணி ஏதோ வெளாட்டுப்பெய, கேனப் பெயன்னு நெனச்சவு கள்ளாம், அவெம் பேச்சக் கேட்டு மலச்சுப் போனாக. அவெ வெகடமாவும் பேசுவான்; வெனயமாவும் பேசுவான்னு அன் னைக்குத் தெருஞ்சுக்கிட்டாக.

பள்ளர்களுக்கு, போகப் போக இந்த அம்பேத்கர் செல வச்சது அம்புட்டுச் சந்தோசமா இல்ல. டொனேசன் குடுத்தத வச்சு அவுகளுக்குள்ளயே அடிக்கடி தகராறு வந்துக்கிட்டே இருந்துச்சு. இம்மானு வேல் செல வைக்கிறத உட்டுட்டு இவனுக கேட்டா கன்னு ரூவாயெக் குடுத்துருக்கக் கூடாதுன்னு ஆளாளுக்குப் பேசுனாக.

இதுக்கேத்த மாதிரி நாய்க்கருமாருக இவேற பள்ளர்களத் தூண்டி உட்டாக. "அவனுக சக்கிலியப் பெயல்கள்ளாம் சும்மா கெடக்க யில, நீங்க மட்டும் ஏண்டா பறப்பெயல்களோடெ சேந்துகிட்டு சாதி ஒழியனும் அது இதுன்னு வெவரமில்லாம பேசிக்கிட்டுத் திரிறீக. அடுத்த வேள கஞ்சிக்கு லாட்டரி அடிக்கிற பெயல்க, பெருசா அம்பேத்கார் செல வைக்கானுகளாம். என்னமோ நாலெழுத்து படுச்சுப் போட்டம்னு இம்புட்டு நட்னத்தஞ் செய்றானுக."

பள்ளர்களுக்கும், பறையர்களோடெ செல வைக்கிறதுல சேந்ததுபத்தி இத்தினிக்கூடப் பிடிக்கல. இதுக்குப் பதுலுக்குப் பதுலா நம்மளும் எதுனாச்சும் செய்யனும்னு மும்முரமா இருந்தாக.

# ஆறு

லோகநாதன் நாய்க்கரு, பெருமாள்ட கேட்டாரு, "என்னடா, அந்தக் கூத்தாடிப் பெயலுக விடிய விடியக் கூத்தடுச்சுக்கிட்டு கெடந்தானுக போல."

"அந்தக் கூத்தெ ஏங்கேக்குறிய ஐயா. சம்பந்தம் உட்ட கெழவிக கூட இத்தினிக்கூட கூச்சமில்லாமெ அம்புட்டுப் பேருக்கும் முன்னால கும்மியடுச்சுக் கும்மாளம் போடுறாளுக. கண்றாவி," பெருமாள் சொன்னான்.

"எங்களுக்கு இங்கயே தூங்க முடியல. ராத்திரி நேரத்துல மைக்குல காட்டுத்தனமாக் கத்துனானுக. நீயி அவனுகளுக்குப் பக்கத்துத் தெருவுல எப்பிடித் தூங்கினீக?"

"ரொம்பாக் கஸ்டந்தான்யா. ஆனா என்ன செய்ய. அவனுக கிட்டெ நம்ம சொல்ல முடியாது. கோமணத்துல துட்டு இருந்தா கோழி கூப்ட பாட்டு படிப்பாம்னு சொன்னது இந்தப் பறையனு களுக்குத்தான் பொருந்தும்."

"ஏண்டா அவனுகளுக்குச் சொல்ல முடியாது? அவனுக என்ன பெரிய மயிருக. என்ன இருந்தாலும் ஒங்க சாதிய விட அவனுக மட்டந்தானடா. நீங்க துணுஞ்சு எறங்குனீகன்னா, அவந் தன்னால அடங்கிப் போயிருவான். கொஞ்சம் துட்டப் பாக்கவும் கொளுப்பு ஏறிப் போச்சு அவனுகளுக்கு. தலகாலு தெரியாமத் துள்ளுறானுக. அவனுகள இப்பிடியே உட்டம்னு வையி. ஒங்களுக்கும் நல்லதில்ல; எங்களுக்கும் நல்லதில்ல."

"ஒரு செகண்டுல அவனுகள அடக்கிப் போடலாம் எசமான். ஆனா என்னன்னா அவனுக வேதத்துல இருக்குறதுனால, நல்லா சப்போர்ட்டு கெடைக்குது. அதுவுமில்லாமெ ரொம்பாப் பெயலுக படுச்சுட்டானுக."

"என்னடா பெரிய வெங்காயப் படிப்பு படுச்சுட்டானுக?"

"ஐயய்யோ அப்பிடிச் சொல்லாதீக. அவுக தெருவுலருந்து டீச்சருக, டாக்டருக, வக்கீலுக, காலேசு வாத்தியாருக அப்பிடி இப்பிடின்னு நெறய்யாப் படுச்சுட்டாக. அதானெ இப்ப நம்மகிட்ட

வேல வெட்டிக்குன்னு வர மாட்டேங்கானுக."

"அப்ப இப்பிடிய உட்டீகன்னா கண்டம்பட்டியவே வித்து ஒலைல போட்டுருவானுக. நீங்க முந்திக்கிட்டு ஏதாச்சும் செஞ்சாத் தான். ஒங்க தெரு ஆளுககிட்ட கூடிப் பேசிப்பாரு."

லோகநாதன் நாய்க்கரோட கொய்யாத் தோப்புலதான் இம் புட்டுப் பேச்சும் நடந்துச்சு. பெருமாளு தோப்புக்குக் காவலு இருந்தாரு. பக்கத்துல புல்லுப் பெறக்கிட்டு இருந்த சின்னம்மா இதக் கேட்டுக் கிட்டா. "பொறாம புடுச்ச பெயலுக. அந்த நாய்க்கம்ங்றவந்தான் குத்திக் குடுத்தாம்னா, இந்தப் பள்ளனும் சேந்துக்கிட்டு ஆடுறான்," நெனச்சுக் கிட்டே புல்லக் கட்டிக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டா. வந்து தெருவுல பொம்பளைக ஆம்பளைக எல்லாத்துட்டயும் ஒரு மூச்சுச் சொல்லிக் கிட்டுத் திருஞ்சா.

"பறையனுகளப் பத்திக் காடுகரையெல்லாம் ஒரே ஆவலாதி. நாய்க்கருமாருக பள்ளனுகளத் தூண்டிவிட்டு பறையன அடிக்க னும்னு கங்கணங் கட்டிக்கிட்டு இருக்கானுக."

"ஆமா, ஊரு ரெண்டுபட்டா கூத்தாடிக்குக் கொண்டாட் டம்னு சும்மாயா சொன்னாக. இந்தப் பள்ளனுகளும், பறையனு களும் கண்டறிஞ்சு ஒத்துமையா இருக்குறத உட்டுட்டு ஒருத்தனுக் கொருத்தன் வில்லும் விசையுமா நிக்கானுக. மத்த சாதிக்காரனுக இதப் பாத்துட்டு ரொம்பாக் குதூகலமாத்தான் இருக்காக."

"மத்த ஊருகள்ள எல்லாம் நல்லா அண்ணன் தம்பியாத்தான் பள்ளனும் பறையனும் இருக்காகளாம். இந்த ஊருக்குள்ளதான் இப்பிடி... என்ன பாவஞ் செஞ்சமோ ஒன்னுக்குள்ள ஒன்னு நாறிப் போயிக் கெடக்கு."

"அப்பிடி என்ன நடக்காதது நடந்து போச்சு?"

"அடப் பாதகத்தி மகளே, ஒனக்கொன்னுந் தெரியாதா? வடக்கெ அந்தய்யா சீனுவாசங் கெணத்துல குளிக்கக் கூடாதுன்னு அந்தண்ணெ பச்சமல நம்ம பெயலுகள வெரட்டுறாரு. ஒரு நாளு எட்டாங்கௌாசு படிக்கிற நம்ம தெருப் பெயல அடுச்சே போட்டாருல?"

"ஆமா சொல்லிக்கிட்டாக. இப்ப என்னமோ தெக்க கொய்யாத் தோப்புல எவனையோ கை வச்சுட்டானுகளாமுலெ."

மாறி மாறித் தெருவுக்குள்ள இதே பேச்சாக் கெடந்துச்சு. எந்த நேரத்துலயும் ஊருக்குள்ள கலகம் வரலாம்னு பேசிக்கிட்டாக. ஆளாளுக்குத் தெருஞ்ச00து தெரியாதது எல்லாத்தயும் இட்டுக்கட்டி கண்டமானிக்குப் பேசிக்கிட்டு இருந்தாக. இது இப்பிடி இருக்க,

ராத்திரில நாடகம் போடயில சாதிய வச்சு எதுவும் போடக் கூடாதுன்னு ஊருக்குள்ள பெரியாளுக சொன்னாக. பல சாதி ஆளுகளும் நம்ம பேசுரதக் கேட்டுக்கிட்டு இருக்கானுக. ஒரு வாத்த மெல்லும்; ஒரு வாத்த கொல்லும். அதுனால இந்த நாடகச் சமாச் சாரத்தயே நிப்பாட்டிட்டாக் கூட தேவலன்னு பெரியாளுக சொன்னாக.

ஆனா எளவட்டப் பெயலுக பூராம் இன்னும் முஸ்தீபா எறங்கு னானுக. வெக்காளிக அவனுகளுக்குப் பயந்துகிட்டு நம்ம எதுக்கு கலை நிகழ்ச்சிகள ரத்து செய்யனும்? தொயந்து போட்டே தீருவோம்னு மும்முரமா இருந்தானுக.

மறுநாளு கலைநிகழ்ச்சிகள் வழக்கமா நடந்துகிட்டு இருக்கயில கம்மாப் பக்கமிருந்து ஒரு கல்லு வந்து கூட்டத்துல உழுந்துச்சு. ஒடனே அங்ன இருந்த பொம்பளைக மேற்க இருந்து பள்ளனுக கல்லக் கொண்டி எறிறானுகடான்னு கத்தவும் அம்புட்டுப் பேரும் அலறி அடுச்சுக்கிட்டு எந்துருச்சு கெழக்காம ஓடுனாக. பொம்பளைக ஓடயில தங்களோட பிள்ளைக பேரச் சொல்லிக் கத்திக் கத்திக் கூப்புட்டுக்கிட்டு கூப்பாடு போட்டுக் கிட்டு போகவும் ஒரே ரகளையாப் போச்சு. ஆம்பளைக அந்த எடத்துலயே இருந்தாக. பொம்பளைகள்ள கொஞ்சப் பேரும் துணிச்சலா அங்ன குள்ளேயே இருந்தாக.

வெள்ளத்தாயி கையில ரெண்டு கல்ல எடுத்து வச்சுக்கிட்டு மேற்காமெ இருட்டப் பாத்துக் கத்துனா, "ஏ பயந்தாங்கொள்ளிப் பெயலுகா, இருட்டுக்குள்ள இருந்துக்கிட்டு கல்லத் தூக்கிப் போடுறது பெரிய வீரமாக்கும்? நீயி மீசை வச்ச ஆம்பளன்னா நேருக்கு நேரா வாடா. செத்த படுவாய்கா."

ஒடனே பக்கத்துல இருந்தவுக அவள அடக்குனாக "சும்மா கெடத்தா. ராத்திரி நேரத்துல ஒம்பாட்டுக்கு கத்துற! பறையனும் பள்ளனும் சண்ட போட்டுக்கிட்டு கெடந்தா நல்லவா இருக்கு! பல சாதிக்காரனும் பாத்துச் சிரிக்க மாட்டானுக?"

"அந்த அறிவு அவனுகளுக்கு எங்க இருக்கு? பலசாதிக்காரம் பேச்சக் கேட்டுக்கிட்டுத்தானெ இவனுக துள்ளுறானுக?"

"துள்ளட்டும் துள்ளட்டும். நம்ம வம்புச் சண்டைக்குப் போக வேணாம். ஆனா சண்டன்னு வந்துருச்சுன்னா உடமாட்டோம். நம்மளா அவனுகளான்னு பாத்துருவோம்."

ஆளாளுக்குப் பேசிட்டு படுக்கப் போயிட்டாக. கலை நிகழ்ச்சி களும் பாதிலயே நின்னு போச்சு. அன்னைக்கு ராத்திரி கழனிக் கலைக்குழு பையங்க மட்டும் ரொம்பா நேரமாத் தூங்கல.

சாவடியிலயே ஒக்காந்து விடிய விடியப் பேசிக்கிட்டு இருந்தாக.

மறுநாளு கலைநிகழ்ச்சிகள் வழக்கமா நடந்துக்கிட்டு இருந்துச்சு. சாதியை வளப்பது சமூகமா? குடும்பமான்னு காரசாரமா பட்டிமன்றம் நடத்திக்கிட்டு இருந்தாக. பொம்பளப் பிள்ளைகளும் பயப்படாமெ நல்லாப் பேசுனாளுக.

"நீங்க இங்க மைக் போட்டு சும்மா பேசிக்கிட்டு இருங்கடியா. அங்க நம்ம பெயலுகள கூசாமெக் கூசாமெ அடுச்சு நாசம் பண்ணிக் கிட்டு இருக்கானுக," பாக்கியம் மகெ ஜோசப்பு கத்துனாரு.

ஜெயராசு மைக்குல எல்லாரையும் அமைதியா இருக்கச் சொல்லி பொழுதனிக்கும் கத்திக் கத்திப் பாத்தான். ஆனாக் கூட்டத்துல ஒரே சலசலப்பு. ஜோசப்பு எப்பயும் தண்ணி போட்டுக் கிட்டே திரிவாரு. தண்ணி போட்டுட்டா ஒரே தத்துவமாப் பேசுவாரு. தண்ணில இல்லன்னா சூசுவான்னு கெடப்பாரு.

இப்ப அவரு கத்திக்கிட்டே இருக்கவும் சாமிநாதன் அவரு பக்கத்துக்கு வந்து அமைதியாச் சொன்னான், "சித்தப்பா, கலை நிகழ்ச்சிகள் நடக்குதுல்ல. கொஞ்சம் சத்தம் போடாமெ இருங்க. மத்தவுகளுக்குக் கேக்கனும்ல. இப்பிடிக் கத்துனா எப்பிடித் தொயந்து நடத்த முடியும். செத்த நேரம் அமைதியா இருங்க சித்தப்பா."

அவரு கேக்கல, "போங்கடா ஒங்க கலைநிகழ்ச்சியும் நீங்களும். ஓலப்பாயில நாயி மோண்டது கெணக்கா நீங்க லெச்சரு பண்ணுங்க. அங்க அவனுக அப்பப்ப நம்ம பெயலுக மேல கைய வச்சுட்டு இருக்கானுக."

"இந்த மச்சான் குடுச்சுப் போட்டு வீட்ல கெடந்தா என்ன? இங்க வந்து சலம்பல் பண்ணிக்கிட்டு. துண்ட விருச்சுப் பேசாமத் தூங்கு." மங்களம் சொன்னா.

ஜோசப்புக்கு ஆத்துரம் தலைக்கேறிப் போச்சு. இன்னஞ் சத்த மாக் கத்துனாரு, "அது எவாத்தா? நானு குடுச்சுப் போட்டு என்ன அக்குறும் பாத்தா செய்றேன்? இன்னைக்குத் தெக்க கொய்யாத் தோப்புல என்ன நடந்துச்சுனு தெரியுமாத்தா? இன்னைக்குன்னு இல்ல, இது நாலாவது டிரிப்பு. நம்ம பெயலுக அவனுககிட்ட அடிவாங்கிக்கிட்டு வாரது. அதப் பத்தி ஒரு வெங்காயத்துக்கும் கவல இல்ல. அவெ நாட்டாமெ எங்க இருக்கான்? கூப்புடுங்க."

"ஏணா, இந்த நிகழ்ச்சிக முடியட்டும்னுதான் நானு இருக்கேன். முடியவும் அதப் பத்தி பேசுவோம். எங்களுக்கு மட்டும் அக்கர இல்லியா என்ன? செத்தப் பொறுண்ணா, முடியவும்

பேசுவோம்," நாட்டாமெ சொன்னாரு.

"பேசுவீரா...அப்பச் சரி... அப்பச் சரி நானு நெதானமாத் தான் இருக்கேன். எல்லாத்தயும் பேசனும் ஆமா... இனியும் நாம சும்மா இருக்கக் கூடாது. இருந்தா அம்புட்டுத்தான். ஆபத்து ... ஆமா நா சொல்றேன்.... நாங் குடுச்சுப் போட்டுச் சொன்னாலும் நாஞ் சொல்றது சத்தியவாக்கு. தெருஞ்சதடா... ஆமா," இஷ்டம்போல வாய்க்கு வந்ததெல்லாம் பொலம்பித் தீத்தாரு. ஒரு வழியா கலை நிகழ்ச்சிகள் முடியவும் நாட்டாமெ சொன்னதுபடி ஜெயராசு அறிவிப்பு செஞ்சான்.

"இத்துடன் இன்றைய கலைநிகழ்ச்சிகள் முடிவடைந்தன. நாளை வழக்கம்போல கலைநகிழ்ச்சிகள் நடைபெறும். இப்போது சாவடிக்கு முன்னால் ஊர்க்கூட்டம் நடக்க இருப்பதால் பெண்கள் அமைதியாக வீடுகளுக்குச் செல்லும்படி கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள். ஆண்கள் அனைவரும் அப்படியே அமரவும்."

ஜெயராசு சொன்னது கெணக்கா பொம்பளைக பூராம் எந்துருச்சு, பிள்ள குட்டிகளக் கூப்புட்டுக்கிட்டுக் கௌம்புனாக. போம்போதே செல்வராணி சொன்னா, "பெரிய சீர்திருத்தவாதின்னு பீத்திக்கிரானுக. ஊர்க்கூட்டம்னு வந்துட்டா பொம்பளைகளப் போச் சொல்லிரானுக. இதென்ன நாயமாம்?"

"அதானெ. அவனுககிட்ட நேருக்கு நேராக் கேக்கனும்தா."

"பொம்பளைகள ஊர்க் கூட்டத்தல விட்டா ரொம்பா ஒப்பரவாத் தான் இருக்கும். இங்ன பேசுரத ஒன்னுக்கு ஒம்பதுன்னு சொல்லி ஊரு ஒலகமெல்லாம் பரப்பி உட்டு நெத்தம் ஒரு சண்டைய இழுத்துருரு வாளுக."

"அதெவாடி சொல்றது? நீ வேணும்னா அப்பிடி இருப்ப! அப்பிடி வாயடக்கம் இல்லாதவா கூட்டத்துக்கே வரக்கூடாது. மத்ததுக் கெல்லாம் பொம்பளைக வேணும். இதுக்கு மட்டும் எதுக்கு வேண்டாங்கனும்."

"எம்மா நீங்கள்ளாம் சட்டம் படுச்சவுக. ஒங்ககிட்ட பேச முடியாது. நாலெழுத்து படுச்சுட்டாப்பல பொம்பள ஆம்பளைக்கு மேலயா? பொம்பள பொம்பளதான்; ஆம்பள ஆம்பளதான்."

"ஒனியப் போல பத்துபேரு இருந்தா ஊரு ரொம்பா விருத்தியா யிரும். விருதாக் குப்பக் கோழி கொள்ளு." மாறி மாறி ஒருத்தர ஒருத்தரு வஞ்சுக்கிட்டே வீடுகளுக்குப் போனாக.

செல்வராணி, டீச்சர் வேலைக்குப் படுச்சுட்டு வேலை கெடைக்காம வீட்ல இருக்கா. பொதுக்காரியங்கள்ள நல்ல ஈடுபட்டுச் செய்வா. அவளப் போல நெறய்யாப் பிள்ளைக, படிப்ப

முடுச்சுட்டோ, பாதில உட்டுட்டோ, படுச்சுக்குட்டோ இருக்காக. இவுகள்ளாமே கழனிக் கலைக் குழுவுல மெம்பராச் சேந்துருக்காக. தெருவுல வச்சுக்கிற வேப்பங்கன்னுகளுக்குத் தவறாம தண்ணி ஊத்துரதும் இவுக வேலைதான். செல நேரத்துல உள்ளூர்ப் பள்ளிக் கொடத்துல படிக்கிற சின்னப் பிள்ளைகளுக்கு சாயங்காலத்துல பாடஞ் சொல்லிக் குடுப்பாக.

"இன்னைக்குக் கூட தெக்க கொய்யாத் தோப்புல நம்ம பெய ஒருத்தன பள்ளர்க அடுச்சுப் போட்டானுகளாம். அதுக்குத்தான் கூட்டம் போட்டுப் பேசுறாக," கார்மேல் மேரி சொன்னா.

"ஆமாமா... அந்த மாமா ஜெயராசு சொன்னாரு. என்ன செய்யப் போறதா முடிவெடுக்காகளோ. நாளைக்குக் காலைல கேப்போம்," சொல்லிட்டுப் படுக்கப் போயிட்டாக.

நாட்டாமெ ஆரம்பிச்சாரு, "செவனு மகன் சின்னப்பனக் கூப்புடுங்கப்பா. இந்தப் பொடிப் பெயலுக வேற சும்மா இருக்க மாட்டானுக. இவனுக லேசாத் தொட, பெறகு அவனுக தொட்டாலே பலி குடு பாண்டியத் தேவான்னு புடுச்சுக்கிறானுக. சின்னப் பெயலுக வெவகாரத்தக்கூட பெரிய பெரச்சனயா ஆக்கு றானுக. என்ன செய்ய... சரி... இப்பிடி முன்னால வாடா."

சின்னப்பன் முன்னால போனான். போயி கம்முனே நின்னான். தொயந்து நாட்டாமெ கொஞ்சம் அதட்டலாக் கேட்டாரு, "ஏலேய், உள்ளதச் சொல்லுடா. நீ என்னலே செஞ்செ? என்னடா நடந்துச்சு அப்பிடியே சொல்லுடா."

சின்னப்பன் பதுலு சொல்ல முன்னாடியே ஜோசப்பு கத்துனாரு. "நீயி சொல்லு ராசா... அந்தத் தாயோளிகள் மப்ப அடக்க னும் ராசா. நீ சொல்லுயா... நானு சித்தப்பா இருக்கேண்டா... இது வைரம் பாஞ்ச தேக்குடா...," சொல்லிக்கிட்டே நெஞ்ச டப்பு டப்புனு தட்டிக்கிட்டு எந்துருச்சு முன்னால வந்தவரு டமால்னு உழுந்தாரு.

"இவனோட பெரிய சள்ளையாப் போச்சு. இவனத் தூக்கிட்டுப் போயி நாலு வாளித் தண்ணிய தலவழியா ஊத்துங்கடா. குடுச்சுப் போட்டு சும்மாவுமுலே இருக்கமாட்டாங்கா."

"நானு குடுச்சிருக்கேன். ஆமா. ஆனா எப்பயும் ஸ்டெடிதான் மாப்ளே. நானு கெட்ட வார்த்தையா பேசுறேன்! நீ சொல்லு ராசா ... நானு அப்பா இருக்கேன் சாமி. சொல்லுயா...," சொன்னதையே சொல்லிக்கிட்டு இருந்தாரு.

அந்தோணியும் இன்னொரு பையனும் வந்து ஜோசப்பத் தூக்கிட்டுப் போயி கொழாயடில வச்சு, அடி பம்புல தண்ணிய

அடிச்சு உட்டாங்க. அப்பயும் ஒரே பொலம்பல்தான்.

செவனு மகென் சின்னப்பனுக்குப் பத்து பன்னெண்டு வயசு இருக்கும். ரெண்டோ மூணோ படுச்சுட்டு ஆடு மேய்க்க நின்னுட்டான். வாத்தியாரு எதுக்கோ ஒரு நாளு அடுச்சாராம். அதாஞ் சாக்குன்னு நின்னுட்டான். நோஞ்சாக் கணக்கா ஒடம்பு இருந்தாலும் ரொம்பாச் சேட்டக்காரப் பெய. செவனு மக்கள்லயே இந்தப் பெய வெலாவுல வெடுச்ச பெயன்னு அம்புட்டுப் பேரும் சொல்வாக. எம்புட்டுத் தின்னாலும் ஒடம்பு என்னமோ ஒலுங்கு கெணக்காத் தான் இருந்துச்சு.

அவுகய்யங்கிட்ட ஒரு நாளு தவசிக் கெழவி கேட்டா, "ஏலேய் ஒம்மகன எதுக்குடா இப்பிடிக் கொலபட்டினியா போடுற! கிள்ளி எடுக்க இத்தினி சதை இருக்காடா! என்ன சம்பாருச்சு என்னடா பெரயோசனம்! நல்லாக் கறி கிறி எடுத்துப் போடனும்டா."

"நானு கறி எடுத்துப் போடலன்னா நெனைக்க கெழவி? கறிக்கார மாரியப்பனக் கேட்டுப் பாரு தெரியும். வாரா வாரம் நாலு கிலோ, அஞ்சு கிலோ எடுப்பேன். அப்பிடியே உப்பு அவியலா அவுச்சு வப்போம். பானையச் சுத்தி நாங்க எல்லாரும் ஒக்காந்து கிட்டு திங்கிற வரைக்கும் திம்போம். பெறகு மிச்சமிருக்குறத கொழம்பு வப்போம். இந்தப் பெய மட்டுமே ஒரே நேரத்துல ஒரு கிலோ தின்னுருவான் தெரியுமா?"

"என்னமோ... ஒனியப் பாத்தாத்தான் நல்லா செழிம்பாத் தெரிற. ஒம்மக்க அப்பிடித் தெரில."

"இந்தப் பெயமக்கள அம்புட்டு ஈசியா நெனச்சுப் போடாதெ. கொஞ்சம் ஏமாந்தீனா, ஒனியவே அடுச்சுக் கூறு போடுவானுக. எல்லா திருவாத்தானுக."

இப்ப நாட்டாமெ கேக்கயிலகூட அப்ராணி கெணக்கா நின்னான். அவுகய்யன் சொன்னான், "ஏலேய், அந்தப் பெயலுக என்ன செஞ்சானு கன்னு சொல்லுடா. கம்முனு இருந்தா எப்பிடிடா?"

"நானு குட்லம்பாறைக்கிட்ட ஆடு மேச்சுட்டு வந்துக் கிட்டுருந் தேன். வரயில கீழுரய்யா தோப்புல ஒரு மாங்கா எடுத்துத் தின்னுக்கிட்டு வந்தேன். அதுக்குக் காவக்காரன் மாசாணம் எனியப் போட்டு செம அடி அடுச்சுப் போட்டான்."

"மாங்கா எடுத்துத் தின்னம்னு மொட்டையாச் சொன்னா... கீழ கெடந்தத எடுத்துத் தின்னியா? இல்லைன்னா மரத்துல இருந்ததப் புடுங்கித் தின்னியா?"

"கடவுள் சத்தியமா கீழ கெடந்ததத்தான் எடுத்துத் தின்னேன்."

"கடவுள் மேல ஏண்டா சத்தியம் பண்ற? பொய் சொல்லாமச் சொல்லுடா. நீயும் ஓங்கூட்டாளிகளுமாச் சேந்துதான முன்னால ஒரு தடவ கொய்யாத் தோப்புல களவாண்டீக?"

"நாங்க கொய்யாத் தோப்புல களவாங்கல. நம்மூரு பஸ் ஸ்டாண்டுல மருத வண்டில ஏத்துரதுக்கு வச்சிருந்த கூடையிலருந்து அந்த அண்ணாச்சியக் கேட்டுக்கிட்டுத்தான் எடுத்தோம்."

"ஆமாமா... கேட்டுக்கிட்டு நொட்டுனீக. நீங்க தெக்க வடக்க போற பெயலுக ஒங்க கைகள வச்சுக்கிட்டு சும்மாதானெ வரனும்? அவனுகளே நம்மகூட சண்ட இழுக்க எப்ப எப்பனு அலைரானுக. எப்பப்பாரு மாங்காயத் திருடுனான் தேங்காயத் திருடுனாம்னு ஒரே ஆவலாதி. ஒங்களோட பெரிய அச்சலாத்தியா இருக்குடா."

"நீயி கீழ கெடந்த மாங்கான்னு சொன்னப்பெறகுமா ஒனிய அடுச்சான்?"

"க்கும். அவெ அடுச்சதுமில்லாமெ, பக்கத்துல கொய்யாத் தோப்பக் குத்தகை எடுத்துருக்கிற கிட்ணசாமியும் சேந்து அடுச்சான்."

"அவெ எதுக்கு அடுச்சான்? "

"அவென் தோப்புலயும் களவு போகுதாம். நம்ம தெரு பெயலுக தான் எடுத்திருப்பாகன்னு சொல்லிக்கிட்டே அடுச்சான்."

எல்லாத்தயுங் கேட்டுக்கிட்டுருந்த இருதயம் சொன்னாரு, "இதென்னடா அநியாயமா இருக்கு. நம்ம தெருப் பெயலுகளுக்குத் தான் வாயும் பொச்சும் இருக்கு... அவனுக பெயலுகளுக்கு இல்லை யாக்கும்? அவனுக திருடித் திங்கவே மாட்டானுகளாக்கும்? ஒரு திங்கிற பண்டம்னா பொடிப் பெயலுகளுக்கு ஆசையாத்தான் இருக் கும்டா. நம்ம பெரியாளுகளே செலநேரம் பயறு பச்சகளப் புடுங்கித் தின்னுட்டு வர்ரதில்ல? இதுக்குப் போயி பச்சப் பெயல அடிப்பாக ளாக்கும்? "

"அதானெ மச்சான். அட புடுங்கியே தின்னுட்டாம்யா. அவெ என்ன செய்யனும்? நேரா வந்து நாட்டாமயிட்ட ஒப்பிச்சிரு. அத உட்டுப்போட்டு அவெ இஸ்டத்துக்கு அடிப்பானாக்கும். நம்மெல் லாம் பேப் பெயலுகளா என்ன? " மாணிக்கம் சொன்னாரு.

ஒடனே அந்தோணியும் இதுக்கு சப்போட்டாப் பேசுனான். கூடவே நாலஞ்சு பேரு கொரலு கொடுக்கவும் நாட்டாமெ அம்புட்டுப் பேத்தயும் அமைதியா இருக்கச் சொல்லிட்டு சொன் னாரு, "சரி அவனுக நம்மகிட்ட வந்து ஒப்பிக்கல. நாம போயி அவனுக அடுச்சது நாய மான்னு அவுக நாட்டாமயிட்ட கேப்போம்."

ஒடனே எளவட்டப் பெயலுகள்ளாம் கத்துனானுக, "அவனுக என்ன பெரிய மயிருக, நாம போயி அவனுககிட்ட கேக்குறது. நம்ம போயி போலிசுல எழுதிக் குடுப்போம். நாளைக்குக் காலைல போயிட்டு வருவோம்."

"சின்னப்புள்ளத்தனமா பேசாதீகடா. இம்புட்டுக் காலமா என்னென்னமோ நடந்துருக்கு. நம்ம இரண்டு தெரு நாட்டாமை களே பஞ்சாயத்துச் செய்வோம். இப்ப என்ன புதுசா டேசனுக்கு? அதெல்லாம் ஒன்னும் தேவையில்ல. இவனுகளுக்கு என்ன தெரியும். நேத்துப் பெயலுக," தோமாசுத் தாத்தா சொன்னாரு.

இதக்கேக்கவும் எளவட்டப் பெயலுகளுக்குக் கோவம் வந்துருச்சு. "இன்னும் அந்தக் காலத்துலேயே ஒக்காந்து கெடங்க. தானாவும் தெரியாது; சொன்னாலும் புரியாது; நாட்டாமைட்ட ஒப்புச்சுட்டா மட்டும் எல்லாஞ் சரியாப் போயிருமா என்ன?" அந்தோணி கோவமாக் கத்துனான்.

"எவண்டா அவன் கத்துறது! ஊருக்குன்னு ஒரு வழமை இருக்குலே. அத மீறச் சொல்றியா? நீயி நாலெழுத்துப் படுச் சுட்டாப்ல எல்லாந் தெரிஞ்சு போச்சா. ஒங்க மாதிரி எடுத்தமா கவுத்தமான்னு பேசுனா இந்த ஊருக்குள்ள குடியிருந்திருக்க முடியாது. தெருஞ்சுக்கோ. சூதானமாத்தான் செய்யனும்," இன்னாசி சொன்னாரு.

"இப்பிடிப் பயந்து செத்துக்கிட்டு பல வருசம் வாழ்ந்து என்னத்த சாதிச்சுட்டீக? அதுக்கு மானமுள்ள மனுசனா ஒரு நாளு வாழ்ந்துட்டுச் செத்துப் போகலாம்."

மாறி மாறிப் பேசவும், நாட்டாமெ சத்தம் போட்டு அடக்குனாரு, "சரி நாளைக்குச் சாயந்தரம் ஒரு பத்துப் பதுனஞ்சு பேரு பெரியாளுகளா வாங்க. பையனயும் கூட்டிக்கிட்டுப் போயி கேப்போம். அவனுக என்ன சொல்றாகன்னு பாத்துட்டு மேக் கொண்டு என்ன செய்யலாம்னு யோசிப்போம். "

எல்லாரும் வீடுகளுக்கு எந்துருச்சுப் போயிட்டாக. இந்தக் கலைக்குழு பெயலுக மட்டும் கோவமா ஒக்காந்துருந்தானுக. சின்னப்பன அடுச்சுப் போட்டவனுகளப் பதுலுக்குப் பதுலு அடுச்சாத்தான் ஆச்சுன்னு கத்துனானுக.

சாமிக்கண்ணும், ஜெயராசும்தான் கொஞ்சம் நிதானமாப் பேசி சமாதானப் படுத்துனாங்க. "பெரிசுக அதுக வழில போயிப் பாக் கட்டும். ஒன்னுஞ் சரிப்பட்டு வல்லன்னா நம்ம எறங்கிட வேண்டியது தான்," ஜெயராசே இப்பிடிச் சொல்லவும் மத்தவு களுக்கும் ரோசம் அதிகமாகிப் போச்சு. அன்னைக்கு ரொம்பா

நேரமா அங்ன உக்காந்து பேசிக்கிட்டு இருந்தானுக.

சின்னப்பனக் கூட்டிக்கிட்டு பசாருல இருந்த ஓமியோபதி டாக்டர்ட போயி ஊசி போட்டு, மருந்து மாத்துர வாங்கிட்டு வந்த செவனு, அந்தப் பக்கமா வாரதப் பாத்துட்டு சாமிநாதன் கேட்டான், "என்ன சித்தப்பா, ஊசி போட்டு வாரீகளா?"

"ஆமாய்யா, ரெண்டு ஊசிபோட்டு மருந்து கட்டி விட்டாரு. மாத்திர குடுத்துருக்காரு. நாளைக்குத் திரும்பியும் வரச் சொன்னாரு. அவனுக பாட்டுக்கு மானாவாரியா அடுச்சுப் போடுறானுக. வாங்குற கூலிய டாக்டருக்குக் குடுக்கவா? மருந்து மாயம் பாக்கவா?" அவரு பாட்டுக்குப் பொலம்பிக்கிட்டே போனாரு.

"இம்புட்டு வருசமாகியும், நம்ம நெலமயில மாத்தமே இல்ல. நம்ம எதுனாச்சும் உருப்பிடியாச் செய்யனும்னு நெனச்சா லும் இந்த கெழடு கெட்டைக உடமாட்டேங்கிதுக. இந்த வாட்டி நம்ம சும்மா இருக்கக்கூடாது... இத்தோட எத்தன தடவ நம்மள அந்தத் தெருக்காரனுக அடுச்சுப் போட்டானுக. ஒரு மாங்கா என்ன பெறும். அணிலுகூட அதுபாட்டுக்குக் கடுச்சுத் தின்னுட்டுப் போகுது? இதுக்குப் போயி இன்னைக்கு எம்புட்டு ரூவாச் செலவு! வேதன! சே. நெனைக்க நெனைக்க நெஞ்சே வெடுச்சுறும் போல இருக்கு," அந்தோணி சொல்லும்போது அவெங் கண்ணெல்லாம் கலங்குச்சு. மொகமே வேதனைல வாடிப் போயி பாக்கவே பரிதாபமா இருந்துச்சு.

"சரி... பாக்கலாம். நாளைக்கு எப்பிடி முடிவாகுதுன்னு பாப்போம். நீயி ஒரேயடியா ஒடஞ்சு போகாத. எதிர்காலமே நம்ம கைலதான். கவலப்படாதே ராசா," சாமிநாதன் கொஞ்சம் நம்பிக்கை யோடப் பேசுனான். பெறகு எல்லாரும் வீடுகளுக்கு எந்துருச்சுப் போயிட்டாக.

மறுநாளு சாயங்காலம் வேல வெட்டி முடிச்சுட்டு வந்த ஒடனே நாட்டாமையோட இன்னும் பத்துப் பதுனஞ்சு பேரு சின்னப்பனயுங் கூட்டிக்கிட்டு பள்ளத்தெரு நாட்டாமைட்டப் போயி நடந்ததச் சொன்னாக. இவுக போயிச் சொன்னதுதான் தாம்சம். அங்ன இருந்த எளவட்டங்க பூராம் துள்ளிக் குதுச்சு எந்துருச்சு மல்லுக்கு வாரவனுக கெணக்கா கத்த ஆரம்புச்சுட்டானுக.

"களவாணிக் கழுதையப் பெத்து வச்சுகிட்டு, அதுல நாயங்கேட்டு வந்துட்டீகளா? எங்க தோப்புல கைய வச்சா கைய ஒடிப்போம். இம் மாத்துரம் கைய ஒடிக்காமெ உட்டதே பெரிய காரியம். ஓடிப் போங்கடா பரதேசிப் பெயலுகளா."

பெணந்தின்னிக் கழுகுக கெணக்கா ஆக்ரோசமாக் கத்துன

நன்றி - ஊடறு



அவனுகள அவுக தெரு நாட்டாமெயே அடக்குனாரு. பெறகு சேரித் தெரு ஆளுகளப் பாத்துச் சொன்னாரு, "தப்புப் பண்ணுனது ஒங்க தெரு பையன்தான். அதுக்கு ஏதோ ரெண்டு தட்டுத் தட்டுனதுக்கு இப்பிடிக் கூட்டமா நாயங் கேக்க வந்துட்டீகளே. துட்டுப் போட்டு வெவசாயம் செய்றவுனுக்கு, வெள்ளாமெக் களவு போனாக் கோவந் தான் வரும். அந்தக் கோவத்துல ரெண்டடி அடுச்சிருப்பான். போயி ஒங்க பையனத் தட்டிக் குடுக்குறத உட்டுட்டு இங்க வந்திட்டீகளே. இனிமேலாச்சும் சம்சாரிக காடு கரைகள்ள கை வைக்கக் கூடாதுன்னு சொல்லிக் குடுங்க."

இம்புட்டு நேரமும் பொறுமையாக் கேட்டுக் கிட்டுருந்த சேரித் தெரு நாட்டாமெ சொன்னாரு, "எங்களுக்கும் பேசத் தெரியும். இத விடவும் பேசத் தெரியும். ஏதோ போனாப் போகுது, இதப் பெரிய விசயமா ஆக்க வேண்டாமின்னு பாக்கோம். ரெண்டு தட்டுத் தட்டுனாம்னு அம்புட்டு ஈசியாச் சொல்லிட்டீகளே! இந்தப் பெய மூஞ்சி மொகறையெல்லாம் பாருங்க. இவெ என்ன பொட்டி பொட்டியா மாம்பழத்தப் புடுங்கிட்டு வந்து வித்துட்டானா என்ன? ஏதோ பசிக்குக் கீழ கெடந்த பழத்த எடுத்துத் தின்னது பெரிய குத்தமாப் போச்சோ! ஒங்கள மனுசம்னு மதுச்சு நாயங்கேக்க ஒங்களத் தேடி வந்தோம் பாருங்க...எங்கள செறுப்பால அடிக்கனுகம்! வாங்கயா வாங்க. நமக்குத் தெருஞ்சத நம்ம பாத்துக்குவோம்."

தெருவுக்குள்ள வந்து ஒடனே ஊர்சாட்டி கூட்டம் போட்டாரு நாட்டாமெ. வழக்கத்துக்கு மாறா இந்தக் கூட்டத்துக்கு நெறய்யாப் பேரு வந்துருந்தாக. எளவட்டங்க பூராம் ஒன்னாச் சேந்து ஓரெடத்துல ஒக்காந்து உன்னிப்பாக் கவனிச்சாங்க. நாட்டாமெ நடந்ததப் பூராம் வெவரமாச் சொன்னாரு. அவரு சொல்லி முடிக்கம் முன்னயே நாலாதிக்கமும் இருந்து ஆவசேமா, ஆத்துரமா, கோவமா அம்புட்டுப் பேரும் கத்துனாங்க. அவுங்கள அமைதிப்படுத்துரதே நாட்டாமைக்குப் பெரும்பாடாப் போச்சு.

"இப்படி ஒன்னாச் சேந்து கத்துனா ஒன்னுமே செய்ய முடியாது. ஒவ்வொருத்தரா சொல்லுங்க. அட... ஒவ்வொருத்தரா சொல்லுங்கங்றேன்," கோவமாக் கத்தவும் கொஞ்சம் சத்தங் கொறஞ்சது.

எளவட்டங்க பக்கத்துல ஜெயராசு எந்துருச்சுச் சொன்னான், "நம்ம நேராப் போயி இம்புட்டுப் பொறுமையாச் சொன்னப் பெறகும், அவனுக நம்மள மதுச்சுப் பேசல. இந்த மாதிரி ஒரு மாம்பழத்துக்காக, சின்னப் பையன அடுச்சதுமில்லாமெ, நம்ம

பக்கந்தான் தப்புங்றது மாதிரியும் பேசியிருக்கானுக. இனி நம்ம என்ன செய்யனும்னா, நேரா நம்ம பங்குச் சாமியார்ட்ட போயி நடந்ததச் சொல்லி, அவரு முன்னாடி ஒரு கூட்டம் போட்டுப் பேச வேண்டியதுதான். அவரு நடுவரா இருந்து என்ன தீர்ப்புச் சொல்றாரோ அத ரெண்டு தரப்பாரும் ஏத்துக்கிருவோம்."

ஜெயராசு சொல்லி வாயக்கூட மூடல. அதுக்குள்ள நாலாதிக்கமும் இருந்து கத்த ஆரம்புச்சுட்டாங்க. எளவட்டங்க பக்கமிருந்த அந்தோணி எந்துருச்சு கோவமாக் கத்துனான். "இந்த ஐடியாவெ ஏத்துக்க முடியாது. சாமியாரு என்ன சாமியாரு, அவரு இம்புட்டு நாளா இங்க இருக்காரே... நம்ம தெருவுல நடக்குற எந்த நல்லது பொல்லதுல கலந்துக்கிட்டாரு? அவரக் கூப்புடுறதே வேஸ்டு."

அவனத் தொடந்து சாமிநாதனும் சொன்னான். "ஆமாங்க சாமியாரு என்ன சொல்வாரு? இவன் திருடுனது பாவம். பாவத்துக்குப் பரிகாரமா இவெ அடிபட்டாம்னு சொல்லி நைசா நழுவிடுவாரு. என்ன இருந்தாலும் அவரும் மேகலக்குடி ஆளுதானெ. நம்மாளுனா, நம்ம கஸ்ட நஸ்டம் புரியும். நம்ம ஒணர்வுகளும் தெரியும்."

"ஆமாமா தம்பிக சொல்றது சரித்தான். அந்த ஆளப்போயி ஏங்கூப்புட்டுக்கிட்டு, போன தடவ ஒரு பெரச்சனையில கூட மொதல்ல ஊர விட்டுத் தப்பிச்சு ஓடுனதே இந்தச் சாமியார்தான். அதுனால அத உடுங்க. வேற எதுனாச்சும் இருந்தா பேசுங்க."

எப்பயும் கோயிலு கொளம்னு இருக்கிற மோயீசனே இப்பிடிச் சொன்னதக் கேட்டு நெறய்யாப் பேத்துக்கு ஆச்சரியமா இருந்தாலும், அதுதான் நெசமுன்னும் பட்டுச்சு. கொஞ்ச நேரம் அவுகளுக்குள்ளயே சலசலன்னு பேசிக்கிட்டுருந்தாக.

"வேற எதுவும் வேண்டாம். எவனுகள்ளாம் அடுச்சானுகளோ அவனுகளப் பூராம் போட்டுத் தள்ளிரவேண்டியதுதான்" சோசப்பு இப்பிடிச் சொல்லவும், எளவட்டங்க பக்கத்துலருந்து விசிலு சத்தம் காதைக் கிழுச்சது.

"ஆமா நம்ம போட, பெறகு அவனுக போட, இப்பிடி மாறி மாறிப் போட்டுக்கிட்டே இருக்க வேண்டியதுதான். அவனுகளுக்கு இந்தப் பக்கம் வரத் தேவையில்லை. ஆனா நமக்கு அப்பிடி இல்லியே. கடகண்ணிக்கு, பள்ளிக் கொடத்துக்கு, வேல வெட்டிக்கு, கோயிலு கொளத்துக்கு இப்பிடிச் சகல காரியத்துக்கும் அங்குட்டுத் தானெ போக வேண்டியிருக்கு. நம்ம பொம்பள பிள்ளைக புல்லு கில்லுப் பெறக்க ஒத்த சத்தையில அங்குட்டுப் போகணும், வரணும். எல்லாம் யோசுச்சுப் பாத்துப் பேசணும். எள

ரத்தம், சூடா இருக்கு. துள்ளிக் குதுச்சுப் பேசிப் போடலாம். ஓடுற பாம்ப மிதிக்கிற வயசு. ஒங்க வயசுல நானுந்தான் அப்பிடி இருந்தேன். நாலையும் யோசுச்சுத்தான் செய்யனும்" மாசிலாமணி தாத்தா ஒரு பெரசங்கமே வச்சுட்டாரு.

அவரு சொன்னதுல இருந்த நாயத்த எல்லாரும் புருஞ்சுக் கிட்டதுனால செத்த நேரம் எல்லாரும் அமைதியா இருந்தாக. அந்த அமைதியக் கிழுச்சுட்டு அந்தோணி ஆத்துரமாக் கேட்டான். "அந்தத் தாத்தா சொல்றது சரிதான். ஆனா அதுக்காக நம்ம ஒவ்வொரு தடவயும் இப்பிடியே விட்டுக்கிட்டே போனா அவனுக மட்டு மல்ல, இந்த ஊர்ல இருக்குற பல சாதி ஆளுகளும் நம்மள மெதமா நெனச்சப் போடுவாக."

"அதெல்லாந் தெரியாமலாடா இருக்கு. இது முள்ளுல விழுந்த துணி கெணக்காடா. பாத்துப் பருவிச்சுத்தான் எடுக்கணும். அதுக்காக அவனுகளச் சும்மா உட்டுரனும்னு யாரும் சொல்ல லியே," சேவியரு சொன்னான். எல்லாருக்கும் எதுனாச்சும் செய்ய னும்னு வேகம் இருந்தாலும் எப்பிடிச் செய்யறதுங்றதுல கொழம்பிப் போயி இருந்தாக.

ரொம்பா நேரமா வாக்குவாதம் பண்ணிட்டு, கடேசில போலீஸ் ஸ்டேசன்ல போயி புகார் பண்ணலாம்னு கொஞ்சப் பேரும், வேண்டா முன்னு கொஞ்சப்பேரும் வெவகாரம் செஞ்சு கிட்டு இருந்தாக.

"போலீசுக்காரனுக கூட துட்டுள்ள பக்கந்தான் பேசுவானுக. நமக்குனு எவனுங் கெடையாது. நம்மளே துணுஞ்சு நின்னு திருப்பிக் குடுத்தாத்தான்... இப்பயெல்லாம் முன்ன மாதிரி கெடை யாது. இந்த மாதிரித் திருட்டுக முன்னால இல்லாமலா இருந்துச்சு? இப்ப ஏன் இப்பிடி கொடும பண்றானுகன்னு சிந்திக்கணும்," அமல்ராசு சொன்னாரு.

அதுக்குப் பெறகு ரொம்ப நேரம் யாருஞ் சத்தமாப் பேசல. நாட்டாமெதான் சொன்னாரு, "சரி, இப்பிடி பல மாதிரி பேசிட்டு ஒன்னுஞ் செய்யாமெ இருக்க முடியுமா? இந்தவாட்டி டேசன்ல ஒரு பொகொரு குடுத்துப் பாப்போம். இதுக்கு மேல என்ன ஆகுதுன்னு பாத்துட்டு பெறகு நம்மளும் துணுஞ்சு எறங்கிட வேண்டியதுதான். என்னப்பா சொல்றீக? "

"சரிதான் செய்யலாம். நேரமும் ஆகுது. நாளைக்கு கருக்கல்ல எந்துருச்சு வேலைக்கு ஓடனும்ல. இந்தா படுச்ச பெயலுகள வச்சு ஒரு பொகாரு இப்பமே எழுதுவோம்," செல்வம் சொல்லவும், சரிதான்னு ஒடனே எழுத ஆரம்புச்சாக. செலபேரு எந்துருச்சு

வீடுகளுக்குப் போனாக. சாமிநாதன்தான் எழுதுனான். அவங்கூட மத்தவுகளும் இருந்து சொல்லிக்கிட்டு இருந்தாக. சின்னப்பனோட ஐயா கிட்டெ படுச்சுக் காட்டிட்டு, கையெழுத்து வாங்கிக்கிட்டாக.

அவரு கைநாட்டு வைக்கவும் அந்தோணி எருச்சலாச் சொன்னான், "இப்பிடி கையெழுத்துப் போடத் தெரியாத வரைக்கும், எல்லா நாய்களும் நம்ம மேலக் கை வைக்குங்க. நீ தான் இப்பிடின்னா, ஓம் மகனையும் பள்ளிக் கொடத்துக்கு அனுப்பாமெ மாடு மேய்க்கப் போச் சொல்லி இருக்கெ."

வேற நேரமா இருந்தா செவனு திரும்பி நல்லா பேசி உட்டுருப்பாரு. இப்ப இருந்த மன நெலமயில ஒன்னும் பேசல. ஆனாலும் மகனெ மாடு மேய்க்கப் போச் சொன்னது மனச உறுத்துச்சு. அதுனால ஒன்னுஞ் சொல்லாமெ நின்னாரு.

நாட்டாமெ பொகார வாங்கிக்கிட்டுச் சொன்னாரு, "நாளைக்கு வேல வெட்டிக்குப் போகனும்னு வழக்கம்போல ஓடிராத. காலைலயே போயி டேசன்ல குடுத்துருவோம். என்ன மச்சான்?"

செவனும் சரின்னுட்டு வீட்டுக்குப் போயிட்டாரு. போம் போதே நெனச்சுக்கிட்டாரு, 'நாளைக்கு ஒரு நாளைக்கு வேலைக்குப் போகாட்டி, வீட்ல ஒல வைக்கிறது செரமம். அந்தப் பெய சொன்னது கெணக்கா நாலெழுத்துப் படுச்சிருந்தா தெனமும் நாயா கூலி வேலைக்கு அலைய வேண்டியதில்ல.'

மறுநாளுக் காலைல நாட்டாமெ, செவனு, அவெ மகெ சின்னப் பன், சாமிநாதன், அந்தோணி, ஜெயராசு, இளங்கோ, மார்டின், சேவியர், மாசிலாமணி, இப்பிடி பத்துப் பதுனஞ்சு படுச்ச பெயலு களும், ஊர்ப் பெரியாளுக நாலஞ்சு பேருமா டேசனுக்குப் போனாக.

பொகார வாங்கிப் பாத்துட்டு இன்ஸ்பெக்டரு கேட்டாரு, "சம்பவம் நடந்து ரெண்டு நாளாச்சு, இன்னைக்கு வாரீகெ?"

நாட்டாமெ ரொம்பாப் பணிவாச் சொன்னாரு, "நாங்க அங்ன ஊருக்குள்ளேயே பஞ்சாயத்துப் பண்ணித் தீத்துக்கிறலாமுன்னு அவுக தெரு நாட்டாமயிட்டப் போயி ஒப்புச்சோம் சாமி. அவுக மாட்ட முனுட்டாக. அதான் ஒங்ககிட்ட வந்தோம்."

நாட்டாமெ இம்புட்டுப் பணிவாப் பேசுனது அந்தோணிக்கு இத்தினிக்கூடப் பிடிக்கல. "இன்ஸ்பெக்டரும் நம்மளப் போல மனுசன்தானெ. எதுக்கு அவரப் போயி ஐயா, சாமின்னு கும்புட்டுக் கெடக்கனும். இப்பிடிச் செய்யப் போயிதான் அவனுக நம்மள நாய

விடக் கேவலமா நடத்துறானுக," மனசுக்குள்ள நெனச்சுக்கிட்டான் அந்தோணி.

"செவனுன்னா யாருடா?" இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"நாந்தாஞ் சாமி," செவனு பாதி ஒடம்பா வளஞ்சு நின்னு பதிலு சொன்ன தோரணையப் பாத்து அந்தோணிக்குப் பத்திக்கிட்டு வந்துச்சு. சாமிநாதனுக்குப் பரிதாவமா இருந்துச்சு.

"ரெண்டு நாளைக்கு முன்னால நடந்த விசயத்துக்கு இப்ப வந்து புகாரு குடுக்குற? ஏண்டா அன்னைக்கே வரல," இன்ஸ் பெக்டரு அதிகாரமாக் கேட்டாரு.

"அன்னைக்கு வரல சாமி. மகன ஆசுபத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிட்டேன் சாமி!"

"இது ஒரு தடவ ரெண்டு தடவன்னு இல்ல எசமான். தொயந்து இப்பிடி கண்ணு மூக்குனு பாராமெ எங்க பிள்ளைகள அடுச்சுப் போடுறாக எசமான். நீங்கதான் இந்த ஏழபாழைக மேல எரக்கம் வச்சு இதுக்கு ஒரு முடிவு கட்டனுங்க."

நாட்டாமெ இப்பிடிச் சொல்லவும், அந்தோணி, சாமிநாதன் காதுல ரகசியமாச் சொன்னான். "சே, இவனுகளோட வந்துருக்கவே கூடாதுண்ணா. உட்டா காலுலயே உழுந்துருவானுக போல. சே கேவலமா இருக்குது."

சாமிநாதன் அந்தோணிய செத்த நேரம் சும்மா இருக்கச் சொல்லி சைகை காட்டுனான். ஜெயராசும் அரக்கப் பரக்க முழுச்சுக் கிட்டு நின்னான்.

இன்ஸ்பெக்டரு சின்னப்பனக் கூப்புட்டு அடிபட்ட காயத்தப் பூராம் பாத்தாரு. பெறகு சொன்னாரு, "சரி, நீங்க போங்க. நானு சாயங்காலமா வந்து பாக்குறேன். போயி சண்ட கிண்ட போடக் கூடாது."

சாயங்காலம் ஏழு மணிக்கு மேல இன்ஸ்பெக்டரும் இன்னும் ரெண்டு போலீசுக்காரரும் வந்து சாவடில ஒக்காந்தாக. நாட்டாமெ போயி கூல்டிரிங்ஸ் வாங்கிட்டு வந்து குடுத்தாரு. இன்ஸ்பெக்டரு குடுச்சுக்கிட்டே, மத்த ரெண்டு போலீசுக்காரர்கிட்டச் சொல்லி பள்ளத் தெரு நாட்டாமையைக் கூட்டியாறச் சொன்னாரு. இன்ஸ் பெக்டரு கூப்புடுறாருங்கவும் அந்தத் தெரு நாட்டாமையோட கூடப் பத்து பதுனஞ்சுபேரு எளவட்டங்களும், பெரியாளுகளுமா வந்தாக.

"யாருடா அது இந்தப் பையனப் போட்டு அடிச்சது?"

அந்தத் தெருவுலருந்து வந்தவுகள்ள ஒரு பெய சொன்னான்.

"ஐயா, வந்து நாய்க்கரோட தோப்புல இந்தப் பெய பழத்தப் புடுங்கிட்டாம்யா. அதான் கிட்ணசாமி ரெண்டு தட்டுத் தட்டி இனி களவாங்கக் கூடாதுன்னு சொல்லிப் போச் சொன்னான்."

"எங்கடா அவெங் கிட்ணசாமி? இதாடா ரெண்டு தட்டு? ரெண்டு தட்டு தட்டுறதுக்கு அவெ யாருடா? களவாண்டா டேசன்ல வந்து கம்ளயிண்ட்டு குடு. ஒங்க பாட்டுக்கு ஒருத்தர ஒருத்தரு அடுச்சுக்கிட்டா எப்பிடி?"

யாரும் எதுவும் பேசல. இன்ஸ்பெக்டரே ரெண்டு நாட்டாம யிட்டயும் கேட்டாரு. "என்ன அந்தக் கிட்டணசாமியப் புடுச்சு ரெண்டு தட்டுத் தட்டி உள்ள தள்ளிடவா?"

அந்தத் தெரு நாட்டாமெ சொன்னாரு, "அதெல்லாம் எதுக்குங்க எசமான்? நாங்க தாயா பிள்ளையாப் பழகிக்கிட்டு இருக் கோம். இன்னைக்கு அடிச்சுக்கிருவோம், நாளைக்குக் கூடிக்கிரு வோம். இதுனாலெ ராசியாப் போயிடுறதுதான் நல்லது எசமான்."

"நீ என்னய்யா சொல்ற?" சேரித் தெரு நாட்டாமயக் கேட்டாரு.

"சமாதானமாப் போறதுதாங்க எங்களுக்கும் விருப்பம். ஆனா, நாளப் பின்ன இதுமாதிரி திரும்பியும் அடுச்சா, பெறகு எங்க பெயலு களும் திருப்பி அடிக்கத்தான் வேண்டி வரும்."

"சரி, நீ எழுதிக் குடுய்யா. இனிமேற்பட்டு சேரித் தெரு பிள்ளைகளத் தொடமாட்டம்னு எழுதிக் குடுய்யா."

"அவுகளும் எங்க வெள்ளாமெ வெளச்சலுல கை வைக்கக் கூடாதுங்கய்யா. வச்சா பெறகு நாங்க அடிக்கத்தான் வேண்டி வரும்."

"என்னய்யா நீரு, ஒரு பொடிப்பெய ஒரு மாங்காயப் புடிங்கித் தின்னதுக்குப் போயி அந்தப் பையனச் சாத்திட்டு, பெரிய சட்டம் பேசுற? அவன அடுச்சதுக்கு மொதல்ல ஒங்கள உள்ள தள்ளணும்," இன்ஸ்பெக்டரு அரட்டுனாரு.

"ஒரு பழம் இல்லிங்கய்யா. ஒரு பொட்டி நெறய்யாப் புடிங்கிட்டான். அதான் அடுச்சாரு." சின்னச்சாமி சொன்னான்.

"அட ஒரு பொட்டியோ ஒரு சட்டியோ, நீங்க யாருய்யா அவனத் தொடுறதுக்கு? டேசன்ல வந்து எழுதிக்குடு. நாங்க பாத்துக்க மாட்டமா என்ன?"

அப்பிடி இப்பிடின்னு பேசி கடேசில ரெண்டு தரப்புலயும் ராசியாப் போறதுக்கு ஒத்துக்கிட்டாக. இனியாரும் சண்ட சச்சரவு போடக் கூடாதுன்னு எச்சரிக்க பண்ணிட்டு இன்ஸ்பெக்டரு

போயிட்டாரு.

ஆனா இந்த சமாதானமாப் போறதுங்றது அந்தோணிக்கும் அவனோட கூட்டாளிகளுக்கும் கொஞ்சங்கூட புடிக்கல. இன்ஸ்பெக் டர் போனப் பெறகு எளவட்டப் பையனுங்கள்ளாம் நாட்டாமய வஞ்சானுக. "இப்பிடி எத்தன தடவ ராசியாப் போயி, ராசியாப் போயி பொழுதெனிக்கும் அவனுககிட்ட அடி வாங்கிக்கிட்டே இருக்குறது. ஒரு தடவையாவது அவனுகள உள்ள தள்ளணும். இல்லன்னா நம்ம ஒருத்தனையாவது பதுலுக்குத் திருப்பி அடிக்கனும். அத உட்டுப் போட்டு இதென்ன மயித்துச் சமாதானம். இதுனால அவனுக்கு என்ன? ஒரு மசுரும் கெடையாது. நம்ம பெய பட்ட அடிக்கு என்ன பதுலு இப்ப? அத ஒரு பெயலும் யோசிக்கிற தில்ல."

நாட்டாமெ அவரு பாட்டுக்கு கத்துனாரு. "இவனுக பேச்சக் கேட்டா ஊரு உருப்பட்டாப்புலதான். அவனுகளக் கொண்டு போயி உள்ள வச்சுட்டா நம்மள அவனுக சும்மா உட்டுருவானுகளாடா? அடுச்சுட்டாப்ல பிரச்சன அத்தோட ஓஞ்சுருமாடா?"

ஒரு தடவத் திரும்பி அடுச்சுப் பாரு. அப்புறம் அவனுக நம்மளக் கண்டாப் பயந்து சாவானுக. ஆறுலயுஞ் சாவு. நூறுலயுஞ் சாவு. துணுஞ்சு எறங்கணும்" அந்தோணி வேகமாச் சொன்னான்.

"ஏலேய், நீ இம்புட்டுப் பேசுறீலடா. எங்கடா நீ துணுஞ்சு செஞ்சு காட்டுடா. ஒனக்கு ஊரு பொறுப்பேக்கும்டா. செஞ்சு காட்டுடா," சவால் உடுற மாதிரிச் சொன்னாரு நாட்டாமெ.

"மாமோய், எங்கள வெறும் பேச்சுப் பேசற பெயலுகன்னு நெனைக்காதெ. நீ பொறுத்திருந்து பாரு. இந்தப் பறக்குடி வரலாத்தயே மாத்திக் காட்டுறோம். அப்பத்தான் எங்கள யாருன்னு நீங்கள்ளாம் தெருஞ்சுக்கிறிவீக." அந்தோணி திட்டவட்டமாச் சொன்னான்.

# ஏழு

"ஒரு சேரித் தெருக்காரம் பொகாரு குடுத்தாம்னு வெக்காளி இன்ஸ்பெக்டர் நம்மளக் கூப்புட்டு விசாரிக்கான். அதுலயும் நம்மள அவனுக தெருவுக்குள்ள கூப்டுல்லெ விசாரிக்கான்... நம்மளும் மானங்கெட்ட பெயல்க... போயிட்டு வந்துட்டோம்... சேய்... இப்பிடி இருந்தா அவனுகளுக்கு ரொம்பாத் தொக்காவுல போயிறும்" சாவடில சீட்டாட்டம் வெளாண்டுகிட்டு இருந்த ஊர்காலன் சொன்னான்.

"அதுக்கு இப்ப என்ன செய்யனும்ங்கறெ? இன்ஸ்பெக்டர் கூப்டா போகாமெ இருக்க முடியுமா?" செல்லையா கேட்டான்.

"போடா... போ... பெரிய வெங்காய இன்ஸ்பெட்டரு. இவனப் போல எத்தன இன்ஸ்பெட்டரு பாத்துருப்பேன்."

"மாமா, ரொம்பா ஆத்துரப்படாதெ. முன்னால வயக்காட்ல ஒருத்தனத் தட்டிப் பெதச்சது கெணக்கா, ரெண்டு மூனு பேத்தப் போட்டுருவோம். அப்ப அவனுக நமக்குப் பெயந்து போயி கெடப்பானுக."

"அப்பிடிச் சொல்லுங்க மருமகனே. பள்ளம்னா சும்மாவா நம்மல்லாம் மன்னர் பரம்பரன்னு அன்னைக்கு வந்து கூட்டம் போட்டு ஒருத்தரு சொல்லிட்டுப் போனார்ல. அத இவனுகளுக்குப் புரிய வைக்கனும்." திருப்தியா சொன்னான் ஊர்காலன்.

"அடுத்த வாரம் நம்ம தெருவுல ஊர்க்கூட்டம் இருக்குது. அதுல எல்லாத்தயும் பேசி முடிவெடுப்போம்."

பள்ளர் தெருச் சாவடில கூட்டம் நடந்துச்சு. எல்லாரும் ஒக்காந்தாக. காளிமுத்தும், சுந்தர்ராசும் எந்துருச்சு பேசுனாங்க. இவுக ரெண்டு பேரும் வெளியூர்ல வேல செய்றாக. ரெண்டு பேத்துக்குமே வயசு இருவதுக்கு மேல இருவத்தஞ்சுக்குள்ளதான் இருக்கும். சுந்தர்ராசு சொன்னான், "பறையர்க வந்து என்னைக்குமே நமக்குக் கீழ தான். நம்ம வந்து தீண்டத்தகாதவுக இல்ல. மன்னர் பரம்பரைல வந்தவுக. நம்ம தலித்துக இல்ல. நம்மல்லாம் இனி தேவேந்திர குல வேளாளர் அல்லது மள்ளர்கள். பள்ளர்கள் அல்ல.

அதுனால தலித்துகளான பறையர்களோடெ நம்ம எதுக்குமே ஒட்டோ ஒறவோ வைக்கக் கூடாது. நம்மளோடெ வீரம் பறையர் களுக்குக் கெடையாது. நம்மச் சுத்தி இருக்ற அம்புட்டு ஊர்கள்ளயும் இருக்கிற நம்ம சாதி சனத்துகளோடெ நம்ம ஒன்னாச் சேந்து அவனு கள தல எடுக்க உடாமெச் செய்யனும்."

"அதெல்லாம் சரித்தான்லெ. நம்ம வீரனுகன்னா அத எதுக்குப் பறையர்கள அடிக்கிறதுல காட்டனும்? அவெஞ் சூசுவான்னு, அங்குட்டு கெடந்துட்டுப் போறான். நம்ம சூசுவான்னு இங்குட்டு கெடந்துட்டுப் போறோம். எது எப்பிடின்னாலும் ரெண்டு சாதியும் ஒழச்சா கஞ்சி, இல்லன்னா இல்ல," நல்லதம்பி சொன்னாரு.

"நீங்க சொல்றது சரித்தான் சின்னையா. ஆனா ராசு சொன்னாப்ல நம்ம யாருன்னு அவனுகளுக்குத் தெரிய வைக்கனும். அவனுக எப்பிடி பெரிய இவனுக கெணக்கா அம்பேத்காரு செல வச்சு, கொடிக்கம்ப ஏத்துனானுகளோ, அதுமாதிரி நாம, நம்ம தலைவருக்குச் செய்யனும். நம்ம தனியாக் கொடிக்கம்பம் வைக்கனும். அவனுகளோடெ சேந்து எதுக்குச் செய்யனும். அம்பேத்காரு செல வைக்க நாமெ குடுத்த ஆயிரம் ரூபாய வாங்கி நம்ம தனியாச் செய்யனும். நமக்குனு பெரிய பெரிய ஆளுகள்ளாம் இருக்காக. நம்ம என்ன ஒன்னுக்குமத்த பெயல்களா என்ன? அவனு கதா என்னமோ, தலித்துகளுக்குத் தலைவனுக மாதிரி துள்ளிக்கி றானுக. மிஞ்சி, மிஞ்சி போனா, தப்ப ஒன்ன எடுத்து வச்சுக்கிட்டு அடுச்சுக்கிட்டு அலைவானுக. வேற ஒரு எழவும் தெரியாது" காளிமுத்து சொன்னான்.

"இப்ப என்னதாஞ் செய்யனும்ங்கிறீங்க? "

"நம்மளும் ஒரு கொடிக்கம்பம் வப்போம். அவனுக அம்பேத் காரு செல வச்சுருக்குற அதே எடத்துல நம்மளும் வப்போம்."

"அவனுககிட்ட டொனேசனாக் குடுத்த ரூபாய வாங்கிரனும். இவனுகளொடெ வெளாட்டுப் போட்டி நடத்துரத உடனும்."

"அவனுகள்ள கொஞ்சப்பேரு ரொம்பாத் துள்ளிக்கிட்டு எல்லாத்தயும் துணுஞ்சு நின்னு செய்றானுக. அவனுகள மொதல்ல ஒடுக்கனும்."

"ஆமாமா. சேசுரத்துனம்னு ஒரு பெய இருக்கான். நெடு நெடுன்னு வளத்தியா.... பாத்தா பசுமாதிரி இருப்பான். ஆனா பாஞ்சாம்னா புலிதான். ரொம்பா நெஞ்சு தைரியம் உள்ளவெ. இத்தனைக்கும் ஒரு எழுத்தும் படிக்காத பெய. அம்புட்டு வீராப்பும், வீரமும் அவனுக்கு. இந்த படுச்ச பெயலுகதான் வெளியூர்ல போயி என்னத்தென்னத்தையோ கேட்டுக்கிட்டு வந்து இவனுகள

உசுக்காட்டி உடுறானுக. அம்பேத்காரு செல வைக்கும் போது அவெ சேசுரத் துனத்தப் பாத்தீகள்ளெ. ரொம்பா முஸ்திபா திருஞ்சான்."

"இத்தினிக்கூட படிக்கலங்கிறீக. அன்னைக்குப் பாத்தா படுச்ச பெய கணக்கா வெள்ளையுஞ் சொள்ளையுமா போட்டுக்கிட்டு, காலுல செருப்பும் கண்ணுல கருப்புக் கண்ணாடியும், கையில கடிகாரமும் கட்டிக்கிட்டு ரொம்பாத் தோரணயா நின்னான்?"

"சேசுரத்துனம் ஒரு வித்தியாசமான பெய. நாட்டு வெடி குண்டு செய்றதுல கெட்டிக்காரன். ஒன்ன நெனச்சாம்னா செய்யாமெ உடமாட்டான். மேப்பார்வைக்கு ஏதோ ஒன்னுந் தெரியாத பெய மாதிரித்தான் தெரிவான்."

"இருக்கட்டும் இருக்கட்டும். எல்லாங் கொஞ்ச நாளைக்குத் தான். இனிமேத்தான் இந்த ஊருக்குள்ள நம்மன்னா யாருன்னு தெரியப்போகுது. நம்ம யாருட்டயும் போயி டொனேசன் வாங்கக் கூடாது. அவனுககிட்ட குடுத்த ஆயிரம் ரூபாய வாங்கிட்டு அத்தோட ஊருப் பொதுப் பணத்துல இருந்து போட்டு சீக்கிரத்துல கொடிக்கம்பம் நடனும். அவனுகள உசாராக் கங்காணிச்சுகிட்டே வரனும்."

ஆளாளுக்குப் பேசி ஒரு வழியா முடுச்சாக. பெரியாளுக சொன்ன எந்தப் பேச்சும் எடுக்கல. எல்லாம் எளந்தாரிகளாப் பேசி முடி வெடுத்துக்கிட்டாக. சொன்னது கெணக்காகவே டொனேசன் குடுத்த ரூவாய பள்ளத்தெரு நாட்டாமெ திருப்பி வாங்கிட்டாரு. பள்ளர் தெரு எளவட்டங்களாச் சேந்து, அம்பேத்கர் செலைக்குப் பக்கத்துலயே, அவுகளோடெ கட்சிக் கொடிக்கம்பத்த மேடை கட்டி நட்டுனானுக. இந்த அம்பேத்காரு கொடிக் கம்பத்துக்கு மேல நம்மக் கொடிக்கம்பம் ஒசராமா இருக்கனும்னு சொல்லி, நல்லா நீளமான கம்பிய நட்டு, அது சாஞ்சுராமெ இருக்க நாலாதிக் கத்துக்கும் கம்பியவச்சு இழுத்துக் கட்டுனானுக.

அதுல ஒரு கம்பி அம்பேத்கரோடெ செலமேல பட்டுக்கிட்டு போகவே பறையர் தெரு எளவட்டங்க நேரடியாகவே சொன்னாக, "இப்பிடி கம்பியக் கட்டாதீங்கப்பா, நாள பின்ன அம்பேத்காருக்குப் பந்தல் கிந்தல் போடயில, அப்ப கம்பிய அவுக்க வேண்டி வரும், பெறகு வீணான சண்டதான் வரும். அதுனால இப்பக் கட்டும் போதே கொஞ்சம் தள்ளிக் கட்டுங்க."

"நாங்க இப்பிடித்தாங்க கெட்டுவோம். ஒனக்கு மட்டுமா பஸ் ஸ்டாண்டு சொந்தம்? எங்களுக்குஞ் சொந்தந்தே."

"இதெல்லாம் தேவையில்லாத பேச்சு. எதுக்கு வீணாத் தகராறு கௌப்புறீங்க? கொஞ்சம் மேற்க தள்ளிக் கெட்டிட்டா யாருக்கும்

பாதகமில்லாம போகும்லெ?"

"நீங்க சொல்ற படியெல்லாங் கட்ட முடியாது. நாங்க இப்பிடித் தாங் கெட்டுவோம், ஒன்னால முடுஞ்சத பாத்துக்கோ."

"அப்ப நாங்க அத அவுத்துப் போடுவோம், பெறகு வந்து மல்லுக்கு வரக்கூடாது ஆமா."

"கம்பில கைய வச்சுப்பாரு. கையி ஓ ஒடம்புல இருக்காது."

"பாக்கலாம் ஒனக்கு ஒடம்பே இருக்காது. நாவகத்துல வச்சுக்கோ."

இப்பிடி மாறி மாறி ரெண்டு பேத்துக்கும் வாக்குவாதம் வந்து கிட்டே இருந்துச்சு. ரெண்டு பக்கமும் நீறுபூத்த நெருப்பா எளவட்டங்க அலஞ்சானுக. ரெண்டு தெருவுகள்ளயும் இருந்த பெரியாளுக ரெண்டு பேத்தயும் தட்டிக் குடுத்தாக. சண்டகிண்ட போட வேண்டாம்னு தொயந்து சொல்லிக்கிட்டே இருந்தாக.

சேசுரத்னம் ஒரு நாளு மசங்கவும் பஸ் ஸ்டாண்டு பக்கம் போயி கமுக்கமா கம்பிய அறுத்து உட்டுட்டு வந்துட்டான். தெருவுக்குள்ள வந்து நானு கம்பிய அறுத்து உட்டுட்டேன்டா, நம்மாளுக கொஞ்சம் உசாரா இருங்கனு சொல்லிட்டான்.

பள்ளர் தெரு எளவட்டங்களுக்கு வந்த வெளத்துக்கு அளவே இல்ல. நாய்க்கருக வேற அவனுகளத் தூண்டி உட்டாக. "அவனு களுக்கு எம்புட்டுத் திமுருன்னா நீங்க கட்டுன கம்பிமேல கைய வப்பானுக. உடாதீங்கடா அவனுகள. நீங்களா... இல்ல அவனு களான்னு பாத்துரனும்."

கம்பிய அறுத்து உட்டு கிட்டத்தட்ட பத்து பசுனஞ்சு நாளாகிப் போச்சு. பள்ளர் தெருவுல எளவட்டங்க பொழுதெனிக்கும் கூடிக் கூடிக் கமுக்கமா பேசிக்கிட்டாக. ரவைக்குரவெ முத்துலச்சுமி வீட்டுல வச்சு கூட்டம் போட்டாக.

வீரபாண்டி ரகசியமாச் சொன்னான். "நம்ம முன்னக்கூட்டியே நம்ம பொம்பள புள்ளைக துணிமணிகள எடுத்துக்கிட்டு பக்கத்துல ஊர்ல இருக்குற நம்மாளுகளோடெ வீடுகளுக்குப் போச் சொல்லிரு வோம். கெழடு கட்டைக வேணும்னா இங்ன நம்ம சாவடில வந்து இருக்கட்டும். இந்த வாரத்துக்குள்ள அந்தக் கம்பிய அறுத்த சேசுரத்துனத்த போட்டுரனும். நமக்கு நம்ம சாதித் தலைவருக, வெளியூர்ல இருக்குற நம்மாளுக பூராம் சப்போட்டு தருவாக. போட்டுத் தள்ளிட்டு ஒடனே ஓடிப் போயிரனும்."

"ராத்திரி நேரத்துல செஞ்சம்னா, அவனுக தெருவுல ஆம்பளைக இருப்பானுக. பதுலுக்கு ஓடியாந்து வெட்டுனாலும்

வெட்டுவாக. அதுனால பகலுல தாஞ் செய்யனும். பகல்ல செஞ்சா எல்லாப் பெயலும் வேலைக்குப் போயிருப்பானுக."

"இவெ ஒரு பெயந்தாரிப் பெய. அவனுக ஓடியாந்து நம்ம தெருவுக்குள்ள துணுஞ்சு வந்து வெட்டிருவானாக்கும்?

"வந்தாலும் வருவானுக. நம்ம பகலுல செஞ்சாத்தான் நல்லது."

"அப்படி வந்தானுகன்னா நம்ம நாட்டு வெடிகுண்டு ரெடி பண்ணித் தயாரா வச்சுக்கிட்டு எறுஞ்சுபோட வேண்டியதுதான். "

"அதுசரிதான். பகலுலன்னா ஆம்பளைக பூராம் வேல வெட்டிக்குப் போயிருவானுகளே. அப்ப காடு கரைகள்ள போயா வெட்டச் சொல்றீக?"

"காடுகரைகள்ள வேண்டாம். நம்ம குறிப்பா அந்த சேசுரத்துனம் பெயலத்தான் போடனும். நம்ம இங்னகுள்ள இருந்தே நோட்டம் பாத்துக்கிட்டே இருக்கனும். எப்பிடியும் அந்த சேசுரத்துனம் பெய வேல வெட்டிக்கு இப்பிடித்தானெ வரனும் போகனும். என்னைக்குனாலும் பசாருப்பகம் வந்துதானெ ஆகனும். எங்குட்டுப் போகனும்னாலும் நம்ம ஏரியாவெக் கடந்துதானெ அவனுக போகனும் வரனும். அப்ப பாத்துக்கிரலாம்."

சொன்னது கணக்கவே தெனமும் கடப்பக்கம் யாரு வாரது, யாரு போறதுன்னு பாத்துக்கிட்டே இருந்தாக. ஆளு பாத்துச் சொல்றதுக் குன்னே கருப்பசாமி பெயல கடப்பக்கமே இருக்கச் சொன்னாக. பத்துப் பதுனஞ்சு எளவட்டங்க நல்ல வீச்சறுவா, நாட்டு வெடிகுண்டு எல்லாத்தயும் ரெடியா வீடுகள்ள வச்சிருந்தாக. இவுகளோடெ இந்த ஏற்பாடு ஒன்னும் தெரியாமெ, பறையர் தெருவுல சனங்க வழக்கம் போல வேலயுஞ்சோலியும் செஞ்சுகிட்டு இருந்தாக.

அன்னைக்கு பொதங்கெழமெ. சேசுரத்துனத்தோட மாமெ எங்குட்டோ வருசனாட்டுச் செம, செத்துப்போனாம்னு துஸ்டிக்குப் போயிட்டு வந்தான். ஞாயித்துக் கெழம போனவன் செவ்வாக் கெழம மசங்கவும் ஊருக்குள்ள வந்துட்டான். மறா நாளு வேல ஒன்னும் கெடைக்காம வீட்லதான் இருந்தான். சும்மா இருக்க மாட்டாமெ, பத்து மணி வாக்குல பசாருப்பக்கம் போயி டீ குடிக்க லாம்னு கூட நாலஞ்சு பெயலுகளையும் கூட்டிக்கிட்டு போயிருக்கான்.

சேசுரத்தனம் மேற்காமெ போனதப் பாத்த கருப்பசாமி ஒடனே தெருவுக்குள்ள ஓடியாந்து மத்த எளவட்ட பெயலுககிட்ட

சொல்ல, பத்து இருவது பேரு நல்லா வெறகு வெட்டுற வீச்சறுவாளுகள எடுத்து முதுகுக்குப் பின்னால மறச்சுக்கிட்டு பசாருக்கு வந்துட்டானுக.

இது ஒன்னுந் தெரியாத சேசுரத்தனம் பெய, கடைல டீப் போடச் சொல்லிட்டு அவெம்பாட்டுக்கு நின்னுருக்கான். எடுத்த எடுப்புலயே காளிமுத்து பெய சேசுரத்துனம் தலையக் குறிபாத்து அறுவாள ஓங்குனத, கூட நின்ன பெயலுக பாத்துட்டு அலறி அடுச்சுட்டு மேற்காமெ ஓடிருக்கானுக. சேசுரத்துனமும் பாத்துட்டு கதிகலங்கிப் போயி கையக் கொண்டி அறுவாளத் தடுத்துட்டு மேற்காமெ ஓடுனான். அறுவா அவெங் கையால சதக்குனு வெட்ட பசாரெல்லாம் ரத்தம் பீச்சி அடிச்சது. அதோடெ முடுஞ்சமட்டும் ஓடுனான்.

அவெங்கூட வந்த பெயலுக வடக்காமெ ஓடி கம்மா வழியா பறையர்க தெருவுக்குள்ள வந்து விசயத்தச் சொன்னாக. ஆனா எல்லாரும் வேல வெட்டிக்குப் போயிட்டதுனால தெருவுக்குள்ள சாஸ்தியா ஆம்பளைக இல்ல.

காலுல பூட்சு போட்டதுனால சேசுரத்துனத்தால மேக் கொண்டு வேகமா ஓட முடியாமெ, பக்கத்துல இருந்த ஒரு வீட்டுக்குள்ள மொழஞ்சுட்டான். அம்புட்டுத்தான் பின்னாலியே வெரட்டிகிட்டுப் போனவனுக, வீட்டுக்குள்ள மொழஞ்சு துள்ளத் துடிக்க, அவெங் கதற கதற மாறி மாறி வெட்டி கொன்னுட்டு ஓடிட்டானுக. அந்த வீட்டுல ரத்தம் கொளங்கெணக்காய் பெருகிக் கெடந்துச்சுன்னு பாத்த சனமெல் லாம் சொல்லி அழுதுச்சுக.

பறையர் தெருவுக்குள்ள வந்து சொன்ன பெயலுகளுக்கு பின்னால நடந்த விசயம் ஒன்னும் தெரியாது. சேசுரத்துனம் அண்ணங் கையில வெட்டுப்பட்டு, மேற்காமெ ஓடிட்டாக. நாங்க இப்பிடி வடக்காமெ ஓடியாந்து, கம்மாக் கரவழியா தெருவுக்குள்ள வந்துட் டோம்னு சொன்னாக.

அந்நியாரத்துல எங்கயோ போயிட்டு கம்மாக்கர வழி, தெக்காமெ வந்த ஏழுமலங்ற பள்ளர்தெருப் பையன, பறையர் தெருவுல இருந்த ஏழெட்டுப் பெயல்க சுத்தி வளச்சுக்கிட்டு வெட்டப் போனாக.

அந்தப் பெய பரிதாபமா கெஞ்சுனான். “அண்ணே, எனக் கொன்னும் தெரியாதுண்ணே, நானு காலங் காத்தாலயே வெயக் காட்டுப்பக்கம் வந்துட்டு, இப்பத்தாம்ணே குளுச்சுட்டுப் போறேன். எனிய ஒன்னுஞ் செஞ்சுராதீகணே. எனிய உட்டுருங்கணே... ஒங்களக் கையெடுத்துக் கும்புடுறேண்ணே.”

அவனப் பாத்தா பரிதாபமா இருந்துச்சு. ஒடனே ஆசிர்வாதம் பெய சொன்னான் "சே, பாவெம்டா இவன உட்டுருவோம்டா. சேசுரத்துனத்த இவெ வெட்டலைல... பெறகெதுக்கு இவன வெட்டனும். உட்டுருவோம்டா."

"நம்ம சேசுரத்துனம் மட்டும் என்ன செஞ்சான்? சும்மா பசாருக்குப் போனவனத்தானெ வெட்டிருக்கானுக. இப்பிடி எல்லாம் எரக்கம் பாத்தீனா அம்புட்டுத்தான்."

"சேசுரத்துனந்தான் தப்புச்சு ஓடிட்டாம்லெ. நம்ம வீணா எதுக்குடா ஒரு கொலயச் செய்யனும். உடுங்கடா."

"தப்புச்சு போனாலும் கையில வெட்டுப்பட்டுட்டுல ஓடிருக் கான். அதுக்கு என்ன சொல்ற."

இதுக்கெடயில அந்தப் பள்ளத்தெரு பெய ஏழுமல அழுது கிட்டே இவனுக காலுல உழுந்து கெஞ்சவும் பரிதாபப்பட்டு அவனப் போக உட்டுட்டாக. அவனும் தப்புச்சோம் பொழச் சோம்னு ஒரே ஓட்டமா ஓடியாந்து அவுக தெருவுக்குள்ள மொழஞ்சுக்கிட்டான்.

அந்நியாரத்துல மேற்க புல்லுக்குப் போன பொம்பளைக ஓட்டமும் நடையுமா கத்திக்கிட்டு பறையர் தெருவுக்குள்ள வந்ததும் விசயத்த அழுதுகிட்டே சொன்னாக.

"காடு கரைகள்ள புல்லு பெறக்கிக்கிட்டு இருக்கயிலேயே அந்த சின்னத்தம்பி தேவரு சொன்னாரு. நம்மளுக்கும் பள்ளர் களுக்கும் கலவரம்னு சொன்னாரு. அந்தாணிக்க பெறக்குனது போதும்னு புல்ல அள்ளிக் கெட்டிக்கிட்டு என்னாகுமோ, ஏதாகு மோன்னு பயந்து பயந்து ஊருக்குள்ள மொழஞ்சவுடனே, நாய்க்கமாரு தெருவுலயே சொல்லிட் டாக. சேசுரத்துனத்த கொன்னு போட்டாகன்னு." அமலோற்பவம் அழுதுகிட்டே சொன்னா.

ஒடனே தெருவுல இருந்த பெயல்களுக்கு அதிர்ச்சியா இருந்த துச்சு. "நீ என்னத்தா சொல்றெ. சேசுரத்துனத்தெ கையில வெட்டிட் டாகளா? கொன்னுட்டாகளா?"

மொதல்ல கையில வெட்டவும் அந்த மச்சான் அதோடெ ஓடி இருக்காக. பூட்சு காலோடெ தொயந்து ஓட முடியாமெ அங்ன யாரோ ஆசாரிமாரு வீட்டுக்குள்ள மொழஞ்சிருக்காக. வீட்டுக்குள்ள போயி பத்து பெயல்களும் சதக்கு சதக்குனு மாறி மாறி வெட்டவும் அந்த வீடு பூராம் ரத்தம் வெள்ளங் கணக்கா ஓடுச்சாம். சத்தம் போட்டு அலறுனாராம். ஒருத்தரு கூட போயி மடக்கலயாம்." மேரி சொன்னா.

"அப்ப கொன்னே போட்டாகளா?" விசுவாசம் கேட்டாரு.

"ஆமாங்றெ. கொன்னு கொண்டாந்து பசாருலயே வீசிட்டுப் போயிட்டானுக. இப்ப பசாருல அவரு பெணத்தப் பாத்துட்டுத் தானே பயந்தடுச்சு ஓடியாரோம். அவெ எப்பயும் போடுறது கெணக்கா வெள்ளைல சிலுக்கு சட்டபோட்டுருக்கான். இப்பப் பாத்தினா அந்த வெள்ளச் சட்டனே சொல்ல முடியாது. பூராம் ரத்தமாகக் கெடக்கு. கையி, காலு, வகுறு, முதுகு, மூஞ்சின்னு ஒரு எடம் பாக்கி இல்ல. மாறி மாறி படுவாப் பெயல்க கொத்திட்டானுக."

"எங்கயோ ஊருக்குப் போயிட்டு வந்துரும்பா பொறுக்கோ. சூட்டு போட்ட மேனிக்கா கெடக்கான். காலுல வெள்ளக்கலரு பூட்சு. ரத்தம் பூராம் வெளியேறவும், அம்மாந்தண்டி ஆளு இப்ப சுருங்கிப் போயி இத்தினிக்கானா கெடக்கான்."

"யாருமத்த அனாதப்பெய கெணக்கா அந்தப் பசாருல அவம் பொணத்தப் பாக்கயில வகுறெல்லாம் பத்திக்கிட்டு எரியுது."

"இதே பசாருல எத்தன தடவ நெடுமரமா தெக்கயும் வடக்கயுமா திருஞ்சவெ இன்னைக்கு வெட்டுன மரமா சாஞ்சு கெடக்கான்."

"எத்தன தடவ மலங்காட்டுகளுக்குள்ள வெறகு வெட்ட போயிருப்பான், வந்துருப்பான் அப்பயெல்லாம் ஒரு புலி அடுச்சு ஒரு யானை மிதுச்சு கொன்னுருக்கக் கூடாதா? இருந்துருந்தும் இந்தப் பள்ளப் பெயல்க கையலாயா வெட்டுப்பட்டுச் சாகனும்?" பொம்பளைக ஆளாளுக்குச் சொல்லிச் சொல்லி அழுதாளுக.

அதுக்குமேல பெயல்க யாரும் அங்ன நிக்கல. கத்திகளையும் கம்புகளையும் தூக்கிக்கிட்டு விருவிருன்னு பள்ளத் தெருவுக்குள்ள மொழஞ்சாக. எல்லாரும் வேலைக்குப் போயிட்டதுனால இருந்த பத்து பதுனஞ்சு வெடலப் பெயலுகதான் ஓடுனாக. அவுக தெருவுல ஆம்பளைக யாரும் அம்புடல. ஒடனே ஆத்துரத்துல மண்ணெண் ணெய்ல துணிய முக்கி பத்தவச்சுப் பத்தவச்சு பள்ளர்க வீடுக மேல எறுஞ்சுட்டு தெருவுக்குள்ள வந்தாக. இதுக்கெடயில காடுகரைகள்ள வேலைக்குப் போனவுகளுக்கு விசயம் காட்டுத் தீயா பரவ, காடு கரைகள்ளயே ரெண்டு பள்ளர்கள பறையர்க வெட்டிப் போட்டாக. இதுக்குப் பதுலுக்குப் பதுலா பள்ளர்க மலையடிவாரத் தோப்புல காவலுக்கு இருந்த லூர்து சாமியயும், மாத்தூர்ல இருந்து மகளப் பாக்க வந்த வர்க்கீசயும் கொன்னு போட்டாக.

செய்தியக் கேள்விப்பட்டு ரெண்டு தெருவுக்குள்ளயும் போலீசுக மொழயவும், ரெண்டு தெருவுலயும் ஆம்பளைக பூராம் ஓடிட்டாக. பள்ளர் தெரு பொம்பளைகளும் மேப்பகலுலயே

வீடுகள காலி பண்ணிட்டு பக்கத்து ஊர்கள்ள இருக்குற பள்ளர்க கிட்ட போயிட்டாக. பறையர் தெருவுகள்ள பொம்பளைக மட்டும் இருந்தாக. பள்ளிக் கொடங்களுக்குப் போன பிள்ளைக பயந்து பயந்து சாயங்காலம் வீடுகளுக்கு வந்து சேந்தாக. பள்ளர்க பத்துப் பேத்த கொன்னுட்டாக, பறையர்க அஞ்சு பேத்த கொன்னுட்டா கன்னு கண்டமானிக்கா சொல்லிக்கிட்டு அம்புட்டுப் பேரும் பயந்து போயிக்கெடந்தாக. யாரு யாரு வெட்டுப்பட்டாகன்னு ஒரு வெவர மும் சரியாத் தெரியல.

பறையர் தெரு சாவடிக்கு முன்னால பொம்பளைகளா கூடிக் கெடந்தாக. கெழக்க சேசுரத்துனத்தோட வீட்டுக்கு முன்னால, சேசு ரத்துனதோட பொஞ்சாதி கதறிக் கதறி அழுதுக்கிட்டுருந்தா. அவளச் சுத்தி நெறய்யா பொம்பளைக இருந்தாக.

"கடச் செம போயிட்டு இந்தா வாரம்னு சொல்லிட்டு போனியே ....ராசா.... ஒனக்கு இந்தச் சாவா எழுதியிருந்துச்சு.... எனிய இந்தக் கோலத்துல உட்டுட்டு போயிட்டியே ஏ....ராசா....நா யார நம்பிப் பொழப்பேன்? பெறக்கப்போற ஒம்பிள்ளை மொகத்தக்கூட பாக்காம போயிட்டியே....ஏ....ராசா... எம்மா..." சேசுரத்துனத்தோடெ பொஞ் சாதி காணிக்க மேரி கதறிக்கதறி அழுதா.

கூட இருந்த பொம்பளைக, "சும்ம இருத்தா. வாயும் வகுறுமா இருக்க அழுகாத. ஒனக்கெதுவும் ஆகிப்போச்சுன்னா, இந்தப் பெயலுக்கு யாரு இருக்கா? அழுகாதத்தா. என்ன செய்ய? ஓம்மக்க வளந்து வந்துதான் அந்தப் பெயலுகளோடெ நெஞ்சாங் கொலய ரெண்டா வகுறனும்." சேசுரத்துனத்தோட மூத்த மகனெக் காட்டிச் சொன்னாக.

அவனப் பாத்துட்டு அவனக் கட்டிப் புடுச்சுட்டு அழுதா, "ஏ ராசா... பாரு சாமி. ஒங்கய்யன. என்ன நாயஞ் செஞ்சு வெட்டிப் போட்டாகன்னு. ஒனியப் படிக்க வச்சு பெரியாளா ஆக்கனும்னு ஒங்கய்யங் கெனாக் கண்டுக்கிட்டு இருந்தானே... ஏஞ்சாமி... நா என்ன செய்வே... ஏம்மா..."

அவா அழுதுக்கிட்டு இருக்கயிலயே திமுதிமுன்னு போலீசுக் காரனுகளா தெருவுக்குள்ள ஓடுனானுக. பொம்பளைக பூராம் பயந்து போயி ஒரு சத்தங்கூட போடாமெ கம்முனு இருந்தாளுக. அதுல ஒரு போலீசுக்காரன் அதட்டிக்கிட்டு சொன்னான். "சரி... சரி... எல்லாரும் வாங்க. கலெக்டர் வந்துருக்காரு... வந்து என்ன நடந்துச்சுன்னு அப்பிடியே சொல்லுங்க."

எல்லாப் பொம்பளைகளும் போட்டது போட்டபடி கெடக்க,

அப்பிடி அப்பிடியே போட்டுட்டு போலீசுக்காரனுககூட போனாக.

"பசாருல பிரேதங்களக் கொண்டாந்து போட்டுருக்கோம். வந்து ஒங்க தெரு பெரேதங்கள அடையாளங்காட்டுங்க வாங்க."

போலீசுக்காரன் சொல்லவும் சேசுரத்துனம் பொண்டாட்டியும் புருசம் மொகத்தப் பாக்கனும்னு தட்டுத் தடுமாறி எங்துருச்சு வந்தா. கெழவி கெட்டைக மொதக் கொண்டு போலீசுக்காரனுகளோடெ போனாக. பசாருக்குப் போகவும், பெரேதங்களப் பாத்துட்டு அம்புட்டுப் பேரும் கத்திக் கத்தி அழுதாக. அதப் பாக்கவே பரிதாபமா இருந்துச்சு. பலசாதி சனங்களும் வந்து பாத்தாக. பாத்தவுக பூராம் அழுதாக. அழுகக்கூட உடாமெ, போலீசுக்காரனுக அம்புட்டுப் பேத்தயும் அரட்டி மெரட்டி போலீசு வண்டில ஏத்துனானுக. கலெக்டர் பஸ் ஸ்டாண்டுல இருக்காரு, வாங்கன்னு சொல்லி, ஏத்திக்கிட்டு போனா, பஸ் ஸ்டாண்டுல யாருமே இல்ல.

தங்கள ஏமாத்தி எங்குட்டோ கூட்டிக்கிட்டுப் போறதக் கண்டதும், வண்டில இருந்த பொம்பளைக பூராம் வசவுல கூடிட்டாளுக. "செத்த பெணத்தக்கூட பாத்து மனசார அழுகக்கூட உடாமெ எங்கடா எங்களக் கூட்டிக்கிட்டு போறிக? எறக்கி உடுங்கடா படுக்காளிப் பெயல்களா. நீங்கள்ளாம் அக்கா தங்கச்சிக்கூட பெறக்க லியாடா... இத்தினிக்கூட ஈவு எரக்கம் இல்லாத கல்நெஞ்சக்கார பெயலுகா... எறக்கி உடுங்கடா... பாடைல போற தேவிடியாப் பெயலுகா..." பொம்பளைக கண்டமாணிக்க கத்துனாளுக. வண்டி பஸ் ஸ்டாண்டக் கடந்து வடக்கூரு ரோட்டுல திரும்பவும் இன்னும் அதிகமாக அலறுனாக.

"வடக்கூரு போலீசு டேசனுக்கு கொண்டு போறாகத்தா. நம்ம சாவுங் குடுத்துட்டு, நம்மளயும் புடுச்சுக் கொண்டு போறானுக. பள்ளத் தெரு பொம்பளைக ஒருத்தியக் கூட கொண்டாரல பாரு" சம்மனசு மேரி சொன்னா. இதக்கேட்டுட்டு பொம்பளைக பூராம் கூ... கொலோன்னு அலறுனாளுக.

ஒடனே ரெண்டு போலீசுக்காரனுக லத்திக் கம்பக் கொண்டி அவுகள அடுச்சு அமைதியாக்கி, வடக்கூரு போலீசு டேசன்ல செயிலுக் குள்ள அடச்சுப் போட்டானுக. இவனுக பேச்ச நம்பி வந்து இப்பிடி மாட்டிக்கிட்டமேன்னு அழுதாளுக.

சேசுரத்துனம் பொண்டாட்டி இப்பமோ பெறகோ கொழந்த பெத்துக்குருவா போல இருந்தா. ஏழெட்டு வருசமா பிள்ள செனிக்காம, இப்பத்தா மாசமா இருந்த செல்லக்கிளி பிள்ளையும் செயிலுக்குள்ள இருந்தா. அதவிட கண்றாவியா பெறந்து ரெண்டு மாசங்கூட ஆகாத பச்சப் புள்ளய கைல வச்சக்கிட்டு சின்னம்மா

இருந்தா. இன்னங் கொடும என்னன்னா, ஆறுமாசப் புள்ளைய வீட்ல தொட்டில தூங்கப் போட்டுட்டு பெரேதத்தப் பாத்துட்டு வந்துரலாம்னு போன செல்வ மேரியும் செயிலுக்குள்ள வந்து மாட்டிக்கிட்டு, பிள்ள என்ன ஆச்சோ, ஏது ஆச்சோ, புருசங்கூட போலீசுக்குப் பயந்து ஓடிட்டானே... அக்கம் பக்கம் கூட ஆளுக இல்லியே..ன்னு நெஞ்சு வலிக்க அழுதுக்கிட்டு இருந்தா.

"யாரு வந்து நம்மள என்னன்னு கேட்டு வெளிய எடுக்கப் போறாக? ஊருக்குள்ள ஒத்த ஈங்குச்சி இல்லியே. இப்பிடியே கெடக்க வேண்டியதுதானா" ரோசம்மா சொல்லி அழுதா.

செல்லக்கிளிதான் அதுல பத்து வர படுச்சவா. அவாதான் காவலுக்கு நின்ன போலிசுக்கிட்ட அழுதுக்கிட்டே கெஞ்சுனா, "ஐயா, இப்பிடி அம்புட்டுப் பேத்தயும் அநியாயமா ஏமாத்திக் கொண் டாந்து அடச்சிப் போட்டீகளே. போட்டது போட்டபடி கெடக்க, அப்பத்தான காடுகரைகள்ள வேல செஞ்சுட்டு வீட்டுக்கு வந்தோம். நாங்க என்ன குத்தம் செஞ்சம்னு எங்களக் கொண்டாந்து அடச்சிட்டீக? ஊருக்குள்ள நடந்த விசயங்கூட சரியா எங்களுக்குத் தெரியாது சார். இந்தா பாருங்க வெட்டுப்பட்டு செத்துப் போன சேசுரத்துனத்தோடெ பொண்டாட்டி. புருச மொகத்தக்கூட பாக்க உடாமெ அவளக் கொண்டாந்து அடச்சுட்டீக. இப்பயோ பெறகோ அவளுக்கு இடுப்பு வலி வந்து பிள்ள பெறக்குற டயத்துல நிக்கா. நீங்கள்ளாம் அக்கா தங்கச்சிகூட பெறந்தவுகதானெ. கொஞ்சம் கருண காட்டுங்கய்யா."

அந்தப் போலிசுக்காரன் சொன்னான், "நானு ஒன்னுஞ் செய்ய முடியாதுமா. இப்ப இன்ஸ்பெக்டரு ஐயா வருவாரு. அவருட்ட சொல்லு. அவருதான் ஒங்கள வெளிய உட முடியும்."

இன்ஸ்பெக்டர் வரவும் சொல்லனும்னு இருந்தா. செல்லக் கிளி. அது மாதிரியே மறுநாளு நாலஞ்சு போலிசுக்காரனுக வந்து அம்புட்டுப் பேத்தயும் இன்ஸ்பெக்டர்ட்ட கூட்டிட்டுப் போனானுக. செல்லக்கிளி தைரியத்த வரவழச்சுக்கிட்டு எப்பிடி ஏமாத்தி அவுகள கொண்டாந்தாகன்னு சொன்னா.

அவரு எல்லாத்தயும் பாத்துட்டு சேசுரத்துனம் பொண்டாட்டி, பச்சப் புள்ளக் காரிக, கெழடிகள வெளிய அனுப்பிட்டாரு. செல்லக் கிளி கூடுமானவரை கெஞ்சுனா. ஆனா அவள உடல. மறுபடியும் மீதி இருந்த பதினாறு பொம்பளைகள செயிலுக்குள்ள போட்டாக.

அப்பிடிக் கூட்டியாரும் போது, போலிசுக்காரனுக செல்லக் கிளிய பூட்சு காலுட்ட அடிவகுத்துல எத்தி, "சர்க்கிள்கிட்ட பொகாரு செய்றியோ? வாயக் கிழிச்சுருவோம் இனி பேசுனா,"

சொல்லிக்கிட்டே திரும்பியும் எத்துனான். கூட வந்தவனுக லத்திக் கம்புட்ட பிட்டாணில அடுச்சான். அப்பிடியே வந்து சுருண்டு படுத்துட்டா செல்லக்கிளி. அந்நியாரமே, வகுத்துல சுரீர்னு வலி எடுக்க கரு கலஞ்சு செயிலுக்குள்ளய அபார்சன் ஆகி படாத பாடுபட்டா....

கூட இருந்த பொம்பளைக பூராம் பரிதவிச்சுப் போயி அழுதாளுக. "எந்தச் சாமி புண்ணியத்துலயோ ஏழெட்டு வருசங்கழுச்சு பிள்ள நின்னுச்சு. இந்த எழவெடுத்த பெயலுக பூட்சு காலுட்ட வகுத்துல மிதுச்சு அதயுங் கொன்னுட்டானுக. வெளங்க மாட்டானுக. இந்த நாசகார நாப்பெயலுக."

தெருவுக்குள்ள இருந்த படுச்ச கொமரிப் பிள்ளைகளுக்கு என்ன செய்றது ஏது செய்றதுன்னு ஒன்னும் புரியல. அதுல ரோஸ்மேரி கொஞ்சம் வெவரமானவளா இருந்தா. அவாதா மத்தவுகளுக்கும் தெம்பு சொன்னா. "நம்ம சும்மா இப்பிடியே அழுதுக்கிட்டு கெடக்கக் கூடாதுத்தா. செயிலுக்குள்ள இருக்குற பொம்பளைகளச் சீக்கிரமா வெளியே கொண்டாரணும். நம்மூரு சாமியாருதான் கலவரம்னு தெருஞ்ச ஒடனே ஓடிப் போயிட்டாரு. நம்ம எல்லாரும் பக்கத்தூரு சாமியாருட்ட போயி ஆலோசனை கேப்போம்."

"வேண்டாம்தா. இந்த ஊர்து பிள்ள அவுகண்ணெ மதுரைல தான இருக்கு. அவருக்கு போன் போட்டு வரச் சொல்லுவோம்?"

"எதுக்கு? அந்த அண்ணனயும் போலிசுக்காரன் புடுச்சுட்டுப் போகவா?"

"அவுகள எதுக்குப் புடிக்காக? அவுக வேற ஊருதானெ? இதுக் குள்ள எப்பிடியும் அவுகளுக்கு விசயம் தெரியாமயா இருக்கும்?"

"இந்தப் போலிசுக்கார நாயிக வேற நம்மளயே கங்காணிச்சுக் கிட்டு இருக்குறானுக. தெக்க வடக்கெ போக உடமாட்டேங் கானுக. வாங்க நாளைக்குக் காலைல நம்மளே போயி மனு குடுப்போம்."

அன்னைக்கு ராத்திரி யாருமே தூங்கல. கலவரத்துக்கு இருந்த பயத்தவிட போலிசுக்காரனுகளுக்குத்தான் ரொம்ப பயம்மா இருந்துச்சு. மறுநாளு காலைல எல்லாரும் வடக்கூரு போகனும்னு இருக்கயில ரெண்டு போலிசுக்காரனுக வந்து, மூனு பிரேதங் களையும் டேசன்ல வந்து வாங்கிட்டுப் போகச் சொன்னானுக.

ரோஸ்மேரி பத்து இருவது பொம்பளைகளைச் சேத்துக்கிட்டு, ஒரு மாட்டு வண்டி கெட்டிக்கிட்டு வடக்கூரு போக ரெடியானாக. ராணிப் பிள்ள நல்லா வண்டி ஓட்டுவா. இவுக வண்டி கெட்டிட்டு

போறதப் பாத்த போலிசுக்காரனுக, யாரும் தெருவ விட்டு வெளியே போகக்கூடாது, புதுசா யாரும் ஊருக்குள்ள வரக்கூடாதுன்னு அரட்டுனானுக.

"நாங்க வடக்கூருதான் போறோம் சார். எங்க தெரு பொணங்கள வாங்கியாரப் போறோம். நாங்கதான் போகணும். வேற யாரு இருக்கா எங்களுக்கு?" ரோஸ்மேரி சொன்னா.

"ஏ... ஒங்க தெரு ஆம்பளைகதான் அங்கங்க ஒளுஞ்சிருக்கானுகள்ள. அவனுகளுக்கு அப்பப்ப நீங்கதான கஞ்சி கொண்டு போயி குடுத்துட்டு வாரீக. எங்களுக்கென்ன தெரியாதுன்னா நெனைக்கீக?" போலிசுக்காரன் சொல்லவும், ரோஸ்மேரியும் வெளமாக் கேட்டா, "அங்கங்க ஒளுஞ்சிருக்காம்னா போயி புடிக்க வேண்டியதுதான. எங்கள எதுக்கு மெரட்டிக்கிட்டு இருக்கீக?"

இப்பிடி பேசிக்கிட்டு இருக்கயிலேயே போலிசுக்காரனுகளே பொணங்களக் கொண்டாந்துட்டாகன்னு சொன்னாக. ரோஸ்மேரி பஸ் ஸ்டாண்டுக்கு மாட்டு வண்டிய ஓட்டிக்கிட்டுப் போயி மூணு பொணத்தயும் வாங்கி வண்டியிலயே வச்சு கொண்டாந்தாக. தெருவுக்குள்ள வரவும் பொம்பளைக பூராம் வாயுல வகுத்துல அடுச்சுக்கிட்டு அழுதாக. போலிசுக்காரனுக இத்தினிக்கூட எரக்க மில்லாம அழுகக்கூட உடமாட்டேனுட்டாக. பொம்பளைகளக் கூப்டுகிட்டு, வண்டிய ஓட்டிக்கிட்டு கல்லறைக்குப் போயி பெரிய குழியா ஒரு குழிய பொம்பளைகளா வெட்டி, மூணு பெணத்தையும் ஒரு குழிக்குள்ள போட்டு பெதச்சிட்டு வந்தாக.

பொம்பளைகளாப் போயி இப்பிடி பெதச்சிட்டு வாரதப் பாத்த போலிசுக்காரனுகளுக்கு ரொம்பா ஆச்சரியமாப் போச்சு. பொட்டக் கழுதைக இம்புட்டுத் துணுச்சலா இருக்காளுகளேன்னு பேசிக்கிட்டாக. ஆனா பள்ளர் தெருவுல, வண்ணாங்களுக்குத் துட்டு குடுத்து அவுகளயே கொண்டு போயி பெதைக்கச் சொன்னாகளாம்.

# எட்டு

மறுநாளு, இன்னும் ரொம்பா போலிசுக்காரருக வந்து தெருவுக்குள்ள குமிஞ்சாக. ஊருக்குள்ள எங்ன பாத்தாலும் போலிசு தான். தெருத் தெருவுக்கு பத்து இருவதுன்னு போலிசுக்காரருக நின்னாக. பஸ் ஸ்டாண்டு, பசாரு எல்லா எடத்துலயும் போலிசுக் காரருகதான் இருந்தாக. அவனுகளப் பாக்கெயிலயே பயம்மா கெடந்துச்சு. ஒத்த ஆம்பள கூட ஊருக்குள்ள இல்லாத நேரத்துல, இந்த போலிசுக்காரனுக மொரட்டுத்தனமா அங்குட்டும் இங் குட்டுமா போறத வாரதப் பாக்கையில நடுக்கமாத்தான் இருந்துச்சு. இதுல வேற வீடு வீடா மொழஞ்சு ஆம்பளைகளத் தேடுற சாக்குல பொம்பளைககிட்ட அக்கிரமமாப் பேசுரதும், நடக்கிறதும் பொம் பளைகளுக்கு ரொம்பா பயம்மா கெடந்துச்சு. ஊரவிட்டு ஓடிரலா மான்னு இருந்தாலும், எங்க போறதுன்னு தெரியாம தவிச்சுக்கிட்டு இருந்தாக.

இப்பிடி இருக்கயில ரோஸ்மேரி பொம்பளைக கூப்டு சொன்னா "எப்பிடியாச்சும் வடக்கூரு டேசன்ல இருக்குற பொம் பளைகளப் போயி பாத்து அவுகள வெளிய கொண்டு வரனும். நம்ம பக்கத்து ஊருச் சாமியார்ட்ட போயி வெவரத்தச் சொல்லிக் கேப் போம்."

மத்தவுகளும் சரின்னு சொல்லி ஆளுக்குப் பத்தோ, அஞ்சோ ரூவா குடுத்தாக. வேல வெட்டி எதுக்கும் போக முடியாமக் கெடந் தாலும் அங்ன தெருவுக்கிட்ட இருக்குற வயக்காட்டுகள்ள புல்லு கில்லு பெறக்கிப் போட்டு, பால் பீச்சி வித்து எப்பிடியோ மொறயக் கழுச்சாக. கஞ்சித் தண்ணிக்கு இல்லாதவுகளுக்கு, கொஞ்சநஞ்சம் இருக்குறவுக குடுத்து உதவுனாக. நாலஞ்சு பேத்தக் கூப்டுக்கிட்டு ரோஸ்மேரி வயக்காட்டுப் பாதையா நடந்து போயி வடக்கூரு டேசன்ல போயி பொம்பளைகளப் பாக்கப் போனாக. டேசன்ல போயி பொம்பளைகளப் பாத்து, அவுகளுக்குத் தேவையான சாமான்கள வாங்கிக் குடுத்துட்டு வந்தாக. சாமியார்ட்ட சொல்லி எப்படியும் அவுகள வெளிய கொண்டு வந்துரலாம்னு ஆதரவாச் சொல்லிட்டு மசங்குற நேரத்துக்கு மறுபடியும் வயக்காட்டுப்

பாதையா ஊருக்குள்ள வந்து சேந்துட்டாக. இவுக இப்பிடிப் போயிட்டு வந்தத போலிசுக் காரனுக எப்பிடியோ கண்டுபுடுச் சிட்டாக. மறுநாளு அம்புட்டுப் போலிசுக்காரனுகளும் கெட்ட கெட்ட வார்த்தையிலெ வஞ்சுகிட்டு ஒடி ஒடி லத்திக் கம்புட்ட பொம்பளைகள அடுச்சாக.

"எங்கடி ஒங்க புருசம்மாருக? அவனுகள ஒளுச்சு வச்சுக் கிட்டு, இவளுக போயி ரகசியமா சோறு குடுக்கிறது, துட்டு குடுக் குறது. எல்லாம் எங்களுக்குத் தெரியாதுன்னாடி நெனச்சீக! சொல்லுங்கடி ஒழுங்கா... இல்ல ஒங்கள நொறுக்கிப் போடுவோம் நொறுக்கி. ஒங்கள அடிக்கிற அடில, அவனுக வந்து சரண்ட ராகனும்" சொல்லிக்கிட்டு தெருத் தெருவா வீடு, வீடா மொழஞ்சு பொம்பளைகள அடுச்சாக.

தெருவெல்லாம் ஒரே அலறல் சத்தம்தான் கேட்டுச்சு. சின்னப் பிள்ளைக, கெழவிக, கொமரி குட்டச்சிக, பொம்பளைக அம்புட்டுப் பேத்தயும் முதுகு, கை, காலு, தொட கிடன்னு பாக்காம சத்து சத்துன்னு கம்புட்டயே போட்டு வெளுத்து வாங்குனாக. அம்புட்டுப் பேத்துக்கும் ஒடம்பெல்லாம் ரத்தங் கண்ணிப் போய் ரத்தங்கட்டி கரேர் கரேர்னு திட்டுத் திட்டா வீங்கிப் போச்சு. தெக்க வடக்க ஆசுபத்திரிக்கு மருந்து போடக்கூட போக முடியாமெ வென்னி வச்சு ஒத்தனங் குடுத்துட்டு, அழுதுட்டு இருந்தாக.

போலிசுக்காரனுக அடிக்க ஆரம்பிக்கவும் பொம்பளைக பூராம் மொத்த மொத்தமா வீடுகளுக்குள்ள மொழஞ்சுகிட்டு, ஒருத்தர ஒருத்தரு கட்டிப் புடுச்சுட்டு கதறுனாக. ஒரு வீட்டையும் பாக்கி உடாமெ போலிசுக்காரனுக முப்பது நாப்பது பேராச் சேந்துக்கிட்டுப் போயி ஒவ்வொருத்தியா புடுச்சு இழுத்து வெளிய போட்டுக்கிட்டு அடுச்சானுக. ஒருத்தரக்கூட உடாமெ பச்சப்புள்ள, கைப்புள்ளன்னும் பாக்காமெ, கெழவிகள்னுகூட எரக்கமில்லாமெ லத்தி கம்பு ஒடிய ஒடிய வெளுத்தானுக. ஒடம்பெல்லாம் வீங்கிப் போயி, அவனுக அங்குட்டுப் போனப் பெறகு, ஒக்காந்து சத்தமா அழுதாக.

"கட்டுன புருசங்கிட்டகூட இந்த அடி வாங்கலியே. இவனுக எந்தக் காட்டு எடுவட்ட பெயலுக... தூமையக் குடுச்சா மக்க வந்து இப்பிடி ரத்தங் கண்ணிப் போக அடிக்கானுக." இருதய மேரி சத்தமா அலறுனா.

ஒடனே மத்த பொம்பளைக அவள அடக்கி சும்மா இருக்கச் சொன்னாக. போலிசுக்காரனுக வளச்சு வளச்சு வரவும் பேசக் கூட

நன்றி - ஊடறு



பயந்து போயிக் கெடந்தாக. போலிசுக்காரனுகளக் கண்டு அரண்டு போன பொம்பளைக ஊர்ல ஒத்த ஆம்பளகூட இல்லாம, ஒரே வீட்டுக்கு முன்னால வந்து கூடி ஒக்காந்து செபம் செஞ்சுட்டு அங்னகுள்ளயே ரவைக்குப் படுத்து ஒறங்குனாக. அப்பிடிச் சேந்து இருந்தது மனசுக்குக் கொஞ்சம் தெம்பக் குடுத்துச்சு.

நாலஞ்சு நாளு கழுச்சு வடக்கூரு டேசன்ல இருந்த பொம்பளைகள, புத்தூரு டேசனுக்குக் கொண்டாந்தாக. ஊர்ல இருந்து ரோஸ்மேரி நாலஞ்சு பொம்பளைகளக் கூட்டிக்கிட்டு புத்தூரு போனா. அங்கதா ரகசியமா ஊர் நாட்டாமெ அருளப்பனப் பாத்து, ஊர் நெலவரத்தச் சொன்னா.

அருளப்பன் அவாகிட்ட, "எங்களப் பத்திக் கவலப்படாதீக. நீங்க பத்துரமா இருங்க. ஒத்தசத்தயில தெக்க வடக்க போகாதீக. சேந்தே போங்க. சேந்தே வாங்க. புத்தூரு சாமியார்ட்ட சொல்லி பொம்பளைகளச் சீக்கிரமா சாமீன்ல எடுக்கச் சொல்லுங்க" சொல்லிட்டுப் போயிட்டாரு.

ரோஸ்மேரி டேசன்ல போயி பொம்பளைகளப் பாத்தா. அவுகளுக்குத் தைரியஞ் சொல்லிட்டு, ஊர்ல பொம்பளைகளாச் சேந்து குடுத்த ரூவாயில அவுகளுக்குத் தேவையானதை வாங்கிக் குடுத்தா. மொத்தம் பதினாறு பேத்துல ஆறு பேர உட்டுட்டாக. மீதிப் பத்து பேர் மேல, பள்ளத் தெரு வீடுகள தீ வச்சாகன்னு கேசு போட்டு, மதுரை செயிலுக்கு அனுப்பிட்டாக. ஆனா இந்தப் பத்துப் பேரும் கலவரம் நடந்த அன்னைக்கு, வேல வெட்டிக்குப் போயிட்டு, வீட்டுக்கு வந்த அப்பிராணிக. ரோஸ்மேரி மத்தவுகளையும் கூப்டுகிட்டு சாமியார்ட்ட போயி பேசுனா. சாமியாரும் கூடுமானவரை முயற்சி செஞ்சு அந்தப் பத்துப் பேரையும் வெளிய கொண்டாந்துருவோம்னு தைரியஞ் சொல்லி அனுப்புனாரு.

ஊர்ல பொம்பளைக வேல வெட்டிக்குப் போக முடியாம, கஞ்சி தண்ணி இல்லாமக் கஸ்டப்பட்டாக. இந்த புத்தூரு சாமியாரு மூலமா அரிசி கொண்டாந்து பள்ளர் தெருவுக்கும், பறையர் தெருவுக்கும் குடுத்தாக. பள்ளருக இவுக குடுக்குற உதவியும் வாங்கிக்கிட்டாக, அவுக சாதித் தலைவருக வந்து குடுத்த உதவிகளையும் வாங்கிக் கிட்டாக. அவுக தலைவருக யாரும் பறையர் தெருவ எட்டிக்கூடப் பாக்கல.

சவரியம்மா சொன்னா, "வெக்கங் கெட்டவளுக அவுகாளுக குடுக்கிறத வாங்குறாளுகள்ள. நம்மாளுக குடுக்குறத எதுக்கு வாங்கணும். செய்ரதயுஞ் செஞ்சு போட்டு பனுக்கிக்கிட்டுத் திரிறாளுக."

"யே சத்தம் போட்டு பேசாதெ தாயே. இந்தப் போலிசுக்

காரனுக பூராம் அவனுக பக்கந்தான். காதுல கேட்டாம்னா நம்மள திரும்பியும் அடிக்கப் போறானுக," மாடத்தி சொன்னா.

"ஆமா, இப்பிடியே பயந்து குசுவிக்கிட்டு கெடக்க வேண்டி யதுதான். அதுதான் இத்தன வருசமா பேண்டுகிட்டு இருந்த எடத்துல இப்பப் பேலக் கூடாதுன்னு அந்த பள்ளத் தெரு பொம் பளைககூட நம்மள வெரட்டுறா," பதுலுக்குச் சவரியம்மா சத்தமாக் கத்துனா.

ஒடனே போலீசுக்காரன் என்ன சத்தம் என்ன சத்தம்னு கேட்டுக்கிட்டு வந்துட்டான்.

சவரியம்மாதான் தைரியமாப் பேசுனா. மத்தவுகள்ளாம் அப்பிடியே சுருண்டுக்கிட்டாக. "இத்தன வருச காலமா நாங்க ரவையில மேற்கதான் வெளிக்குப் போவோம். இப்ப அதுமாதிரிப் போயி ஒக்காந்தா, அந்தத் தெரு பொம்பளைக கல்லக்கொண்டு எறுஞ்சு வெரட்டுறாளுக. கேட்டா, அது அவுக எடமாம். நாங்க போயி இருக்க கூடாதாம். அவுகளுக்கு வீசுதாம். ஏ இம்புட்டு நாளா வீசாமெ மணந்தா கெடந்துச்சு! இப்ப மட்டும் இப்பிடி வம்புச் சண்டைக்கு வாராளுக. சாம யாமத்துல வெளிக்கு வந்தா பொம்பள புள்ளைக எங்குட்டயா போக முடியும்? நீங்களே சொல்லுங்க."

"சரி, சரி நீங்க போயி அவுங்ககிட்ட நேராப் போயி எதுவுங் கேக்காதீக. எங்கிட்ட சொல்லிட்டீகள்ளே. நாங்க போயி அவுக கிட்ட சொல்றோம். போங்க போங்க" வெரட்டுனாரு அவரு.

"ஆமா, இவனுக மகா யோக்கியனுங்க. இவனுககிட்ட சொல்லியாச்சு. இவனுகளே போயி அவளுகளத் தூண்டி உடுவானுக. இவனுக பார்வையே சரியில்ல. ஆம்பளைக யாரும் தெருவுக்குள்ள இல்லன்னு அலைறானுக. அறுத்துப் பாத்திர மாட்டோம். நம்மள யாருன்னு நெனச்சிக்கிட்டு இருக்கானுக," சவரியம்மா மொணங்கிக்கிட்டே போனா.

பள்ளர் தெருவுலயும் இருந்த கொஞ்ச பொம்பளைகளும் அவுக சாவடில போயி கூட்டமா கஞ்சியக் காச்சி குடுச்சிட்டு அங்குனகுள்ளயே படுத்துக்கிட்டாளுக.

அவுக தெருவுல இருந்து ஓடுனவுகள்ள முக்காவாசிப் பேரு நாய்க்கமாரு வீடுகள்ள போயி மறவா இருந்தாக. குமரேசன் நாய்க்க ரோடெ தொழுவத்துல பத்து இருவது பேரு இருந்தானுக. பறையர் கள்ள மூணு பேர வெட்டுனது அவனுகளுக்குச் சந்தோசமா இருந்துச்சு.

முனுசாமி சொன்னான், "இந்த வாட்டி அவனுகளுக்குச் சரியான அடிதான் இனி நம்மளக் கண்டா பெயப்புடுவானுக."

"ஆமாமா அம்புட்டுப் பெயல்களும் காக்கா கூட்டத்துல கல்லெறி பட்டது கெணக்கா நாலா திக்கமும் ஓடிட்டானுக. அவனுக இருக்குற எடந் தெருஞ்சா நம்மளே போலிசுக்குத் தவகல் குடுக்கனும்."

கந்தசாமி மட்டும் சோகமாச் சொன்னான். "இது தேவையா நமக்கு? சூசுவான்னு ஒழச்சமா, கஞ்சி குடுச்சமான்னு இருக்குறத உட்டுட்டு இப்பிடி ஒழுஞ்சுக்கிட்டு திரிறது நல்லா இருக்காக்கும். அவுகளுந்தான் பதுலுக்கு நம்மாளுக ரெண்டு பேத்த காலி பண்ணிட் டாகள்ள? என்ன இருந்தாலும் நம்ம மொதல்ல வெட்டியிருக்கக் கூடாது."

"போடா போ. அவெ நம்மள மீறி கம்பிய அறுப்பானாக்கும். நம்ம அதப் பாத்துட்டு கையக் கட்டிட்டு இருக்கனுமாக்கும். அவனுக கம்பிய அறுத்தானுக. நம்ம அவனுக கொதவளைய அறுத்துட்டோம். அப்பத்தான் நாளைக்கு நமக்குப் பயந்து நடப்பானுக," மாரிச்சாமி கத்துனான்.

"யே கத்தாதடா... போலீசுக்காரன் இங்கயே வந்து அம்புட்டுப் பேத்தயும் கொத்தா அள்ளிட்டுப் போயிருவான்."

மாரிச்சாமி மறுபடியும் சத்தமாச் சொன்னான், "போலீசுக் காரனுக ஒரு மயித்தக்கூட புடுங்க முடியாது. நம்ம குமரேசன் அய்யா தொழுவத்துக்குள்ள கால வச்சு வந்துருவானுகளா? ஐயா தான் நம்மளப் புடுச்சுட்டுப் போக உட்டுருவாரா? ஏற்கனவே அவனுக தெருவுல யாரையெல்லாம் புடிக்கனும்னு, முக்கியமான பெயலுக பேரப் பூராம் எழுதி குமரேசன் அய்யா மூலமா போலீ சுக்குக் குடுத்தாச்சு. இனி அவனுக தல தூக்கவே முடியாது."

"எனக்கென்னமோ, நாம அவனுகள அப்பிடி வெட்டியிருக்க வேண்டாம்னு இருக்கு. தேவையில்லாம நம்ம வெட்ட, அவனுக வெட்ட ரெண்டு திக்கமும் அப்ராணிகள வெட்டிட்டு, இப்ப இப்பிடி நாயி கணக்கா ஒளுஞ்சுகிட்டு இருக்குறது நல்லாவா இருக்கு," கந்தசாமி மெதுவாச் சொன்னான்.

"ஏ... இவெ என்னலே வேதக்காரனுக கணக்கா பேசிக்கிட்டு இருக்கான்? அவனுகள இப்பிடியே உட்டம்னு வையி. இன்னைக்குக் கம்பி மேல கைய வச்சவனுக நாளைக்கு நம்ம மேலேயே கைய வப்பானுக."

"ஏலேய் கந்தசாமி, நீயி இம்புட்டுச் சொல்றியே. எத்தன வாட்டி அவனுக நம்ம தெரு பொம்பளைகள நக்கலு பண்ணிச் சிருச்சிருக்கானுக. அதெல்லாம் யோசுச்சுப்பாரு."

"நா என்ன சொல்றம்னா, இந்தக் கேசு கீசு வாய்தா அது

இதுன்னு பணத்தச் செலவு செஞ்சுகிட்டு அலையாமே, ராசியாப் போறதுதான் நல்லதுங்றேன். இனி மேற்பட்டு ஒருத்தர ஒருத்தர் வெட்டிக்கிட்டு, குத்திக்கிட்டு கெடக்க வேண்டாங்றேன்," கந்தசாமி திரும்பியும் சொன்னான்.

"அவனுக பூராம் பயறு பச்ச போட்டு வித்து, நம்மூரு பேங்குல ரூவா ரூவாயாச் சேத்து வச்சிருக்கானுகளாம். நாய்க்க மாருக சொன்னாக. அதப் பூரா எடுத்து செலவழிக்கட்டும் துட்டு கரஞ்சாத்தான் அவனுக கொழுப்பு அடங்கும், திமிரு கொறையும்."

பேசிக்கிட்டு இருக்கும் போதே குமரேசன் இன்ஸ்பெக்ட ரோட வந்தாரு. இன்ஸ்பெக்டர் எல்லாரையும் பாத்துட்டு சொன்னாரு, "நீங்க நாளைக்குக் காலைல மொத வேலையா என்ன செய்றீகன்னா ஒரு பத்துப் பதுனஞ்சு பேத்த எங்ககிட்ட சரண்டாராக் கிடுங்க. எவனாவது ஏப்ப சாப்பையா இருந்தாம்னா, அவனுகள கொண்டாந்திடுங்க. அதுக்குப் பெறகு நீங்க தெருவுக்குள்ள போயிக்கிரலாம். எல்லாம் நாங்க பாத்துக்கிருவோம். தைரியமா இருங்க."

இன்ஸ்பெக்டர் ராத்திரி சொன்னது கணக்காவே, பள்ளர்கள தெருவுக்குள்ள சீக்கிரத்துல வந்துட்டாக. பறையர்க நாலாதிக்கமும் செதறி ஓடிப்போக தெருவுக்குள்ள யாருமே வரமுடில்ல.

போலீசுக்குப் பயந்து ஓடுன பறையர்க அங்கங்கெ பக்கத்து ஊர்ல இருந்த பறைகர்கட்ட போயி தஞ்சம் புகுந்தாக. பக்கத்து ஊர்கள்ளயும் போலீசுக போயி புடிக்கவும், பயந்தடுச்சு நாலாதிக்கமும் செதறி எங்கெங்கயோ ஓடி ஒளுஞ்சாக. கழனிக் கலைக்குழு பையங்க பூராம் மொதல்ல மதுரைல பிரண்டுக வீட்டுகள்ள இருந்தாக. அப்புறம் அங்க இருந்தா ஆபத்துனுட்டு எஸ்டேட்டு பக்கமா போனாக. அந்தோணிக்குச் சொந்தக்காரக செலபேரு அங்க இருந்தாக. அங்க போயி குழிவெட்டுறது, மரம் வெட்டுறதுன்னு கெடச்ச வேலைகளச் செஞ்சுட்டு இருந்தாக. ஆனா எப்பப் பாத்தாலும் அவுகளுக்கு எண்ணம் பூராம் ஊரு மேலதான் இருந்துச்சு.

"அநியாயத்துக்கு நம்ம தெரு பொம்பளைக மட்டும் புடுச்சிக் கொண்டு போயி அடச்சு கேசு போட்டுருக்கானுக. அவுக தெருவுல ஒருத்தரக்கூட அடிக்கல, புடிக்கல, அடைக்கல. போலீசுக்காரனுக பூராம் நம்மளுக்கு விரோதமாத்தான் இருக்கானுக" ஆத்துரத்தோட அந்தோணி சொன்னான்.

சாமிநாதனும் ரொம்பச் சங்கடத்தோட சொன்னான், "அத நெனச்சா ரொம்பாக் கஸ்டமா இருக்குது. நம்ம தெரு பொம்பளப்

பிள்ளைகதான் பிரேதங்களக்கூட வாங்கி குழிதோண்டி பெதச் சிருக்காக. அவனுக தெருவுல, ஆளுவச்சு பெதச்சாகளாம். நம்ம பொம்பளைக உள்ளபடிக்கே கெட்டிக்காரிகதான்."

"போலீசுக அடாவடி தாங்க முடியலயாம். இருந்தாலும் தைரியமாத்தான் இருக்காங்க. ஏதோ இருக்குற மாடுகன்னுகள வச்சுக்கிட்டு பொழுத ஓட்டுறாகளாம். வேற வேல வெட்டினு வெளிய போறதில்லையாம். இப்பிடி எம்புட்டு நாளைக்கு இருக்குறது? நம்ம ஆம்பளைக ஓடியாந்துட்டோம். பாவம் பொம்பளைகதான் இப்ப நம்மளவிட செரமப்படுறாக," அல்போன்சு சொன்னான்.

இம்புட்டயுங் கேட்டுக்கிட்டு இருந்த ஜெயராசு சொன்னான், "அதுக்குத்தான் நான் மொதல்லியே சொன்னேன். அவனுக வெட்டு னானுகன்னு, நம்மளும் வெட்டக் கூடாதுன்னு. நம்ம வேதக்காரரா இருந்துகிட்டு அவனுகள மாதிரி கொல செய்யலாமா? கடவுள் குடுத்த பத்துக் கட்டளைகள்ள கொலை செய்யாதேன்னே ஒரு கட்டள இருக்குது. நம்ம பொறுத்துப் போறதுனால ஒன்னுங் கொறஞ்சு போக மாட்டோம். சேசுநாதரக்கூட அநியாயமாத்தான் சிலுவயில அரஞ்சு கொன்னாக? நம்ம என்ன செய்யனும்னா, அவனுகளோடெ மனமாற்றத்துக்காக ஜெபிக்கனும்."

"இதெவண்டா இப்ப வந்து இப்பிடி ஏட்டிக்குப் போட்டியா பேசிக்கிட்டு... சேசுநாதருட்ட போயி ஜெபம் பண்ணு. ஒனிய வந்து காப்பாத்துவாரு. அப்படின்னா அன்னைக்கு ஏ சேசுரத்துனத்தக் காப்பாத்தாமெ துள்ளத் துடிக்கச் சாக உட்டாரு? ஒரு நாயித்துக் கெழம தவறாமெ சேசுரத்துனம் கோயிலுக்குப் போவாருல்ல! நமக்குக் கையும் காலும் குடுத்துருக்காருல? எதுக்கு? அதக் கொண்டி நம்மள நாமதான் காப்பாத்திக்கிரணும். சேசு என்ன சொன்னாரு! நம்மள மான மரியாதயோட வாழச் சொன்னாரு. அப்ப அதுக்கு என்ன செய்யனுமோ அதச் செய்யனும். சும்மா நீயி ஜெபம் பண்ணிக்கிட்டு இருந்தின்னா, அந்தப் பெயலுக வந்து ஓந்தலயயும் சீவிட்டுப் போயிருவானுக. பெறகு ஒனக்கு புனிதர் பட்டங் குடுத்து, புனித ஜெயராசே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்னு பிராத்தன செய்ய வேண்டியதுதான்," ஆக்ரோசமா ஆரம்புச்சு கத்திட்டு, எளக்காரமாச் சொல்லி முடுச்சான் அந்தோணி.

சாமிநாதன் நிதானமா பேச ஆரம்புச்சான். "ஜெயராசு, சேசுநாதர் சொன்ன மாதிரிதான் நாமெ செய்யனும். அவரு என்ன செஞ்சாரு? ஒரு கன்னத்துல அடுச்சா, மறு கன்னத்த காட்டுனு சொன்னவரு, அவரு சாகுறதுக்கு முன்னால அவர ஒருத்தன் கன்னத்துல அடுச்சதுக்கு மறு கன்னத்த காட்டலியே! என்ன

செஞ்சாரு தெரிமா? அடுச்சவனயே திருப்பிக் கேட்டாரு! 'ஏலேய், எனிய இப்ப எதுக்குடா அறைஞ்செ? நானு என்ன தப்பு செஞ்சேன்! நானு எதுனாச்சும் தப்பாச் சொல்லியிருந்தேம்னா, எது தப்புனு சொல்லு. அத உட்டுப் போட்டு, எனிய எதுக்குலே அறஞ்ச?' அது மட்டுமில்லாமெ, அநியாயமா, அடாவடியா, அடுத்தவுகள இம்சிக் கிறவுகள மானவாரியாப் புடுச்சு வஞ்சுருக்காரு. ஒரு வாட்டி கோயில்ல சனங்கள ஏமாத்துனவுகளக் கூட சாட்டையக் கொண்டியே அடுச்சு வெரட்டுனாரு. அதுனால செயராசு, நம்ம வம்புச் சண்டைக்குப் போகக்கூடாது. ஆனா வந்த சண்டைய உடக்கூடாது."

"எல்லாஞ் சரிதான். ஆனா நாம இப்பிடியே எம்புட்டு நாளைக்கு ஒளுஞ்சுகிட்டுத் திரிய முடியும்? இன்னும் ரெண்டு மூணு வாரத்துல காலேஜ் தொறந்திருவாகள்ள. எப்பிடிப் போயி படிக்கிறது?" ஜெயராசு சோகமாக் கேட்டான்.

எல்லாருக்குமே அந்தக் கவல மனசுக்குள்ள இருக்கத்தாஞ் செஞ்சது. அதோடெ ஊருல இருக்குற உள்ளூர்ப் பள்ளிக்கொடத் துல படிக்கிற பிள்ளைககூட பசாரக் கடந்து எப்பிடி பள்ளிக்கூடம் போயி வருவாங்கன்னும் கவலையா இருந்துச்சு. வெளியூர்ல படிக்கிற மத்த பிள்ளைகளையும் யாரு கொண்டு போயிச் சேப்பாக. சேக்க துட்டுக்கு என்ன செய்வாகன்னும் மனசுக்குள்ள பல மாதிரி கொழம்பிக்கிட்டுத்தான் இருந்தாக. செத்த நேரம் யாரும் எதுவுமே பேசல. பேசக்கூடிய மனநெலமயில யாரும் இல்ல.

அந்த அமைதிய அந்தோணிதான் கலச்சான். "நம்ம இப்பிடி இங்க ஒக்காந்துகிட்டு கன்னத்துல கைவச்சுக்கிட்டு கவலப்பட்டு பிரயோசனமில்ல. ஊர் நாட்டாமெ இன்னும் போலீசுல மாட்டல. போலீசுககூட நாட்டாமெ மூலந்தான் இருவது பேத்த சரண்டராக்கச் சொல்லி இருக்குதாம். நம்ம போயி நாட்டாமயப் பாப்போம். நம்மளால என்ன செய்ய முடியுமோ அதச் செய்வோம். ஆனா நம்ம உசாரா இருக்கனும். எக்குத்தப்பா நம்ம போயி மாட்டிக்கிரக் கூடாது."

அந்தோணி சொன்னத எல்லாரும் ஏத்துக்கிட்டாக. மறுநாளு வேல செஞ்ச கூலிய வாங்கிக்கிட்டு, சாயங்காலமாக் கௌம்பி மதுர வந்தாக. அங்க எல்லாரும் இருந்துக்கிட, மசங்கவும் ஒருத்தர் மட்டும் ஊர்ப்பக்கமாப் போயி நெலவரத்த தெருஞ்சுக் கிட்டு, நாட்டாமெயக் கையோடெ கூட்டிட்டு வந்தான்.

நாட்டாமெ ரொம்பாச் சோர்ந்து போயி இருந்தாரு. அவரப் பாக்கவே பரிதாவமா இருந்துச்சு. அந்தோணி அவருட்ட கேட்டான், "மச்சான், அவுக தெருவுக்குள்ள ஆம்பளைகள்ளாம் வந்துட்டா

களாம்லெ. பெறகு எதுக்கு நம்ம தெரு ஆளுகள மட்டும் உட மாட்டேங்காக? அக்கிரமமாத்தான் இருக்கு. வெட்டுனது அவனுக. நம்ம பதுலுக்குச் செஞ்சோம். ஆனா அவனுகளுக்குத்தான் சலுக காட்டுறானுக."

நாட்டாமெ மெதுவா ஆரம்புச்சாரு. "எல்லாம் ஒங்களாலெ வந்ததுதாண்டா. சும்மா கெடந்த சங்க ஊதிக் கெடுத்தானாம் ஆண்டிங்ற கதைல, சூசுவான்னு இருந்தவுகள உசுப்பி உட்டுட்டு இப்ப இப்பிடி பயந்து பயந்து நாடோடிக கெணக்கா அலைய வேண்டியிருக்கு."

"என்ன மச்சான் நாங்க என்ன செஞ்சோம்? கடேசில நீயி எங்கள குத்தஞ் சொல்ற? அன்னைக்கு மட்டும் நம்ம பெயல்க அவுகாளுக ரெண்டு பேத்த போடலன்னா, அவனுக நம்மள மெதமா நெனச்சுப் போடுவானுக. பட்டப் பகலுல பலசாதி ஆளுகளும் பாக்க ஓட ஓட வெட்டுனானுகள்ள. எங்கள சும்மா இருக்கச் சொல்றியா?"

"நானு அதச் சொல்லலடா. நீ தானெ மொத இந்த அம்பேத் காரு செலை வைக்கனும்னு ஆரம்புச்சு அந்தப் பெயல்களையும் இழுத்துப் போட்டுக்கிட்டு வச்செ? அதுக்குப் போட்டியா அவனுக வைக்க, கம்பியக் கட்ட அந்தப் பெய சேசுரத்துனம் கம்பிய வெட்ட, இப்பிடித்தானே சன்னஞ் சன்னமா வளந்து இன்னைக்கு இம்புட்டுத் தூரத்துக்கு ஆகிப்போச்சு."

சாமிநாதன் எடமறுச்சுச் சொன்னான், "சரி, சரி இப்ப என்னத்துக்கு போன கதை எல்லாம். உடுங்க. இனி நம்ம என்ன செய்றதுன்னு பாப்போம். அவனுக நம்ம மேல காட்டமாவேதான் இருந்தானுக. இப்ப இதுல காட்டிட்டானுக. அம்புட்டுத்தான். "

"அவனுக தெரு நாட்டாமெ ஏப்ப சேப்பெயான பத்துப் பேரக் கொண்டு போயி சரண்டர் ஆக்கிட்டான். உண்மையான கொலகாரனுக பூராம் வெளிய இருக்கானுக. அந்த கறிக்கடை நாடாரு கரெக்டா ஆளுகள அடையாளம் சொல்றாரு. ஆனா போலீ சுட்ட வந்து சொல்லப் பயப்படுறாரு.

"நாளைக்கு இவனுக அவரையும் வெட்டிப் போட்டானு கன்னா? அதுக்குத்தான் போலீசுக்காரன் என்ன சொல்றாம்னா, நம்ம தெருவுலருந்து இருவது பேத்த கொண்டாந்து ஒப்படச்சுட்டா நம்மளும் தெருவுக்குள்ள போகலாம்ங்றாரு. ஆனா நம்ம பெயலுக ஒருத்தனும் இதுக்கு ஒத்துக்குற மாட்டேங்கானுங்க. ஒருத்தனக் கூப்புட்டா, அவனக் கூப்புடு, இவனக் கூப்புடுன்னு சல்சாப்பு சொல்றானுக. இப்பிடி இருக்கப் போயிதான் நம்ம இந்த

நெலமயில கெடக்கோம்."

"எவெ எவெ எங்கெங்கெ இருக்காம்னு சொல்லு மச்சான். நாங்க போயி பாத்துப்பேசி எப்பிடியாச்சும் கொண்டாந்துர்ரோம்," அந்தோணி நம்பிக்கையாச் சொன்னான்.

"நீ பாட்டுக்கு தடாபுடான்னு போயிராதடா. ஏற்கனவே ஒங்கம்மயப் புடுச்சு அடச்சுட்டானுக. ஒந்தம்பியயும் அடச்சுப் போட்டு, ரெண்டு நாளைக்கு முன்னாலதான் வெளிய உட்டாக," நாட்டாமெ சொன்னாரு.

"எங்கம்மய அடச்சிருக்கிறது தெரியும். இங்க மதுர ஜெயிலுல தான் இருக்கா. சரி, ஏந் தம்பி, சின்னப் பெயல எதுக்கு அடச்சா களாம்?"

"ஒந்தம்பி என்ன லேசுப்பட்டவனா? ஒனியக் கெணக்காத் தானெ அவனும் இருப்பான்? சாயங்காலம் மசங்கவும், இடுப்புல இத்தினிக்கானு கத்தியச் சொருகிக்கிட்டு கோயிலுப்பக்கம் போயிட்டு வந்துருக்கான். வரும்போது போலீசுக்காரனப் பாத் துட்டு ஓட வேற செஞ்சுருக்கான். அவெம் புடுச்சுப் பாத்தா, இடுப்புல கத்தி. அப்பிடியே வடக்கூரு டேசன்ல கொண்டுபோயி, போட்டுட்டுட்டான். பெறகு ஒங்க பாட்டிதான் மறுநாளு காலைல அழுதுக்கிட்டுப்போயி இப்பிடி எட்டாங்கௌசு படிக்கிற இத்தினிக் கானு பெயலக்கூட புடுச்சு அடச்சு வக்கிறீகளே. அப்பிராணிப் பெயல வெளிய உட்ருங்கன்னு, கெஞ்சிக் கூத்தாடி கூட்டிட்டு வந்துருக்கா, நாட்டாமெ சொன்னாரு.

"இவெ எதுக்கு மசங்குற நேரத்துல கோயிலுக்குப் போனானாம்? பெரிய சூரப்புலி கெணக்கா இடுப்புல கத்தி வேற?" அந்தோணி எருச்சலாக் கத்துனான்.

"அங்க கோயிலுச்செம நம்மாளுக பத்துப் பேரு ஒளுஞ்சிருந் தானுக. அத எந்தப் பெயலோ போலீசுக்குச் சொல்லிப்போட்டான். போலீசுக்காரனுக ரைடு பண்ண முன்ன, அவுகள வேற லெக்குக்கு ஓடிப் போங்கன்னு சொல்லிட்டு வரப் போயிருக்கான். இவனுக்குப் பாதுகாப்புக்கு இடுப்புல கத்தி. ஆனா அது ஒரு கொய்யாப் பழத்தக் கூட வெட்டாது. ஒளுங்சிருந்தவனுக பூராம் மேற்க மலங்காட்டுச் செம ஓடிப்போனானுக. இந்தப் பெய மாட்டிக்கிட்டான்." நாட்டாமெ வௌக்கமாச் சொன்னாரு.

சாமிநாதன் சொன்னான், "இப்ப நல்லா இருட்டிப் போச்சு. நம்ம இப்பயே ஊர்ப்பக்கம் போவோம். ஊருக்குள்ள போகாமெ, பக்கத்து ஊர்ல, நம்மாளுக தெருவுக்குள்ள இருந்துகிட்டு எப்பிடியாச்சும் இருவது பேத்த சரண்டராக்கிருவோம். நம்ம

ஊருக்குள்ள போனாத்தான் பிள்ளகுட்டிகள்ளாம் அதது படிக்கிற எடங்களுக்குப் போயிச் சேர முடியும். ஏன்னா, லீவு வேற முடியப் போகுது. அதுக்குள்ள ஒரு வழி செஞ்சாகனும்."

"சரி போகலாம்டா. எதாவது சாப்பிட்டுப் போவம்டா. கெறக்கமா இருக்கு. நல்லாச் சாப்பாட்டு, ஒறங்கி எந்துருச்சு எம்புட்டு நாளாச்சு? இனி எம்புட்டு நாளைக்கு இப்பிடி அலைறதோ...."

நாட்டாமெ சொல்லவும் இருந்த ரூவாய ஒன்னாப்போட்டு தோச வாங்கிச் சாப்புட்டாக. ஒரு வழியா இருவது பேத்தச் சம்மதிக்க வச்சு கோர்ட்டுல போயி சரண்டராக்குனப் பெறகு மெள்ள மெள்ள ஆளுக தெருவுக்குள்ள வர ஆரம்புச்சாக. வெளியூர்கள்ள படிச்சிக்கிட்டுருந்த பொம்பளப்பிள்ளைகள்ள கொஞ்சப்பேரு படிக்கப் போகாமெ நின்னுட்டாக. பையனுக மட்டும் கடனக்கிடன வாங்கிட்டுப் போயிட்டானுக. ஆனா உள்ளூர்ப் பள்ளிக் கொடத்துல படுச்ச சின்னப் பிள்ளைகள மறுபடியும் பள்ளிக் கொடத்துக்கு அனுப்பப் பயப்புட் டாக. அவுக பள்ளர்க தெருவக்கடந்து, பசாரு வழியாத்தான் பள்ளிக் கொடம் போகனும், வரனும். சேசுரத்துனத்தை வெட்டுன அன்னைக் கெல்லாம், பள்ளிக் கொடத்துப்பிள்ளைக தெருவுக்குள்ள வந்து சேருரதுக்குள்ள படாதபாடு பட்டுருச்சுக. அந்த மட்டுக்கும் நல்லமனசு உள்ளவுக செலபேரு. பிள்ளைகள அவுகவுக வீடுகள்ள வச்சிருந்து, கலவரம் கொஞ்சம் ஓஞ்சப் பெறகு, தெருவரைக்கும் கொண்டாந்து உட்டுட்டுப் போனாகளாம். இப்பிடி ஒரு நேரத்தப்போல ஒரு நேரம் இருக்குமான்னு பயந்துபோயிக் கெடந்தாக.

நாள்பட நாள்பட கொஞ்சம் தெம்பாகி, மறுபடியும் பிள்ளைக பள்ளிக் கொடம் போகவர இருந்தாக. சேசுரத்துனத்தோட மகன் மூத்தவன் உள்ளூர்ப் பள்ளிக் கொடத்துலதான் ஆறோ ஏழோ படுச்சுக்கிட்டு இருந்தான். அவுகய்யா வெட்டுப்பட்டு செத்து, பொணத்த பசாருல போட்டு வச்சிருந்த எடத்தப் பாக்கையில அவனுக்கு அழுகை அழுகையா வரும்.

கூடப்போற பெயல்களும் சும்மா போ மாட்டானுக. பசார் வழி போம்போதெல்லாம் அவங்கிட்ட சொல்லுவாக. "ஏலேய் ராசரத்துனம், இந்தா இந்தக் கடையிலதான் ஒங்கப்பா டீ குடிக்க நின்னாராம். இங்னகுள்ள வெட்டுப்பட்டுத்தான் அந்தா அப்பிடிக் கூடி ஓடி, அந்தா இருக்குபாரு ஓட்டுவீடு, அதுக்குள்ள போயி, அங்கதான் வெட்டி வெட்டிக் கொன்னு போட்டாகளாம்."

பொழுதெனிக்கும் இதக்கேக்கயில அழுவான். பெறகு ஒரு நாள் ஒரு பெய சொன்னான், "ஏலேய் அந்தா நிக்காம்பாரு ஒருத்தன் அந்தப் பெட்டிக்கடைக்கு முன்னால அவனும் ஒங்கய்யாவெ வெட்டுனானாம். நேத்துச் சாயங்காலம் இங்க மாட்டுக்குப் புண்ணாக்கு வாங்க வரும்போது எங்கம்மெ அவனக் காட்டிச் சொன்னா."

மொதல்ல அழுதுகிட்டுருந்த ராசரத்துனம் பெறகு பெயல் கிட்ட சொன்னான். "நானு பெரியவனா வளந்தாவிட்டி எங்கய்யன வெட்டிக் கொன்னவுகளப் பூராம் வெட்டி வெட்டிக் கொல்லு வேன். "

"ஆமாடா, இவனுகளக் கொல்லனும்டா. அதுமாதிரி இந்தப் போலீசுக்காரனுகளையும் வெட்டிக் கொன்னு போடனும்," அஞ் சாங் கௌாசுப் படிக்கிற ஜெயபாலன் சொன்னான்.

"போலீசெ எதுக்குடா கொல்லனும். இவனுகளத்தாண்டா கொல்லனும்," வின்சென்ட் சொன்னான்.

ஜெயபாலன் கோவமாச் சொன்னான், "போலீசுக்காரனுக தாண்டா நம்ம தெருவுக்குள்ள மொழஞ்சு நம்ம எல்லாத்தையும் கம்பக் கொண்டியே டம்முடம்முனு அடுச்சானுக. அவனுக அடுச்சதுனால எங்க பாட்டிக்கு காலு வெளங்காமப் போச்சு. தெரியுமா? எங்கம்மெ எங்க பாப்பாள இடுப்புல வச்சிருந்தா. எங்கம்மய முகுது, இடுப்பு காலு கைல எல்லாம் அடுச்சாக. அந்நியாரம் எங்க பாப்பா தொடமேல அடி உழுந்து இப்பயும் அந்த எடம் கரேர்னுதான் இருக்கு தெரிமா? அதுக்குத்தான் அவனுகளயும் வெட்டனும்? "

"சரி, அவுகளயும் வெட்டுவோம்."

"வெட்டக்கூடாதுடா. துப்பாக்கி வாங்கி எல்லாத்தயும் டப்டப்னு சுட்டுப் போடனும்."

"ஒரு துப்பாக்கி எம்புட்டு ரூவாயா இருக்கும்?" ராசரத்துனம் கேட்டான்.

"துப்பாக்கி எல்லாம் ரொம்பா வெல. நம்மள்ளாம் வாங்க முடியாது. நல்லா வீச்சறுவாளா செஞ்சு வைக்கனும்."

"எங்கய்யா மலைக்கு வெறகு வெட்டப் போகையில, பெரிய அறுவாக் கொண்டு போகும். அந்த அறுவாளப் போலீசுக்காரனுக வீட்டுக்குள்ள வந்து எடுத்துட்டுப் போயிட்டானுக," வின்சென்ட் சொன்னான்.

"ஏலைகா எனக்கொரு ஐடியா. நம்ம போலீசா ஆகி, அவுக

தெருவுக்குள்ள மொழஞ்சு நம்மள அடுச்ச மாதிரி, அவுக தெருப் பொம்பளைகள அடிக்கனும்," இம்புட்டு நேரமும் கம்முனே இருந்த ராசேந்திரன் சொன்னான்.

ஒடனே நெறய்யாபேரு ஆமா போலீசுக்காரனா ஆகனும்னு கோரசாக் கத்துனாக.

"ஆமா எங்கக்கா கூட, நானு படுச்சு டி.ஐ.ஜீ.யா வந்து நம்ம மக்களக் காப்பாத்தும்னு சொன்னா," ராசேந்திரன் சொன்னான்.

"டி. ஐ. ஜி. யா வந்து அவுகதெருப் பொம்பளகள அடிக்கனும்."

"நானு என்னைக்குனாலும் எங்கய்யாவெ வெட்டுனவுகள வெட்டாமெ உடமாட்டேன். சத்தியமாச் சொல்றேன்," ராசரத்துனம் திரும்பியும் கோவாமாச் சொன்னான்.

பள்ளர்தெரு பிள்ளைகள வேதக்காருக பள்ளிக்கொடத்துல படிக்கக்கூடாதுன்னு நிப்பாட்டிக் கிட்டாக. அவுக தெருப் பிள்ளைக கொஞ்சப்பேத்த நாய்க்கமாருக பள்ளிக்கொடத்துல சேத்துட்டாக. நம்ம இந்துக, இந்துப் பள்ளிக்கொடத்துலதான் சேந்து படிக்கனும்னு நாய்க் கமாரும் சொல்லிக்கிட்டாக. இம்புட்டுக் காலமா பள்ளர், பறையர்கள ஒதுக்கி வச்ச நாய்க்கருக, இப்ப என்னமோ, அருவசமா பள்ளர்கள ரொம்பாத் தாராளமாச் சேத்துக்கிட்டாக. இப்பிடி ரெண்டு திக்கமும் சின்னஞ்சிறுசுகள்ள இருந்து பெரியாளுக வர வெட்டவா குத்தவான்னுதான் அலஞ்சாக.

பள்ளர்க தெருவுக்குப் பல எடங்கள்ள இருந்து பலபேரு வந்து வந்து பாத்துப்பேசிட்டு உதவிகளும் செஞ்சாக. பறையர் தெருவுக்கு அதிகாரிக யாரும் வரல. அவுக வேதக்காருக செலபேரு வந்தவுக, பறையர் தெருக்குள்ளயும் போனாக, பள்ளர் தெருவுக் குள்ளயும் போனாக. போனதுமட்டுமில்லாமெ ரெண்டு தெருவு களுக்கும் உதவிக செஞ்சாக.

இதப் பாத்த பறையர் தெரு பொம்பளைக செலபேரு பொறுக்க மாட்டாமெ சொன்னாக, "நம்ம வேதக்கார ஆளுக என்னத்துக்கு அவுகத் தெருவுக்குப் போகனும், அவுகளப் பாக்க வந்தவுகள்ளாம் நம்மள வந்து எட்டிக்கூடப் பாக்கலயே... ஒரு உதவி கூட செய்யலியே. அப்பிடி இருக்கயுல இவுக மட்டும் எதுக்கு அவுகளுக்கு போயி உதவி செய்யனும். அந்த முண்டைகளும் நல்லா அங்குட்டும் வாங்கிக்கிறாளுக, இங்குட்டும் வாங்கிக்கிறாளுக."

உதவி செய்ய வந்தவுககிட்டயே இப்பிடிச் சொல்லவும் அவுக பதுலுக்குச் சொன்னாக, "அப்பிடி எல்லாம் நம்ம பேசக்கூடாது

அவுகளுந்தானெ பாதிக்கப்பட்டுருக்காக? அவுக வீடுகள்ளாம் எருஞ்சு போச்சுல்ல. நம்ம இப்பிடியே பகைவர்களாகவே இருக்கக் கூடாது. இப்ப ஒடனடியா இல்லாவிட்டாலும் எப்பயாச்சும் நீங்க ரெண்டு பேரும் சமரசமாகிச் சேந்து ஒத்துமையா வாழனும்."

"அதெப்பிடி முடியும், சேசுரத்துனம் எப்பேர்ப்பட்ட ஆளு, அவனையே வெட்டுன இவனுககூட ஜென்மத்துக்கும் சேர முடியாது. நாங்களா மொதல்ல கைய வச்சோம்? செவனேன்னு வேல செஞ்சமோ, கூழோ தண்ணியோ குடுச்சமான்னு கெடந்தவு கள, இப்பிடி நாசக்காடா ஆக்கிப் போட்ட அந்த நாய்களோடெ என்னைக்குமே சாவாசம் கூடாது." சரோஜா ஆவேசமா கத்துனா. மத்தவுகள்ளாம் அவளச் சும்மா இருக்கச் சொல்லி அரட்டுனாக.

ரெண்டு தெருவுலயுமே சனங்க பயந்து பயந்து பழையபடி வாழ ஆரம்புச்சாக. பறையர்தெரு பொம்பளைக ஜாமீனுல வெளிய வந்தாக. வாய்தா வாய்தான்னு தூரந் தொலவுக்கல்லாம் போயிப் போயி கையெழுத்துப் போட்டுகிட்டு வந்தாக.

ஒவ்வொருத்தரும் எப்பிடி எப்பிடியெல்லாங் கஸ்டப்பட்டு போலீசுக்குத் தப்புச்சாகன்னு சொல்லும்போது, கேக்குறவுக கண்ணுல தண்ணி வந்துரும். கலவரத்துல தெக்குத்தெரு மைக்கேல் ராசு தப்புச்சதச் சொன்னாரு.

"சேசுரத்துனத்த வெட்டுன கலவரத்துல நானு மேற்க ஒழவுக்குப் போயிட்டேன். ஒழவ முடுச்சுட்டு, மாட்டப் பத்திக் கிட்டு கெளம்பயிலதான் விசயத்தக் கேள்விப்பட்டேன். அந்த மாணிக்க கலப்பய காட்டுலயே போட்டுட்டு மாட்ட மட்டும் பத்தி உட்டேன். அது வழக்கம்போல எப்பிடியும் வீடு போயி சேந்து ரும்னு நம்பிக்கயில பத்தி உட்டுட்டு நானு துண்ட வச்சு நல்லா நேஞ்சி கட்டிட்டு இருட்டுனாப் பெறகு ஊர்ப்பக்கமா மெதுவா வந்தேன். மேற்க ஊருணிகிட்டெ வரலையே போலீசுக்காரனுக திமுதி முன்னு வாரதப் பாத்துட்டேன். சட்டுனு போயி அங்ன பரசுராம நாய்க்கரோட வைக்கப்போருக்குள்ள போயி ஒளுஞ்சுக் கிட்டு வைக்கல இழுத்து மேல போட்டுகிட்டு கம்முனு நின்னேன். வைக்கப்போருக்கிட்டே சலசலப்பு கேக்கவும் கரெக்டா போலீசுக் காரனுக அங்க வந்துட்டானுக. எனக்கு ஏ உசுரு ஏங்கிட்ட இல்ல. மூச்ச இழுத்துப் புடுச்சுகிட்டு நின்னேன். வைக்கப் போரச் சுத்திச் சுத்தி வந்தானுக. வைக்கச் சொண வேற ஒடம்பெல்லாம் அரிக்குது. மூஞ்சிமேல வைக்கலு படவும் தும்மலு வேற வருது. சே... உசர வெறுத்துட்டு நின்னேன். செத்த நேரம் பாத்துட்டு போயிட்டானுக. பெறகு வெளிய வர பயம்மாக் கெடந்துச்சு. நல்லா இருட்டுனப்

பெறகு மெதுவா எந்துருச்சு வந்தா தெருவுக்குள்ள போக முடியாத படி எங்குட்டுப் பாத்தாலும் போலீசுக்காரனுக. பெறகு அப்பிடியே நம்ம கோயிலுக்குப் போனா அங்க பத்து பேரு ஒளுஞ்சிருக்காக."

"ஓங்கத தேவல. நாம்பட்ட பாட்டக் கேளு. கலவரத்தப்ப நானு ஊருலயே இல்ல. எங்கத்தெ ஊருல இருந்ததுனால அப்பிடியே அங்ன இருந்தே தப்பிச்சுட்டேன். ஆனா ரெண்டாவது நம்ம பெயலுக போட்டானுகளே. அந்தக் கலவரத்துல நாயி படாத பாடுபட்டேன். கொல உளுந்த அன்னைக்கு நானு வடக்கெ சுண்ணாம்பு கொழைக்கப் போயிருந்தேனா. மதியமே சொல்லிட் டாக. அந்தாணிக்க மம்பிட்டிய அங்னயே உட்டுட்டு வடக்கூருல பஸ்சு புடுச்சு நேரா ஆத்தூருக்குப் போயிட்டேன். அங்க நம்மாளுக தெருவுல போயி இருந்தேன். நம்ம பெயலுகளும் பெறகு அங்க வந்தானுக. ரெண்டு நாளுக்கூட ஆகியிருக்காது. நம்ம வடக்கூரு போலீசே அங்க வந்துட்டானுக. இந்தப் பள்ளனுக நம்ம இங்க இருக்கம்னு துப்புக் குடுத்துருக்கானுக. வேற ஊரு போலீசுன்னா நம்மள அடையாளந் தெருஞ்சிருக்காது. ஆனா இவனுக கரெக்டா அடையாளங் கண்டுட்டானுக. நானு வெள்ளங்காட்டி ஒரு கடைல டீ குடிக்கனும்னு போயி டீய வாங்கி வாய்ல கூட வைக்கல. போலீசு வந்துட்டான். அவனுக எனியப் பாத்துட்டானுக. நானும் அவனுகளப் பாத்துட்டேன். நல்லாத் தெருஞ்ச பெயல்க. டக்குனு டீயை கீழ வச்சுட்டு நழுவுனேன். அவனுகளும் வெரட்ட ஆரம்புச்சுட்டானுக. தல தெறிக்க காலுபோன போக்குல ஓடுனேன். அவனுகளும் உடாமெ தொரத்திக்கிட்டே வந்தானுக. ஒரு தெரு வழியா ஓடிக்கிட்டே இருந்தா அந்தத்தெரு அத்தோடெ முடுஞ்சு போச்சு. எதுர பாத்தா ஒரு செவரு நிக்கிது. இவனுக கைல ஆப்டா அடி பிதுக்கிப் போடுவாம்ங்ற பயத்துல உசுர வெறுத்துட்டு அந்தச் செவத்துமேல எம்பிக் குதுச்சு ஏறி மறுத்திக்கமும் குதுச்சேன். ஆனா காலு பெசகிப் போச்சு. மேக்கொண்டு நடக்கக்கூட முடியல. பெறகும் அங்னயே கெடந்தா அவனுக வந்து கவ்விட்டுப் போயிரு வாங்கன்ற பயத்துல பக்கத்துல இருந்த மெத்த வீட்டுப் படில ஊந்து ஊந்து ஏறி மெத்தைக்குப் போயி கைப்பிடிச் செவத்த ஒட்டி ஒடுக்குனாப்புல படுத்துட்டேன். போலீசுக்காரனும் கரெக்டா அங்ன வந்து நின்னானுக. மேல இருந்து அவனுகள நல்லா பாக்க முடியுது. அவனுகள ரொம்ப நேரம் ஓடவச்சது வேற அவனுகளுக்கு கோவம். வெறி புடுச்சுப் போயி நின்னாக. கைல ஆப்டம்னா கொதறிப் போடுவாகன்னு தெரியும். சரி செத்த நேரம் இருந்துட்டு வேற எடத்துக்குப் போவானுகன்னு பாத்தா, இங்னதான் எங்னயோ இருக்கான்னு சொல்லிக்கிட்டு கெடபன்னியா அங்னயே நின்னாக.

நேரம் ஆக ஆக வெயிலு சுளீர்னு அடிக்குது. வகுறு பசிக்குது; தண்ணித் தாகம் தொண்டைய இழுக்குது; வேர்த்து ஒழுகுது. கீழ படுக்கவும் முடியல. அப்பிடிச் சுடுது. இப்பிடியே கெடந்தா காஞ்சி கருவாடாப் போக வேண்டியதுதான்னு கஸ்டப்பட்டு கிட்டு கொளுத்துற வெயிலுல கெடந்தேன். அவனுக கீழ அந்த வீட்டுத் திருணயிலயே ஒக்காந்துட்டானுக. பேசாமெ சரண்டராயிடு வோம்னு நெனச்சாலும் பயம்மாக் கெடந்துச்சு. பத்துப் பதுனோரு மணி வரைக்கும் அப்பிடியே கெடந்தேன். அவனுகளும் அங்குட்டு இங்குட்டுப் போகாமெ அங்னயே கெடந்தானுக. ஒரு வழியாப் பதுனோரு மணிக்குமேல அவனுக போகவும், மெதுவா எந்துருச்சு கீழ வந்தேன். தோலே பொத்துப்போன மாதிரி போச்சு."

# ஒன்பது

அந்த வருச கிறிஸ்துமஸ்ச அப்பிடியா யாருங் கொண்டா டல. நடுச்சாமத்துல எந்துருச்சு கோயிலுக்குப் போகனும்னா பள்ளர்க தெருவக் கடந்துதான் போகனும். பெரியாளுக, எளவட்டங்க பூராமே கோயிலுக்குப் போக வேணாம்னு முடிவு செஞ்சுட்டாக. அப்பிடிப் போயி, அந்தப் பெயல்க கலவரத்த உண்டாக்கிட்டா, பொம்பள புள்ளைக ஓடிக்கீடித் தப்பிக்க முடியாதுன்னு யாருமே கோயிலுக்குப் போகல. ஏற்கனவே அந்தத் தெரு ஆளுக, கிறிஸ்துமஸ்சோடெ கலகம் பண்ணணும்னு சொல்லிகிட்டுத் திரியவும், பறையர்க திருநாளே கொண்டாடல.

மாசிலாமணி தாத்தாவுக்கு கிறிஸ்துமஸ் பூசை இல்லாதது ரொம்பா வருத்தமா இருந்துச்சு. என்னதான் வேல வெட்டி இருந்தாலும் நாயித்துக் கெழம பூசை தவறமாட்டாரு. இப்ப கிறிஸ்துமஸ் பூசை இல்லங்கவும் அவராலெ தாங்க முடியல. சாவடில வந்து ஒக்காந்தவரு, அங்ன மரத்துக்கடில எளவட்டப் பையங்க ஒக்காந்து இருந்ததப் பாத்துட்டு மெதுவா எந்துருச்சு அவுககிட்ட போயி ஒக்காந்தாரு.

"என்னங்கடா ஆளும் பேருமாச் சேந்து ஒரு நல்ல நாளுலகூட பூச இல்லாம ஆக்கிட்டீகள்ளே.... எனக்கும் எழுவது, எம்பது வயது ஆகுது. இத்தன வருசத்துல ஒரு தடவகூட கிறிஸ்துமஸ் பூசை பாக்காமெ இருந்ததில்ல," மாசிலாமணி தாத்தா சொல்லிட்டு வெத்தல பாக்கு போட ஆரம்புச்சாரு.

ஒருத்தரும் ஒன்னுஞ் சொல்லல. அந்தோணியால சும்மா இருக்க முடியல. "இப்ப பூசை பாக்காட்டி என்ன கொறஞ்சு போச்சு? ஒன்னும் இல்ல. பெறகு எதுக்கு வந்து பொலம்புற?"

"ஆனாலும் இப்பிடி ஒரு கேவலப்பட்ட பொழப்பு வேண்டாம்டா.... இப்பிடியா.... நாம பெறந்து, வளந்து, உருண்டு, எந்துருச்சுச் சொதந்துரமா திருஞ்ச ஊருக்குள்ள இப்ப அஞ்சி ஒடுங்கி, நாலு திக்கம் போக்குவரத்து இல்லாமெ, சர்வசதா காலமும் என்ன நடக்குமோ, ஏது நடக்குமோன்னு கதி கலங்கிப் போயி... சீ.... என்ன பொழப்புடா இது? ஏ மட்டத்து ஆளுகள்ளாம்

காலா காலத்துல போயிச் சேந்துட்டாக. நானு இந்தக் கண்றாவி யெல்லாம் காங்கனும்னு இருக்குது. அதான் இன்னியும் உசுரு ஊசலாடிக்கிட்டு இருக்குது." தாத்தா சொல்லிட்டு வலுதுகை ஆள் காட்டி வெரலயும், நடு வெரலயும் வாய்மேல வச்சு, எட்டாக்கைல போயி உழுறமாதிரி வெத்தல எச்சியத் துப்புனாரு.

அந்தோணி நக்கலாச் சொன்னான், "இப்ப என்ன தாத்தா, நீயி சட்டுனு சாகனும் அம்புட்டுத்தானெ? ஒன்னு செய்யலாம்... நாங்களே ஒனிய போட்டுத்தள்ளிட்டு, அந்தத் தெருக்காரனுக செஞ்சானுகன்னு சொல்லி புகாரு குடுத்துரலாம் என்ன சொல்ற?"

"ஏலேய் அரக்காதெம் பேரா, மனுசனோடெ உசுரு ஒனக்கு அம்புட்டு மலிவாத் தெரிது, என்னலே? செய்றதயுஞ் செஞ்சு போட்டு இப்ப வந்து கூட்டமா ஒக்காந்து பேசி என்ன பெரயோசனம்?"

"ஏ தாத்தா... சும்மா சும்மா பழிய எங்கமேல போடாத. நீங்க தான் மான ஈனம்னு ஒன்னுமில்லாமெ, மண்ணாங்கட்டி கணக்கா கெடந்தீக. அதுமாதிரி எங்களயும் இருக்கச் சொல்றியாக்கும்?"

"பெரிய மானத்தக் கண்டுட்டானுக... ஏ... போங்கடா... போங்க... இத்தன வருச காலமா இருந்த எடந் தெரியாமெ நாங்க சீவிச்சோம். இப்ப நீங்க தலை எடுத்தீக... கண்டம்பட்டி பறையனப் பத்தி கண்ட சனமெல்லாம் காறித்துப்புது. இதுல வேற டி.வி. பெட்டில நம்ம தெரு பொம்பளைகளக் கூட புடுச்சு படமாக் காட்டி இருக்கானுக. அநியாயம் ... அக்கிரமம் பெருகிப்போச்சு...."

"இங்கதான் தாத்தா நீயி தப்பு பண்ற. இருந்த எடந் தெரியாமெ வாழுறது ஒரு வாழ்க்கையா? நம்ம யாருன்னு ஒலகத்துக்குத் தெரிய வேண்டாமா? எதுக்கு நம்ம என்னைக்கும் ஒன்னுமில்லாமலே இருக்கனும்?

"ஆமாமா... இன்னாரு மகன் இளுசக் கண்ணம்னு அம்புட்டுப் பேத்துக்கும் தெரியனும். இன்னைக்குக் குடிக்க கூழு இருக்கான்னு பாருங்கடா. அதுக்கே வழி இல்ல. இவனுக பெரிய போராட்டம் பண்றானுகளாம்.... "

"குடிக்க கூழு இல்லைல? ஒங்கப்பங் காலத்துலயும் இல்ல. ஓம் பாட்டங்காலத்துலயும் இல்ல. ஒங்காலத்துலயும் இல்ல, இனி ஓம் மகெ காலத்துலயும் இருக்காது. இது எதுன்னாலன்னு யோசுச்சுப் பாத்தியா, வருசக் கணக்குல இப்பிடியே கெடக்கப்போய்தான் ஒரு பெய மதிக்க மாட்டேங்கா."

"சரிடாப்பா சாமீகளா. அப்ப அக்கிரமம் செஞ்சே அழுஞ்சு

போங்க. ஆனா நீங்க செய்ற அக்கிரமத்துக்கு எங்களப்போல அப்ராணி சப்ராணி, பொம்பள பிள்ளைகள்ளாம் அவதிப்பட வேண்டி இருக்கு."

"என்ன தாத்தா நீயி. இப்ப நாங்க என்ன அப்பிடி ஒலகத்துல இல்லாத அக்கிரமம் செஞ்சுட்டோம். சொல்லு," சாமிநாதன் சாந்த மாக் கேட்டான்.

"அப்பிடி வாங்கடா வழிக்கு.... ஒன்னா.... ரெண்டா.... வருசயாச் சொல்றேன். கேட்டுக்கோ.... கீழத்தெரு சிங்காரம் பெய மகெம்போயி பன்னாடிமாரு தெருப் பிள்ளையக் கூட்டியாந்து கலியாணம் முடுச்சானா?"

"அவனா கூட்டியாந்தான்? அந்தப் பிள்ளையா வந்தா. இவனும் சேத்துக்கிட்டான்."

"அவா வந்தான்னா... நீங்க கூட்டியாரனுமா? அவா படிப் பென்ன... அந்தஸ்து என்ன? இந்தப்பெய பத்துகூட பாஸ் பண்ணல. வெரலுக்குத் தகுந்த வீக்கம் வேணும்டா."

"யே... போ... தாத்தா... போ. இது பெரிய குத்தம்னு சொல்லி வந்துட்டெ."

"அவனுக நம்மள எதிராளியாப் பாக்கானுங்கடா."

"பாத்துட்டுப் போறான். அதுக்கு நாம என்ன செய்றது."

"பெறகு அவா சுந்தரங் கெழவியோட பேரன் நாய்க்கமாரு தெருப் பொண்ணக் கூட்டியாந்துட்டான். ஏற்கனவே நம்மாளு கன்னா அவனுகளுக்கு வேப்பங்காயி மாதிரி. இப்ப நம்மள கருவறுக்கனும்னு கங்கணங் கட்டிக்கிட்டு பள்ளர்கள ஏவி உடுறானுக."

"தாத்தா, நம்ம பெயலுக போயி பொம்பளப் பிள்ளைகள வலுக்கட்டாயமா புடுச்சு இழுத்துக்கிட்டு வந்தா தப்பு. ஒருத்தரு ஒருத்தரு மனசுல விரும்பி கலியாணம் முடுச்சா என்ன தப்பு?"

"ஒங்களப் படிக்க வச்சதே தப்புத்தாண்டா. அதுனாலதானெ கண்டமாணிக்கப் பேசிக்கிட்டு கலகம் உண்டாக்குறீக. ஆனா எனக்கு ஒரு விசயம் புரிபட மாட்டேங்கிடா. அந்த மேகலக்குடி பொம்பளப் பிள்ளைக நம்ம பெயலுககிட்ட அப்பிடி என்னத்தக் கண்டு மயங்கிட்டு வாராளுகள்னே புரியமாட்டேங்கி..."

"அதுதான் தாத்தா காதல்ங்றது. நீயி என்ன பாட்டிய காதலிச்சுத் தானெ கலியாணம் முடுச்செ? சொல்லிக்கிட்டாகளே..."

"சே... சே.... அதெல்லாம் கெடையாது. நீங்க ரொம்பாத் துணிச்சலான பெயலுகதான். அப்பயெல்லாம் மேகலக்குடி

பொம்பளைகள தல நிமுந்து கூட பாக்க மாட்டோம். அம்புட்டு பயமா இருக்கும்."

"என்னத்துக்குப் பயம்! அவுகளும் நம்மளக் கெணக்கா மனுசங்க தானெ... ஆமா இதெல்லாஞ் சொன்ன நீயி, பரலோகம் பெய சக்கிலியத் தெரு பொண்ணக் கூட்டியாந்ததச் சொல்லலெ?"

"அது என்ன பெரமாதம்! சக்கிலியத் தெரு பொண்ணு தானெ!"

"பாத்தியா... பாத்தியா... ஒனக்கே இம்புட்டு மப்பு இருக்கே... இப்பயெல்லாம் எல்லாரும் ஒன்னுதான். எல்லாச் சாதிக்காரருகளும் நம்ம தெருவுல இருக்கோம்ல... எல்லாச் சாதி பொம்பளைகளயும் கெட்டி கூட்டியாந்துட்டாம்லெ."

"இது பெரிய சாதனதாண்டா."

"அப்படிச் சொல்லு. நீயே பாரு. அங்கங்கெ நடக்கிற மாதிரி. இல்லாமெ, கெட்டிக்கிட்டு வந்த பொம்பளைகளக் கைவிடாமெ வச்சு காப்பாத்துரான்கள்ள. அதப்பாரு. அதுதான் நம்மள நம்பி, எல்லாப் பிள்ளைகளும் வாராக. சரி. இப்ப என்னத்துக்கு இந்தப் பேச்சு வந்துச்சு... எல்லாம் இந்தக் கெழவனால. சரி இப்ப என்னங்ற! ஒனக்கு கிறிஸ்துமஸ் இல்ல... போகட்டும் ஈஸ்டர நல்லாக் கொண்டாடிருவோம். நாலு மாடு அடுச்சு ஜே.... ஜேன்னு சப்பரந் தூக்கியாந்து, சூப்பரா செஞ்சு போடுவோம். என்ன தாத்தா?"

சரிதான் சரிதான்னு தாத்தா அப்பிடியே கீழ படுத்துக்கிட்டாரு.

ஈஸ்டரு லீவுக்கு எல்லாரும் ஊருக்கு வந்துருந்தாக. எல்லாரும் இந்த ஈஸ்டர சிறப்பாக் கொண்டாடனும்னு சொன்னா லும் ஒரு சில பெரியாளுக திருநாளே வேண்டாம்னாங்க. ஈஸ்டருக் கும் நடுச் சாமத்துலதானெ கோயிலுக்குப் போகனும். ஏதாவது பெரச்சன பண்ணுவாங்க. வேண்டாம்னு சொல்லவும் பொம்பளை கள்ள செலரு ரொம்பாத் தைரியமாச் சொன்னாக, "இப்பிடித்தான் கிறிஸ்துமஸயும் கொண்டாடாமெ உட்டோம். இப்பிடி அவனு களுக்குப் பயந்துகிட்டே கெடந்தா, எப்பத்தான் நாம் திருநாக் கொண்டாடுறது? பேசாமெ வீட்டுக்கு வீடு வரியப் போட்டு, இந்த உயிர்த்த பண்டியலப் பெருகளமாக் கொண்டாடனும்."

"ஏத்தா, ஒங்க பேச்சக் கேட்டா உருப்பட்டாப்பலதான். காலு வழியா மோளுற கழுதைகளுக்கு என்னப்பா தெரியும்? இன்னும் நாலஞ்சு உசுர பலி கொடுக்கச் சொல்றாளுக போல. அதெல்லாம் ஒன்னும் வேண்டாம். அப்பிடித் தேவப்படுறவளுக கோயிலுக்குப்

போயிட்டு வாங்க. ஆனா எடயில எதுனாச்சும் பெரச்சன ஆச்சுன்னா, அதுக்கு ஊரு பொறுப்பு ஏற்காது. ஆமா," இன்னாசி தாத்தா சத்தமாச் சொன்னாரு.

இதக் கேக்கவும், வாலிப பிள்ளைகளும், பையங்களும் கண்டிப்பா திருநாக் கொண்டாடனும்னு பொம்பளைகளோடெ சேந்து சொன்னாக. மாறி மாறிப் பேசி, கடேசில கொண்டாட னும்னு முடிவு செஞ்சாக.

போலீசு பாதுகாப்புக்கு ஏற்பாடு செஞ்சாக. வரிப்போட்டு, பந்தலு போட்டாக. லைட் கட்டுனாக. கலர் பேப்பரு வாங்கி சப்பரத்த சோடிச்சாக. எல்லா ஏற்பாடும் செஞ்சாலும், எல்லார் மனசுலயும் ஒரு கலக்கம் இருக்கத்தான் செஞ்சது. பள்ளர்களும், இந்தச் சப்பர பவனில, கலாட்டா செய்யனும்னு கங்கணங்கட்டி இருக்கிறதா ஊருக்குள்ள அங்னங்னெ சொல்லிக்கிட்டாக. பொம் பளைகதான் துணுஞ்சு நின்னாக. என்ன ஆனாலும் பரவாயில்ல. அந்த உயிர்த்த ஆண்டவரு பாத்து என்னத்த உட்டாலும் சரிதான். அவரு மேல பாரத்தப் போட்டுட்டு நம்ம கொண்டாடனும்னு திட்டவட்டமா இருந்தாக. திருநா நல்லபடியா நடந்து முடியனும்னு மனசுக்குள்ள பொழுதனிக்கும் செபமும் சொல்லிக்கிட்டாக.

எளவட்டங்களா ஒன்னுகூடி ரகசியமாப் பேசுனாக, "எளவட்டப் பையங்க ஒவ்வொருத்தரும் இடுப்புல கத்தியோடெ வரனும். நம்மளா மொதல்ல எதுவுஞ் செய்யக்கூடாது. ஆனா அவனுக செஞ்சானுகன்னா பதுலுக்குப் போட்டே தீரனும்."

"சப்பரம் பவனி வரயில, சின்னப் பிள்ளைக, பொம்பளைகள மொத வருசயில உட்டுட்டு, ரெண்டு ஓரத்துலயும் நம்ம வருசயா போகனும். ஆம்பளைக கடேசில வரனும். முக்கியமா பள்ளர்க தெரு வழியா வரும்போது ரொம்பா உசாரா இருக்கணும். "

இதே மாதிரி பள்ளர்க தெரு எளவட்டங்களும் கூடிப் பேசுனாக. "நம்ம எளந்தாரிப் பெயல்கள்ளாம், ஆயுதத்தோடெ இருக்கனும். சப்பரம் பவனி வரயில பசாருல வச்சே, பெரச்ச னையக் கௌப்பனும். அங்க இருந்து நம்ம தெருவத் தாண்டி போகையில குறிப்பான பெயல்களையா நாலஞ்சு பேத்த காலி பண்ணிரனும். நம்ம தெரு சந்துகள்ள மறைஞ்சு நிக்கனும். நம்ம பொம்பள பிள்ளைகள மொத நாளே பக்கத்து காலனிக்கு அனுப்பி வச்சுரனும்."

"போலீசு பாதுகாப்பு இருக்குமே. எப்பிடி போடுறது?"

"போலீசு என்னடா மயிரு போலீசு. அதுக்குத்தான் நம்ம சந்துகள்ள நின்னு கவனிச்சுக்கிட்டே இருக்கனும். போட்ட ஒடனே,

அந்தானிக்க ஒட்டங்கிண்ணிரனும். போலீசு கையில அம்புடக் கூடாது. பறையனுக கையலயும் மாட்டிக்கிரக்கூடாது. இங்கிட்டு மேற்காமெ ஓடிட்டா தப்புச்சிரலாம்."

திட்டம் போட்டபடி, ரெண்டு தெருவுலயும் ஆயுதங்களோடெ ரெடியா இருந்தாக. பூச முடியவும், செபம் பண்ணிட்டு உயிர்த்த சேசு சப்பரம் முன்னாலயும், தொணச் சப்பரமா மாதா சப்பரம் பின்னாலயுமா பவனி வந்துச்சு. சின்னப் பிள்ளைக, வயசுப் பிள்ளைக, பொம்பளைக வருச வருசயா முன்னால போக, அதுக்குப் பின்னால சப்பரங்கள் போக, சப்பரங்களுக்குப் பின்னால ஆம்பளைக போனாக. எளவட்ட பையனுக பூராம் வருசயில ரெண்டு பக்கமும் உசாரா போயிக்கிட்டு இருந்தாக. பாதுகாப்புக்கு மூனே போலீசுக்காரனுக கடேசில மெதுவா வந்துக் கிட்டு இருந்தாக. வழிநெடுக செபஞ் சொல்லிக்கிட்டு, பாட்டுப் படுச்சுக் கிட்டே வந்தாக. எல்லார் மனசுலயும் ஒரு பயம் இருக்கத் தான் செஞ்சது. உயிர்த்த சேசுவே, எங்களப் பத்துரமா கொண்டு போயி எங்க தெருவுக்குள்ள சேத்துரும்னு மனசு கெடந்து அடுச்சது.

பலசாதிக்காரக தெருவெல்லாங் கடந்து பவனி பசாருக்கு வந்துருச்சு. எளவட்டங்க ஒருத்தருக்கொருத்தரு எச்சரிக்கயா இருக்கச் சொல்லி உசார்படுத்துனாக. பசாரத் தாண்டுனா, பன்னாடிமாரு, பள்ளரு தெருவுக. இதுகள தாண்டியாச்சுனா, பெறகு நிம்மதிதான். தெருவுக்குள்ள மொழஞ்சிரலாம். வாயி செபம் செஞ்சாலும், பாட்டு படுச்சாலும், மனசு படபடன்னு அடுச்சுது. எந்த நேரம் என்ன நடக்குமோன்னு திகிலடைஞ்சு போயி சுத்தி முத்திப் பாக்கக் கூட முடியல. பசாருல பள்ளர்க கூட்டங் கூட்டமா நின்னு கிட்டு இருந்தாக. இன்னும் உருக்கமா செபம் பண்ணிக்கிட்டே போனாக.

கரெக்டா பசாரு முடியற எடத்துல, பள்ளர் தெரு பெய வந்து பவனில போய்க்கிட்டுருந்த பையன்மீது இடுச்சான். ஒடனே பறையர் தெரு பையங்க அம்புட்டுப் பேரும், முன்னால போன பொம்பள பிள்ளைகள, வேகமா நடக்கச் சொன்னாக. எங்கயும் ஒரே பதட்டமா இருந்துச்சு.

போலீசுக்காரங்ககிட்ட போயி விசயத்தச் சொல்லவும், "இங்னகுள்ள எதுவும் நீங்க பதுலுக்குச் செஞ்சு போடாதீக. சப்பரத்தத் தூக்கிக்கிட்டு வேகமாத் தெருவுக்குள்ள போயிருங்க. இடுச்சவன நாங்க கூப்டு விசாரிக்கோம். நீங்க எதுவும் கைகலப்பு வச்சுக்க வேண்டாம்."

போலீசுக்காரன் சொன்னதக் கேட்டுக்கிட்டு, வேக வேகமா, எட்ட இழுத்துப் போட்டு, பதறிப் பதறி செபம் செஞ்சுக்கிட்டே

சப்பரத்தத் தூக்கிட்டு ஓடியாந்தாக. வரும்போதே "சேசுவே, ஆண்டவரே, தேவதாயே எங்களக் காப்பாத்தும். உம்மையே நம்பி வரும் உம் மக்கள பத்துரமாக் கொண்டு போயி சேத்துரும். எங்க கூட எங்களுக்கு பாதுகாப்பா வாரும் ஆண்டவரே, கடவுளே, மாதாவே"ன்னு பரிதாபமா கத்திக்கிட்டே வந்தாக.

பள்ளர் தெருப்பக்கம் வரயில கடவுக்குக் கடவு பள்ளர்க கூட்டங் கூட்டமா நின்னாக. ஓரத்துல வந்த பறையர் தெரு பையங்களும், கத்தி எடுக்க தயாராத்தான் இருந்தாங்க. ஆனா சப்பரம் தெருவுக்குள்ள போயி பத்துரமாச் சேருந்தட்டிக்கும் எதுவும் செய்யக் கூடாதுங்றதுல உறுதியா இருந்தாக.

பன்னாடிமாரு தெருவழியாப் போம்போதே, பள்ளர் தெருப் பையங்க வேணும்னே எதுக்க ஒரு டிராக்டர ஓட்டிக்கிட்டு வந்தாக. டிராக்டர் நிமுர எளவட்டப் பையங்க ஒக்காந்துகிட்டு சப்பரப் பவனியப் போக உடாமெ கரச்சல் பண்ணுனாங்க. பறையர் தெருப் பையங்க அம்புட்டுப் பேரும், ஒன்னாச் சேந்துகிட்டு டிராக்டர்கிட்ட போனானுக.

ஒடனே போலீசுக்காரனுக முன்னால ஓடியாந்து டிராக்டர்ல இருந்த பையங்ககிட்ட சொன்னாக, "டிராக்டர பின்னால ஓட்டுங் கப்பா. பவனி போனப் பெறகு ஓட்டிட்டு வா. வீணாப் பிரச்சனயக் கெளப்பாதீக. எடு.... எடு.... பின்னால ஓட்டு...."

பறையர் தெரு அல்போன்சு சொன்னான், "இப்பிடி எல்லாஞ் சொன்னா எடுக்க மாட்டான். ரெண்டு வப்பு வச்சா தன்னால எடுப்பானுக."

"சரி... சரி.... நீங்க யாரும் எதுவும் பேசிக்காதீக. நாங்க பாத்துக்கிருவோம். நீங்க பவனிய சீக்கிரமா வடக்காமெ கொண்டுட்டு போங்க.... போங்கப்பா.... இன்னங் கொஞ்ச தூரந்தான். பொறுமையா போயிடுங்க," போலீசு கத்துனான்.

"இதெல்லாம் இடும்புக்குன்னே செய்றானுக. அந்த ஆண்டவருதான் இவனுகள போடனும்," மரியம்மா சொன்னா.

போலீசு வரவும் டிராக்டருல வந்தவனுகளுக்கு என்ன செய்யிரதுன்னு தோணல. பேசாம டிராக்டர பின்னாடியே ஓட்டிக்கிட்டுப் போயிட்டாக. பறையர்களும் சப்பரத்த தூக்கிக் கிட்டு வேகவேகமாய் போனாக. சப்பரம் தெருவுக்குள்ள வரவும் நிம்மதியா மூச்சு விட்டாங்க.

தெருவுக்குள்ள சப்பரங்கள எறக்கி வச்சுட்டு எளவட்டங்க பூராம் போலீசுக்காரனுககிட்ட கத்துனானுக. "அவ்வளவு திமுரா

வந்து பசாருல மேல இடிக்கான். டிராக்டர ஓட்டிக்கிட்டு வந்து பெரச்சன பண்ணுரான். நீங்க பாத்துட்டு சும்மாதானெ வந்தீக. அதான் அவனுகளுக்கு அம்புட்டுத் தைரியமாப் போகுது. இப்ப நீங்க கூப்டு கேக்கீகளா? இல்ல நாங்க போயிக் கேக்கவா?"

போலீசுக்காரனுக இவுகள சமாதானப்படுத்திட்டு, அவுகளே போய் கேக்குறோம்னு சொன்னப் பெறகு கொஞ்சம் ஒஞ்சானுக. இங்க இப்பிடி பேசிக்கிட்டு இருக்கயிலேயே, நடுத்தெரு சவரியப்பன பள்ளனுக வெட்டிப் போட்டானுகன்னு தெருப்பூராம் கூகொல்லோன்னு கெடந்துச்சு.

ஒடனே பையனுக பூராம் திமுதிமுன்னு தெக்காமெ ஓடவும், போலீசுக்காரனுக கஸ்டப்பட்டு அவுகள நிப்பாட்டி, "பொம்களைக பேச்சக் கேட்டுகிட்டு நீங்க போகாதீங்க. இது நெசம்மா பொய்யான்னு நாங்க போயி வெசாரிக்கோம். நீங்க எங்களுக்கு கொஞ்சம் ஒத்துழைப்புத் தந்தா, அவனுகள உண்டு இல்லன்னு ஆக்கிடுவோம். அதுனால பொறுமையா இருங்க," இப்பிடி என்னத்தையெல்லாமொ சொல்லி நிப்பாட்டிட்டு, பள்ளர் தெருப்பக்கம் போனாக. தெருவுக்குள்ள சொன்னது நெசந்தாம்னு கண்டுகிட்டாக.

சனம்பூராம் சப்பரத்தோடெ தெருவுக்குள்ள வந்தப் பெறகு, சவரியப்பன் மட்டும், மகளக் காணும்னு மறுபடி கடப்பக்கமாத் தேடிட்டுப் போயிருக்கான். போன எடத்துல, பத்துப் பதுனஞ்சு பேரு அவன வளச்சு, வெட்டிக் கொன்னுட்டாக. இதப் பாத்துக்கிட்டு இருந்த வேறு சாதிக்காரனுகளும், எதுவுமே கண்டுக்கல.

போலீசுக்காரனுக சவரியப்பனோடெ பெரேதத்த ரவ்வோடெ ரவ்வா டேசனுக்குத் தூக்கிட்டுப் போயிட்டாக. பறையர் தெருவுல சவரியப்பன் உசுரோடெ இருக்கானா, இல்லியான்னு ஒரு வெவரமும் தெரியாமெ ஆளாளுக்கு, என்னென்னமோ சொல்லி பொலம்பிக்கிட்டுத் திருஞ்சாக. பள்ளர் தெருவுல அம்புட்டுப் பேரும் ஓடிப் போனாக. விடுஞ்சப் பெறகு சரியான விசயம் தெருஞ்சது. சப்பரத்தக் கொண்டாந்து பத்துரமா தெருவுக்குள்ள சேத்துட்டோம்ங்ற சந்தோசம் கூட இல்லாமப் போச்சு. சந்தோசமும், கலக்கமும் போயி, இப்ப சோர்ந்து போயி, சோகமா ஒக்காந்துட்டாக.

வயசான பொம்பளைக மட்டும், "நம்ம பொறுத்துப் போறதுனால ஒன்னுங் கொறஞ்சு போகமாட்டோம். அந்த ஆண்டவரே அவனுகள அழிப்பாரு. அவர உட்டா நமக்கு வேற யாரு தொண இருக்கா? அந்தக் கடவுள்தான் கண் தொறந்து

பாக்கனும்," பல மாதிரி சொல்லி பொலம்புனாக. துக்கம் நெஞ்ச அடைக்க இதுக்கு மேல யாருக்கும் எதுவும் பேச முடியல.

சாயங்காலம் பெணத்த வாங்கியாந்து பெதச்சாக. அப்ராணி, சவரியப்பன் ஒரு வம்பு தும்புக்குப் போகமாட்டான்; அவனப் போயி இப்பிடிக் கொத்திக் குடுச்சுட்டானுகளேன்னு ரத்தக் கண்ணீர் வடுச்சாக. அந்த லீவு பூராம் இந்த சோகத்துலயே போச்சு. பத்து இருவது நாளுக் கழுச்சு, நாலஞ்சு பள்ளனுகள போலீசு எங்க இருந்தோ புடுச்சுட்டுப் போனாக. பெறகு கொஞ்ச நாளைல, பள்ளனுக தெருவுக்குள்ள மறுபடியும் நடமாட ஆரம்புச்சாக. உள்ளுக்குள்ள அவனுகளுக்குப் பயம் இருந்தாலும் வெளிய ரொம்பாத் தெம்பா அலஞ்சானுக. அவுக எளவட்ட பெயல்க, திட்டம் போட்டபடி ஒருத்தனையாவது காலி பண்ணிட்டோம்னு திருப்தியா சொல்லிக்கிட்டாக.

"அவனுக வெட்டி வெட்டிப் போட, நம்ம போயி வாங்கி வாங்கிப் பெதைச்சுக்கிட்டு இருக்கோமே.... அவனுக ஒன்னு போட்டா... நம்ம ஒம்பது பேத்த போட்டாவுல பயப்புடுவானுக! இப்பிடி உட்டுக்கிட்டே இருந்தம்னா அவனும் ஒவ்வொருத் தனையா போட்டுத் தள்ளிக்கிட்டே இருப்பானுக. இதுக்கு ஒரு முடிவு கட்டியாகனும்," சாந்தாமேரி ஆவேசமாக் கத்துனா. அவளத் தொயந்து பத்துப் பன்னெண்டு பொம்பளப் பிள்ளைக பூராம் மானாவாரியா கத்துனாக.

இதக்கேட்ட நாலஞ்சு பெரிய பொம்பளைக சொன்னாக, "சும்மா கத்தாதீகத்தா. அததுக்கு நேரம் பாத்து அந்தப் பெயலுக ளோடெ கொதவளய அறுக்காம உடக்கூடாது."

"வருசா வருசம் உயிர்த்த ஆண்டவரு திருநாள எப்பிடிக் கொண்டாடுவோம்! நம்ம பாட்டு படுச்ச கும்மியடிச்சு, கொலவ போட்டாத்தான் சப்பரமே மேல எழும்பும். இந்தத் தடவ இப்பிடி பதறிப் பதறி, செபம் பண்ணிக்கிட்டு சப்பரத்த தூக்கிக்கிட்டு ஓடியார வேண்டியதாப் போச்சு."

"அதோடயா போச்சு பாதகத்தியா.... அந்த மச்சான் சவரியப்பன துள்ளத் துடிக்கக் கொன்னு போட்டானுகளே சண்டாளப் பாவிக. அந்த சேசுநாதர் சாமி சிலுவையில பாடுபட்டது கணக்கா, என்ன பாடுபட்டு அவரு உசுரு போச்சோ! ஒரு நல்ல நாளும் அதுவுமா... இப்பிடிப் பொணமாப் போனாரே."

"சேசுரத்துனத்த வெட்டி ஒரு வருசங்கூட ஆகல அதுக்குள்ள இப்பிடி.... வருசா வருசம் இப்பிடிக் கொல செஞ்சுக்கிட்டே இருக்கானுகளே. கடவுளு கண் தொறந்து அவனுகள போட்டுத்

தள்ள மாட்டேங்காரே. ”

“அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்தா. நீ வேணும்னா பாத்துகிட்டே இரேன். அவனுக செஞ்ச அம்புட்டு கொலையும் அவனுகளப் பழி வாங்கும். வெளங்க மாட்டானுக.”

பொம்பளைக ஆளாளுக்கு மனச் சங்கடத்தச் சொல்லி ஆத்திக் கிட்டாளுக. ஆம்பளைக ரொம்ப நொந்து போனாக. எளவட்டப் பெயலுகளும் ரொம்பா வெசாரம் புடுச்சுப் போயி சீவனத்துப் போனவனுக மாதிரி திருஞ்சானுக.

சேசுரத்துனத்த வெட்டும் போது கூட இருந்து பாத்த பெயலு களுக்கு மனசுக்குள்ள பழி வாங்கனும்ங்ற வெறி ஆழமாகிட்டே போச்சு. பெரியாளுக கூட இந்தத் தடவ ரொம்பாச் சோந்து போனாக.

“நம்ம பாட்டுக்கு சூசுவான்னுதானெ சப்பரத்தோட வந்தோம். இப்பிடி பொடுக்கு பொடுக்குனு மனுசன மனுசம்னு பாராமெ வெட்டுறானுகளே. அவனுக மனசுகள்ள இத்தினிக்கூட ஈவு எரக்கம்னு இருக்காதா? அந்த ஆண்டவருதான் நம்மளக் காப்பாத்தனும்,” மனச் சங்கடத்தோடெ சொல்லிக்கிட்டாக.

எளவட்டங்களுக்கு, ஏதாச்சும் செய்யனும்னு இருந்தாலும், எப்பிடி, என்னன்னு ஒன்னும் தெளிவில்லாமெ பித்துப் புடுச்சது கணக்காத் திருஞ்சானுக. ஆனா இத இப்பிடியே உட்டுறக் கூடாதுன்னு மட்டும் தெளிவா இருந்தாக. இவுகள உசுப்பி உடுறது கெணக்கா அடுக்கடுக்கா பல விசயங்கள் நடந்துச்சு. எல்லாஞ் சேந்து அவுகள ரொம்பாத் தீவிரமா செயல்படத் தூண்டி உட்டுருச்சு.

சேசுரத்தனத்த வெட்டும்போது கூட இருந்து பாத்த பையங் களுக்கு, இப்ப சவரியப்பனயும் வெட்டிக் கொன்னு போட்டது, ரொம்ப வேதனையா இருந்துச்சு. திரும்பத் திரும்ப அவுக மனசுக்குள்ள சேசுரத்துனத்த வெரட்டி வெரட்டி வெட்டுன காட்சி வந்துகிட்டே இருந்துச்சு. அந்த மூனு பேத்துக்கும் எப்படியாச்சும் பள்ளனுகள்ள யாரையாச்சும் வெட்டனும்ங்ற வெறி நாளுக்கு நாளு அதிகமாகிட்டே போச்சு.

பவுல்ராசுக்கு பதுனஞ்சு வயசுதான்; சகாயராசுக்கு பதினேழு, பன்னீர்ச் செல்வத்துக்கு இருவது வயது. இவுக மூனு பேரும் சேசுரத்துனத்த வெட்ட உட்டுட்டு பயந்தாரிப் பெயலுக கெணக்கா தப்புச்சு ஓடியாந்துட்டாகன்னு ஊருல அப்பப்ப மத்த பெயலுக குத்திக் குத்திக் காட்டிகிட்டு இருந்தாக. இதுவேற அவுகளுக்கு ரொம்பாச் சங்கட்டமா இருந்துச்சு. எப்பிடியாச்சும் பள்ளனுகள பழிவாங்கனும்னு சதா இந்த எண்ணத்துலயே மூனுபேரும்

சேந்துகிட்டு திருஞ்சாங்க.

சவரியப்பன வெட்டுனதுக்கு, பதுலுக்கு பறையர்க எதுவும் செய்யாமெ இருக்கவும், பள்ளர் தெரு பையங்க, சாடமாடையா நக்கல் பண்ண ஆரம்புச்சுட்டாக. தெக்க வடக்கெ போகையில, வரயிலெ ரொம்பாக் கேவலமா பேசுனானுக.

"என்னடா, ஒன்னப் போட்டுத் தள்ளனுமே... பதுலுக்கு போட முடியலியா? எல்லாப் பொட்டப் பெயலுகடா. இன்னும் ரெண்டெப் போட்டாக்கூட தூக்கிப் பெதச்சுட்டு செபம் பண்ணு வானுகடா."

"சே... சே.... அவுக வேதத்துல கொல செய்றது பாவம்னு இருக்குடா. அதுனால அவனுக கொலையே செய்ய மாட்டானு கடா."

"என்ன....மாப்ளே சொணங்கிட்டியா! இதுக்கே இப்பிடின்னா ... இனி வர்ரதுக்கு என்ன செய்வெ? நமக்கு வடக்க இருக்குற இந்த நாலஞ்சு தெருவயும் ஒத்த சுடுகுஞ்சு இல்லாத சுடுகாடா ஆக்கனும். ஒன்னு நம்ம இருக்கனும்; இல்ல அவனுக இருக்கனும். போட்டு பாப்போம் வாரீயா?," வார்த்தையில மட்டுமில்லாமெ செயலுலயும் அடாவடித்தனஞ் செஞ்சாக பள்ளர் தெரு பையங்க.

பறையர் தெரு பையங்க போகையில மீசையத் தடவி உடுறது, லுங்கியத் தூக்கி எடுத்து நெஞ்சுக்கு மேல கட்டிக்கிறது, பாதைல போம்போதே சைக்கிள்ல வந்து ஒரசுறது, வண்டியக் கொண்டாந்து வேனுமின்னே இடிக்கிறது, பாதைய அடச்சுக்கிட்டு நின்னுகிட்டு வழிய மறைக்கிறது, கைய மடக்கிக் காட்டுறது, இப்பிடி இல்லாத நட்னத்தனமெல்லாஞ் செஞ்சாக.

பறையருங்க தெருவுல வந்து சொல்லிச் சொல்லி ஆத்துரப் பட்டாக. பொறுத்துப் போகச் சொல்லி எளவட்டங்களத் தட்டிக் குடுத்துட்டே வந்த பெரியாளுகளுக்கும் கோவம் வந்துச்சு. நம்ம சும்மா இருந்தாக்கூட நம்மள இருக்க உடமாட்டானுகெ போலன்னு ஆளாளுக்குப் பொலம்புனாக.

போலீசுக்காரனுக பஸ் ஸ்டாண்டுலயும், பசாருலயும் காவலுக்கு இருந்தாக. பறையர் தெருவுலயும் தெருவுக்குத் தெரு போலீசுக்காரனுக பாதுகாப்புக்கு இருந்தாக. பள்ளர்க சாவடிலயும், தெருவுலயும் போலீசுக இருந்தாக. பள்ளர் தெரு பையங்க போகயில வரயில இப்பிடி உரிக்காட்டி உசுப்பி உடுறதப்பத்தி போலீசுக்காரங்ககிட்ட பறையர்க சொன்னாலும், இவுகளத்தான் பொறுத்துப் போகச் சொன்னாக. இவுகளும் எம்புட்டோ பொறுமை யாத்தான் இருந்தாக. எப்பிடினாச்சும் பறையர்கள வம்புக்கு

இழுக்கனும்னே பள்ளர்க ஏட்டிக்குப் போட்டியாப் பேசுறதும், வைறதும், சாடமாடையாக் குத்துரதுமா இருந்தாக. பறையர்க அம்புட்டயும் சகிச்சுக்கிட்டு இருந்தாக.

ஒரு ஞாயித்துக் கெழம சாயங்காலம் மசங்குன நேரத்துல பள்ளர் தெரு பொம்பள ஒருத்தி நேரா பறையர் தெருவுல இருந்த சாவடிக்கு வந்து போலீசுட்ட கத்துனா, "கம்மாய்க்குள்ள ஏம்மகா சூசுவான்னு வெளிக்கிருந்துகிட்டு இருக்கயில, இந்தத் தெரு பைய ஒருத்தன் வந்து கையப் புடுச்சு இழுத்துருக்கான். நீங்கதான் இத என்னன்னு கேக்கனும்." கூடவே மகளயும் கையோடெ கூட்டியாந் திருந்தா.

அந்தப் பிள்ளைக்குப் பத்து வயசுகூட இருக்காது. போலீசுக் காரர் அந்தப் பிள்ளைட்ட யாரு பாப்பா ஒனிய இழுத்ததுன்னு கேட்டதுக்கு, யாரும் இழுக்கலன்னு சொல்லவும், அவுகாத்தாளுக்கு ஆங்காரமாகிப் போயி திரும்பியும் கத்துனா. "போலீசப் பாத்துட்டு பெயந்துபோனா. அதான் சொல்ல மாட்டேங்கா. ஒழுங்கு மரியா தயா இல்லன்னா, அன்னைக்குப் பசாருல ஓட ஓட கொத்துனது கெணக்கா, கொத்திப் போடுவோம் கொத்தி. ஊருக்குள்ள இருந்துக்க மாட்டீகெ... ஆமா...," சொல்லிக்கிட்டே பிள்ளையப் புடுச்சு தரதரன்னு இழுத்துக்கிட்டே அவுக தெருவுக்குப் போனா.

இதப் பாத்த பறையர் தெரு ஆணும் பொண்ணும் போலீசுக் காரங்கூட மல்லுக்குப் போனாக, "இப்பிடிக் கலவரமாகிக் கெடக்கயில, இம்புட்டுத் துணிச்சலா எங்க தெருவுக்குள்ள கூசாமெ மொழஞ்சு கொத்துவோம், வெட்டுவோம்னு பேசிட்டுப் போறா.... நீங்க பாத்துட்டு கம்முனே ஒக்காந்துருக்கீக. இனி ஒங்கள நம்பி பெர யோசனம் இல்ல. நாங்க செய்ய வேண்டியத நாங்களே செஞ்சுக்கு றோம்," நாட்டாமெ சொன்னாரு.

பொம்பளைகளும் மானாவாரிக்குக் கத்துனாளுக. "இம் புட்டுக் காலமா, ரவைக்கு ஒதுங்கனும்னா, மேற்க கம்மாக்கரை யடிலதான் ஒதுங்குவோம். அந்தத் தெரு முண்டைகளும் வந்து சீலயத்தூக்கிட்டு ஒக்காருவாளுக. இப்ப இந்த ரெண்டுவாரமா நாங்க போனம்னா, இருட்டுக்குள்ள அவுக தெருவுக்குள்ள நின்னுகிட்டு கல்லக் கொண்டி எறிராளுக. சரி இதையெல்லாம் பெருசு படுத்துனா, மேலும் மேலும் இங்குட்டும், அங்குட்டும் மாறி மாறிக் கொல உளுகுமேன்னு நாங்களும் பொறுமையாகவே போய்க் கிட்டுருக்கோம்."

"அதுமட்டுமில்ல சார், நாங்க கோயிலுக்குப் போகனும் னாலும், கடகண்ணிக்கோ, வேல வெட்டிக்கோ போகனும்னாலும்

மேற்காமெத் தான் போயாகனும். இப்பக் கூடப் போயி பாருங்க, வேணுக்கும்னே பாத பூராம் நரகலா குமி குமியா குமுச்சு வச்சுருக்காளுக. கேக்கப் போனா, ஒனக்கு இந்தப் பாத கெடையாது. இது எங்க நெலம். நீ இங்குட்டு வரக்கூடாதுன்னு சக்காளத்திக சண்டைக்கு வாராளுக. கவுருமெண்டு நெலத்துல நாங்க நடக்கக் கூட முடியல சார். நீங்க தலையிட்டு தட்டிக் கேக்காட்டெ, பெறகு நாங்களே ஒரு முடிவுக்கு வந்துருவோம். இனியும் பொறுத்துப் போகுறதுக்கு எங்களால முடியாது. ... ஆமா."

ரெண்டு நாளுக் கழுச்சு எளந்தாரிப் பையங்களா ராத்திரி பத்து மணிக்குமேல ரகசியக் கூட்டம் போட்டாக. முக்காவாசிப் பேரு பள்ளனுகள வெட்டனும்னு ஆவேசமாப் பேசுனாக. அதுல மொத ஆளா அந்த மூனு பேரும் நின்னாக. அவனுக பேசுன ஆவேசத்தக் கண்டுட்டு மத்தப் பேரு அவனுகள அதட்டுனாக, "ஏலேய், நீங்க பாட்டுக்குச் சின்னப்பிள்ளத்தனமாச் சொல்றீகடா. ஒங்களுக்கு என்னங்கடா தெரியும். சும்மா குண்டக்கா மண்டக்காப் பேசி காரியத்தக் கெடுத்துப் போடாதீகடா."

பன்னீர்ச் செல்வம் பதுலுக்குச் சொன்னான், "எங்களுக்குத் தெரியும்ணா, சேசுரத்தனம் மாமாவெ எப்பிடி ஓட ஓட வெட்டு னானுக! நாங்க பாத்துக்கிட்டுத்தானெ இருந்தோம். அப்ப எங்க கையில கம்போ, கத்தியோ ஒன்னுமே இல்ல. இல்லன்னா அன்னைக்கே ஒருத்தனோடெ கொதவளையாவது அறுத்துறுப் போம். அன்னையலருந்து வீச்சருவாளோடெதான் அலைறோம். என்னைக்குன்னாலும் பள்ளன வெட்டாமெ உடமாட்டோம்," சொன்னதுமில்லாமெ முதுகுப் பக்கமிருந்து சட்டைக்குள்ளருந்து அறுவாள எடுத்துக் காட்டுனான். அது மாதிரியே மத்த ரெண்டு பெயலுகளும் எடுத்துக் காட்டுனானுக.

அதப் பாத்த நாட்டாமெ சொன்னாரு, "ஏலைகா, எல்லாஞ் சரித்தான். போலீசுக்காரம் பாத்தம்னா அறுவாளப் புடுங்கிட்டு, ஒங்களயும் உள்ள தள்ளிருவான். பெறகு நீங்க ஒருத்தனக் கூட வெட்ட முடியாது ஆமா."

இம்புட்டயுங் கேட்டுக்கிட்டே பக்கத்துத் திருணயில படுத்திருந்த ரோசம்மா சொன்னா, "நீங்க ஒங்க பாட்டுக்கு செஞ்சுட்டு ஓடிப் போறிக. இங்க நாங்கதான் ஒரு பக்கம் போலீசுக்காரனுககிட்ட அடிவாங்கிட்டு பயப்பட வேண்டி இருக்கு. இன்னொரு பக்கம் பள்ளனுகளுக்குப் பயந்து சாக வேண்டி இருக்கு. வேல வெட்டிக்கும் போக முடியாமெ, கஞ்சி தண்ணிக்குக் கஸ்டப்பட்டுகிட்டு... சீ.... இதென்ன பொழப்புடா.... நாயிபடாத

பாடு... வாழவும் முடியாமெ... சாகவும் முடியாமெ...."

"நீ என்ன இன்னும் தூங்காமெக் கெடக்குற கெழவி. நீதான் பாத்தியே... நம்மளா மொதல்ல கத்தியத் தூக்குறோம். அப்ப அவெ வெட்டி வெட்டிப் போடுவான். நம்ம சும்மாயே இருக்கனும்ங்றெ. அப்பிடித்தானெ? நீ ஒம்பாட்டுக்குக் கஞ்சியக் குடுச்சமா... வெத்தல பாக்கு போட்டமான்னு கெட," அந்தோணி அதட்டலாச் சொன் னான். அதோடெ கூட்டத்தெ எடையிலயே முடுச்சுட்டு எந்துருச்சுப் போயிட்டாக.

ரோசம்மா கெழவியோட வாயி நிக்காமெ, மறுநாளு காலைலயே அங்ன இங்ன பாத்தவுககிட்டப் பூராஞ் சொல்லிட்டா.

இதக் கேள்விப்பட்ட பெரியாளுகளும் எளவட்டப் பெயல்க கிட்ட நிதானமாச் சொன்னாக, "ஏலைகா நம்ம பொறுத்துப் போறதுனால ஒன்னுங் கொறஞ்சு போக மாட்டம்டா. பொழைக்குற வழியப் பாருங்கடா. ஒன்னுக்குள்ள ஒன்னு எதுக்கடா இப்பிடி வன்மம் வச்சுக்கிட்டு."

"நீங்கதான் வாய்க்கு வாயி ஒன்னுக்குள்ள ஒன்னுங்கீக. அவனுக அப்பிடி நெனைக்கலியே. இன்னைக்கு வரைக்கும் பாருங்க அவன்தான் வம்புக்கிழுக்கான். நம்ம சூசுவான்னு போனாலும், நம்மள உசுப்பேத்து ரானுக. அப்ப நம்ம சும்மா இருக்க முடியுமா? சப்பரஞ் சுத்தி வரயில, அவனுக பெரச்சன பண்ணுனாக, சவரியப்பன வெட்டுனானுக. நம்ம அந்த சப் இன்ஸ்பெக்டரு சொல்லுக்குக் கட்டுப்பட்டு நிக்கலியா? இத்தனைக்கும் அன்னைக்குப் போடனும்னா போட்டுத் தள்ளி யிருக்கலாம். நம்ம பெயலுக பூராம் ஆயுதம் வச்சிருந்தானுக. ஆனாலும் நம்ம எதுவுஞ் செய்யல. அதுனால இன்னைக்கு என்ன செய்றானுக? போம்போது வரும்போது நக்கலு பண்ணிச் சிரிக் கானுக. போன வாரத்துல மன்னாரு மகன் ராயப்பன டி.வி.எஸ். வண்டில வந்து இடுச்சுப்போட்டு என்ன மாப்ளே வண்டி வருதுல்ல ஒதுங்கி நிக்கக் கூடாதான்னு கேட்டுட்டு அம்புட்டுப் பெயல்களும் கொல்லுன்னு சிரிச்சிருக்கானுக. இதுக்கு என்ன சொல்ற?"

சாந்தப்பன் பொறுமையாக் கேட்டான் "இன்னைக்கு நேத்து இல்லடா. அந்தப் பெயலுக ஆதில இருந்தே இடும்புக்காரப் பெயலுகதான். பல சாதிக்காரனுக இருக்கிற எடத்துல பள்ளம் பறையனுக்குள்ள என்னத்துக்கு சண்ட போட்டுகிட்டுன்னு நாங் களும் எம்புட்டெம்புட்டோ பொறுமையாத்தான் காலத்த ஓட்டு றோம். வருசாவருசம் எதுனாச்சும் ஒரு வெசயத்த வச்சுக்கிட்டு மல்லுக்கு வருவானுக. ஆனா இந்த மாதிரி வெட்டிக்கிட்டு

குத்திக்கிட்டு கெடந்ததில்ல. அப்பப்ப போலீசுக்குப் போறது, ராசியாகிட்டு வறது... இப்பிடியே போச்சு. இப்ப உள்ள பெயலுக பூராம் மிருக சாதிப் பெயலுகளா இருக்கானுக. எடுத்த எடுப்புலயே ஒரு உசுர கொல்லுரானுக. சே.... மிருகங்கூட இப்பிடிச் செய்யாது," தேவராசு தாத்தா சொன்னாரு.

"பெறகென்ன மயித்துக்கு ஒன்னுக்குள்ள ஒன்னு ஒன்னுக் குள்ள ஒன்னுன்னு பொழுதெனிக்கும் சொல்றீக? அன்னை யிலருந்தே இவனுக நம்மளுக்கு எதிரிகதான். இனியும் பொறுத்துக் கிட்டுருந்தா நம்மள மாதிரி சொரண கெட்ட பெயலுக எவனு மில்ல,"அந்தோணி கத்துனான்.

சாமிநாதனும் அந்தோணி சொன்னத ஆதருச்சுப் பேசுனான். ஜெயராசு கலக்கத்தோடெ ஒக்காந்துருந்தான். கொமரிப் பிள்ளைகள மட்டுமில்லாமெ முக்காவாசிப் பொம்பளைக பள்ளனுகள போட்டுத் தள்ளனும்னு தான் சொன்னாக. ஆம்பளைக போனா போகட்டும். நாங்க குடும்பத்தக் காப்பாத்துவோம்னு துணுச்சலா சொன்னாக.

இதுக்கடுத்து ரெண்டு மூனு வாரமா யாரும் எதுவும் மும்முரமா பேசிக்கிரல. எப்பிடி, எங்க வச்சு யாரத் தீத்துக் கட்டனும்னு சரியான சமயம் பாத்துக்கிட்டு இருந்தாக. பள்ளர்களும் பறையர்கள சும்மா உடுறமாதிரித் தெரியல. எரிய தீயில எண்ணெய் ஊத்துனது கெணக்கா என்னத்தையாவது சொல்லிச் சொல்லி ஆத்துர மூட்டிக்கிட்டே இருந்தாக.

ரெண்டு மூனு வாரமா என்ன நடக்குமோ, எப்பிடி ஆகு மோன்னு அம்புட்டுப் பேரும் கெதங்கெதம்னு அலஞ்சாக. பெறகு கொஞ்சம் சகஜ நெலமைக்கு வர ஆரம்புச்சாக, யாரும் எதிர்பாராத ஒரு வெள்ளிக்கெழம, பறையர் தெருவுலயும், பள்ளர் தெருவுலயும் ஒரே கொழப்பமா இருந்துச்சு. விசயம் இன்னன்னு ஒடனே யாருக்குமே தெரியல.

கூட்டம்போட்டு பேசுனதுலருந்தே பவுல்ராசு, சகாயராசு, பன்னீர்ச்செல்வம் இந்த மூனு பெயல்களும் ரொம்பா முஸ்தீபா அலஞ்சானுக. எந்த நேரமும் வீச்சறுவாள முதுகுல மறச்சு வச்சுக்கிட்டு, எந்தப் பள்ளன் சிக்குனாலும் போட்டுரனும்னு வெறியோடெ திருஞ்சானுக. தெனமும் இதே சோலியா பசாருப் பக்கம், பஸ் ஸ்டாண்டுப் பக்கம், கடைவீதிப் பக்கமா நோட்டம் உட்டுக்கிட்டே இருந்தானுக. இவனுக இம்புட்டு மும்முரமா இருந்தது ஊர்ல யாருக்குந் தெரியல. ஒரு சிலருக்குத் தெருஞ் சிருந்தாலும், இவனுக இத்தினிக்கானு பெயல்க என்ன செஞ்சுர

போறானுகன்னு, இவனுகள ஒரு பொருட்டாவே எடுத்துக்கல. ஆனா, சேசுரத்துனங் கொலய நேர்ல பாத்துட்டு ஓடியாந்ததுலருந்தே இவனுக திட்டத்தோடெ இருந்தானுக.

வழக்கம்போல வெள்ளிக்கெழம அன்னைக்கும் காலைல பத்து மணி வாக்குல பசாருப்பக்கம் போயி பாத்துருக்கானுக. ஒரே ஒரு பள்ளன் மட்டும் இருந்துருக்கான். நம்ம மூனு பேரு சேந்து ஒருத்தன வெட்டக்கூடாதுடா, ஒவ்வொருத்தரும் ஒரோரு ஆளப் போடனும்னு சொல்லிட்டுத் திரும்பித் தெருவுக்குள்ள வந்துட்டாக.

அவுக ஒன்னாவே அலைரதப் பாத்துட்டு மாசிலாமணி கேட்டு ருக்காரு, "ஏலேய் என்னங்கடா வேல வெட்டி எதுக்கும் போகலயா? இப்பிடி தெருக்காட்டச் சுத்திக் கிட்டுருக்கீக?"

"வேல ஒன்னுங் கெடைக்கல தாத்தா. சும்மா பசாருப் பக்கம் போயிட்டு வந்தோம்." சொல்லிட்டு வீடுகளுக்குப் போயிட்டானுக.

மத்தியானங் கூழு குடுச்சப் பெறகு, மறுபடியும் மூணு பேருமாச் சேந்து பஸ் ஸ்டாண்டுக்குப் போனானுக. அங்க அம்புட்டு கூட்டமில்ல. ஆனா நாலஞ்சு பள்ளனுக நின்னுகிட்டு இருந்துருக் கானுக.

அவுகளப் பாக்கவும் பன்னீர் பெய சொன்னான், "ஏலைகா, இதுதான் சரியான சமயம். போலீசுக்காரனும் தூங்குறானுக. போட்டுருவோம்."

மத்த ரெண்டு பேரும் சரின்னு சொல்லிட்டு, சாதாரணமாப் போறவனுக கெணக்காப் போயி, கிட்டத்துல போகவும் அறுவாள எடுத்து ஒரே வெட்டா வெட்டுனானுக. மூனு பேரும் ஆளுக்கு ஒரு ஆளா வெட்டிட்டு, கீழோட வழியா ஓடியாந்து தெருவுக்குள்ள வந்துட்டானுக. கதறலக் கேட்டு முழுச்ச போலீசுக்காரனுக கையில ஆப்டாமெ ஊருக்குள்ள வந்து அறுவாளுகளக் கழுவிட்டு அங்ன இருந்த பெரியாளுககிட்டு, "பஸ் ஸ்டாண்டுல என்னமோ கொல உளுந்துருச்சாம். போலீசுக்காரனுக வரமுன்ன ஓடிப்போங்க"ன்னு சொல்லிட்டு இவனுகளும் ஓட்டங் கிண்ணிட்டானுக.

தெருவுல இருந்தவுகளுக்கு ஒன்னுஞ் சரியாப் புரிபடல. பள்ளர்க தெருவுக்குள்ள விசயம் பரவவும் ஒடனே கத்திகளோடயும், கம்புகளோடெயும் காடுகளுக்குச் செம ஓடுனானுக. பறையனுக எவெ அம்புட்டாலும் கொல்லனும்ங்ற வெறியோடெ அலஞ்சானுக.

பறையர் தெருவுல இருந்த ஆளுக பூராம் கத்திகள எடுத்துக்கிட்டு போலீசு கண்ணுலருந்து மறஞ்சு மறஞ்சு போயிக் கிட்டு இருந்தாக. வெட்டிட்டுப் போன மூனு பெயலுகளும்

மலங்காட்டுச் செம ஓடிப் போனானுக. அவனுக நெனச்சத செஞ்சாச்சுனு அவனுக மனசுல இருந்துச்சு... மலங்காட்டுச்செம ராத்திரி ஆனா புலி, யானை வருமேன்னு பயமே இல்லாமெ போயிக்கிட்டு இருந்தானுக.

போம்போதே சகாயராசு சொன்னான், "ஏணா, நம்ம வெட்டும் போது போலீசுக்காரனுக அங்னகுள்ளதானெ இருந்தானுக. அதுவும் துப்பாக்கியோடெதான இருந்தானுக. ஒன்னுஞ் செய்யல பாரேன்."

"அவனுக சும்மா சாப்புட்டு துப்பாக்கிய தொணைக்கு வச்சுக் கிட்டு படுத்துத் தூங்கத்தாண்டா லாயக்கு. அவனுகளும் தொட நடுங்கிப் பெயல்கதான். எவனாச்சும் வகதொகயில்லாமெ எக்குத் தப்பா மாட்டிக்கிட்டாம்னு வையி. டேசன்ல வச்சு பின்னி எடுத்துரு வானுக. ஒத்தைக்கு ஒத்த வரச்சொல்லு. முடியாது."

"சரி இப்பிடியே எங்க போறது? இருட்டிரும் போலயே. என்ன செய்றது?"

"போவம்டா ... போயிக்கிட்டே இருப்போம். காலுபோன லெக்குல போவோம். எப்பிடியும் இனிமே நம்ம ஊருக்குள்ள மொழய முடியாது. இந்நியாரம் போலீசுக்காரனுகள கொண்டாந்து ஊரடைக்க குமுச்சிருப்பாக. அவனுக கையில நம்ம பெயலுக யாரும் சிக்கிக் கிட்டாகளா என்னன்னு தெரியல. இன்னும் ரெண்டு மூனு நாளைல எல்லா வெவரமும் தெருஞ்சு போகும். நம்ம இந்த மலமேல ஏறி எறங்குனம்னா சின்னப் புதூர் வந்துரும். அங்க நம்மாளுக நெறய்யா இருக்காக. அங்க போயி ரெண்டு நாளைக்கு இருப்போம். சரி தீப்பெட்டி வச்சிருந்தா எடு. இருட்டிருச்சுன்னா, மிருகங்க எதும் வந்தாலும் வரும். தீப்போட்டம்னா ஓடிப்போகும். இந்தத் துண்ட ஒரு கம்புல சுத்து. அதத் தீப்பந்தமா கொளுத்தலாம்." பன்னீரு வெவரமாச் சொல்லி மத்த ரெண்டு பேத்தயும் கூப்டுகிட்டு நடந்தான்.

# பத்து

தெருவுக்குள்ள நடந்த விசயம் எதுவுமே தெரியாமெ பருத்திக் காட்ல பருத்தி எடுத்துக்கிட்டு இருந்தான் பெரிய ராயப்பன். கத்தி கம்புகளோடெ பத்துப் பதுனஞ்சு பள்ளருக ஆவேசமா வாரதப் பாத்துப் பதறிட்டாரு. கைல ஆயுதம் ஒன்னுமில்ல. இருந்திருந்தாலும் பத்துப் பதுனஞ்சு பேரு கும்பலா வரயில என்ன செய்யமுடியும். அவருகூட பருத்தி எடுத்துக்கிட்டு இருந்த அவரோட சம்சாரம் அமலோற்பவமும், வடக்குத் தெரு சந்தனமேரியும் பள்ளனுக ஆவேசமா வாரதப் பாத்துட்டு பதறிப் போனாக. ராயப்பனப் போயி ஒளிஞ்சிக்கிற சொல்லிட்டு, உசுரக் கைல புடுச்சுக்கிட்டு நின்னாளுக. ராயப்பனும் ஓடிப்போயி பொதருக்குள்ள ஒளிஞ்சுக்கிட்டாரு.

சேரித்தெரு ஆம்பளைக யாருமே சிக்காமப் போகவும், கொல வெறில சந்தனமேரிய ஒரே வெட்டு வெட்டி, தலவேற ஒடம்பு வேறன்னு ஆக்கிட்டு, கையெடுத்து கும்புட்ட அமலோற்பவத் தையும் வெட்டுனாக. பொம்பளைகள வெட்ட மாட்டாங்கன்னு நெனச்ச ராயப்பனுக்கு இதப் பாத்துட்டு ஒடம்பெல்லாம் பதறுது. அமலோற்பவம் மயக்கம் போட்டு கீழ சாஞ்சுட்டா. பெறகு அம்புட்டுப் பெயல்களும் சுத்திச் சுத்திப்பாத்துட்டு ஊருக்குள்ள போயிட்டானுக.

ராயப்பனுக்கு வெளிய வரவே பயம்மா இருந்துச்சு. தெருவுக் குள்ளயும் போகமுடியாது. மெல்ல மெல்ல இருட்டவும் தொடங்குச்சு. பொதருக்குள்ள இருக்கவும் பயம்மா இருந்துச்சு. எதுனாச்சும் விலங்கு வந்து கவ்விட்டுப் போயிரும்னும் பயம்மா இருந்துச்சு. பொண்டாட்டிய வெட்டிப் போட்டானுகளே. அவா செத்தாளா இழுத்துக்கிட்டு கெடக்காளான்னும் போயி பாக்க முடியல. பலமாதிரி கலங்கிப் போயி கறிக்கொடல கையிலேந்திக் கிட்டு பொதருக்குள்ளயே கெடந்தாரு. எது எப்பிடினாலும், வெளியேறிப்போயி பள்ளங் கைல வெட்டுப்பட்டு சாகுறதவிட, ஏதாவது மிருகங்க கொன்னு தின்னுட்டுப் போகட்டும்னு நெனச்சுக் கிட்டாரு. மிஞ்சிமிஞ்சிப் போனா அவருக்கு முப்பது அல்லது

முப்பத்தஞ்சு வயசுதான் இருக்கும். பிள்ளைகள நெனச்சாரு மனசு பாரமாப் போச்சு.

இப்பிடியே எம்புட்டு நேரம் இருந்தார்னு அவருக்கே தெரியல. ராத்திரியும் ஆகிப் போச்சு. வெளிய என்ன நடக்குதுன்னு எதுவும் புரியல. எங்குட்டோ நரிக ஊளையிட்டது. இவரக் கலவரப் படுத்துச்சு. ஆந்தைகளும், சா குருவிகளும் கத்துனது இருதயத்தக் கிழிக்கிறது கணக்கா இருந்துச்சு. சே, இந்தமானிக்க உசுரு நின்னுட்டாக் கூட நல்லா இருக்கும்னு நெனச்சாரு. எங்குட்டுப் பார்த்தாலும் கும்மிருட்டு. இத்தினிக்கூட வெளிச்சம் இல்ல. பயத்துல ஒன்னுக்கு வேற அதுபாட்டுக்கு கால்வழியா ஓடுது. பசி வகுத்தப் பெரட்டுது. தண்ணித் தாகத்துல தொண்ட வரண்டு போச்சு. இருமக்கூடப் பயந்து போயி ஒடுங்கிப் போயிக் கெடந்தாரு.

திடீர்னு நெறய்யாப்பேரு வர சத்தமும், பேச்சுச் சத்தமும் கேட்டுச்சு. டார்ச்சு லைட் வெளுச்சம் நாலாதிக்கமும் பீச்சி அடிச்சது. 'யாரா இருக்கும் மறுபடியும் பள்ளனுகதான் வந்துட்டானுகளா இல்லன்னா... நம்ம தெரு ஆளுகதான் மறைவா இருக்க இங்குட்டு வாராகளோ... இந்த இருட்டுக்குள்ள ஒரு மண்ணும் தெரிய மாட்டோங்கே,' புழுங்கிப் போனாரு ராயப்பன்.

செத்த நேரங் கழுச்சுத்தான் வந்தவுக போலீசுக்காரனுகன்னு ராயப்பனுக்குப் புருஞ்சது. வெட்டுப்பட்டுக் கெடந்த பெரேதங் களப் பாக்க வந்துருந்தாகன்னு தெருஞ்சது. இனியும் எம்புட்டு நேரத்துக்கு இப்பிடி பொதருக்குள்ள கெடக்குறது? பேசாமெ போலீசுக்காரங்கிட்ட சரண்டர் ஆயிட்டா, பள்ளனுக கைலருந்து தப்பிக்கலாம்னு நெனச்சாரு ராயப்பன். அந்த வேகத்துலயே பொதருக்குள்ள இருந்து கத்திக்கிட்டே வெளிய ஓடியாந்தாரு.

"ஐயா, காப்பாத்துங்க... எனியக் காப்பாத்துங்கய்யா! சாயந்தரத்துலருந்து இங்ன மறஞ்சுக்கிட்டு இருக்கேன். நானு காலைலயே பருத்தி எடுக்க வந்துட்டேங்க. தெருவுக்குள்ள என்ன நடந்துச்சுன்னு ஒன்னும் புரியல. எனிய கைது பண்ணிக் கொண்டு போங்கய்யா. ஏம் பொண்டாட்டியும் போயிட்டா. பிள்ளைக என்ன கதி ஆச்சோ... இனி நானு இருந்துதான் என்ன.... இல்லாட்டினாத் தான் என்ன?" ராயப்பன் சொல்லிக்கிட்டே அழுதாரு. போலீசுக் காரனுக சுத்திச் சுத்தி லைட் அடுச்சுப் பாத்தாக. பெணத்த எடுக்க ஏற்பாடு செஞ்சுட்டு ராயப்பனக் கூப்டுகிட்டு ஸ்டேசனுக்குப் போயிட்டாக.

சேரித் தெருவுல ஆம்பளைக பூராம் கந்து கந்தா பல ஊர்களுக் கும் ஓடிட்டாக. நாளாக நாளாக சுத்திலாப்ட ஊர்கள்ள இருந்து பத்து

அம்பது பேத்த கைது பண்ணிட்டாக. பள்ளர் தெருவுல ஆம்பளைக நடமாட்டம் இருந்துச்சு. கொலைல சம்பந்தப்பட்டவுக இன்னாரு இன்னாருன்னு பூராம் படுச்ச பெயல்க பேரையும், கவுருமெண்டு வேலை செய்ற நாலஞ்சு பேரோடெ பேரையும் பள்ளர்க எழுதி போலீசுல குடுத்துட்டாக. அவுகளப் பூராம் புடிக்குறதுக்கு போலீசு முஸ்தீபா அலஞ்சாக. அவுக அம்புடாமப் போனா, ஊர்ல இருந்த பொம்பளைகளப் புடுச்சுட்டுப் போனாக. போலீசோட கெடுபிடி ஒரு பக்கம்; பள்ளனுகளோடு பயமுறுத்தல் மறுபக்கம். இப்பிடியே இருக்க முடியாமெ ஆடு, மாடு, கோழி, வீடு வாசலு அம்புட்டயும் அப்டி அப்டியே விட்டுட்டு அவுக சாதி சனங்க இருக்குற வேற ஊர்களுக்கு கஸ்டப்பட்டுப் போயிச் சேந்தாக. அப்பிடிப் போக முடியாத பத்துப் பதுனஞ்சு கெழடு கெட்டைக மட்டும் தெருவுக் குள்ள அன்னந் தண்ணி ஆகாரம் இல்லாமெ கொல பட்னியாக் கெடந்தாக. வேல வெட்டிக்குப் போனாத்தானெ கஞ்சி?

தெருவுக்குள்ள இப்பிடின்னா, வெளியூர்களுக்குப் போனவுக பாடு அதவிடக் கொடுமையா இருந்துச்சு. இருக்க வீடு வாச ஒன்னுமில்லாமெ, பிள்ளைகளப் படிக்க அனுப்ப முடியாமெ, ஒரு கூழுத் தண்ணிகூட ஒழுங்காக் காச்சி குடிக்க முடியாமெ சீரழிஞ்சாக. பொம்பளைகளும், பிள்ளைகளும் இப்பிடித் தவிக்க, ஆம்பளக பாடும் பெரும்பாடா இருந்துச்சு. பொண்டாட்டி, பிள்ளைக எங்க எப்பிடிக் கெடக்கோன்னு நெஞ்சக்குள்ள கவல. போலீசுல மாட்டிரக் கூடாதுன்னு பயம். வேலவெட்டிக்கு வெளியேறிப் போயி ஒழைக்க முடியாமெ சாப்பாட்டுக்கும் தங்குறதுக்கும் கஸ்டப்பட்டாக.

இன்னங் கொஞ்சம் நாளாகவும் அங்னங்ன ஒளிஞ்சிருந்த கொஞ்சப் பேர கைது பண்ணிட்டாக. படுச்சுட்டு லீவுக்கு வந்துருந்த நாலஞ்சு பெயல்களும் ஆப்டுகிட்டானுக. அதுனால மறுபடி காலேஜ் தெறக்கவும், இவனுக படிக்கப் போக முடியாமெ ஜெயிலுக்குள்ள கெடந்தாக. அதுமாதிரி கவுருமெண்டு உத்தியோகம் பாக்குற செலரயும் புடுச்சு உள்ள போட்டுட்டாக.

உள்ளூர்ப் பள்ளிக் கொடத்துல படுச்ச புள்ளைக பூராம் அப்பிடியே நின்னு போச்சுக. ஏன்னா, பள்ளிக்கொடமே தொறக்கல. வெளியூர்ல படுச்சுட்டு லீவுக்கு வந்துருந்த பிள்ளைகளும் திரும்பிப் போயிச் சேர முடியாமெ படிப்பெய பாதில உட்டுட்டு பரிதாபமா ஊரு ஊருக்கு அகதிக மாதிரி அலஞ்சாக.

பறையர்க தெருவுல கொல உளுந்த போதெல்லாம் கண்டுக் கிராத அரசாங்கமும், அக்கம் பக்கத்து மேச்சாதிக்காரரும், அரசியல் வாதிகளும், இப்ப பள்ளர்க தெருவுல கொல உளுகவும், மாறி மாறி

ஊருக்குள்ள வந்து பள்ளர்களுக்கு ஆதரவாப் பேசிட்டுப் போனாக. பணம், துணிமணி, அரிசி அது இதுன்னும் கொண்டாந்து குமிச்சாக. அத்தோட நில்லாம, "அவெ இத்தன பேத்த வெட்டிருக்கான்; நீங்க ஏண்டா அவனுகளப் போட்டுத் தள்ளல"ன்னு கேட்டு அவனுகள உசுப்பேத்தி வேற உட்டுட்டுப் போனாக. அதுனால பழிக்குப் பழி வாங்க, பள்ளனுக சரியான நேரத்த எதிர்பார்த்துட்டு இருந்தாக.

ஒரு நாலஞ்சு மாசமா ஊர்ல நெலம மாறல. இனி ஒரு போதும் மாறாதுங்ற முடிவுக்கு ஏறக்குறைய எல்லாரும் வந்துட் டாங்க. அதுனால ஊருக்கு யாரும் போகல. வனாந்தரமா கெடந்த தெருக்களப் பாக்கையில மனசே நொறுங்கிப் போச்சு. எடைல ஒரு ராத்திரி பதுங்கிப் பதுங்கிப் போயிட்டு மறுநாள் பகல் பூராம் அங்க மறஞ்சு கெடந்துட்டு வந்த அந்தோணி, மத்த பையங்ககிட்ட சொன்னான், "நம்ம தெருவப் பாத்தா, தன்னால கண்ணுல கண்ணீர் வருது. எப்பிடி இருந்த தெருவுக எப்பிடிப் போச்சு! வெள்ளங்காட்டி மூனு மணிக்கெல்லாம் அடி கொழாய் சத்தமும், மாடுகளப் பால் பீச்ச ஓட்டிட்டுப் போற சத்தமும், வேல வெட்டிகளுக்குப் போக ஆளுகளச் சத்தமும் போட்டுக் கூப்புடுற சத்தம் தெருவே ஆரவாரமா இருக்குமே! இப்ப மயானங்கெணக்கா ஆகிப்போச்சு."

"யாருமே இல்லியா?" சாமிநாதன் கேட்டான்.

"இருக்காக. கெழடிக பத்து இருவதுபேரு கெழக்க மொடங்கிக் கெடக்காக. அவுககூட சாஸ்தி பேசக்கூட மாட்டேங் காக. நாயிக கூட முன்னமாதிரி அங்கிட்டும் இங்கிட்டும் அலஞ்சு கிட்டு கொரைக்க மாட்டேங்கி. மாடுக பூராம் வத்தலும் தொத் தலுமா அசையாம படுத்துக் கெடக்குதுக."

"போலீசுக்காரனுக இருக்கானுகளா?"

"ம். இருக்கானுக. முன்னமாதிரி இல்ல. ஒரு நாலஞ்சு பேருதான். சாப்டுட்டு சாப்டுட்டு சாவடில சீட்டாடிட்டுத் தூங்கு றானுக. அவனுகளுக்கு நல்ல ரெஸ்ட்தான்."

"இப்பயும் ரைடு பண்ணி புடிக்கானுகளா?"

"அந்த மச்சான் மரியநாதனும், சூசையும் அம்புட்டாத்தான். நம்மள்ளாம் ஊருக்குள்ள போக முடியும். அவுக ரெண்டு பேரையும் புடுச்சாத்தான் ரைடு பண்ணாம இருப்பாகளாம்."

"அவனுக எங்க இருக்கானுகளாம்?"

"யாருக்குத் தெரியும்? போன கலவரம் மாதிரி இப்ப இல்ல. யாரு எங்க எப்பிடி இருக்காகன்னு ஒரு விவரமும் தெரியல. முன்ன மாதிரி ஆளுகளக் கூட்டிட்டுப்போயி சரண்டராக்கவும் முன்ன

நின்னு செய்ய ஆளுக இல்ல."

"ஆமாமா. நாட்டாமயும் உள்ள போயிட்டாரு. வேற யாரும் வெளிப்படையா வரவும் முடியல. எம்புட்டு நாளைக்குத்தான் இப்பிடியே அலைய முடியும்! படிப்பும் போச்சு. எல்லாம் போச்சு." எல்லாரும் விரக்தியாகிப் போனாக.

பள்ளர்க தெருவுல எளவட்டங்க கூடிக் கூடிப் பேசுனாங்க. அவனுக போட்டதுபோல டபுள் மடங்கு நம்ம போடனும்னு வீராப்பா அலஞ்சானுக. அப்பப்ப கம்மாக்கரமேல தெக்கயும் வடக்கயுமாப் போயிக்கிட்டு வந்துக்கிட்டு சேரித்தெருவ நோட்டம் உட்டுக்கிட்டு இருந்தானுக. இவனுக தீவிரமா திரிரதப் பாத்துட்டு, அந்தத் தெருவுல இருந்த பெரியாளுக செலபேரு இவனுகள அரட்டி உட்டாக.

"எதுக்குடா வீணா இப்பிடி மாறி மாறி மனுசர்கள ஆடு மாடுகள வெட்டுனது கணக்கா வெட்டிக்கிட்டுத் திரிரீங்க? நம்மளுக்குள்ளயே இப்பிடி வெட்டிக்கிட்டும் குத்திக்கிட்டுந் திருஞ்சா எப்பிடிடா சீவிக்கிறது?" பெருமாள் கேட்டாரு.

"நம்மாளுக மூனு பேத்த அவனுக சீவிட்டானுக. அதப் பாத்துக்கிட்டு சும்மா கையக் கெட்டிக்கிட்டு இருக்கச் சொல்றியா?" கருப்பசாமி கேட்டான்.

"நீங்கதானடா மொதல்ல கைய வச்சீக. அவனுக பதுலுக்குப் போட்டானுக. அவனுந்தான் எம்புட்டுத் நேரத்துக்குப் பொறுத்துக் கிட்டே போவான்? இத்தோட உட்டுத் தொலைங்கடா. எல்லாந் தாறுமாறா பிருஞ்சு கெடந்துக்கிட்டு, படிக்கிற நாலு பிள்ளைககூட பள்ளிக்கொடம் போக முடியாமெப் பண்ணிட்டீகளேடா."

"என்ன பெருசு. அந்தப் பக்கம் சப்போட்டு அதிகமா இருக்குது. வேணும்னா ஓம்மகள அந்தத் தெரு பெயலுக்குக் கெட்டிக் குடுக்கிறியா?"

"ஏங் குடுத்தா என்னங்கடா. அவனும் நம்மளப் போல மனுசந்தானெ?"

"என்ன சொன்ன? நம்மளப் போல மனுசனா? போயும் போயும் மாட்டுக்கறி திங்கிற பெயல நம்மளப்போல மனுசங்றியே... சேய். சுத்த வெறுவாக்கலங் கெட்ட பெயலுக அவனுக."

"ஏலைகா... நீங்க அவனுகள மாட்டுக்கறி திங்காம்னு மட்டம்ங்றீக... ஆனா அவனுக நம்மள பீதிங்கிற பன்னியறுத்துத் திங்கம்னு நம்மள மட்டமா நெனைக்கானுக. எல்லாஞ் சரித்தாம்டா."

"இப்பிடி கெழடு கெட்டைக பேச்சக் கேட்டம்னா கெடக்க வேண்டியதுதான். எப்பிடியும் பழிவாங்கியே தீரனும்."

"ஒங்களத் திருத்தவே முடியாதுடா. அப்பயெல்லாம் பள்ளனும் பறையனும் பகமெ பாராட்டாமெ அம்புட்டு ஐக்கியமா இருந்தோம். அவனுக நம்ம பெயல்கள மாமெ மச்சான்னு கூப்டுகிட்டு நம்ம பெயல்க அவுகள மாறி மாறிக் கூப்டுகிட்டு டமாசு பண்ணிக்கிட்டு இருப்பானுக. ஒரே லக்குல வேலைக்கு அமந்து போவோம். ஒன்னா மண்ணா இருந்து கூழுக் குடிப்போம். இன்னைக்குப் பாரு பாம்பும் கீரியும் கெணக்கா... இம்புட்டுப் பகையும், பொறாமயும் பொச்செரிப்பும் இந்த ஊருக்குள்ளதான். ஊடதாடெ சண்ட கிண்ட வந்தாலும் ராசியாப் போவோம். வேற ஊர்கள்ள போயி பாருங்க. இன்னமும் இந்த ரெண்டு சாதிக் காரனுகளும் ஒத்துமையாத்தான் இருக்காக."

"சரி, சரி. ஓம் புராணத்த நிப்பாட்டிட்டு அந்த ஊர்களுக்கே போயிரு. இங்ன கெடந்து எங்க வகுத்தெருச்சலக் கெளறி உடாதெ. அப்ப வேணுன்னா நீயும் அவனும் ஒன்னா இருந்துருக்கலாம். இப்ப நாம அவனவிட ஒசந்தவுகதான். அதப் புருஞ்சுக்கோ."

மேற்கொண்டு யாரும் எதுவும் பேசிக்கிரல. ஆனா நாலஞ்சு நாளுக் கழுச்சு பறக்குடில ஒரு தெருவுல இருந்த ரெண்டு மூனு வீடுகளுக்கு தீ வச்சுட்டாங்க.

போலீசுக்காரனுகளும் சொல்லிப் பாத்துட்டு ஓஞ்சு போனாக. பள்ளர்களுக்குப் பழிவாங்கனும்னு மனசுக்குள்ள வெறி ஒரு பக்கம் இருந்தாலும், எப்பயுமில்லாதபடி இப்ப பறையர்க பட்டப்பகலுல மூனு பேத்த வெட்டுனத நெனச்சா பயமாவும் இருந்துச்சு. இருந்தாலும் வந்தது வரட்டும், போனது போகட்டும்னு ஒரு வீறாப்புல அலஞ்சாக.

நாய்க்கமார்களுக்கு ரொம்பாக் கொண்டாட்டமா இருந்துச்சு. பறையனுக ஒரு வழியா ஓஞ்சானுக. இனி எங்க தலதூக்கிடப் போறானுகன்னு நிம்மதியா இருந்தாக. பறையனுக எங்கெங்க ஒழுஞ்சுக்கிட்டு இருப்பாகன்னு பள்ளனுகளுக்குத் தகவல் குடுத்து, போலீசுகள ரைடு பண்ணச் சொன்னாக. அதுமட்டுமில்லாமெ, இம்புட்டுத் தூரம் ஆனப் பெறகு நீங்களா, அவனுகளான்னு பாத்துருங்கடான்னு பள்ளனுகள அப்பைக் கப்ப தூண்டி உட்டுக் கிட்டே இருந்தானுக. சேரித் தெரு பாலைவனமா ஆகிப்போச்சுங்கற செய்தி அவுகளுக்குத் தேனா இனிச்சது. பத்தாக் கொறைக்கு, பள்ளனுக சும்மா இருந்தாக்கூட, பறையனுகளுக்கு அவனுக ளோடெ வேதத்துலருந்து நெறய்யா உதவி செய்றாக. ஒங்களுக்கு

நாங்க இருக்கோம். நம்மெல்லாம் இந்துக்கள்ங்றதுனால ஒங்களுக்கு எப்பயும் சப்போட்டு செய்வோம்னு அதவேறத் தூண்டி விட்டு வேடிக்க பாத்துக்கிட்டுருந்தாக.

பறையர் தெருவுல அங்குட்டும் இங்குட்டுமாச் செதறி ஓடுன பொம்பளைக மெல்ல மெல்ல ஊருக்குள்ள வர ஆரம்புச்சாக. திடுதிப்புனு வீடு வாசலு, மாடு கன்னு, வயலு வரப்புக்கள உட்டுட்டு ஓடுனவுக, மெதுவா வந்து சேந்தாக. ஆம்பளைக பூராம் நாலாதிக்கமும் செதறிக் கெடந்தாக. யாரு எங்க எப்பிடி இருக்காகன்னு யாருக்கும் தெரியல. ஊருக்குள்ள வந்த பொம் பளைக வெளிய எங்கயும் வேல வெட்டிக்கோ, புல்லுப் பெறக்கவோ போக முடியல. தெருவடில இருக்கிற பிஞ்சைகள்ள போயி புல்லறுத்துக் கொண்டாந்து மாடுகன்னுகளுக்குப் போட்டாக. தெருவுக்குள்ள வந்து பால் சொசைட்டிக்காரங்க பாலப் பீச்சிட்டு போயிருவாக. பால்மாடு தந்த வருமானத்துலதான் அம்புட்டுப் பேரும் கால்வகுறு, அரவகுறு கஞ்சி குடுச்சிட்டு இருந்தாக.

போலீசுக்காரனுக தமிழ்நாடு பூராம் போயி ஆளுகளத் தேடித் தேடிப் புடுச்சாக. பள்ளனுக எழுதிக் குடுத்த ஆளுகளப் புடிக்கிறதுக்கு நாயா பேயா அலஞ்சு பாத்துட்டு, முடியாமெப் போகவும், தெருவுக்குள்ள இருந்த பொம்பளைகள இம்சிக்க ஆரம்புச்சானுக. அவுக இருக்குற எடம் தங்களுக்குத் தெரியாதுன்னு எம்புட்டோ சொன்னாலும் அவனுக கேக்க மாட்டேனுட்டாக. அவனுகளோடெ பொண்டாட்டிமார புடுச்சு மெரட்டுனாக. அவளுக பயந்து போயி ஊர விட்டே ஓடிப் போனாளுக. அப்பயும் போலீசுக்காரனுக உட்டபாடுல்லெ. பொம்பளைக வெளிய வேல வெட்டிக்குப் போகாமெ, பாலப்பீச்சி ஊத்தி சாமார்த்தியமா சமாளிக்கிறதப் பாத்துட்டு, பால்பீச்ச வந்த பால்க்காரனுகள தெருவுக்குள்ள வர உடாமெ வெரட்டி உட்டுட்டானுக.

அதுனாலெ பொம்பளைக சோர்ந்து போகல. பாலப் பீச்சி வீட்டு வீட்டுக்குக் குடுத்தாளுக. ரெண்டு வாரமும், காலைலயும், சாயங்காலமும் பாலையே காச்சி காச்சிக் குடுச்சுக்கிட்டு கெடந்தாக. போலீசுக்காரனுக என்ன செஞ்சாலும், எல்லாத்தயும் எதிர்கொண்டு சமாளுச்சாக. ஆம்பளைக போன எடம் அவுகளுக்கே தெரியாமெ கலவரப்பட்டுப் போயி கெடக்கயில, போலீசோடெ கெடுபிடிவேற அவுகள சித்ரவத செஞ்சது. படுச்சுக்கிட்டு இருந்த ஒரு பிள்ளயும் பள்ளிக்கொடம் போக முடியல. ஆனாலும் வெளியூர்கள்ள ஒம்பது, பத்து படுச்சுக்கிட்டுருந்த பொம்பளப் பிள்ளைக, காலைல,

உள்ளூர்ப் பள்ளிக்கொடத்துல படுச்சுக்கிட்டுருந்த பிள்ளைகள கூப்பிட்டு சாவடில ஒக்கார வச்சு பாடஞ் சொல்லிக் குடுத்தாக. சாயங்காலத்துல எல்லாப் பொம்பளைகளும் ஒரு எடத்துல ஒன்னாச் சேந்து ஜெபம் செஞ்சாக. அடுக்கடுக்கா துன்பமும், துயரமும் வந்துக்கிட்டே இருந்தாலும், அம்புட்டயும் சாதுர்யமா சமாளுச்சு வந்தாக.

சாமிநாதன் , அந்தோணி, ஜெயராசு வேற படிக்கிற மத்த பையன்க பூராம், ரொம்பா நொந்து போனாக... தாங்களும் படிக்கப் போக முடியாமெ, தெருவுல எந்த பிள்ளையும் படிக்க முடியாமெ இப்பிடிச் செதறிக் கெடக்குறதப் பாத்து என்ன செய்றது, ஏது செய்ற துன்னு ஒன்னும் புரியாமெ கொழம்பிப் போயிக் கெடந்தாக. கொல செஞ்ச அந்த மூனு பெயல்களையும் தாஜா பண்ணி, கோர்ட்டுல சரண்டராகச் செஞ்சாக. கொலைல சம்பந்தப்படாத பையங்களை யும் பள்ளனுக பேரெழுதிக் குடுக்கப் போயி, அவுகளப் புடுச்சுக் குடுத்தாத்தான் மத்த ஆம்பளைக ஊருக்குள்ள மொழைய முடியும்னு போலீசுகாரனுக திட்டவட்டமாச் சொல்லிட்டாக.

ஏழெட்டு மாசமா தெருவுக்குள்ள சனங்க மொழைய முடியாமெ இருந்துச்சு. வெள்ளங்காட்டுல இருந்து சாமம் வரைக்கும் எப்பயும் கூகொலோன்னு இருந்த தெருவுக, இப்ப இத்தினிக்கூட அரவமில்லாப் போச்சு. சரியான தீவனம் இல்லாமெ, தோலுந் துருத்தியுமாப் போன ஆடு, மாடுகதான் தெருவுகள்ள கெடந்துச்சுக. எப்பமாச்சும் அதுகதான் அம்மான்னு தீனக் கொரலுல கூப்புடுங்க. கத்திப் கூப்புடுறதுக்கு அதுகளுக்கும் சீவனத்துப் போச்சு. பள்ளர்க தெருவுலயும் இதே கதிதான்.

சாமிநாதனும் அந்தோணியும் மொயற்சி பண்ணி, எங்குட் டெங்குட்டோ மறைஞ்சுகிட்டு இருந்தவுகள சந்துச்சுப் பேசி ஊரு நெலவரத்தச் சொன்னாக. அவுகளால பொம்பள பிள்ளைக கூட தெருவுக்குள்ள இருக்க முடியாம அவஸ்த படுறதயும், மத்த யாருமே தெருவுக்குள்ள மொழைய முடியாமெ திண்டாடுறதயும் சனம் பூராம் பக்கத்து ஊர்கள்ள போயி, ரோட்டோரத்துலயும், மரத்தடிகள்ளயும், ஒண்ட எடமில்லாமெ, பரிதாவமாக் கெடக்குற தயுஞ் சொல்லிப் பெறக்கி, போலீசுக்காரனுக தேடிட்டு இருந்த வுகளப் பூராம் கோர்ட்டுல போயி சரண்டராக்கிட்டாக.

பெறகு சன்னஞ்சன்னமா தெருவுகளுக்குள்ள சனங்க நட மாட்டம் இருந்துச்சு. இருந்தாலும், பழைய தெம்போ, துடுக்கோ இல்ல. பாதிப் பேருக்கு மேல ஊருக்குள்ள திரும்பி வரவே இல்ல.

எந்த நேரத்துலயும், எந்தப் பக்கத்துலயும் கொல உழுமுன்னு எல்லார் மனசுலயும் பயம் இருந்துக்கிட்டே இருந்துச்சு. அந்த வருசம், உள்ளூர்ப் பள்ளிக்கொடத்துலகூட பிள்ளைக போயி படிக்கல. அப்பிடி அப்பிடியே செதறி ஓடிப்போனாக. இந்த நேரத்துல தெருவுக்குள்ள எழவு உழுந்தாக் கூட சொந்த பந்தம்னு யாரும் வந்து பாக்காமலே தெருவுக்குள்ள இருந்த பொம்பளைக தான் குழி வெட்டிப் பெதச்சாக.

# பதினொன்று

இதுக்கெடையில, சேசுரத்துனத்த வெட்டுன கேசு வந்துருச்சு. கேசுக்குப் பணமில்லாமெ ரொம்பாக் கஸ்டப்பட்டாக. இந்தக் கொலைகளுக்குப் பெறகு யாரும் தெருவத்தாண்டி வடக்கயோ, மேற்கயோ வேல வெட்டி எதுக்கும் போகல. மேற்க கோயிலுக்குப் போகக் கூட பயந்து போயி தெனமும் சாயங்காலத்துல தெருவுக் குள்ளயே ஒன்னாக்கூடி ஜெபம் செஞ்சாக. முன்னப்போல இல்லாமெ இப்ப சாப்பாடு தண்ணிக்கே ரொம்பாக் கஸ்டப் பட்டாக. எளவட்டப் பெயலுகதான் அங்குட்டு இங்குட்டுமா அலஞ்சு நன்கொட வசூலிச்சானுக. இந்த நெலமயிலயும், பொம் பளைக மாடுகன்ன பராமருச்சு, வீட்டு வீட்டுக்கு வரிப் போட்டு கேசுக்கு செலவழிச்சாக. சேசுரத்துனத்த கொல செஞ்ச கேசுல பள்ளர்களுக்குத் தண்டன கெடைக்குற மாதிரி இருந்துச்சு. அதுனால அவுக பறையர்களோடெ ராசியாப் போயிராம்லான்னு, மறை முகமாச் சொல்லிப் பாத்தாக.

“அதெப்படி ராசியாக முடியும்? துள்ளத் துடிக்க, பட்டப் பகலுல, பசாருல உட்டு ஓட ஓட வெட்டிக் கொன்னுபோட்டு, இப்ப மட்டும் எந்த மூஞ்சிய வச்சுக்கிட்டு ராசியாப் போனும்னு சொல் றானுங்க?,” எளவட்டப் பெயலுகளும், பொம்பளைகளும் வகுத் தெருச்சப்பட்டுப் போயிக் கேட்டாக.

பெரியாளுக மட்டும் சொன்னாக, “சரித்தான் போன உசுரு போயிருச்சு. இனி இருக்குற நம்மளும் பொழுதெனிக்கும் வெட்டிக் கிட்டும், குத்திக்கிட்டும் இருக்குறது நல்லாவா இருக்குது. இப்ப இந்தக் கேசுக்கு நம்ம உட்டுக் குடுத்தா, நம்ம கேசுக்கு அவெ உட்டுக் குடுத்துட்டுப் போறான். ராசியாப் போறதுதான் நல்லது.”

தெருவுக்குள்ள பெரிய சர்ச்சயே உண்டாயிருச்சு. ஆளாளுக்கு மாறி மாறிக் கத்திக்கிட்டு இருந்தாக. ஜெயராசு ஒருநாளு சாவடில வச்சு சொன்னான், “இந்த ரெண்டு மூனு வருசமா நம்மாளுக படுற பாட்டெ நெனச்சுப் பாருங்க. இப்பத்தாங் கொஞ்சங் கொஞ்சமா முன்னேறிக் கிட்டு வந்தோம். அதுக்குள்ளே இப்பிடி கொலையுங் கேசும், போலீசு ரைடுமா ஆகிப் போயி, ஆளாளுக்குச் செதறிப்

போயி, படிப்புங் கெட்டுப்போயி, கோயிலுப் பக்கங்கூட போக முடியாமெ ஆகி.... இப்டியே எம்புட்டு நாளைக்கு இருக்குறது? அவனுகளே ராசியாப் போறம்னு வரும்போது, நம்ம வேதக்காரருக மாட்டம்னு சொல்லலாமா? சேசு என்ன சொன்னாரு? எதிரிகள மன்னிக்கத்தானெ சொன்னாரு? அப்ப எதுக்கு இப்பிடி பிடிவாதஞ் செய்றீக? "

"அவனுகள நம்ப முடியாது... இப்பிடித்தான கொய்யாப் பழக் கேசுல கூட ராசியாப் போறம்னு சொல்லி நம்ப வச்சுட்டு, பெறகு திடுதிப்புனு கொல செஞ்சானுக. இப்பக்கூட நம்மள சரிக்கட்டி அவனுக விடுதல ஆகிட்டப் பெறகு, நம்ம கேசு வரும்போது சமாதானமாப் போக மாட்டானுக," அந்தோணி சொன்னான்.

"அப்ப என்னதாஞ் செய்யுறது? இப்பிடியே நாடோடிக கணக்கா எம்புட்டு நாளைக்கு அலைறது. ஒழுங்கா ஒரு வேலவெட்டிக்குப் போக முடியல. நாலு துட்டு சம்பாரிக்க முடியல. திருப்தியா பொண்டாட்டி பிள்ளைகளோடெ இருந்து நாலு வாயி சோறு திங்க முடியல. பத்து நாளைக்கு ஒருக்கா, பதுனஞ்சு நாளைக்கு ஒருக்கா வாய்தா, கோர்ட்டு, கேசுன்னு அலைய வேண்டியதா இருக்குது. வேலைக்கு வேலையும் போயி, கோர்ட்டுக்குப் போக வர யாரு செல வழிக்கிறது? " மாணிக்கம் சடவாச் சொன்னான்.

"சரி, இப்ப என்னத்துக்கு ஆளாளுக்கு பேசிக்கிட்டு! அவுக நாட்டாமையும், நம்ம நாட்டாமையும் சேந்து ஒக்காந்து பேசி ஒரு முடிவுக்கு வருவோம். அது எந்த முடிவுன்னாலும் ரெண்டு சாதிச் சனங்களும் கட்டுப்பாட்டாகனும். என்ன சொல்றீக?," அல்போன்சு கேக்கவும், அம்புட்டுப் பேரும் அதுக்கு ஒத்துக்கிட்டாக.

தொயந்து நடந்த கலவரமும், கொலைகளும் ரெண்டு தெருக் காரர்களையும் பரம எதிரிகளா ஆக்கியிருந்ததுனால, இப்ப இந்த ரெண்டு மூனு வருசத்துக்குப் பெறகு, ரெண்டு தெருக்காரர்களும் சமரசப் பேச்சுக்குச் சம்மதுச்சுப் பேசப் போவது பத்தி ரெண்டு திக்கமும் திகிலும், என்ன நடக்குமோ ஏதாகுமோங்ற பத பதைப்புமா இருந்துச்சு. இப்பிடி ராசியாப் போறது நல்லதுன்னு கொஞ்சப் பேரும், அவனுக மூஞ்சிகள்ள ஜென்மத்துக்கும் முழிக் கலாமான்னு கொஞ்சப் பேரும் தெக்கயும் வடக்கயும் போம்போதும் வரும்போதும் பேசிக்கிட்டுத் திருஞ்சாக. கூட்டத்த எங்க போடுற துன்னு பலமாதிரி மாறி மாறிப் பேசி பறையர் தெரு பையங்கள் ளாம் கூட்டத்த பறையர்தெரு சாவடில போடனும்னாங்க. பள்ளர்

தெருப் பையங்கள்ளாம் கூட்டத்த பள்ளர் தெருச் சாவடில போடனும்னாங்க. இப்பிடி ஏட்டிக்குப் போட்டியாப் பேசிக்கிட்டே இருந்தாக. யாராச்சும் ஒருத்தரு உட்டுக் குடுத்துப் போங்கப்பான்னு பெரியாளுக சொன்னாக. “ஒருத்தர ஒருத்தரு நம்புனாத்தான் காரியம் நடக்கும். இப்பிடித் தெக்கயும் வடக்கயுமா இழுத்துக்கிட்டு கெடந்தா எப்பிடி சமரசம் பேச முடியும்? ரெண்டு சாவடிகளையும் உட்டுட்டு ரெண்டு பேத்துக்கும் பொதுவான, தோதான ஒரு எடமாப் பாருங்க,” மாசிலாமணி சொன்னாரு.

இது சரின்னு ஏத்துக்கிட்டு ரெண்டு தெரு நாட்டாமயும் கலந்தாலோசிச்சாக. பள்ளர் தெரு நாட்டாமெ, ரைஸ்மில்லு நாய்க்கரு தோப்புல வச்சு பேசுலாம்னாரு.

அதுக்குப் பறையர் தெரு நாட்டாமெ, “இது நமக்கு எடையில உள்ள பெரச்சன. இதுல ஊடாலெ நாய்க்கரு எதுக்கு? நம்மளே பேசி முடிக்கலாம்,” கறாராச் சொல்லிட்டாரு.

“இல்ல, நம்ம ரெண்டு பேரும் பேசயில, எதுவும் ஏடாகூடமா நடக்காமெ இருக்கனும்னா, மூனாவது பார்ட்டி ஒன்னுகூட இருக்குறது நல்லதுதானெ.... நாய்க்கரு சும்மா பேருக்குக் கூட இருக்கட்டும். பேசி முடிக்கிறது நம்மதான். அவரு பேசமாட்டாரு.”

பள்ளர் தெரு நாட்டாமெ சொல்லவும், பறையர் தெரு பையங்க கொஞ்சஞ் சத்தமாக் கத்துனாக, “இல்ல... இல்ல... இதெல்லாஞ் சரிப்பட்டு வராது. அவனுக யாரு நம்ம விசயத்துக்கு வந்து ஒக்காந்துருக்க? அவனுக கண்டிப்பா ஒங்களுக்குச் சார்பாவும் எங்களுக்கு எதுராவுந்தான் இருப்பானுக. அவனுகள நம்ப முடியாது.”

மாறி மாறி விவாதம் பண்ணி கடேசில ஊருக்கு மேற்க இருக்குற ஆலமரத்துக்கடில கூடிப் பேசுறதுன்னு ரெண்டு தரப்பாரும் ஒத்துக்கிட்டாங்க. கூட்டத்துல யாரெல்லாங் கலந்துக்கிரலாம்னும் முடிவு செஞ்சாக.

பள்ளர் தெரு நாட்டாமெ, பெரியாளுக அஞ்சுபேர், எளவட்டங்க அஞ்சுபேர், அது மாதிரி பறையர் தெரு நாட்டாமெ, பெரியாளுக அஞ்சு பேர், எளவட்டங்க அஞ்சு பேர் ஆக ரெண்டு திக்கத்துலருந்தும் கூட்டத்துல கலந்து பேசனும்னு முடிவாச்சு. அதுபடி, அடுத்த ஞாயித்துக் கெழம காலைல பத்துமணிக்கு அம்புட்டுப் பேரும் ஆலமரத்தடில கூடுனாக. பள்ளர்க பூராம் ஒரு அரவட்டத்துலயும், பறையர்க பூராம் மறு அரவட்டத்துலயுமா, வட்டமா ஒக்காந்துக் கிட்டாக. மொதல்ல பள்ளர் தெரு நாட்டாமெ பேசுனாரு.

"ரெண்டு மூனு வருசத்துக்கு முன்னால வரைக்கும் நம்ம ரெண்டு சாதிக் காரரும், எப்பிடி இருந்தோம்; இப்ப எப்பிடி இருக்கோம்னு நெனச்சுப் பாக்கயில வேதனையாத்தான் இருக்குது. அப்ப ஒரு ஒருத்தரு தெருவுக்குள்ள ஒருத்தரு சகஜமாப் போனோம்; வந்தோம். ஒறவு மொற வச்சுப் பேசுனோம்; பழகுனோம். ஏதோ ஊடதாடெ சண்ட சச்சரவுக வந்தாலும், அப்பைக்கப்ப ராசியாகிட்டு பொழப்ப பாத்தோம். ஆனா இன்னைக்கு நெலமெ வேற. அத நாஞ் சொல்ல வேண்டியதில்ல. நம்ம எல்லாருக்குமே தெரியும். சின்னச் சின்னதா பொகஞ்சு பொகஞ்சு இன்னைக்கு பெரிய தீயா மாறி நம்மளயே பொசுக்கிப் போடுச்சு. ஏதோ இந்த மட்டுக்கும் இப்பமாச்சும் ஒன்னா வந்தது நல்லது."

செத்த நேரம் அமைதியா இருந்தாக. பெறகு பறையர்கள்ள இருந்து இன்னாசிமுத்து தாத்தா பேசுனாரு. "நம்ம பாட்டுக்கு வேல செஞ்சமா, கஞ்சி குடுச்சமான்னு இருந்தோம். இப்ப வேல வெட்டிக்குப் போக முடியல. அம்புட்டுத் தூரம் எதுக்கு? தெக்க வடக்க அச்சமில்லாமெ நடமாட முடியல. எந்த நேரம் எவன, எங்ன யாரு வெட்டுவாக, எங்குட்டு ஓடித் தப்பிக்கிறதுன்னே மனசு வெந்து போகுது. இப்பிடி ஒரு வாழ்க்க வாழனுமான்னும் கூட அங்கலாப்பா இருக்குது."

"அது நெசந்தான். மனசு எந்த நேரத்துலயும் கெதங் கெதங்னு அடுச்சுக்கிட்டுத்தான் கெடக்குது. ஒரு நா ரெண்டு நாள்னா பரவாயில்ல. மூனு வருசமா நாலு வருசமா இப்பிடியே ஊர் ஊராச் சுத்திக்கிட்டு... சே... என்ன பொழப்புன்னுதான் போச்சு," பள்ளர் தெரு பரமசிவம் சொன்னாரு.

"இந்த நெலமயில படிப்பு எங்குட்டுக் கூடிப் படிக்கிறது. சின்னப் பிள்ளைகள்ளருந்து, பெரிய பிள்ளைக வரைல, படிக்க முடியாமெ, பள்ளிக்கொடம் போக முடியாமெ, பதட்டத்தோட அலையுறாக. எல்லாரும் படிப்பெ பாதில உட்டுட்டாக. அவுக வாழ்க்கையே வீணாப் போச்சு. படிக்கிற பெயல்களக் கூட கொல செஞ்சாங்கன்னு சும்மான்னாலும் புடுச்சு ஜெயிலுல போட்டுட்டாக. இப்ப அவனுக பள்ளிக்கொடம் போறத உட்டுட்டு, காலேஜ் போறத உட்டுட்டு, கோர்ட்டு, கேசுன்னு அலைறானுக பாவம். எல்லாத்தயும் நாசமாக்கிட்டு, இப்ப சமரசப் பேச்சுக்குன்னு வந்துட்டோம்," பறையர் தெருப் பையன் ஒருத்தன் காரசாரமா, கொஞ்சம் கோவமாவே சொன்னான்.

ஒடனே பள்ளர் தெரு பையனும் எருச்சலாவே சொன்னான், "ஒங்களுக்கு மட்டுமா அப்பிடி? எங்க பையன்களும் படிப்பெ

உட்டுட்டு பரதேசிக மாதிரித்தான் திரிரானுக. நாங்க மட்டும் கஸ்டப்படலியா என்ன."

"சரி... சரி.... இப்ப எதுக்கு வீணான வாக்குவாதம்? உடுங்க... உடுங்க... இப்ப என்ன நம்ம பழசப் பத்திப் பேசவா வந்தோம். இப்ப நம்ம இனி நடக்க வேண்டியதப் பத்திப் பேசுவோம்," பறையர் தெரு நாட்டாமெ சொன்னார்.

பள்ளர் தெரு நாட்டாமெ சொன்னாரு, "அதாவது இப்ப நடக்குற கேசுல, எங்களத் தெண்டிச்சிருவாக போலத் தெரியுது. ஆயுள் தண்டன கெடைக்கும்னு சொல்லிக்கிறாக. அதான், இந்த கேசுல நீங்க எங்களுக்கு எதுரா சாட்சி சொல்லாமெ நாம ராசியாப் போயிட்டம்னா, தெண்டனையிலிருந்து தப்பிக்கலாம். அதுமாதிரி பெறகு ஒங்க கேசு விசாரணைக்கு வரும்போது நாங்க ஒங்களுக்கு எதுரா சாட்சி சொல்ல மாட்டோம். எப்பிடின்னாலும் நம்ம ரெண்டு பேரும் பக்கம் பக்கமா குடியிருந்து வாழ வேண்டியவுக. இது நம்மளோடெ மட்டும் போற வெசயமில்ல. நம்ம தலமுறை களாச்சும் நல்லபடியா வாழனும். அதுனாலதான் இந்த முடிவுக்கு வந்தோம்."

"அதுசரி சோலமுத்து, இப்ப ஒங்களுக்குத் தண்டனை யாகும்னு வந்து ராசியாப் போறம்நீக. அப்ப தண்டன இல்லாமப் போனா, மறுபடியும் வந்து எங்கள வெட்டமாட்டீகன்னு என்ன உத்திரவாதம் இருக்குது? இம்புட்டுத் தூரம் ஆகிப் போனபெறகு இப்பிடியெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கு பாரு," இன்னாசி முத்து சொல்லிட்டு ஒரு பீடிய எடுத்துப் பத்த வச்சாரு.

"நீங்க கேக்குறது நாயந்தான். ஆனா, நம்ம ரெண்டு சாதியுமே அனாவசியமா நிர்மூலமாகிப் போகி, அறிவுகெட்டுப் போயி ஒருத்தர ஒருத்தரு வெட்டிச் சாச்சுக்கிட்டு நாலாதிக்கமும் செதறிப் போயிக் கெடந்து, இப்ப ஒணந்துகிட்டோம். நம்மளத் தூண்டி விட்ட சாதிக்காரனுகள்ளாம் அப்பிடி அப்பிடியே நல்லா இருக்க, நம்மதானெ இப்பிடி ஆகிப் போனோம்னு தெருஞ்சுக்கிட்டோம். இனி இப்பிடி நடக்காது. சத்தியமா நடக்காது," பள்ளர் தெரு பரமசிவம் சொன்னாரு.

மாறி மாறிப் பேசிட்டு, கடேசில ரெண்டு தரப்புக்காரரும் ஒரு முடிவுக்கு வந்தாக. பறையர்க பள்ளருக்கு எதிரா சாட்சி சொல்லக் கூடாதுன்னு ஒத்துக்கிட்டாக. பள்ளர்களுக்கு ரொம்பாச் சந்தோசம். பறையர்களும், நாம எல்லாரும் சேந்து வாழனும்னுதான் நாங்க ஆசப்படுறோம்; ஒருத்தர ஒருத்தரு அழிச்சுட்டு மாண்டு போறதுனால ரெண்டு பேத்துக்குமே வாழ்க்க இல்லன்னு

புரிஞ்சுக்கிட்டோம்லென்னு சொல்லி சமாதானமாக் கூட்டத்த முடுச்சாக.

சொன்னது மாதிரியே சேசுரத்தனம் கொலக் கேசுல, பறையர்க, பள்ளருக்கு எதுரா சாட்சி சொல்லல. அதுனால அந்த கேசுல மாட்டுன பள்ளர்க விடுதலை ஆகி ஊருக்குள்ள வந்துட்டாக. பறையர்க விட்டுக் குடுத்தத நெனக்கயில பள்ளர்களுக்கு ஆச்சரியமா இருந்துச்சு. நல்லக்கண்ணு சொன்னாரு, "அவனுக வேதக்காரனுகங் குறது சரியாப் போச்சுல்ல... அவனுக சொன்னாம்னா சொன்ன சொல்லுபடி நிப்பானுக. நம்மாளுகள்ள எம்புட்டுப் பேரு அப்பிடி இருப்போம்? "

"ஆமாமா, அந்த அண்ணாச்சி கோயிலுபிள்ளகூட சொன்னாரு. அந்தப் பெய சேசுரத்துனத்த நம்ம வெட்டுனப்ப, அவரு அவனுக கையில சிக்கிட்டாராம். ஆனா அவனுக அவர ஓடிப் போகச் சொல்லிட்டானுகளாம்; வெட்டாமெ உட்டுட்டானுகளாம், அவரே சொன்னாரு," முத்துருளன் சொன்னான்.

"ஏ உட்டுட்டாகளாம்? "

"ஏன்னா? அவரு நம்ம சாதின்னாலும் அவுக கோயில கொளத்துக் கெல்லாம் போறாரு; அவுக சாமியத்தானெ கும்புடுதாரு. அதேன். ரெண்டாவது அவரு ரொம்பா வயசானவரா வேற இருக்காருல."

"நீ அப்பிடிச் சொல்லுதீல. அன்னைக்கே அந்தப் பெய ஏழுமல வடக்க குளுச்சுட்டு கம்மாக்கரைல வந்துருக்கான். அவனுக நெனச்சிருந்தா அங்னகுள்ளேயே அவனக் கண்டந் துண்டமா வெட்டிப் போட்டுருக்கலாம். ஆனா பாவப்பட்டு போனாப் போறாம்னு உட்டுட்டானுகள்ள. "

"அப்ப எல்லாம் சேசுரத்துனம் செத்துப் போன விசயம் அவுகளுக்குத் தெரியாது. இல்லன்னா ஏழுமல அன்னைக்கே சாகுறவுந்தான்."

எல்லாத்தையுங் கேட்டுட்டு இருந்த முத்துகுமாரு சொன்னாரு, "இனியாச்சும் ஒருத்தர ஒருத்தரு கண்டறுஞ்சு பொழைச்சுக்கோங்க. நம்ம வாழப் போறது கொஞ்சக் காலம். இருக்குற காலத்துல, ஏதோ ஒழச்சமா, குடுச்சமா, செத்தமான்னு போறத உட்டுட்டு, எதுக்கு இந்த தேவையில்லாத தும்பமெல்லாம்?"

"சரிதாம்ணே. யோசுச்சுப் பாத்தா, இம்புட்டு கொல செஞ்சு என்னத்த வாரிக் கொட்டிட்டோம்? நம்மதானெ மொதல்ல கைய

வச்சுட்டோம். அவனுகளும் பொறுத்து பொறுத்துப் பாத்துட்டு ஒரேடியாப் போட்டுத் தள்ளிட்டாக. அதுனால நம்மளும், அவுகளும் நாலாதிக்கமாச் செதறிச் சின்னாபின்னமாகிப் போனோம்," லிங்கசாமி சொன்னான்.

"ஆமா... இப்பத்தான் ஒங்களுக்கெல்லாம் ஒரைக்குது. நாங்க பொம்பளைகளும், பிள்ள குட்டிகள வச்சுக்கிட்டு சன்னப்பாடா பட்டுட்டோம்! பூன குட்டியத் தூக்கிட்டு அலஞ்சது கெணக்கா, ஊரு ஊரா அலஞ்சு திருஞ்சு.... என்ன பொழப்பு இது," முத்துமாரி சொன்னா.

இப்பிடிக் கொஞ்சப் பேரு பேச, இன்னங் கொஞ்சப் பேரு, இதுக்கு எதுராவும் பேசுனாக. காளீஸ்வரி சொன்னா, "அவனுக கேச உட்டுக்குடுத்துட்டானுகள்ள. நல்லதுதான் அதுக்காக நம்ம ஒன்னும் உட்டுக் குடுக்க அவசியமில்ல. நானு சாட்சி சொல்லப் போகையில, கரெக்டா அவனுகளத் தெண்டிக்கிற மாதிரித்தான் சொல்லுவேன். நம்ம வீடுகள எப்பிடிக் கொளுத்துனானுக? "

"சரித்தான், அவனுக கொளுத்தப் போயி, குடுசை வீட்டுக்காரு களுக்கெல்லாம் மெத்த வீடு கட்ட கவுருமெண்டு பணங் குடுத்துச்சு. இல்லன்னா சாமான்யத்துல மெத்த வீடு கட்டுவியா? " பதுலுக்கு முருகம்மா கேட்டா.

பள்ளர் தெருவுல இப்பிடி பறையருக்கு எதுராவும், சார்பாவும் பேசிக்கிட்டுத் திருஞ்சத பறையர்க தெருஞ்சுதான் இருந்தாக. "நம்ம சமாதானத்துக்கான முயற்சி எடுப்போம். பள்ளர்க அம்புட்டு வன்மம் வச்சுகிட்டு திரும்பத் திரும்ப நம்மள நிர்மூலமாக்க நெனச்சா, பெறகு நம்ம செய்ய வேண்டியதச் செய்வோம்," மரிய லூர்து சொன்னாரு.

"எதுக்கு இப்ப வீணாப் போட்டு கொழப்பிக் கிட்டு. நம்ம மனுசனா வாழனும்னு ஆசப்படுறோம். ஆனா நம்மள மிருகமா மாத்துனா, சமயத்துக்கேத்தமாதிரி நம்மளும் ஆக வேண்டியதத் தவுர வேற ஒன்னுமில்ல. ஏம்னா ஆறுலயுஞ் சாவு; நூறுலயுஞ் சாவு. எல்லாரும் வாழ்ந்து சாவாக; நம்ம செத்து வாழ்வோம். ஆமா நம்ம தலைமுறைகளாவது வாழட்டும் அதுக்கான வழியப் பாப்பம்," நாட்டாமெ உறுதியாச் சொன்னாரு.

"அவனுக என்னத்தயுஞ் சொல்லிக்கிட்டு கெடக்கட்டும். நம்ம முன் வச்ச காலப் பின் வைக்கக்கூடாது. போனதெல்லாம் போகட்டும். இனி நம்ம வகுத்துப் பிள்ளைகளாவது நிம்மதியா இந்த ஊருக்குள்ள வாழனும். அதுனால ஒருத்தர ஒருத்தரு நம்புவோம். நல்லதையே செய்வோம். நம்மள யாரும் தூண்டி

விட்டு பிரிக்காதபடி நம்மதான் உசாரா இருக்கனும்," ரெண்டு தெரு பெரியாளுகளும் திரும்பத் திரும்ப சொல்லிக்கிட்டு இருந்தாக. ரெண்டு தெருவுலயும் செல பேரு இதுக்கு எதுராவும் பேசிக்கிட்டுத் திருஞ்சாக.

"இவனுக பாட்டுக்கு கேச உட்டுக் குடுக்கானுக. சமாதான மாப் போகனுங்கிறாங்க. அவனவனுக சொந்த பந்தங்கள வெட்டிப் போட்டுருந்தா தெரியும். கொஞ்சங்கூட மான ஈனமில்லாத பெயல்க. ஊரே கேடு நாடே காடுன்னு ஆனப் பெறகு என்ன பெரிய மயித்துச் சமாதானம்! வெங்காயப் பெயல்க."

எல்லாருமே ஒரு திகிலோடெதான் திருஞ்சாக. முன்னால இருந்த வன்மம் மாறி, இப்ப, எப்பாடுபட்டாச்சும் ஒத்துமையா வாழ்ந்து காட்டனும்னு ரெண்டு தெருக்காரர்களும் பெரயாசப் பட்டாக. கண்டம்பட்டி தெருவுகள்ள கொஞ்சங் கொஞ்சமா பழைய வாழ்க்கையோடெ ஆரம்பத்துக்கான அறிகுறி தெருஞ்சது.

# பனிரெண்டு

பள்ளரும், பறையரும் ராசியாப் போனாகன்னு கேள்விப் பட்ட மத்த சாதிக்காருக ஒரு மாதிரியாப் பேசுனாக.

"என்ன சாதிப் பெயலுக இவனுக! இம்புட்டு கொல செஞ்சுட்டு, பரதேசிப் பெயலுக மாதிரி சுத்திப் போட்டு வந்து மறுபடியும் ஒன்னாச் சேந்தாப் பாரு! மான ஈனமில்லாத பெயலுக."

வரப் போற பஞ்சாயத்துத் தேர்தல்ல அவனுகளும் போட்டி போடப் போறானுகளாம்னு பழனிவேலு பன்னாடி சொன்னதக் கேக்கவும், குமாரசாமி நாய்க்கருக்கு எரிற தீயில எண்ணெய ஊத்துனது கணக்காக இருந்துச்சு.

கண்டம்பட்டி வரலாத்துல இம்புட்டு வருசமா நாய்க்கருக தான் பிரசிடெண்ட் தேர்தல்ல நிப்பாக; செயிப்பாக. வேற எந்தச் சாதிக்காரனும் ஒருதடவகூட தேர்தல்ல நின்னதுகூட கெடையாது. நாய்க்கமாருகளுக்குள்ளேயதான் போட்டி இருக்கும். பள்ளு, பற, சக்கிலியச் சாதிக பூராம் அவுகவுக பண்ண வேல பாட்ட வேல பாத்த நாய்க்கருக எதுல ஓட்டுப் போடச் சொல்லுறாகளோ, அதுல போடுவாக. அம்புட்டுத்தான். ஆனா இப்ப தேர்தல்ல பள்ளனும் பறையனும் ஒன்னாச் சேந்துட்டா, ஓட்டுப் பூராஞ் செதறிப்போகும். வழக்கம் போல நாய்க்கமாரு செயிச்சு பிரசிடெண்டா ஆக முடியாது. ஏன்னா கண்டம்பட்டில பள்ளர் பறையர் ஓட்டுதான் அதிகம்.

பறையர் தெரு நாட்டாமயும், பள்ளர் தெரு நாட்டாமயும் அடிக் கடிக் கூடிப் பேசுனாக. தேர்தல்ல பள்ளர் தெரு காளையனை வேட்பாளரா நிக்க வைக்கிறதுன்னு ரெண்டு தரப்புலயும் கலந்து பேசி முடிவெடுத்தாக. வேட்பு மனு தாக்கல் செய்யுரதுக்கு பள்ளர், பறையர் தெருவுலருந்து கூட்டமா ரொம்பாப் பேரு போனாக. அதப் பாக்கயிலயே நாய்க்கமாருகளுக்கு வகுத்துல புளியக் கரச்சது கணக்கா இருந்துச்சு.

"இந்தப் பறப்பெயலுக இம்புட்டு முஸ்தீபா அலைறானுக. காளையன வாபஸ் வாங்கும்படி வைக்கனும்னா பள்ளனுகளத்தான் கைக்குள்ள போடனும்," ராகவன் சொன்னாரு.

"அது இப்ப முடியாது. பள்ளனுக முந்தி மாதிரி இல்லியே,

அத்தன பேத்த பறையனுக வெட்டுனானுக... பதுலுக்குப் போடுறத உட்டுட்டு அவனுகளோடயே கையக் கோத்துக்கிட்டு அலை றானுகளே..."

"முன்னால பள்ளனுகளுக்கும், மத்த சாதிக்காரனுகளுக்கும் கலகம் வரயில, அது அந்தச் சாதிக்காரனுக இருந்த அம்புட்டு ஊருக்கும் தீயாப் பரவுச்சு. ஆனா இந்த பள்ளரு பறையரு கலகம் மட்டும் வேற ஒரு ஊருக்கும் பரவாமெ, கண்டம்பட்டிலயே நின்னு போச்சே... பரவி இருந்திருந்தா நல்லா இருந்துருக்கும்."

"மத்த ஊர்ல இருந்த பள்ளருக கண்டம்பட்டி விசயத்தக் கேள்விப்பட்டுட்டு கண்டம்பட்டி பள்ளருக செஞ்சது தப்புத்தான்; எடுத்தேறி எதுக்குச் சண்டைக்குப் போறானுகன்னு சொல்லிட்டு, வேற ஊருப் பள்ளனுக நாயமா நடந்துக்கிட்டானுக. அது மாதிரித்தான் பறையனுக பக்கமும், கலவரத்துல தெக்க வடக்கெ ஓடுனவுகளுக்கு ஒதவுனாகளே தவுர, வேற ஊரு பள்ளனோ, பறையனோ இந்தக் கலவரத்த ஆதரிக்கல."

"அது வேற ஒன்னுமில்ல; எல்லாப் பெயலுகளும் ஒன்னாச் சேந்து, நம்ம மேச்சாதிக்காரனுகளோடெ மோதனும்னு திட்டம் போட்டுருக்கானுக. இந்தச் சக்கிலியப் பெயககூட அங்கங்க போராட்டம் பண்ணுறானுகளாம். காலம் ரொம்பாக் கெட்டுப் போச்சு."

"சரி, இந்தப் பெயலுக ஓட்டுப் போடாட்டி போறானுக. நம்ம மத்த சாதிக்காருகள கேப்போம்."

"எனக்கென்னமோ சந்தேகந்தான். அவனுக தலக்கட்டு அதிகம். அதுலயும் இந்தப் பறப்பெயலுக இருக்கானுகளே... நாலு லெக்குக்குப் போயிட்டு வந்து வெவரந் தெருஞ்ச பெயலுகளா இருக்கானுக. பாப்போம், வேற என்ன செய்றது?," இப்பிடி பலமாதிரிப் பேசிக்கிட்டாக.

பறையர் தெரு எளவட்டங்க ஊரு ஊருக்குப் போயி தெருத் தெருவா பிரச்சாரம் செஞ்சாக. தலித்துக ஒன்னா இருக்கனும்னு வலியுறுத்திப் பேசி ஓட்டு கேட்டாக. ரெண்டு தெரு நாட்டாமயும், பெரியாளுகளும் பிரச்சாரத்துக்கு அலஞ்சாக. பொம்பளைகளும் வீடு வீடாப் போயி ஓட்டுப் போடச் சொன்னாக. வாக்குப் பதிவு அன்னைக்கு, ஓட்டு இருக்குறவுக அம்புட்டுப் பேரும் வேல வெட்டிக்குக் கூடப் போகாமெ, அடைக்கப் போயி காளையனுக்கு ஓட்டுப் போட்டுட்டு வந்தாக.

காளையன் செயிச்சுட்டான்னு தெரியவும் ரெண்டு தெருவுலயும் உற்சாகமா இருந்தாக. பறையர் தெருவுல பாராட்டுக்

கூட்டம் போட்டு, பள்ளர் தெரு நாட்டாமெ பெரியவுகளயும் வரவழச்சு, காளையனுக்குப் பொன்னாட போத்துனாக. பாராட்டுக் கூட்டத்துல பேசும்போது பறையர் தெரு முடியப்பன் சொன்னாரு.

“கண்டம்பட்டில இதுனா வரைல நாய்க்கருகளத் தவுர வேற சாதிக்காரன் எவனும் பஞ்சாயத்து பிரசிடெண்டா ஆனது கெடையாது. உண்மையாச் சொல்லப் போனா நானே ரொம்பாக் காலமா, பிரசிடெண்டுனா அது நாய்க்கருதான் இருக்கனும், இருக்க முடியும்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன். இன்னைக்குத் தம்பி காளையன் பிரசிடெண்டாகிட்டது, நமக்குக் கெடச்ச முதல் வெற்றி. நம்ம ரெண்டு சாதிகளயும் பிருச்சு வச்சு குளுரு காஞ்சவுகள்ளாம் இன்னைக்கு வகுத்தெருச்சப் பட்டுப் போயிக் கெடக்காக. இந்த ஒத்துமெ என்னைக்கும் நம்மகிட்ட நெலச்சு நிக்கனும். காளையனுக்கு நம்ம சப்போட்டு என்னைக்கும் இருக்கும்.”

பள்ளர் தெருவுலருந்து வந்து பேசிய காளிமுத்து சொன்னாரு.

“அம்புட்டுச் சாதிக்காரனும் இன்னைக்கு மூக்குமேல வெரல வச்சு நம்மள அருவசமாப் பாக்குரானுக. பிருஞ்சு கெடந்த நம்ம ஒன்னாச் சேந்து, செயிச்சுக்காட்டிட்டோம். இனிமேல்பட்டு நம்ம ரெண்டு சாதிகளும் சண்ட சச்சரவு போடாமெ, வாழனும். இந்த பஞ்சாயத்துத் தேர்தல்ல செயிச்சது போதாது. சட்டசபை, நாடாளு மன்றம் எல்லா எடத்துலயும் நம்ம தலித்துக குரல் ஓங்கி ஒலிக்கனும். நமக்கெடயில சின்னஞ்சிறு பெரச்சனைக வந்தாலும் நாம ஒரு கமிட்டி அமைச்சு, அது மூலமே தீத்துக்கனும். தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் அம்பேத்கார் சொன்னதுபோல, அரசியல் அதிகாரத்தைக் கைப்பத்தனும். அதுக்கு இது முதல் படியா இருக்கட்டும்.”

அனாவசியமா பல உயிர்களப் பறிகுடுத்துட்ட வேதனையும், அதுக்குப் பெறகு அடைஞ்ச அளவுகடந்த துன்ப துயரங்களும் ரெண்டு தெருக்காரர்களையும் ஒரு உலுக்கு உலுக்கி எடுத்துருச்சு. அதுனால எல்லாருமே, ஒரு அமைதியான, சந்தோசமான வாழ்க்க வாழனும்னு ஏக்கத்தோடெதான் இருந்தாக. காளையன் பதவி ஏத்த அன்னைக்குத் தெருச்சனம் பூராம் அடைக்கப் பஞ்சாயத்து ஆபீசுக்குப் போனாக. இம்புட்டுப் பெருகளமா, கூட்டமா வந்ததப் பாத்து, நாய்க்கமாருகளே பதறிப் போனாக. காளையன் பிரசிடெண்டு நாற்காலில ஒக்காரவும், அம்புட்டுப்பேரும் ஆரவாரமா, கைதட்டி சந்தோசப்பட்டாக. அன்னைக்கு ரெண்டு தெருவுலயும் யாரும் வேல வெட்டிக்குக் கூடப் போகல.

கண்டம்பட்டில பள்ளரும், பறையரும் ஒன்னு சேந்ததக்

கேள்விப்பட்ட மத்த ஊரு பள்ளு பற சனங்க ரொம்பாச் சந்தோசப் பட்டாக. அம்புட்டுக் கலவரம் கஸ்டத்துக்குப் பெறகு, ஒன்னு சேந்தது பெரிய சாதனதாம்னு புகழ்ந்து சொன்னாக. இம்புட்டு கலவரமும் கஸ்டமும் அனுபவிச்சப் பெறகு, ஒன்னு சேந்து நின்னு பிரசிடெண்டா ஆனது, பெரிய சாதனதான்னு பேசிக்கிட்டாக. எல்லாருக்குமே இது பெரிய அதிசயம் போலத்தான் இருந்துச்சு.

எல்லாரும் பாராட்டுனாலும் கண்டம்பட்டி நாய்க்கருக மட்டும் வழக்கம் போல கொற சொல்லிக்கிட்டுத் திருஞ்சாக. இந்த ஒத்தும கித்தும எல்லாங் கொஞ்ச நாளைக்குத்தான்; பெறகு பாருங்க, பழைய குருடி கதவத் தெறடிங்ற கததான். இதுக்கு மேல வெட்டிக்கிட்டுங் குத்திக்கிட்டு கெடப்பானுக. இவனுகளால சண்ட போடாமெ இருக்க முடியாதுன்னு ரொம்பாக் கேவலமா கிண்டலாச் சொன்னாக.

யாரு என்ன சொன்னாலும் பள்ளர் தெருவுலயும், பறையர் தெருவுலயும், இனி சண்ட போடக்கூடாதுங்ற முடிவுல உறுதியா இருந்தாக. பள்ளர் தெருவுல நடக்குற பொதுக்காரியங்களுக்கு பறையர்களக் கூப்புட்டாக; அதுபோல பறையர் தெருவுல நடக்குற பொதுக் காரியங்களுக்கு பள்ளர்களக் கூப்புட்டுச் சிறப்புச் செஞ்சாக. பழையபடி கிறிஸ்துமஸ், ஈஸ்டரு, பொங்கலுனு கொண்டாட ஆரம்புச்சாக. இருந்தாலும் அந்தப் பழைய உற்சாகம் இல்லங்றத யும் ஒணந்தாக. அநியாயமா சாகடிக்கப்பட்ட உசுருகள நெனைக் காமயும் இருக்க முடியல. வேதனைகள முழுங்கிக்கிட்டு, சாதன பண்ணனும்ங்ற தீர்க்கமான உறுதியோடெ ரெண்டு தெருவுலயும் சனங்க வாழ்ந்தாக. காலந்தான் பட்ட காயங்கள மெல்ல மெல்ல ஆத்தும்னு ரெண்டு சாதிக்காரரும் ஒருத்தர ஒருத்தரு சகிச்சுக்கிட்டு, சமாதானமா வாழ்ந்தாக.

இனிவரும் தலைமுறையாவது வன்மமில்லாமெ, வன்முறை யில்லாமெ, சண்ட சச்சரவு இல்லாமெ, ஒன்னா மண்ணா இருக்க னும்னு இப்ப உள்ள சனங்க கடுமையா பெரயாசப்பட்டு, திட்ட மிட்டு செயல் பட்டாக. வருங்காலத்தப் பத்திய நம்பிக்கையோடெ, பயமும் இருக்கத்தான் செய்யுது. இருந்தாலும் மனசுல தெளிவும், தீர்க்கமான உறுதியும் இருந்துச்சு.

★★★